# மதுரை மாவட்டத்
# தொல்லியல் கையேடு

STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
MADRAS

பதிப்பாசிரியர்

**தி.ஸ்ரீ. ஸ்ரீதர்,** இ.ஆ.ப.

*சிறப்பு ஆணையர்*

*உதவி பதிப்பாசிரியர்கள்*

*பொ. இராசேந்திரன்*

*முனைவர் வெ. வேதாசலம்*

*முனைவர் செ. சாந்தலிங்கம்*

வெளியீடு

**தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை**

**2005**

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | **Madurai Mavatta Tholliyal Kaiyedu** |
| Editor | : | Spl. Commissinor |
| Copy Right | : | T.N. State Dept. of Archaeology |
| Subject | : | History |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publication No. | : | 171 |
| Year | : | 2005 |
| Type Point | : | 11 |
| No.of. Pages | : | 244 |
| Paper Used | : | 80 Gsm Maplitho |
| Type Setter | : | **Cavin Laser Printers**<br>19/9, Devaraja St,<br>Trip licane, Chennai - 5<br>Cell: 9841253886 |
| Printer | : | **TAMCOS,**<br>Royapettah,<br>Chennai - 600 014. |
| Publisher | : | **State Dept. of Archaeology,**<br>Tamil Valarchi Valagam,<br>Halls Road, Egmore,<br>Chennai - 600 008. |
| Price | : | **Rs. 57/-** |



TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY * MADRAS
Acc No. 11815
9301

# பதிப்புரை

'தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ் நனை மறுவின் மதுரை' (சிறுபாண்: 66 –67)

என சங்கப் பாடலில் பெருமையோடு பேசப்படும் நகரம் மதுரை.

'கட்டுக் கலங்காணும் கதிர் உழக்கு நெல்காணும்
அரிதாள் அறுத்துவர மறுநாள் பயிராகும்
அரிதாளின் கீழாக ஐங்கலத் தேன் கூடுகட்டும்
மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று
யானை கட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை'

என நாட்டுப்புற மக்களால் நயம்பட உரைக்கப்படுவது மதுரை. பாண்டி மண்டலத்தின் தலைநகர் மதுரை. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டு கால இடையறா வரலாறு கொண்ட இதனைத் தமிழகத்தின் பண்பாட்டுத் தலைநகர் (Cultural Capital) என கூறலாம். இன்றைய மதுரை மாவட்டத்தின் தலைநகரமும் இதுவே.

இம்மாவட்டத்தின் வரலாறும், மண்ணின் மாண்புகளும் ஆங்கிலத்திலும், தமிழிலும் முன்னரே பல அறிஞர்களால் எழுதி வெளியிடப்பட்டுள்ளன. அண்மைக் காலங்களில் தொல்லியல் துறையின் மூலம் தீவிர கள ஆய்வுகளும், கல்வெட்டு முனைப்புத் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது. அகழாய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாவட்டம் முழுமையும் உள்ள கல்வெட்டுகள் படியெடுத்துப் படிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஊர் பற்றியும் வரலாற்றுச் செய்திகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் மதுரை மாவட்டத்தின் வரலாற்றைத் தொல்லியல் நோக்கில் எளிய மக்களும் அறியும் வகையில் தமிழில் ஆக்கித்தர வேண்டும் என்பது தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் செயல் திட்டங்களில் ஒன்றாகும்

பாண்டியர், சோழர், முகமதியர், விசயநகர வேந்தர், மதுரை நாயக்கர், ஆங்கிலேயர் எனப் பல அரசு மரபினரால் ஆளப்பட்டது மதுரை. சைவம், வைணவம், சமணம், பௌத்தம், இஸ்லாம், கிறித்துவம்

என அனைத்துச் சமயங்களுக்கும் சமமான ஆதரவு காட்டிய மண் மதுரை மண். அனைத்து அரச மரபினரின் சான்றுகளும், அனைத்துச் சமயத்தவர்களின் சின்னங்களும் இன்றும் இங்கு வாழும் சான்றுகளாக நிலைத்துள்ளன. இவற்றையெல்லாம் பதிவு செய்து ஒருங்கிணைந்த ஒரு தொல்லியல் கையேடாக அமைந்துள்ளது இந்நூல்.

தமிழகத்தின் தொன்மையான பிராமி கல்வெட்டுகள் மிகுதியாகக் காணப்படுவது மதுரை மாவட்டத்தில் தான். அவற்றிற்கு அடுத்த வகையான வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் இப்பகுதியில் பரவலாகக் கிடைக்கின்றன. இவை காட்டும் வரலாற்று வெளிச்சங்கள், வழங்கிய காசுகள், பேணப்படும் வரலாற்றுச் சின்னங்கள், பண்பாட்டுப் பதிவுகள் உள்ள ஊர்கள் என ஒவ்வொரு வகையிலும் இந்நூலில் விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன.

இவ்வரலாற்றுக் கையேட்டினை உருவாக்குவதில் பெரும்பங்கு வகித்தவர்கள் மதுரை மாவட்டத் தொல்லியல் அலுவலர் முனைவர் சொ. சாந்தலிங்கம், மதுரை சிறப்பு நிலை கல்வெட்டாய்வாளர் முனைவர் வெ.வேதாசலம், திரு. பொ. இராசேந்திரன் ஆகியோர். மதுரை மாவட்டத்தில் தொல்லியல் துறை பாதுகாக்கும் மரபுச் சின்னங்களின் படங்களை எடுத்துத் தந்தவர் இத்துறை நிழற்படக்காரர் திரு மு.த. ஸ்ரீதரன். இந்நூலை அச்சுக்குத் தயார் செய்து வெளிக் கொணர்வதில் பொறுப்பேற்றுச் செயல்பட்டவர் சென்னை சிறப்பு நிலைக் கல்வெட்டாய்வாளர் முனைவர் சு. இராசகோபால் அவர்கள். இவர்கள் அனைவர்க்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துறையின் வெளியீடுகளுக்கு நிதி உதவி நல்கிப் பணிகளை ஊக்குவித்து வரும் தமிழ்நாடு அரசிற்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொல்லியல் ஆர்வலர்களும், ஆய்வாளர்களும், மாணவர்களும், பொதுமக்களும் இக்கையேட்டினைப் பெரிதும் வரவேற்றுப் பயன்பெறுவர் என உறுதியாக நம்புகிறேன்.

7.11.2005 — **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**

சென்னை – 8 — சிறப்பு ஆணையர்

# உள்ளடக்கம்

## வரலாற்று பின்னணி


| | | |
|---|---|---|
| 1. | தொல்பழங்காலம் | 9 |
| 2. | மதுரைபற்றிய தொன்மைக் குறிப்புகள் | 14 |
| 3. | சங்ககால மதுரை | 16 |
| 4. | முற்காலப் பாண்டியப் பேரரசு | 21 |
| 5. | சோழர் ஆட்சி | 31 |
| 6. | பிற்காலப்பாண்டியர் எழுச்சி | 35 |
| 7. | போசளர்களின் செல்வாக்கு | 43 |
| 8. | சுல்தானியர் ஆட்சி | 48 |
| 9. | விஜயநகரர் ஆட்சி | 53 |
| 10. | வாணதிராயர்கள் | 57 |
| 11. | மதுரை நாயக்கர் ஆட்சி | 63 |
| 12. | நாயக்கராட்சிக்குப் பின் | 77 |


## வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள்


| | | |
|---|---|---|
| 13. | மதுரை | 85 |
| 14. | மதுரை தெற்கு வட்டம் | 98 |
| 15. | மதுரை வடக்கு வட்டம் | 113 |
| 16. | மேலூர் வட்டம் | 120 |
| 17. | வாடிப்பட்டி வட்டம் | 148 |
| 18. | உசிலம்பட்டி வட்டம் | 153 |
| 19 | திருமங்கலம் வட்டம் | 157 |
| 20. | பேரையூர் வட்டம் | 158 |

## செய்தித் தொகுப்புகள்


21. மதுரை மாவட்டத்தில் சமயங்கள் 163

22. மதுரையில் கிடைத்த நாணயங்கள் 169

23. செய்திச் சுருக்கங்கள் 172

படங்கள் 204

# மதுரை மாவட்டத்
# தொல்லியல் கையேடு

# வரலாற்றுப் பின்னணி

# 1. தொல்பழங்காலம்

தொல்பழங்காலத்தைப் பழைய கற்காலம், இடைக் கற்காலம், புதியகற்காலம் என வகைப்படுத்துவர் தொல்லியல் அறிஞர். இதன் அடுத்த கட்டமாகப் பெருங்கற்காலம் அல்லது இரும்புக்காலம் அமையும்.

## பழைய கற்காலம்

பழைய கற்காலத்தை முதல், இடை, கடை என மூன்று வகைப்படுத்துவர். 1863இல் ராபர்ட் புரூஸ்புட் எனும் நிலவமைப்பியல் ஆய்வாளர் முதன்முதல் பல்லாவரத்தில் ஒரு பழங்கற்காலக்கருவியைக் கண்டறிந்தார். அவர் தனது தொடர்ந்த ஆய்வின் மூலம் தமிழகத்தில் பல இடங்களில் பழங்கற்கால அமைவிடங்களைக் கண்டறிந்தார்.

கரடு முரடான கருவிகளைக் கொண்டு வேட்டையாடி உணவு தேடி வாழ்ந்த காலம் பழைய கற்காலம் எனப்படும். நிலையான தங்குமிடமில்லாத நிலை இக்காலத்தில் இருந்தது.

மதுரை மாவட்டத்தில் ஆவியூர் எனும் இடத்தில் ராபர்ட் புரூஸ்புட் பழங்கற்கருவியைக் கண்டறிந்தார். இவ்வூர் இன்றைய விருதுநகர் மாவட்டத்தில் அடங்கி யுள்ளது. மதுரையிலிருந்து அருப்புக்கோட்டை செல்லும் சாலையில் சுமார் 20 கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது.

இடைக்கற்காலக் கருவிகள் மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் வட்டத்தில் பல இடங்களில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. மரட்டாற்றில் (மலட்டாற்றின்) களிமன் படுகையில் தெ. புதுப்பட்டி என்ற ஊருக்கு அருகிலும் சீவரக்கோட்டை என்ற ஊருக்கு அருகிலும் இவை கிடைத்துள்ளன.

கடைக்கற்காலக் கருவிகள் திருமங்கலம், பெரியகுளம் வட்டங்களில் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திருமங்கலம் வட்டத்தில் திடியன், டி. கல்லுப்பட்டி ஆகிய ஊர்களில் மலைக்குன்றின் அடிவாரங்களிலும், போடி நாயக்கனூருக்கு அருகில் கோடங்கிபட்டி, தத்தனோடை மேடு என்ற மலையடிவார இடங்களிலும் ஏராளமாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. மதுரை மாவட்டத்தில் கிடைத்துள்ள கருவிகள் ஜாஸ்பர், சால்சிட்னி, கிரிஸ்டல், வரியோடிய அகேட் ஆகிய கல்வகைகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்டவை யாகும். இவையாவும் உருவத்தில் மிகச் சிறியவையாகச் செய்யப்பட்டன. ஓர் அங்குலமும் அதற்கும் குறைவான அளவும் உள்ள கருவிகளே ஏராளமாகக் காணப்படுகின்றன.

## புதிய கற்காலம்

பழைய கற்காலக் கருவிகள் போல் இல்லாமல் இக்காலக் கருவிகள் செதுக்கி தேய்க்கப்பட்டு மெருகேற்றப் பட்டவையாயிருந்தன. வேட்டையாடும் நிலையிலிருந்து சிறிது முன்னேறி ஓரிடத்தில் நிலையாகக் குடியேறி ஏதோ ஒரு வகையில் வேளாண்மை செய்யக் கற்றுக்கொண்ட மக்கள் வாழ்ந்த காலமே புதியகற்காலம் என வரையறுக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சேலம், தர்மபுரி மாவட்டங்களில் சேர்வராயன் மலைத்தொடரிலும், வடார்க்காடு மாவட்டத்தில் சவ்வாது, ஏல மலைத் தொடர்களிலும் புதிய கற்காலக் கோடரிகள் ஏராளமாகத் தரைமட்டத்திலேயே கிடைக்கின்றன.

புதிய கற்கால மக்கள் மலைகள் மீது குடிசைகளில் வாழ்ந்தார்கள். ஆவினங்களைப் பேணி வளர்த்தார்கள். கேழ்வரகு, கொள்ளு, பச்சைப்பயறு முதலான தானியங் களைப் பயிர் செய்தார்கள். வேட்டையாடுதலையும் ஒரு தொழிலாகக் கொண்டிருந்தார்கள்.

மதுரை மாவட்டத்தில் மதுரைக்குத் தெற்கில் புதிய கற்காலக் கருவிகளை வெள்ளாங்குளம் என்னுமிடத்தில் ராபர்ட் புரூஸ்புட் கண்டறிந்துள்ளார். அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையைச் சேர்ந்த ஆய்வாளர்கள் மதுரை மாவட்டம் துவரிமான் என்னும் ஊரில் வைகைக் கரையில் புதிய கற்காலக் கருவிகள் சிலவற்றைக் (கோடரிகள்) கண்டறிந்தார்கள். கோவலன் பொட்டல் அகழாய்வில் உடைந்த ஒரு புதிய கற்காலக் கருவி வெளிப்பட்டது. போடிக்கருகில் செலமலை என்னும் இடத்தில் ஒரு புதிய கற்கால கைக்கோடரி சேகரிக்கப் பட்டுள்ளது.

## பெருங்கற்காலம்

பெரிய பெரிய கற்களைக் கொண்டு ஈமச்சின்னங்களை அமைத்த மக்கள் வாழ்ந்த காலத்தைப் பெருங்கற்காலம் என வரையறை செய்துள்ளனர். இறந்தவர்களைப் புதைத்த இடத்திலோ அல்லது அவர்களது எலும்புகளைப் புதைத்த இடத்திலோ பெரிய கற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட ஈமச்சின்னங்கள் பெருங்கற்சின்னங்கள் எனப்படும். இத்தகு சின்னங்கள் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றன. அவை, கல்திட்டை, கல்பதுக்கை, மண்குவை, கற்குவை, கல்வரிசை, தொப்பிக்கல், குடைக்கல், தாழி, ஈமப்பேழை, நடுகல், குடைவரைத் தாழ்வரை என்பவையாகும். மதுரை மாவட்டத்தில் பெரும்பாலும் ஈமத்தாழிகளே பயன்படுத்தப்பட்டுள்ளன.

மதுரை மாவட்டத்தில் அரிட்டாபட்டிக்கு அருகில் பெருமாள்மலை அடியடிவாரத்தில் பல நூற்றுக்கணக்கான தாழிகள் உள்ளன. மதுரைக்கு அருகில் விளாங்குடி, அனுப்பானடி, பரவை முதலான இடங்களில் தாழிக்காடுகள் உள்ளன. கொடைக்கானலினும், பழனிமலைக் குன்றுகளிலும் பலகற் திட்டைகள் காணப்படுகின்றன. இப்பகுதி தற்போது திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ளது. கொடைக் கானலுக்குக் கீழே 3500 அடி உயரத்தில் அரசிப்பாறை

என்ற இடத்தில் கல்திட்டைகள் கும்பல் கும்பலாகச் சுற்றிலும் கல்சுவர்களைக் கொண்டுள்ளன. மதுரை மாவட்டத்தை ஆய்வு செய்த தொல்லியல் ஆய்வாளர் ஒருவர் இம் மாவட்டத்தில் எல்லா ஊர்களிலும் ஒரு தாழி இருப்பிடம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். இந்தத் தாழிக் காடுகள் ஊர்களுக்கு வெளியில் சவக்காடு என்ற பெயரில் வழங்கி வருகின்றன. அண்மையில் தாண்டிக்குடி மலையில் பல கல் பதுக்கைகள் அகழாய்வு செய்து வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

மதுரை மாவட்டத்தில், மேலூர் வட்டம் கருங்காலக்குடி, பழனி வட்டத்தில் பழனி, கலையமுத்தூர், நிலக்கோட்டை வட்டம், குலசேகரன்கோட்டை, மதுரை வட்டம் பரவை, துவரிமான், தாதம்பட்டி, அனுப்பானடி, திருமங்கலம் வட்டம் திருமங்கலம், பேரையூர், செங்குளம் ஆகிய ஊர்களில் பெருங்கற் சின்னங்கள் உள்ளனவாகத் தெரிவிக்கப் பட்டுள்ளன.

பெருங்கற்கால மக்கள் கருப்பு - சிவப்பு, கறுப்பு, சிவப்பு, செம்பழுப்புப்பூச்சு என்ற நால்வகை மட்கலங்களைப் பயன்படுத்தியுள்ளனர். ஈமக்கலங்களாக வும், உண்கலங் களாகவும் இத்தகைய மட்கலங்கள் பயன்படுத்தப் பட்டிருக் கலாம். இவற்றிற்கு அடுத்து இரும்புப் பொருட்கள் ஏராளமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன. இதனாலேயே இக்காலத்தை இரும்புக்காலம் என்றும் அழைப்பர். வெண்கலம், தங்கம் ஆகியவற்றையும் இக்கால மக்கள் ஓரளவு பயன்படுத்தியுள்ளனர்.

பலவகையான மணிகளை அணிகலங்களாகப் பயன் படுத்தியுள்ளனர். இக்கால மக்கள், கார்னீலியன், ஜாஸ்பர், அகேட், ஆணிகல், செர்பண்டைன், ஸ்டீடைட், குவார்ட்ஸ் ஆகிய அரிய கல்வகைகளைக் கொண்டு மணிகளும் சங்குகளை அறுத்து வளையல்களும் செய்துள்ளனர்.

ஏரிகள், குளங்களை இவர்கள் உருவாக்கினார்கள். வேளாண்மை முக்கிய தொழிலாக இருந்தது. வேட்டையாடியும் உள்ளனர். கால்நடைகளை மேய்த்தும் அவற்றை வேளாண் தொழிலுக்குப் பயன்படுத்தியும் வாழ்ந்துள்ளனர். வீடுகள் அமைத்து வாழ்ந்தனர். கற்களைக் கொண்டு வீட்டுப்பயனுக்கு வேண்டிய அம்மிகள், குழவிகள், உரல்கள் போன்றவற்றை உருவாக்கியுள்ளனர். இரும்பினால் மண்வெட்டி, அரிவாள், கருக்கரிவாள், வேல், ஈட்டி, சுத்தி போன்றவற்றைச் செய்துள்ளனர். இக்கால மக்கள் நிலையான தங்குமிடமும், கட்டுச்சமூக வாழ்க்கையும் கொண்டிருந்தனர்.

# 2. மதுரை பற்றிய தொன்மைக் குறிப்புகள்

பாண்டியர்களின் தலைநகரமான மதுரை பற்றிய குறிப்புகள் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களில் இடம்பெற்றுள்ளன. விந்தியமலைக்குத் தெற்கில் இருந்த அரசுகளைக் குறிப்பிடும் போது சேர, சோழ, பாண்டியரைப் பற்றிக் குறிப்பிடுகிறார் வால்மீகி. திரவுபதியின் சுயம்வரத்தில் பாண்டிய அரசன் ஒருவன் கலந்து கொண்டதாக மகாபாரதத்தில் குறிக்கப் பட்டுள்ளது. பாரதப் போரில் பாண்டியன் ஒருவன் பங்கு பெற்றதாகவும் கூறப்பட்டுள்ளது.

கி.மு. 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இலக்கணியான காத்யாயனர் சேர, சோழ, பாண்டியரைக் குறிப்பிடுகிறார். கவுடில்யரின் அர்த்தசாஸ்திரத்தில் பாண்டிய நாட்டின் முத்தும், மஸ்லின் துணியும் சிறப்பித்துப் பேசப்பட்டுள்ளது. சோதிட வல்லுநரான வராகமிகிரர் தன்னுடைய பிரகத்சம்ஹிதையில் பாண்டியர் பற்றிக் குறிப்பிடுகிறார். காளிதாசரும் பாண்டியர் பற்றிக் குறித்துள்ளார்.

இலங்கையின் வரலாறு கூறும் மகாவமிசத்தில் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் இலங்கையை முதல் முதலாக ஆட்சி செய்த மன்னன் விஜயன் பாண்டிய அரசன் மகளை மணந்தான் என்று கூறப்பட்டுள்ளது. கிரேக்கர், ரோமானியருடன் மதுரை மிகுந்த தொடர்பு கொண்டுள்ளது. சந்திரகுப்த மௌரியரின் அவையில் செலுக்கஸ் நிகேடாரின் தூதுவனாய் வீற்றிருந்த மெகஸ்தனிஸ் (கி.மு. 320) பாண்டியர் பற்றியும் அந்நாடு ஒரு பெண்ணரசியால்

ஆளப்படுவது பற்றியும் குறிப்பிட்டுள்ளான். ஸ்டார்போ (கி.மு. 25) என்பவர் ரோமானிய அரசர் அகஸ்டஸின் அவைக்கு பாண்டிய மன்னன் ஒரு தூதுவரை அனுப்பியதாகக் குறித்துள்ளார்.

கி.பி. 75ஐச் சேர்ந்த பிளினியின் குறிப்பில் மதுரையும் பாண்டியரும் இடம்பெறுகின்றனர். கி.பி. 130ஐச் சேர்ந்த தாலமி மதுரையைப் பாண்டியனின் தலைநகர் எனக் குறிப்பிட்டுள்ளார். அசோகனுடைய பாறைச் சாசனத்திலும் பாண்டியர் குறிக்கப்பட்டுள்ளனர்.

மதுரைக்கு அருகில் கிடைத்துள்ள பிராமிக் கல்வெட்டுக்களுள் அழகர்மலை கல்வெட்டில் மதிரய் மற்றும் மத்திரை எனும் பெயரும் மேட்டுப்பட்டிக் கல்வெட்டில் மதிரை எனும் பெயரும் மதுரையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளின் காலம் கி.மு. 2 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகும். கி.பி. 5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பூலாங்குறிச்சி கல்வெட்டில் மதிரை 'உலவியத்தான் குளம்' என ஒரு குறிப்பு இடம் பெற்றுள்ளது.

# 3. சங்க கால மதுரை

தமிழகத்தில் தலை, இடை, கடை என மூன்று சங்கங்கள் இருந்தன எனவும், அதில் கடைச் சங்கம் மதுரையில் இருந்தது என்றும் இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். மூன்றாம் சங்கமான கடைச் சங்கக் காலத்தில் 49 பாண்டிய மன்னர்கள் மதுரையை ஆண்டதாகக் கூறுவர். அவர்களில்,

1. நெடியோன் (அல்லது) வடிம்பலம்ப நின்ற பாண்டியன்
2. முடத்திருமாறன்
3. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி
4. பசும்பூட் பாண்டியன்
5. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்
6. சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறன்
7. இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன்.
8. கூடக்காரத்துத்துஞ்சிய மாறன் வழுதி
9. வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதி
10. கானப்பேர் எயில் எறிந்த உக்கிரப்பெருவழுதி
11. கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி
12. பாண்டியன் அறிவுடை நம்பி
13. ஒல்லையூர் எறிந்த பூதப்பாண்டியன்
14. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
15. கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி
16. நல்வழுதி

ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் தவிர நம்பி நெடுஞ்செழியன், அண்டர் மகன் குறுவழுதி, மாலைமாறன், மாறன் வழுதி எனும் சிலரும் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றனர்.

*சங்கப் புலவர்களாக 450 புலவர் பெயர்கள் கிடைத்துள்ளன. இவர்களில் 100 பேர் மதுரைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். 20 பாண்டிய மன்னர்கள் சங்கப் பாடல்களில் இடம்பெற்றுள்ளனர். பத்து பாண்டிய மன்னர்கள் புலவர்களாகவும் இருந்துள்ளனர். மதுரைக் கணக்காயனார், அவர் மகன் நக்கீரன், இறையனார், சீத்தலைச் சாத்தனார், கூலவாணிகன் சாத்தனார், மாங்குடி மருதனார், மருதன் இளநாகனார் ஆகியோர் மதுரைப் புலவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.*

*மதுரை நகரமைப்பையும், அரண்மனையையும் பற்றி சங்க நூல்களான மதுரைக்காஞ்சி, நெடுநெல்வாடை பரிபாடல் ஆகியவை விரிவாகப் பேசுகின்றன. மதுரை நகரைப் பற்றிய வருணனையில்,*

வையை அன்ன வழக்குடை வாயில்
வகை பெற எழுந்து வானம் மூழ்கி
சில் காற்று இசைக்கும் பல் புழை நல் இல்
யாறுகிடந்தன்ன அகல் நெடுந் தெருவில்

*(மதுரைக் காஞ்சி. அடி 356 - 359)*

*எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கூடல் என்றும் இந்நகருக்கு ஒரு பெயர் உண்டு. அங்குள்ள நாளங்காடிகள் பற்றிக் குறிப்பிடும் போது,*

மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்
நாள் அங்காடி நந்தலைக் கம்பலை

*(மதுரை. அடி 429 - 430)*

*என விவரிக்கப்பட்டுள்ளது. சிவபெருமான் இவ்வூரின் தலைவனாக வீற்றிருக்கிறான் என்பதை,*

மழுவாள் நெடியோன் தலைவன் ஆக
மாசு அற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்.

*(மதுரை. அடி. 455 - 456)*

*என்னும் அடிகளால் அறியலாம். மதுரை நகரில் பல சமயத்தைச் சார்ந்தவர்களும் இருந்தனர் என்பதையும் மதுரைக்காஞ்சி கூறுகிறது. இங்கிருந்த பௌத்த பள்ளியைச் சுட்டும் போது,*

காமர் கவினிய பேரிளம் பெண்டிர்
பூவினர் புகையினர் தொழுவளர் பழிச்சிச்
சிறந்து புறங்காக்கும் கடவுள் பள்ளியும்,

*(மதுரை. அடி. 465 - 467)*

*என்று உரைக்கப்பட்டுள்ளது. அந்தணர் பள்ளி பற்றிக் குறிப்பிடும் போது,*

அறநெறி பிழையா அன்புடை நெஞ்சின்
பெரியோர் மேஎய் இனிதின் உறையும்
குன்று குயின்றன்ன அந்தணர் பள்ளியும்

*(மதுரை. அடி. 472 - 474)*

*என்று குறிப்பிடப்படுகிறது. சமணர் இருக்கைகளும் தனியே இருந்துள்ளன.*

பூவும் புகையும் சாவகர் பழிச்ச
சென்ற காலமும் வருஉம் அமயமும்
......................
இறும்பூது சான்ற நறும் பூஞ்சேக்கை

*(மதுரை. அடி. 476-488)*

*என்ற அடிகளில் சமணர் இருக்கைகள் பற்றி விரிவாகப் பேசப்பட்டுள்ளன.*

*மதுரை நகரின் அமைப்பும், அரண்மனையின் பெருமையும் நெடுநல்வாடையில் விரிவாகத் தரப்பட்டுள்ளன.*

மாடம் ஓங்கிய மல்லல் மூதூர்
ஆறுகிடந்தன்ன அகநெடுந்தெருவில்

*(நெடு. அடி 29-30)*

*என்று தெருக்களின் அமைப்பும் விரிவும் கூறப்படுகிறது. அரண்மனையை மனைநூல் வல்லார் அமைத்தமையை,*

நூல் அறிபுலவர் நுண்ணிதின் கயிறிட்டு
தேஎம் கொண்டு தெய்வம் நோக்கி
பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்ப மனை வகுத்து

*(நெடு. அடி. 76-78)*

*என்னும் அடிகள் உணர்த்தும்.*

வென்று எழு கொடியோடு வேழம் சென்றுபுக
குன்று குயின்றன்ன ஓங்கு நிலை வாயில்

*(நெடு. அடி. 87-88)*

*என்று அரண்மனையின் உயர்ந்தோங்கிய வாசல் விவரிக்கப் பட்டுள்ளது.*

*மதுரை நகரம் ஒரு தாமரை மலர் போல அமைந்திருந்தது என்பதைப் பரிபாடல் கூறும்.*

மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரை
பூவொடு புரையும் சீறூர் பூவின்
இதழகத்தனைய தெருவம் இதழகத்து
அரும் பொகுட்டனைத்தே அண்ணல் கோயில்
தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்
தாதுண் பறவை அனையர் பரிசில் வாழ்நர்

*மதுரை மாநகரம் தாமரை மலருக்கு இணையானது. பூவின் இதழ்கள் போல தெருக்கள் அமைந்திருந்தன. இதழ்கள் சூழ்ந்த மொட்டு போல கோயில் அமைந்திருந்தது. கோயில் என்பதை மன்னனின் அரண்மனை என்றும் கொள்ளலாம். பூவின் மகரந்தம் போன்று தமிழ்க்குடிகள் வாழ்ந்தனர். பரிசு பெற்று வாழும் புலவர்கள் அம்மக்களின் கொடையால் நிறைவுற்றனர் என்று இப்பாடல் மூலம்*

அறியப்படுகிறது.

வைகை நதியும், கிருதமாலா நதியும் மதுரையை வளமாக்கின. இருந்தையூர் எனும் பகுதியில் இன்றைய கூடல் அழகர் கோவில் அமைந்திருந்தது. கோயிலின் அருகிலேயே கிருதமாலைநதி ஓடியது என்று பல அரிய செய்திகள் மதுரையைப் பற்றிப் பல இலக்கியங்களிலும் இடம்பெற்றுள்ளன.

# 4. முற்காலப் பாண்டியப் பேரரசு

மதுரைப் பகுதியில் சங்க காலப் பாண்டியர் ஆட்சி களப்பிரர் வருகையால் முடிவுக்கு வந்தது. கருநாடகப் பகுதியிலிருந்து தமிழகம் வந்த களப்பிரர்களால் கி.பி. 3ம் நூற்றாண்டு முதல் கி.பி. 6ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை தமிழகம் ஆளப்பட்டது. இவர்களது ஆட்சி முறை, அரசு பரம்பரை வழிமுறை எத்தகையது என்பது பற்றிய எவ்விதச் சான்றுகளும் நமக்குக் கிடைத்தில. எனவே, இக்காலத்தைத் தமிழக வரலாற்றில் இருண்ட காலம் என வரலாற்று ஆசிரியர் கருதுவர். களப்பிரருடைய படையெடுப்பு தமிழக அரசியலில் பெரும் மாறுதல்களைச் செய்ததோடு, சமூக, சமய, கலாச்சார வாழ்விலும் பெரும் மாறுதல்களைச் செய்தது. வைதீக மதங்களுக்கு எதிராகவும் சமண, பௌத்த மதங்களுக்கு ஆதரவாகவும் செயல்பட்டனர் களப்பிரர்கள். ஆனால் இந்த நிலை நெடுங்காலம் நீடிக்கவில்லை. ஆறாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தொண்டை மண்டலத்தில் பல்லவர்களும் பாண்டி மண்டலத்தில் பாண்டியர்களும் எழுச்சி பெற்றனர். களப்பிரர்களை வென்று தத்தம் ஆட்சியை அவ்வப்பகுதியில் நிலை நிறுத்தினர். அந்த வகையில் மதுரையில் பாண்டிய அரசை அமைக்கக் காரணமாயிருந்த முதல் அரசன் கடுங்கோன் என்பவன். இம்மன்னன் காலம் முதல் சுமார் 270 ஆண்டுகள் பாண்டிய மன்னர்கள் பலர் மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்தனர். இப்பாண்டியர் அரசு முற்காலப் பாண்டியப் பேரரசு எனக் கருதப்படும். இப்பேரரசு

தொடர்பான வரலாற்றை அறிந்து கொள்ள ஆதாரங்களாக அமைபவை இம்மன்னர்களில் சிலர் வெளியிட்ட செப்பேடுகளேயாகும். அவற்றில் வேள்விக்குடிச் செப்பேடு, தளவாய்புரம் செப்பேடு, சிவகாசிச் செப்பேடு, சின்னமனூர்ச் செப்பேடு ஆகியவை முக்கியமானவையாகும்.

## கடுங்கோன்

களப்பிரர்களின் வசமிருந்த பாண்டிய நாட்டை மீட்ட பெருமைக்குரியவன் இம்மன்னன். இவனது ஆட்சிக் காலம் கி.பி. 575 முதல் 600 வரை எனலாம். இவனைப் பற்றி வேள்விக்குடிச் செப்பேடு, 'படுகடன் முளைத்த பருதி போல் வெளிப்பட்ட பாண்டியாதிராசன்' என்றும் ஒடுங்கா மன்னர் ஒளிநகரழிந்த கடுங்கோன் என்றும் கதிர்வேற் றென்னன் என்றும் சிறப்பித்துக் கூறுகிறது. களப்பிரரை வேரறுத்தவன், திரண்ட தோள்களை உடையவன், மறையோருக்குத் திருமங்கலம் என்னும் கிராமத்தைக் கொடையளித்தவன் என்று தளவாய்புரம் செப்பேடு கூறும். இம்மன்னன் பற்றிய வேறு செய்திகள் எதுவும் கிடைக்கவில்லை.

## மாறவர்மன் அவனி சூளாமணி

இம்மன்னனது ஆட்சிக் காலம் கி.பி. 600 - 620 ஆகும். மாறவர்மன் என்ற சிறப்புப் பெயரைச் சூட்டிக் கொண்டவன். இவன் காலம் முதல் பாண்டிய மன்னர்கள் ஒருவர் பின் ஒருவராக மாறவர்மன், சடையவர்மன் என்ற சிறப்புப் பெயர்களை மாறி மாறி சூட்டிக் கொண்டனர். இம்மன்னனை உண்மையின் தோழன், கடல் போன்ற சேனையை உடையவன் என்று செப்பேடுகள் கூறுகின்றன. வேறு சிறப்புச் செய்திகள் எதுவும் அறிவதற்கான சான்றுகள் கிடைத்தில.

## செழியன் சேந்தன்

இவன் மாறவர்மன் அவனி சூளாமணியின் மகன். இவன் கி.பி. 620 முதல் 642 வரை அரசு செலுத்தியவன். செங்கோற் சேந்தன், வேந்தர் வேந்தன் என்று வேள்விக் குடிச் செப்பேட்டால் சிறப்பித்துப் பேசப்படுகிறான். வானவன் என்ற சிறப்புப்பெயர் பெற்றுள்ளதால் சேரரை வென்றவன் எனக் கருத இடமுண்டு. ஜயந்தன் என்ற பெயரும் இவனுக்குரியதே. திருநெல்வேலி மாவட்டம் மலையடிக்குறிச்சி குகைக் கோயிலில் காணப்படும் இவனது கல்வெட்டு ஒன்று இவனை மாறன் மகன் சேந்தன் என்ற பொருளில் மாறன் சேந்தன் எனக் குறிப்பிடுகிறது. இவனது 17 ஆம் ஆட்சியாண்டில் இக்கோயில் எடுக்கப்பட்ட விபரத்தை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது. அண்மைக் காலத்தில் மதுரை வைகைக் கரையில் கண்டுபிடிக்கப்பட்ட வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று இவன் காலத்தது என்ற ஒரு கருத்து உண்டு. ஆனால் இது அவன் மகன் மாறவர்மன் அரிகேசரியின் காலத்ததே என்பது மிகப் பொருத்தம்.

## மாறவர்மன் அரிகேசரி

சேந்தனின் மகன். கி.பி. 642 முதல் 700 வரை அரசாட்சி புரிந்தவன். வேள்விக்குடிச் செப்பேடு இவனைப் பலபடப் புகழ்ந்து பேசுகிறது. இவன் தன் ஆட்சிக் காலத்தில் மாற்றரசர் பலருடன் போரிட்டு வென்றான். 'பாழிவாய் அமர் கடந்தும்', 'நெல்வேலிச் செருவென்றும்' என்று செப்பேடு கூறும். பாழி என்னும் ஊர் எங்குள்ளது என்று புலப்படவில்லை. நெல்வேலிப் போர் வெற்றி என்பது மேலைச் சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தனைப் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள நெல்வேலி என்ற ஊரில் தோற்கடித்துப் பெற்றதாகும். தென்பாண்டி நாட்டின் கடலோரப் பகுதிகளில் கலகம் செய்த பரதவர்களைக் கடத்தினான்.' செந்நிலம்' என்ற ஒரு பகுதியிலும் யானைப் படை கொண்டு வென்றான் இவன். கேரள அரசனை வென்றான். இவன் காலத்தில் பாண்டிய நாட்டின் எல்லை

விரிவடைந்தது. சேரரும், சோழரும் இவன் கீழ்ப்படிந்து வாழ்ந்தனர். மாறன் அரிகேசரியின் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று ஏனாதி என்னுமிடத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மூலம் இவனது நெல்வேலிப் போர் வெற்றியும், அந்தணர்களுக்கு அளித்த பலவித கொடைகளும் அறியப்படுகின்றன.

இம்மன்னன் வைதீக சமயத்திற்குப் பெரும் ஆதரவு கொடுத்தவன். முதலில் சமணம் தழுவிய இவன் திருஞான சம்பந்தரின் அறிவுரையால் சைவ சமயம் மீண்டான். இவன் மனைவி வளவர் கோன் பாவையாம் சோழ இளவரசி மங்கையர்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் இவனை வைதீக மதமாற்றம் செய்வதில் பெரும் பங்காற்றியவர்கள். இம்மூவரும் சைவ நாயன்மார்கள் 63 பேரில் இடம்பெற்று உள்ளனர். 'நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கு அடியேன்' என்று இவனைப் பற்றிச் சுந்தரர் தன் திருத்தொண்டர் தொகையில் குறிப்பிட்டுள்ளார். கூன்பாண்டியன் என்றும் நின்ற சீர் நெடுமாறன் என்றும் இவனுக்குப் பெயர் உண்டு. பாண்டிய மன்னர்களிலேயே நெடுங்காலம் ஆட்சி செய்தவன் எல்லாத் துறைகளிலும் வெற்றி பெற்றவன் இம்மன்னன்.

## கோச்சடையன் ரணதீரன்

அரிகேசரி மாறவர்மனின் மகன் இவன். கி.பி. 700 முதல் 730 வரை சிறப்பாக ஆட்சி செய்தவன். வேள்விக்குடிச் செப்பேடு இவனை மன்னர் மன்னன், மதுரகர்நாடகன், கொங்கர் கோமான் என்று பலவாறாகச் சிறப்பித்துப் பேசும். சேர, சோழ மண்டலங்களை இவன் வென்றதோடு கொங்குப் பகுதியையும் கருநாடகப் பகுதியையும் வெற்றி கொண்டான். மேலைச் சாளுக்கியரையும் தோற்கடித்தான் என்பதை 'மங்கலபுர மாநகருள் மாகதரை யெறிந்தழித்து' என்னும் வேள்விக்குடிச் செப்பேட்டுத் தொடரால்

அறிகிறோம். திருப்புடைமருதூர்ப் பகுதியில் இருந்த ஆய்வேளிரை வென்றான். செங்கோடு, புதான்கோடு என்னும் சேர நாட்டுப் பகுதிகளைக் கைப்பற்றினான்.

இவன் தன் மகளைச் சோழ இளவரசனுக்கு மணமுடித்துக் கொடுத்தான். இவன் காலத்தில் சுந்தர மூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமானும் மதுரைக்கு வந்தனர் என்றும் அவர்களைப் பாண்டியனும் சோழனும் நன்கு உபசரித்தனர் என்றும் அறிகிறோம்.

## முதலாம் இராசசிம்மன்

அரிகேசரி பராங்குச மாறவர்மன் அல்லது மாறவர்மன் இராசசிம்மன் என்று இவன் பெயர் பெறுகிறான். இவனை முதலாம் இராசசிம்மன் என்றும் கூறுவர். இவன் ரணதீரனின் மகனாவான். கி.பி. 730 முதல் 768 வரை அரசு செலுத்தியவன். இவனது சமகாலத்து வேந்தர்களாக இரண்டாம் நந்திவர்ம பல்லவ மல்லன், சாளுக்கிய இரண்டாம் கீர்த்திவர்மன், விக்கிரமாதித்யன், கங்க அரசன் ஸ்ரீ புருசன் ஆகியோரைக் குறிப்பிடுவர். மழகொங்கினை இவன் வென்றான். கொங்கு நாட்டிற்குச் சென்ற போது கொடுமுடியிலுள்ள சிவபெருமானைத் தரிசித்தான். கங்க அரசன் மகள் பூசுந்திரியை மணந்து கொண்டான்.

வைணவ ஆழ்வார்களான பெரியாழ்வார், அவரது வளர்ப்பு மகள் ஆண்டாள், நம்மாழ்வார் அவரது சீடர் மதுரகவி ஆகியோர் இவன் காலத்திலும் இவன் மகன் காலத்திலும் வாழ்ந்தவர்கள். இவனது அமைச்சன் மாறங்காரியும் இவனது மகன் காலத்திலும் அமைச்சனாக இருந்தான். மாறன்காரி தன் அரசனுக்காகச் சாளுக்கியருடன் போரிட்டு வெண்பை என்னுமிடத்தில் வெற்றிகண்டவன். ஆனைமலையில் நரசிங்கப் பெருமாளுக்காகக் குடைவரைக் கோயில் ஒன்றைச் செய்வித்து அது முற்றுப்பெறுமுன்னர் இறந்துவிட்டான். இம்மன்னன் வைணவம் தழுவியவனா யினும் சைவ சமயத்தின் பாலும் அதிக அக்கறை

காட்டியவன். சேர, சோழ, பாண்டிய நாட்டின் மாட மதில்களைப் புதுப்பித்துக் கட்டியவன் என்ற சிறப்பும் இவனுக்குண்டு.

## பராந்தக நெடுஞ்சடையன்

முதலாம் வரகுணன் என்றும் இவன் பெயர் பெற்றவன். இராசசிம்மனுக்கும் கங்கநாட்டு இளவரசி பூசுந்தரிக்கும் பிறந்தவன். இவன் கி.பி. 768 முதல் 815 வரை ஆட்சி செய்தவன். தனது 3ஆம் ஆட்சியாண்டில் வேள்விக்குடிச் செப்பேட்டையும் 17 ஆம் ஆட்சியாண்டில் சீவரமங்கலம் செப்பேட்டையும் வெளியிட்டவன்.

பல்லவர்களைக் காவிரிக் கரையிலுள்ள பெண்ணா கடத்தில் வென்றான். பல்லவர்க்கு உதவி செய்த சேரரையும் அதியமானையும் வெற்றி கொண்டான். கருருக்கு அருகில் உள்ள ஆயிரவேலி, அயிருர், புகழியூர் ஆகிய இடங்களில் நிகழ்ந்த போரில் அதியனைத் தோற்கடித்து மதுரையில் சிறை வைத்தான். மேலும் வேணாட்டின் ஆய்வேளிரை வென்றான். விழிஞத்தை வென்றான். மனுசரிதன், பண்டிதவத்சலன், கீதகின்னரன் என்று பல சிறப்புப் பெயர்களைப் பெற்றவன்.

இவனும் மந்திரிகளாக மாறங்காரியும் அவன் இறந்த பின் அவன் தம்பி மாறன் எயினனும் இருந்தனர். அவர்களே ஆனைமலை நரசிங்கப் பெருமாள் கோயிலை எடுப்பித்த வர்கள். இவனது படைத்தலைவன் சாத்தன் கணபதி என்பவன். இவன் திருப்பரங்குன்றம் குடைவரைக் கோயிலின் திருப்பணிக்குக் காரணமானவன். இவன் மனைவி நக்கன் கொற்றி என்பவள் இங்குத் துர்க்கைக்கும் சேட்டைக்கும் கோயில்கள் அமைத்தாள்.

## ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன்

*பராந்தக நெடுஞ்சடையனின் மகனே ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன். இவனது ஆட்சிக் காலம் கி.பி. 815 - 862 வரையாகும். தளவாய்புரம் செப்பேடும் சின்னமனூர்ப் பெரிய சாசனமும் இவனது வெற்றிகளைப் பற்றி பலபடப் பாராட்டுகின்றன. ஏகவீரன், பரசக்ர கோலாகலன், அவனிபசேகரன் என்று பல சிறப்புப் பெயர்களைப் பெற்றவன். குன்னூரிலும் சிங்களத்தும் வழி ஒத்து வாடாத வாகை சூடினான் என்று சின்னமனூர்ச் செப்பேடு கூறுகிறது. இவனது சிங்கள வெற்றியை மகாவம்சமும் உறுதி செய்கிறது.*

*பல்லவர்களோடும் போரிட்டு வென்றான் இம்மன்னன். தெள்ளாறெறிந்த நந்திவர்மனுடன் நடந்த போரில் பல்லவனே வென்றான். கி.பி. 859இல் குடமூக்கில் நடந்த போரில் பாண்டியன் வென்றான். பின்னர் அரிசிலாற்றங் கரைப் போரில் வெற்றி வாய்ப்பை இழந்த காரணத்தால் பாண்டியர் வசமிருந்த சில சோழ நாட்டுப்பகுதிகள் பல்லவ மன்னன் நிருபதுங்கன் வசமாயின.*

## இரண்டாம் வரகுணன்

*தன் தந்தை இறந்த அதே ஆண்டில் முடிசூட்டப் பெற்றவன். கி.பி. 862 முதல் 885 வரை ஆட்சி செய்தான். இவனது தந்தையின் இறுதிக் காலத்திலேயே தமிழக அரசியலில் மாறுதல்கள் தோன்றத் தொடங்கிவிட்டன. கி.பி. 850 அளவில் புதிதாகச் சோழப் பேரரசு விசயாலயன் முயற்சியால் எழுந்தது. பல்லவர்களும் பாண்டியர்களும் சோழர்களால் வலிமை குன்றினர். பல்லவர்களில் நிருபதுங்கனும், பாண்டியரில் வரகுணனும் ஓரணியில் நின்றனர். அபராஜித பல்லவனும், கங்க மன்னன் முதலாம் பிருதிவிபதியும், முதலாம் ஆதித்த சோழனும் ஓரணியில் திரண்டனர். திருப்புறம்பியம் என்னுமிடத்தில் நடந்தபோரில் வரகுணன் தோல்வியைத் தழுவினான். இத்தோல்விக்குப் பிறகு வெகுகாலம் வரகுணன் ஆட்சியில் இல்லை.*

ஆன்மீகத்துறையில் ஈடுபட்டு அமைதி தேடியது அவனது மனம். இவன் ஆயுள் காலத்திலேயே இவன் தம்பி பராந்தக வீரநாராயணன் முடி சூட்டப்பெற்றான். திருவாசகம் தந்த மாணிக்கவாசகர் இந்த வரகுணன் காலத்தவரே. அவர் பாடிய திருச்சிற்றபலக் கோவையாரில், 'வரகுணந் தென்னவேந்து சிற்றலம்பத்தான்' என்று இவனைக் குறிப்பிட்டுள்ளார். இம்மன்னன் திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கு 1400 பொன் கொடையளித்துள்ளான். ஆண்டொன்றுக்கு 2800 கலம் நெல் வழங்க ஏற்பாடு செய்தான் என்பதை அங்குள்ள நீண்ட வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்றால் அறிகிறோம்.

## பராந்தகவீர நாராயணன்

இவனது ஆட்சிக்காலம் கி.பி. 860 முதல் 905 வரையாகும். ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனுக்கும் பொத்தப்பிச் சோழன் ஸ்ரீகண்டனின் மகள் அக்கள நிம்மடிக்கும் பிறந்தவன். தளவாய்புரச் செப்பேட்டை வழங்கியவன் இவனே. சென்னிலம் என்னுமிடத்தில் தனது தாயாதி சகோதரனைத் தோற்கடித்தான்; கரகிரியை வென்றான் என்பர். கரவந்தபுரம் என்பதே களக்குடி என வழங்கப்பட்டது. இன்று இவ்வூர் உக்கிரன்கோட்டை என்று அழைக்கப் படுகிறது. இவ்வூரில் இம்மன்னன் வீற்றிருக்கும் போது தான் தளவாய்புரச் செப்பேட்டை வழங்கினான். பல பிரமதேயங்கள், தேவதானங்கள் கொடையளித்தான். தந்தை ஸ்ரீவல்லபனைப் போன்றே சிறந்த வைணவ பக்தன். கலிப்பகை, கண்டருள்கண்டன், மகரகேதனன், மதுராபுரி பரமேஸ்வரன், குருசரிதன், செந்தமிழ்க்கோன் எனப் பல பட்டப் பெயர்களைப் பெற்றவன். வானவன் மாதேவி என்னும் சேர இளவரசியை மணந்து பட்டத்தரசியாகக் கொண்டவன். இவள் பெயரால் மதுரைக்கருகிலுள்ள சமண மலையில் 'மாதேவிப் பெரும்பள்ளி' என்ற சமணப் பள்ளியைத் தோற்றுவித்து அதற்கு நில தானங்கள் அளித்துள்ளான் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. இக்கல் வெட்டைத் தமிழ்நாடு தொல்லியல் துறை கண்டறிந்தது.

TAMIL NADU STATE ... OF ARCHAEOLOGY LIBRARY, Acc No. 211815 Date ...

## இரண்டாம் இராசசிம்மன்

சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகளை வழங்கியவன் இவனே. பராந்தக வீரநாராயணனுக்கும் வானவன் மாதேவிக்கும் பிறந்தவன் இவன். கி.பி. 900 முதல் 920 வரை ஆட்சி செய்தவன். வஞ்சி மீது படையெடுத்துச் சென்றான். தஞ்சையர் கோனை வென்றான். சோழனின் குறுநிலத் தலைவர்களாகிய கொடும்பாளூர் இருக்கு வேளிரோடு போரிட்டான். இவன் காலத்தில் தஞ்சையை முதலாம் பராந்தக சோழன் ஆண்டான். பராந்தக சோழன் மதுரை கொண்ட கோப்பரகேசரி என்று தன்னைக் கூறிக் கொள்பவன். கி.பி. 910இல் அவன் மதுரையை வென்றான். இராசசிம்மன் இலங்கை மன்னனிடம் படையுதவி பெற்று சோழனோடு போரிட்டான். வெள்ளூர் என்னுமிடத்தில நடைபெற்ற போரில் பாண்டியன் தோற்கடிக்கப்பட்டான். பாண்டியன் இராசசிம்மன் இலங்கைக்குத் தப்பிச் சென்று தன் மகுடத்தையும் அரச சின்னங்களையும் வைத்துவிட்டு சேர நாட்டில் தஞ்சம் புகுந்து வாழ்ந்தான். அவன் பற்றிய வேறு செய்திகள் அறியப்படவில்லை

## சோழன் தலைகொண்ட வீரபாண்டியன்

இரண்டாம் இராசசிம்மனின் மகனே இவன். சோழர் வசமிருந்த பாண்டிய நாட்டை மீட்டு 946 முதல் 966 வரை ஆட்சி செய்தவன் இம்மன்னன். சோழமன்னனை வென்றதால் இவன் சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் எனப்படுகிறான். 'சோழாந்தகன்' என்ற சிறப்புப் பெயரும் இவனுக்கு உண்டு. இவனது கல்வெட்டுகள் மதுரை வட்டம் கீழ்மாத்தூரிலும் நெல்லை, கன்னியாகுமரி, இராமநாதபுரம் மாவட்டங்களிலும் காணப்படுகின்றன. அண்மையில் இராமநாதபுரம் மாவட்டம் கமுதி வட்டம் நீராவி கிராமத்தில் இம்மன்னனின் 15ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டை தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை கண்டுபிடித்துள்ளது. இங்கிருந்த சிவன் கோயிலுக்கு

இம்மன்னன் காலத்தில் ஆடுகள் தானமளிக்கப்பட்ட செய்தியை இக்கல்வெட்டு கூறுகிறது.

வலிமைபெற்ற சோழர்கள் மீண்டும் பாண்டிய நாட்டைக் கைப்பற்றத் துணிந்தனர். சுந்தரசோழன் மதுரை கொண்ட இராசகேசரி என்று தன்னைக் கூறிக் கொள்கிறான். அவன் மகன் ஆதித்த கரிகாலன் வீரபாண்டியனோடு போரிட்டு அவனை வென்றான் என்று கரந்தைச் செப்பேடுகளும், கன்னியாகுமரிக் கல்வெட்டுகளும் கூறுகின்றன. இப்போர் சேவூர் என்னுமிடத்தில் நிகழ்ந்தது. இதற்குப் பின் சோழர் வசமே பாண்டிய நாடு இருந்தது.

## சடையன் மாறன்

சடையன் என்ற பட்டப்பெயருடன் மதுரைப் பகுதியை பத்தாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் சுமார் இருபது ஆண்டுகாலம் ஒரு பாண்டிய மன்னன் ஆட்சி புரிந்துள்ளான். அவனது இரண்டு கல்வெட்டுகள் விருதுநகர் மாவட்டம் திருச்சுழி வட்டம் கல்லுமடை என்னுமிடத்தில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினரால் கண்டிறியப் பட்டுள்ளன. அங்கிருந்த சிவன் கோயில் ஒன்றுக்கு விளக்கெரிக்க நிலக்கொடை கொடுத்த செய்தியை இக்கல் வெட்டுகள் கூறுகின்றன. இம்மன்னனது இயற்பெயர் என்ன, பெற்றோர் யார் என்பது தெரியவில்லை.

அநேகமாக இவனே முற்காலப் பாண்டியர் வழியில் கடைசி மன்னன் எனலாம். இக்காலத்தில் சோழநாட்டுப் பகுதியில் முதலாம் இராசராசன் அரசு கட்டில் ஏறி பாண்டிய நாட்டை முதன் முதலில் வென்றான். அக்காலத்தில் அமரபுஜங்கன் என்ற பாண்டியன் இப்பகுதியில் இருந்ததாகவும் அவனை இராசராசன் வென்றான் என்றும் திருவாலக்காட்டுச் செப்பேடு கூறுகின்றன. இந்த அமரபுஜங்கன் யார் என்பதும் தெளிவாக இல்லை. இராசராசன் காலம் முதல் சுமார் 200 ஆண்டுகள் பாண்டிய நாட்டுப் பகுதிகள் சோழரின் வசமே இருந்தன.

# 5. சோழர் ஆட்சி

முதலாம் பராந்தக சோழன் (கி.பி. 907-953) முதன் முதலில் மதுரையை வெற்றி கொண்டு 'மதுரை கொண்ட கோபரகேசரி' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றான். இவன் காலத்தில் நிலையான படை ஒன்று மதுரைப் பகுதியில் நிறுத்தப்பட்டது. அவனது படைத்தலைவன் அருள்நிதிக் கலியன் என்பவன் இங்குத் தங்கியிருந்தான். அவன் ஆனைமலை நரசிங்கப் பெருமாள் கோயிலுக்குக் கொடுத்த தானம் பற்றி பராந்தகனின் வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. இக்கல்வெட்டு ஆனைமலை நரசிங்கர் குடைவரையின் பாறையில் அமைந்துள்ளது.

பின்பு தொண்டை மண்டலத்தில் ஏற்பட்ட இராட்டிர கூடர் படையெடுப்பின் காரணமாகச் சோழரின் கவனம் சிதற, சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் என்னும் மன்னன் தற்காலிகமாகப் பாண்டிய நாட்டை மீட்டுக் கொண்டான். அதன் பிறகு இரண்டாம் பராந்தகன் என்னும் சுந்தர சோழன் மதுரையைக் கைப்பற்றினான். மதுரை கொண்ட இராஜகேசரி என்ற சிறப்புப் பெயரையும் பெற்றான். இவனுக்குப் பாண்டியனைச் சுரம் இறக்கிய பெருமாள் என்ற பெயரும் உண்டு.

முதலாம் ராசராசனின் பாண்டிய நாட்டு வெற்றியே முடிவான வெற்றியாக அமைந்தது. முதலாம் ராசராசன் காந்தளூர்ச் சாலையை வெல்வதற்காக சேர நாடு நோக்கிச் சென்ற போது அப்போது பாண்டிய நாட்டின் ஆளுநனாக இருந்த அமரபுஜங்கன் என்பவனை வென்றதாகக் கூறப்படுகிறது. ஆனால் அமரபுஜங்கன் யார் என்பதை அறிய முடியவில்லை என வரலாற்றாசிரியர்கள்

கூறுகின்றனர். இந்த அமரபுஜங்கன் கொங்குச் சேரர் தலைவனாக இருக்கலாம். பாண்டியர்களுக்கும் கொங்குச் சேரர் கோக்கண்டன் குடும்பத்தார்க்கும் நல்லுறவு நிலவியது. அம்மரபில் அமரபுஜங்கன் என்னும் ஒரு தலைவன் வரலாற்றில் பேசப்படுகிறான். எனவே இராசராசனால் வெல்லப்பட்டவன் இவனே என்று கொள்வதில் தவறில்லை.

இராசராசன் பாண்டிய நாட்டை வெற்றி கண்டு தனது நேரடி ஆட்சிக்கு உட்படுத்தினான். அது முதல் சுமார் 200 ஆண்டு காலம் பாண்டிய நாடு சோழர் வசமே இருந்தது. இராசராசன் தன் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைப் பல மண்டலங்களாகப் பிரித்துப் பெயரிட்டபோது பாண்டிய நாடு "இராசராச மண்டலம் என்றும் ராஜ ராஜ பாண்டி நாடு" என்றும் பெயரிடப்பட்டது. ராஜ ராஜ வளநாடு என்றும் பாண்டிய குலாசனி வளநாடு என்றும் சில உட்பிரிவுகளுக்குப் பெயரிடப்பட்டன. ஈழத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு ஏற்ற தளமாகப் பாண்டியநாடு இராசராசனால் பயன்படுத்தப்பட்டது.

இராசராசனின் மகன் முதலாம் இராசேந்திரன் தனது ஐந்தாம் ஆட்சி ஆண்டிலேயே (கி.பி. 1018இல்) ஈழத்தின் மீது படை செலுத்தி வென்று ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் ஈழத்தில் பாண்டியன் இராஜசிம்மன் விட்டுவிட்டு வந்த சுந்தரமுடியும் இந்திரன் ஆரமும் மீட்டு வந்தான்.

இராசேந்திர சோழன் தான் வென்ற பகுதிகளுக் கெல்லாம் தன் மகன்களையே ஆளுநர்களாக நியமித்து ஆட்சி செய்தான். சோழ பாண்டியன், சோழ கங்கன், சோழ கேரளன், சோழ லங்கேஸ்வரன் என்று அவர்கள் முறையே பாண்டிய, கங்க, சேர, ஈழ நாடுகளில் நிர்வாகம் செய்தனர். அவ்வகையில் சடையவர்மன் சுந்தர சோழ பாண்டியன் என்னும் பெயரில் முதல் ஆளுநன் பாண்டிய நாட்டிற்கு நியமிக்கப்பட்டான். இவன் முதலாம் இராசேந்திரனின் இரண்டாம் மகனாவான். இவனே இரண்டாம்

இராசேந்திரன் என்று அடையாளம் காணப்படுபவன் ஆவான். இவனுக்குப் பிறகும் மூன்று பேர் சோழ பாண்டியர்களாகப் பட்டம் எய்தி ஆண்டனர். கி.பி. 1070 வரையிலும் இம்முறை பின்பற்றப்பட்டது. வலுவிழந்த பாண்டியர்கள் அவ்வப்போது தங்களது படைகளை வலுப்படுத்தி, சேர, ஈழ மன்னர்களுடைய உதவியுடன் சோழர்களை எதிர்த்து வந்தனர். இராசேந்திரன் மதுரை நகரில் ஓர் அரண்மனை கட்டினான்.

சோழ பாண்டியர்களின் ஆட்சியில் திருநெல்வேலிப் பகுதியில் பல கோயில் பணிகள் செய்யப்பட்டுள்ளன. திருவாலீசுவரம் கோயில் சோழர் கலைப் பணிக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாய் இப்பகுதியில் திகழ்கிறது. விருதுநகர் மாவட்டம் ஆவியூரில் இராசேந்திர சோழன் பெயராலேயே ஒரு சிவன் கோயில் கட்டப்பட்டுள்ளது. முதலாம் இராசராசனுடைய கல்வெட்டுகள் அழகர்கோயில், தென்கரை ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. பாண்டிய நாட்டில் முதலாம் குலோத்துங்கன் காலம் வரை சோழர் கல்வெட்டுகள் மிகுதியாக உள்ளன.

பாண்டியர்கள் அவ்வப்போது வாரிசுரிமைப் போரில் ஈடுபட்டு அமைதியைக் குலைத்தனர். ஒரு பிரிவினர் இலங்கை அரசர்களின் உதவியை நாடுவதும் மற்றொரு பிரிவினர் சோழர் உதவியை நாடுவதும் மாறிமாறி நடைபெற்றது. யாரிடமும் விசுவாசம் காட்டாத பாண்டியர்கள் அடிக்கடி போர்களைச் சந்திக்க வேண்டியவர்களாகவே இருந்தனர்.

மூன்றாம் குலோத்துங்கன் காலம் வரைக்கும் சோழர்கள் பாண்டிய நாட்டில், குறிப்பாக மதுரைப் பகுதியில் செல்வாக்கோடு விளங்கினர். மூன்றாம் குலோத்துங்கனின் குடுமியான்மலைக் கல்வெட்டுக் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

பாண்டி மண்டலத்தைச் சோழ பாண்டியன்
மண்டலம் என்று எழு பாரும் செல்ல நிறுத்தி
மல்லவைய மதுரையையும் மதுரை யென்ற பேரொழிதுல்
சொல்ல முடித்தலை கொண்ட சோழபுரம் என்றருளி
..................
திருவாலவாயிலில் அமர்ந்தவர்க்குதன் பேரால்
சிறந்த பெருந்திரு வீதியும் திருநாளும் கண்டருள
உருத்திரருடனே சிலையால்முப்புரம் எரித்த
சொக்கர்க்கு திருப்பவனி கண்டருளி திருவீதியில்
சேகரித்து தென்மதுரை திருவால வாய்ப் பொன்மலை
என்ப பொன் மேய்ந்து

*இக்கல்வெட்டு கி.பி. 1212 ஆம் ஆண்டிற்குரியது. (ஆட்சியாண்டு 34) இதன் மூலம் மூன்றாம் குலோத்துங்கன் காலம் வரையிலும் மதுரை சோழர் வசம் இருந்தது பெறப்படும். குலோத்துங்கன் மதுரை நகரின் பெயரையே முடிகொண்ட சோழபுரம் என மாற்றினான். தன் பெயரால் திருவீதி அமைத்தான்.இறைவனைத் திருவீதி உலா வரச் செய்து தான் வீதியில் நின்று வணங்கினான். மதுரைக் கோயிலுக்குப் பொன் வேய்ந்தான் என்பதிலிருந்து குலோத்துங்கனின் ஆழ்ந்த பக்தி புலப்படும்.*

*முதலாம் சடையவர்மன் குலசேகரன் (1190-1216) காலம் முதல், சோழரிடமிருந்து விடுதலை பெற்றுத் தனிநாடாகப் பாண்டிய நாடு ஆளப்பட்டது. முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (1216 - 1238) அதே சோழர்களை வென்று சோழ நாட்டைக் கைப்பற்றி சோழ நாடு கொண்டருளிய சுந்தர பாண்டியன் என்ற சிறப்புப் பெயரும் பெற்றான். இவன் காலம் முதல் சோழர் ஆதிக்கம் பாண்டிய நாட்டில் முடிவுக்கு வந்தது.*

# 6. பிற்காலப்பாண்டியர் எழுச்சி

மதுரையைத் தலைநகராமாகக் கொண்ட பாண்டிய மண்டலம் முதலாம் இராசராசனாலும் அவன் மகன் இராசேந்திரனாலும் கையகப்படுத்தப்பட்டு அவர்களது நேரடி பிரதிநிதிகளால் ஆளப்பட்டது. அதே நேரத்தில் நாட்டை இழந்த பாண்டியர்களும் முற்றிலும் இப்பகுதியை விட்டு அகன்றுவிடவில்லை. தொடர்ந்து சிறுசிறு நிலப் பகுதிக்குத் தலைவர்களாக இருந்து மீண்டும் இழந்த ஆட்சியைப் பெற காலங்கருதிக் காத்திருந்தனர். அத்தகைய பாண்டிய சிற்றரசர்கள் சிலரை அறிந்து கொள்வது நன்மை பயக்கும்.

## ஜடாவர்மன் உடையார் ஸ்ரீவல்லபன்

(கி.பி. 1014-1031) இவன் கி.பி. 1014இல் நெல்லை மாவட்டப் பகுதிகளில் இருந்தவன். இவனது கல்வெட்டுகள் நெல்லை மாவட்டத்தில் சேரமாதேவி, ஆத்தூர், திருவாலீஸ்வரம், திருக்கோவிலூர் ஆகிய ஊர்களில் காணப்படுகின்றன. இவன் 17 ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளான். தொடக்கத்தில் சோழர்களோடு நல்லுறவோடு இருந்தான். 1021-22 வாக்கில் இவன் சோழர் களால் மதுரையை விட்டு விரட்டப்பட்டு வாழ்க்கையின் இறுதிகாலத்தில் திருநெல்வேலிப் பகுதிகளில் கழித்தான். 'திருமகள் சயமகள் திருப்புயத் திருப்ப' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி இவனுக்குரியது.

## ஜடாவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியன்

*(கி.பி. 1101-1124) 'திருமடந்தையும் ஜயமடந்தையும் திருப்புயங்கள் இனிதிருப்ப' எனத் தொடங்கும் இவனது மெய்க்கீர்த்தி. இவன் முதலாம் குலோத்துங்க சோழனின் சமகாலத்தவன். அவனுக்கு அடங்கிய சிற்றரசன். கி.பி.1124 வரை ஆட்சி செய்தான். மதுரை இவனது தலைநகராய் இருந்தது. இவனது மகன் மானாபரணன் என்னும் சுந்தரபாண்டியன் ஆவான். கட்டாரிமங்கலம், ராஜசிங்க மங்கலம், தென்கரை, குருவித்துறை, விஜயநாராயணம் ஆகிய ஊர்களில் இவன் காலத்தியக் கல்வெட்டுகள் காணக்கிடைக்கின்றன. இவனுக்குப் பின் மானாபரணன் என்ற சுந்தர பாண்டியன் கி.பி. 1104-1131 வரை ஆட்சி செய்தான்.*

## பஞ்சபாண்டியர்கள் யார்?

*முதலாம் குலோத்துங்க சோழனின் 14ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்று அவன் ஐந்து பாண்டியர்களை (பஞ்சபாண்டியர்) வென்றதாகக் கூறுகிறது. இந்த ஐந்து பாண்டியர்கள் யார் யார் என்பது அக்கல்வெட்டில் விளக்கமாக இல்லை. இவர்களில் வீரபாண்டியன், வீரகேசரி, குலசேகரன், பராக்ரமன் என்ற நான்கு பாண்டிய சிற்றரசர்கள் அடங்குவர் என்பது சில வரலாற்றாசிரியர்களின் கருத்து. ஐந்தாவது பாண்டியன் கேரளப்பகுதியில் சிற்றரசனாக இருந்திருக்கலாம் என்றும் கூறுவர். இப்பஞ்சபாண்டியர்களைக் குலோத்துங்கன் வென்றது கி.பி. 1084இல் என்பது அறியத்தக்கது.*

## ஜடாவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியன் (கி.பி. 1131-1144)

*இவன் ஆட்சிக்கு வந்த ஆண்டு கி.பி. 1131 'பூமாது புனர' எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி இம்மன்னனுக்குரியது. இவனது கல்வெட்டுகள் மதுரைக்கு அருகில் உள்ள ஆனையூர், விருதுநகர் மாவட்டத்தில் வேம்பத்தூர், நெல்லை மாவட்டத்தின் கடையநல்லூர் ஆகிய ஊர்களில்*

உள்ளன. ஆனையூரிலுள்ள கல்வெட்டு இவனது இரண்டாம் ஆட்சியாண்டில் இருந்த காவனூர் கிழவன் திருவொற்றியூர் தேர் பொலிய நின்றான் என்று ஒரு அதிகாரியைக் குறிக்கிறது.

## பிறபாண்டிய சிற்றரசர்கள்

மேலே குறிப்பிடப்பட்டவர்கள் தவிர இன்னும் சில பாண்டிய மன்னர்கள் இக்காலத்தில் இருந்து சிறுசிறு பகுதிகளை நிர்வகித்து வந்துள்ளனர். அவர்களில் மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் (கி.பி. 1143), மாறவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியன் (கி.பி. 1145) சடாவர்மன் குலசேகரபாண்டியன் (கி.பி. 1162), பராக்கிரமபாண்டியன் (கி.பி. 1164) சடாவர்மன் வீரபாண்டியன் (கி.பி. 1170) மாறவர்மன் விக்கிரம பாண்டியன் (கிபி. 1181) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

## பாண்டியரின் உட்பகை

மேலே கூறப்பட்ட பாண்டிய சிற்றரசர்களில் சடாவர்மன் குலசேகரபாண்டியனுக்கும் (கி.பி. 1162), பராக்கிரம பாண்டியனுக்கும் (கி.பி. 1164) இடையே பெரும்போர் மூண்டது. குலசேகரன் தென்காசி பகுதியிலும் பராக்கிரமபாண்டியன் மதுரையிலும் ஆண்டனர். இப்போரில் பராக்ரம பாண்டியன் கொல்லப் பட்டான். மதுரையும் குலசேகரன் ஆட்சிக்குட்பட்டது. போரில் மாண்ட பராக்ரம பாண்டியனின் மகன் வீரபாண்டியன் ஈழமன்னன் பராக்ரமபாகுவின் உதவியை நாடினான். அவனும் லங்காபுரி தண்டநாயகன், ஜகதராயன் என்னும் இரண்டு படைத்தலைவர்களின் கீழ் படையை அனுப்பினான். அப்படைத்தலைவர்கள் குலசேகரனை வென்று மதுரையை மீட்டு வீரபாண்டியனை மதுரைக்கு அரசனாக்கினர். கி.பி. 1170இல் இந்நிகழ்வு நிகழ்ந்தது.

ஆனால் அப்போரில் தோற்ற குலசேகரன் சோழமன்னன் இரண்டாம் இராசாதிராசனின் உதவியை

நாடினான். அவனது படைத்தலைவன் பெருமான் நம்பி பல்லவராயனின் தலைமையில் ஈழப்படைகளையும், வீரபாண்டியனையும் வென்று மீண்டும் மதுரையைப் பிடித்தான் குலசேகரன். இது கி.பி. 1172இல் நிகழ்ந்தது. இக்குலசேகரன் ஈழப்படைகளோடு ரகசிய உடன்பாடு கொண்டு சோழனுக்குத் துரோகம் இழைத்ததால் வெகுண்ட இராசாதிராசன் தன் படைத்தலைவன் அண்ணன் பல்லவரையனை அனுப்பி குலசேகரனை மதுரையை விட்டுத் துரத்தினான். கி.பி. 1177இல் இது நிகழ்ந்தது. மதுரையில் இருந்து விரட்டப்பட்ட குலசேகரன் கள்க்குடி என்னும் உக்கிரன் கோட்டையில் தங்கி ஆண்டான். கி.பி. 1178க்குப் பின் அவனது வரலாறு என்னவென்பது புலப்படவில்லை. இராசாதிராசனுக்குப் பின் சோழ அரியணை ஏறிய மூன்றாம் குலோத்துங்கன் பாண்டி நாட்டில் வீரபாண்டியனைத் தோற்கடித்து குலசேகரனின் மகன் விக்கிரமபாண்டியனை கி.பி.1186இல் மதுரைக்கு மன்னனாக்கினான். வீரபாண்டியன் மீண்டும் 1187லும் தோற்கடிக்கப்பட்டான்.

விக்கிரம பாண்டியனுக்குப் பின்னர் அவன் மகன் சடாவர்மன் முதலாம் குலசேகரன் கி.பி.1190 முதல் ஆட்சி செய்தான். ஆனால் அவனுக்கும் மூன்றாம் குலோத்துங்கனுக்கும் இடையே சுமுகமாக உறவு இல்லை. சோழனுக்கு அடங்கிய சிற்றரசனாகவே முதலாம் குலசேகரன் ஆட்சி செய்தான். இவனது கல்வெட்டுகள் பல பாண்டிய நாட்டுப் பகுதிகளில் காணக் கிடைக்கின்றன.

## இரண்டாம் பாண்டியப் பேரரசு

விக்கிரமபாண்டியனின் மகன்கள் இருவர். முதலாமவன் ஜடாவர்மன் முதலாம் குலசேகரன். இவன் கி.பி. 1190 முதல் 1116 வரை பாண்டிய நாட்டின் மன்னனாக ஆட்சி புரிந்தான். ஆனால் சோழ அரசன் மூன்றாம் குலோத்துங்கனின் ஆதிக்கம் தொடர்ந்து நீடித்தது. எனவே சோழனுக்கு அடங்கிய சிற்றரசனாகவே இவன் ஆண்டான்.

இவனது கல்வெட்டு 'பூவின் கிழத்தி' எனும் மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும். இவன் காலக்கல் வெட்டுகள் மதுரை, இராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களில் காணப்படுகின்றன. திருப்பத்தூர், சேரன்மாதேவி, சேத்தூர், வேம்பத்தூர், அழகர்கோயில், இராசபாளையம், ஆத்தூர், பெருங்குளம் ஆகிய ஊர்களில் கிடைத்துள்ளன. இவன் தன் தம்பி முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்கு கி.பி. 1216இல் முடி சூட்டினான். கி.பி. 1224க்குப் பின் இவனது இறுதிக்காலம் என்ன என்பது தெளிவாகவில்லை.

## முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. (1216 - 1238)

சோழர்களின் கீழ்ப்பணிந்து ஆண்ட பாண்டிய அரசர்களின் சிறுமை போக்க வந்த சிறுத்தை சுந்தரபாண்டியன் எனில் அது மிகையாகாது. கி.பி. 1216இல் முடி சூடிய இம்மன்னன் மூன்றாண்டுகள் வரையில் சோழர்களுக்கு அடங்கியே இருந்தான். 1218இல் மூன்றாம் குலோத்துங்கன் இறந்துவிடவே அவனது மகன் மூன்றாம் இராசராசன் சோழ அரியணை ஏறினான். இவனது திறமையற்ற ஆட்சியால் சோழப் பேரரசு வலுவிழந்தது. காலங்கருதியிருந்த விடுதலை வேட்கை மிக்க சுந்தரபாண்டியன் சோழநாட்டின் மீது படையெடுத்துச் சோழனை வென்று தனது பாண்டிய நாட்டில் சுயாட்சியை நிலைபெறச் செய்தான். இது நிகழ்ந்தது கி.பி. 1219இல் எனலாம். சோணாடு கொண்டருளிய தேவர் என இதன் மூலம் அவன் பெயர் பெற்றான். மீண்டும் அந்நாட்டை இராசராசனுக்கே திருப்பி அளித்ததன் மூலம் 'சோணாடு வழங்கியருளிய தேவர்' என்ற பெயரையும் பெற்றான். இப்போரின் போது சுந்தரபாண்டியன் சோழநாட்டின் தஞ்சை, உறந்தை ஆகிய நகரங்களைத் தீக்கிரையாக்கினான்.

> தஞ்சையும் உறந்தையும் தெந்தழல் கொளுத்தி, கூடமும்
> மாமதிலும் கோபுரமும் ஆடரங்கும், மாடமும் மாளிகையும்

மண்டபமும் பலவிடித்து செம்பியனைச் சினமிரியப் பொருது
சுரம்புக வோட்டி'

என்ற அவனது மெய்க்கீர்த்திப் பகுதி பாண்டியனது சோழநாட்டு வெற்றியைக் கூறும். சுந்தரபாண்டியன் இரண்டாம் முறையாகவும் சோழநாட்டின் மீது படையெடுத்து முழுவதுமாக அந்நாட்டை தன்னடிப் படுத்தினான். இது கி.பி. 1221இல் நிகழ்ந்தது. அதன் பின் சோழ அரசு பாண்டியர்க்குக் கட்டுப்பட்டே செயல்பட்டது எனலாம்.

சுந்தரபாண்டியன் சோழரை வென்று குடந்தைக்கு அருகில் உள்ள பழையாறை ஆயிரத்தளியில் வீராபிசேகம் செய்து கொண்டான். அங்கிருந்து சிதம்பரம் சென்று நடராசப் பெருமானை வழிபட்டான். பின்னர் மதுரை திரும்பும் வழியில் பொன்னமராவதி அரண்மனையில் தங்கியிருந்தான். அப்போது தோற்ற சோழன் தன் மகனுடன் அங்கு வந்து சந்தித்து இழந்த நாட்டைப் பாண்டியனிடமிருந்து கொடையாகப் பெற்றான்.

இச்சுந்தரபாண்டியன் சோழநாட்டு வெற்றிக்குப் பிறகு கேரளத்தையும் வென்றான். அவனது இறுதிக் காலம் வரை பாண்டிய நாட்டில் சிறப்பான அமைதியான ஆட்சியை நடத்தினான். கி.பி. 1244 வரை அவன் உயிருடன் இருந்தான் எனலாம். இவனது மெய்க்கீர்த்தி 'பூமருவிய திருமடந்தையும்' என்று தொடங்கும்.

இச்சுந்தரனுக்குப் பிறகு சடாவர்மன் குலசேகரன் என்னும் மன்னன் சில மாத காலம் ஆட்சிபுரிந்தான். அவன் தொடர்பான செய்திகளை அறிந்து கொள்ளத்தக்க ஆவணங்கள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. பின்னர் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் அரசு கட்டில் ஏறினான்.

## இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1238-1255)

இம்மன்னன் கி.பி. 1238இல் அரசு கட்டில் ஏறினான். 'பூமலர் திருவும்' எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி இவனுக்குரியது. இவன் காலத்தில் பாண்டி நாட்டின் மீது சோழன் மூன்றாம் இராசேந்திரன் படையெடுத்துச் சில பகுதிகளை வென்றான். இப்போரில் பாண்டியனுக்கு உதவியாக போசள மன்னன் வீரசோமேஸ்வரன் வந்தான். இச்சோமேஸ்வரனைச் சுந்தரபாண்டியன் 'மாமாடி' என்று உறவு கொண்டாடினான். போசளர்கள் சோழருடனும், பாண்டியருடனும் மண உறவு கொண்டிருந்தனர். சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு ஒருவரை ஆதரித்தும், ஒருவரை எதிர்த்தும் தங்களது செல்வாக்கை வளர்த்துக் கொண்டனர். சுந்தரபாண்டியன் கொங்குச் சோழர் களுடனும் நல்லுறவு கொண்டிருந்தான். கொங்குச் சோழமன்னன் விக்கிரம சோழனை சுந்தரபாண்டியன் 'மச்சுனன்' என உறவு கொண்டாடியதைத் திருநெல்வேலிக் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது. இவனது ஆட்சிக்காலம் கி.பி. 1255 வரைத் தொடர்ந்தது. இவனது அண்ணன் இரண்டாம் சடாவர்மன் குலசேகரன். இவன் கல்வெட்டு களில் பெரிய நாயனார் என்று குறிப்பிடப்படுகிறான்.

## முதலாம் ஜடாவர்மன் விக்கிரம பாண்டியன்

இவன் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் தம்பி எனக் கருதப்படுகிறான். கி.பி. 1241இல் ஆட்சிக்கு வந்துள்ளான். கி.பி. 1247 வரை உயிருடன் இருந்தான். எனத் தெரிகிறது. இன்னும் போசளமன்னன் வீரசோமேஸ் வரனை தன் மாமாடி எனக் கூறிக் கொள்கிறான். இவ்விக்கிரம பாண்டியனின் காலத்திய நான்கு கல்வெட்டுகள் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ளன.

## முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1251-1284)

இரண்டாம் பாண்டியப் பேரரசின் தலைசிறந்த மன்னன் இவனே என்பர் வரலாற்றாசிரியர்கள். இவனும் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் இளைய சகோதரனே என்பர். இவனது ஆட்சியில் பாண்டியர் ஆதிக்கம் தமிழகமெங்கும் பரவியது மட்டுமன்றி ஆந்திரப்பகுதியில் நெல்லூர் கடப்பை வரையும் பரவியது. மலைநாடும் கொங்குநாடும் பாண்டியரின் கீழ் வந்தன. 'எம் மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவர்' என்ற சிறப்புப் பெயரையும் இம்மன்னன் பெற்றான்.

இவனது மெய்க்கீர்த்தி 'பூமலர்வளர் திகழ்' என்று தொடங்குகிறது. இவனது வெற்றிக்கு உறுதுணையாக இவனது சகோதரர்களும், உறவினர்களும் இருந்தனர். முதலில் இவன் சேரனை வென்று மலைநாட்டைக் கைப்பற்றினான். சோழன் மூன்றாம் ராசேந்திரனை வென்று அவனிடம் திறைபெற்றான். இவன் காலத்திலேயே சோழ அரசு முற்றிலும் அழிந்தது. சோழர்களுக்கு உதவியாக இருந்த போசளர்களையும் போரிட்டு வென்றான் பாண்டியன். கண்ணனூர் கொப்பத்தில் நடைபெற்ற இப்போரில் போசளமன்னன் வீரசோமேஸ்வரனும் கொல்லப்பட்டான்.

பின்னர் சுந்தரபாண்டியன் காடவர்கோன் கோப்பெருஞ் சிங்கனை வென்றான். அவனிடமிருந்து திறையாகப் பெற்ற பொன்னால் திருவரங்கம் கோயிலில் பல அரும்பணிகள் செய்தான். பின்னர் கொங்கு நாட்டையும், சேலம் பகுதியான மகதை மண்டலத்தையும் வென்றான். அவனது கவனம் பின்னர் காஞ்சிபுரத்தின் பக்கம் திரும்பியது. இங்கு அரசனாக இருந்த தெலுங்குச் சோழன் விசயகண்ட கோபாலனை வென்றான். பின் நெல்லூர் வரை சென்று காகதிய மன்னன் கணபதியையும் வென்று வீராபிசேகம் செய்து கொண்டான்.

திருவரங்கத்திலும், தில்லையிலும் விமானங்களுக்குப் பொன்வேய்ந்தான். இதனால் 'கோயில் பொன் வேய்ந்த பெருமாள்' எனச் சிறப்புப்பெயர் பெற்றான். எம்மண்டலமும் கொண்டருளியவன் என்ற சிறப்பு பெயரைப் பெற்றதோடு 'எல்லாந் தலையானான்' என்ற சிறப்புப் பெயரால் செப்புக் காசுகளையும் வெளியிட்டான். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் கிழக்குக் கோபுர வாயிலைக் கட்டியவன் இம்மன்னனே. அழகர்கோயிலிலும் மண்டபம் ஒன்று கட்டிக் கோவில் பொன் வேய்ந்த பெருமான் மண்டபம் எனத் தன் சிறப்புப் பெயரைச் சூட்டினான்.

இரண்டாம் சடையவர்மன் குலசேகரன், இரண்டாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் ஆகியோர் இம்முதலாம் சடையன் சுந்தரபாண்டியனின் சகோதரர்கள் ஆவர். பிற்காலப் பாண்டிய அரசர்களிலேயே பெயரும் புகழும் பெற்ற இம்மன்னன் 1281 வரை அரசாண்டான் என்பர்.

## முதலாம் சடையவர்மன் வீரபாண்டியன் (கி.பி. 1253 - 1283)

இவன் கி.பி. 1253இல் ஆட்சிக்கு வந்தவன். இவன் முதலாம் சடையன் சுந்தரனுக்குத் துணையாக நின்று அவனது வெற்றிப் போர்களில் எல்லாம் உடன் இருந்திருக்கிறான். அவ்வெற்றிகளையும் தனது வெற்றிகளாகக் கூறிக் கொள்கிறான். இவனது கல்வெட்டுகள் நெல்லை, மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களில் கிடைக்கின்றன. 'திருமகள் வளர' என இவன் மெய்க்கீர்த்தி தொடங்கும். 'கொங்கு ஈழம் கொண்டவன்' என்று சிறப்பாகக் கூறிக்கொள்வான். இவன் சுந்தரபாண்டியனுடன் சேர்ந்தே ஆட்சி புரிந்தான் எனக் கொள்வர் வரலாற்றறிஞர். இதே காலத்தில் இன்னொரு வீரபாண்டியனும் இருந்துள்ளான். இவனை இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியன் எனக் கூறுவர். 1254 முதல்

1265 வரை வாழ்ந்தவன். 'திருமகள் வளர் முலை' என்று இவனது மெய்க்கீர்த்தி தொடங்கும்.

## முதலாம் மாறவர்மன் குலசேகரன் (கி.பி. 1268-1318)

'தேர்போல் அல்குல்' எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி இவனுக்குரியது. இவன் முதலாம் சடையவர்மன் சுந்தரனின் மகன். தந்தை வென்று விரிவுபடுத்திய பாண்டிய அரசினை அப்படியே கட்டிக் காத்தான். எதிர்த்த கேரள மன்னர்களை வென்றான். எனவே கொல்லங் கொண்டான் என்ற பெயரும் பெற்றான். தந்தையைப் போலவே 'எம்மண்டலமும் கொண்டருளிய' என்ற சிறப்புப் பெயரையும் சூடிக் கொண்டான். 40ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறப்பான ஆட்சியை இவன் நடத்தினான். பல அறப்பணிகள் கோயில் திருப்பணிகள் நடைபெறக் காரணமாகவிருந்தான். திருநெல்வேலி நெல்லையப்பன் கோயில் திருச்சுற்று மாளிகையை இவன் கட்டினான். திருப்பரங்குன்றத்தில் 1371இல் அம்மன் கோயிலையும் கட்டினான். இவனுக்குப் பின் வந்த இவன் மகன்களாலும் பிறராலும் பாண்டிய நாட்டை ஒற்றுமையுடன் ஆள முடியவில்லை.

# 7. போசளர்களின் செல்வாக்கு

போசளர்கள் கன்னட நாட்டில் துவார சமுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர்கள். மூன்றாம் இராசராசன் என்னும் சோழ மன்னனுக்குப் போசள மன்னன் வீரநரசிம்மனின் ஒரு மகள் மணமுடிக்கப் பட்டுள்ளாள். இதுபோல் வீரநரசிம்மனின் இன்னொரு மகளைப் பாண்டிய மன்னன் ஒருவன் மணந்துள்ளான். இம்மண உறவுகளின் காரணமாகப் போசளர்கள் தமிழ்நாட்டு அரசியலிலும் ஆர்வம் காட்டி வந்தனர்.

இந்நிலையில் சோழன் மூன்றாம் இராசராசன் பாண்டியர்களால் நாடிழந்து கன்னட வேந்தர்களின் உதவி பெறும் பொருட்டு வடக்கு நோக்கிச் சென்ற போது காடவர் குலத்தலைவன் கோப்பெருஞ்சிங்கனால் சிறைபிடிக்கப்பட்டு சேந்தமங்கலத்தில் சிறை வைக்கப் பட்டான். இதனை அறிந்த போசளன் வீரநரசிம்மன் தனது தண்ட நாயகர்களின் தலைமையில் படை அனுப்பி இராசராசனை சிறைமீட்டான். அது மட்டுமின்றித் தானே பாண்டியனுடன் நேரில் சண்டையிட்டு சோழநாட்டை மீட்டு இராசராஜனுக்கு வழங்கி இறுதிவரை ஆளத் துணை புரிந்தான். இதனால் மூன்றாம் ராசேந்திரன், வீர நரசிம்மனின் மகனான வீரசோமேஸ்வரனை மாமன் என்று தன் கல்வெட்டுகளில் குறிப்பிடுகிறான்.

சோழர்க்கும் பாண்டியர்க்கும் உறவினர்களாகி விட்ட போசளர்கள் தமிழ்நாட்டு அரசியலில் இடம் பெறும் நோக்கத்தில் திருச்சிக்கு அருகில் கண்ணனூரைத் தலைநகராகக் கொண்டு அச்சிறு பகுதியை ஆளத் தொடங்கினர். தங்களை வலுப்படுத்திக் கொண்ட பின்னர்

கி.பி. 1234இல் வீரசோமேஸ்வரன் பாண்டியர்களை வென்று 20 ஆண்டு காலம் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டினான்.

வீரநரசிம்மன் 'சோழ மண்டல ஸ்தாபனாச்சாரியன்' என்றும் சர்ப்பம் போன்ற பாண்டியர்களுக்கு கருடன் போன்றவன் என்றும் தன்னுடைய கன்னட கல்வெட்டுகளில் கூறிக் கொள்கிறான். வீர சோமேஸ்வரன் இராமேஸ்வரம் வரை சென்றான். தனது படைத் தலைவர்களைப் பாராட்டி அங்கங்கு கிராமங்களைக் கொடை அளித்தான்.

பாண்டியர் கல்வெட்டுகள் பலவும் வீரசோமேஸ் வரனின் பாண்டி நாட்டு ஆதிக்கத்தை உறுதிப்படுத்து கின்றன. இளையான்குடி, சதுர்வேதிமங்கலம் ஆகிய ஊர்களில் கிடைக்கும் கல்வெட்டுகள் போசளர்களுக்குப் பாண்டியர்கள் திறை செலுத்தியதைக் கூறுகின்றன. வீரசோமேஸ்வரனும், அவன் மகன் நரசிம்மனும் பாண்டிய அரசர் குலப் பெண்களை மணந்து கொண்டனர். பாண்டியர்கள் சோமேஸ்வரனை மாமாடி என்று கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ளனர்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் கிடைக்கும் இரண்டு கல்வெட்டுகள் சடையவர்மன் விக்கிரம பாண்டியனின் 6ம் ஆண்டுக்குரியவை (கி.பி. 1245) இக்கல்வெட்டுகளில் மாமாடியான வீரசோமேஸ்வரன் பிராமணர்களுக்கும், திருவேடகம் கோயில் கோசாலைக்கும் மடங்களுக்கும் நிலங்கள் அளித்தமையும் அவற்றைப் பாண்டியன் இறையிலியாக்கினான் என்றும் கூறப்படுகிறது. அழகர்கோயிலில் கிடைக்கும் கல்வெட்டு ஒன்று வீரசோமேஸ்வரன் 10ஆம் ஆட்சி ஆண்டைச் (கி.பி. 1245) சேர்ந்தது. இதில் இக்கோயில் அமுதுபடி, சாத்துப்படிக்காக நிலங்கள் கொடையளித்தான் என்று கூறப்பட்டுள்ளது. கி.பி. 1249ஆம் ஆண்டைச் சேர்ந்த பாண்டியன் கல்வெட்டொன்று அழகர்கோயிலில் வீரசோமேஸ்வரன் பெயரில் சந்தி ஒன்று ஏற்படுத்தப்பட்டு,

அதற்கென இறையிலியாக நிலங்கள் வழங்கப்பட்டன என்றும் கூறுகிறது.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் கி.பி. 1248இல் மாமாடி வீரசோமேஸ்வரன் பெயரால் அவன் பிறந்த நட்சத்திரத்தில் சிறப்பு வழிபாடும், விழாவும் செய்து இறைவன் தீர்த்தமாட சுந்தரபாண்டியன் இறையிலியாக நிலங்கொடுத்தான் என்று கூறுகிறது. மதுரையிலிருந்தும் அழகர்கோயிலிலிருந்தும் கிடைக்கும் கல்வெட்டுகள் மதுரை மண்ணிலேயே வீரசோமேஸ்வரன் மேலாதிக்கம் செலுத்தியதையும் பாண்டிய மன்னன் சுந்தரபாண்டியன் போன்றோர் பணிந்து ஆண்டனர் என்பதையும் காட்டுகின்றன. திருமெய்யம், திருநெல்வேலி, ஆத்தூர் போன்ற இடங்களிலும் போசளர்களின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. சோமேஸ்வரன் கி.பி. 1262இல் பாண்டிய மன்னன் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனால் தோற்கடிக்கப்பட்டு மாண்டான். அவனது மறைவுடன் போசளர் ஆட்சி இப்பகுதியில் முடிவுக்கு வந்தது.

# 8. சுல்தானியர் ஆட்சி

முதலாம் மாறவர்மன் குலசேகரனின் (கி.பி. 1268-1318) மகன்களான வீரபாண்டியனும், சுந்தரபாண்டியனும் அரசுரிமைப் போரில் ஈடுபட்டனர். தனக்குப் படை உதவி வேண்டி சுந்தரபாண்டியன் டெல்லி ஆட்சியாளர்களை நாடினான். அப்போது டெல்லியின் தலைவன் அலாவுதீன் கில்ஜி சுந்தரபாண்டியனுக்கு ஆதரவாக மாலிக்காபூரின் தலைமையில் படையை அனுப்பினான். பிளவுபட்டுக் கிடந்த பாண்டிய நாட்டையும் முழுமையாகத் தென்னகத்தையும் தன் வசப்படுத்த எண்ணிய மாலிக்காபூர் வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டு அனைத்துப் பகுதிகளையும் வென்றான். அமீர்குஸ்ரு எனும் கவிஞனின் காலக் குறிப்பின்படி மாலிக்காபூர் 13.4.1311 அன்று மதுரை நகரைக் கைப்பற்றினான் என அறிகிறோம்.

மாலிக்காபூரின் படை எடுப்பை முன்னரே அறிந்து கொண்ட மன்னன் வீரபாண்டியன் தன் அரசியருடன் மதுரையைவிட்டு ஓடிவிட்டான். மாலிக்காபூர் பாண்டியன் அரண்மனையைக் கொள்ளையிட்டதுடன், சொக்கநாதர் கோயிலுக்கும் தீயிட்டான். ஏராளமான செல்வங்களைக் கொள்ளை கொண்ட மாலிக்காபூர் அவற்றை டெல்லிக்குக் கொண்டு சென்று அலாவுதீன் கில்ஜியின் முன்பாக வைத்தான். மாலிக்காபூரை விரும்பி அழைத்து வந்த சுந்தரபாண்டியனுக்கும் ஏமாற்றமே மிஞ்சியது.

இந்த நேரத்தில் பாண்டியச் சகோதரர்களின் உட்பூசலைப் பயன்படுத்திக் கொண்ட தென்திருவாங்கூரை

ஆண்ட இரவிவர்மன் குலசேகரன், பாண்டிய நாட்டைக் கைப்பற்றிக் காஞ்சிபுரம்வரை தனது ஆளுகையை விரிவுபடுத்தினான். சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் ஆகிய இருவரையும் தான் வென்றதாக இரவிவர்மன் கூறிக் கொள்கிறான். இச்சூழலில் சுந்தரபாண்டியன் காகதீய மன்னன் இரண்டாம் பிரதாப ருத்ரனின் உதவியை நாடினான். முப்பிடி நாயக்கன் என்னும் காகதீய படைத் தலைவனால் கேரள அரசன் பாண்டிய நாட்டைவிட்டு துரத்தப்பட்டான்.

மாலிக்காபூர் படை எடுத்த பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, குத்புதீன் முபாரக்ஷாவின் படைத்தலைவன் கு ருகான் தென்னகத்தை நோக்கிப் படையுடன் அனுப்பப்பட்டான். மழையின் காரணமாக அவனது முயற்சி தடைப்பட்ட போதும் அடுத்தடுத்த படை எடுப்புகளின் காரணமாகப் பாண்டியர் ஆட்சி முற்றிலும் அழிந்தது. துக்ளக் அரசனின் ஆட்சியில் மதுரைப் பகுதி முற்றிலும் வெல்லப்பட்டு டெல்லி அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்ட ஒரு மாநிலமாக இணைக்கப்பட்டது. கியான்சுதீன் துக்ளக் தன் மகனும் வாரிசுமான உல்லுகான் என்பவனைப் படையுடன் அனுப்பித் தென்னகத்தை வெற்றி கண்டான். அப்போதைய பாண்டிய அரசன் சடாவர்மன் பராக்ரம பாண்டியன் கைதியாக டெல்லிக்குக் கொண்டு செல்லப்பட்டான். கி.பி.1323 முதல் 1334 வரை மதுரைப் பகுதி டெல்லி சுல்தான்களின் நேரடி ஆட்சியில் அடங்கி அவர்களால் நியமிக்கப்பட்ட ஆளுநர்களால் நிர்வகிக்கப்பட்டது. கியாசுதீன் துக்ளக் அவன் மகன் முகமது பின் துக்ளக் ஆகியோரின் ஆட்சியில் சுமார் 10 ஆண்டுகாலம் (1326-1335) மதுரை இருந்தது. அதன் பின் மதுரை சுல்தான்கள் எனத் தனியாக ஒரு குழுவினர் தங்களைச் சுயாதிகாரம் பெற்றவர்களாக அறிவித்துக் கொண்டு மதுரையை ஆண்டனர்.

1. ஜலாலுதீன் அசன்ஷா (கி.பி. 1335–40)
2. அலாவுதீன் உடாவ்ஜி (கி.பி. 1340–41)
3. குத்புதீன் பெரோ ஷா (40 நாட்கள் மட்டும்)
4. சியாசுதீன் தமகனி (கி.பி. 1340–42)
5. நசிருதீன் (கி.பி. 1342 )
6. அடில்ஷா (கி.பி. 1356)
7. பக்ருதீன் முபாரக்ஷா (கி.பி. 1359–68)
8. அலாவுதீன் சிக்கந்தர் (கி.பி. 1368–78)

*முகமது பின் துக்ளக்கால் மதுரையின் ஆளுநராக (கொத்தவால்) நியமிக்கப்பட்டவன் ஜலாலுதீன் அசன்ஷா. அவனே 1334-35இல் கலகம் செய்து துக்ளக்கின் அதிகாரிகளைக் கொன்றுவிட்டு சுயாட்சியாளனாக அறிவித்துக் கொண்டான். இவனுக்குப் பின் பலரும் வரிசையாக ஆட்சிக்கு வந்தனர். தங்களுக்கென தனியாக நாணயங்களும் வெளியிட்டுக் கொண்டனர். மூர் இனத்தைச் சேர்ந்த இபன்பதூதா என்னும் வெளிநாட்டுப் பயணி கி.பி. 1342இல் மதுரையைச் சுற்றிப் பார்க்க வந்தான். அவனது குறிப்புகளில் மதுரை நகரின் பத்தாண்டு கால வரலாற்றுச் சூழலைப் பதிவு செய்துள்ளான். அதன்படி மதுரையின் முதல் சுல்தான் ஆன ஜலாலுதீன் அசன்ஷா ஐந்து ஆண்டு ஆட்சிக்குப் பின் படுகொலை செய்யப்பட்டான். அவனுக்குப் பின் வந்த அலாவுதீன் உடாவ்ஜீ ஓராண்டு ஆட்சியிலேயே கொல்லப்பட்டான். அடுத்து வந்த அவனது மருமகன் குத்புதீன் நாற்பது நாட்களிலேயே கொல்லப்பட்டான் என்பதை அறிகிறோம். நான்காவது சுல்தான் சியாசுதீன் தமகனியின் ஆட்சியின் போது தான் இபன்பதூதா மதுரைக்கு வந்துள்ளார்.*

*இத்தருணத்தில் போசள மன்னன் மூன்றாம் வல்லாளன் சுல்தானியர்கள் மீது படையெடுத்து வந்து கண்ணனூர்க் கொப்பம் (சமயபுரம்) கோட்டையை ஆறு மாதங்கள் முற்றுகையிட்டான். ஆனால் எதிர்பாராத தருணத்தில் கியாசுதீன் வஞ்சகமாக வல்லாளனைக் கைது*

செய்தான். அவனை மதுரைக்குக் கொண்டு வந்து கொன்று அவன் தோலை உரித்து அதில் வைக்கோலைத் திணித்து கோட்டை வாயிலில் தொங்கவிட்டான்.

இக்காலத்தில மதுரையில் கடுமையான தொற்று நோய் பரவியது. சுல்தானே பாதிக்கப்பட்டு இறந்தான். இபன்பதூதாவும் இந்நோயினால் தாக்கப்பட்டு மீண்டான். அதன் பிறகு சுல்தானியரின் ஆட்சி பற்றிய தெளிவான செய்திகள் கிடைக்கவில்லை. இறுதியாக ஆட்சி செய்த சுல்தான், அலாவுதீன் சிக்கந்தர் ஷா. இக்காலத்தில் விஜயநகர மன்னன் குமாரகம்பணன் தென்னகம் நோக்கிப் படை கொண்டு வந்து சம்புவராயர்களை வென்று திருச்சி, மதுரைப் பகுதிகளிலிருந்த சுல்தான்களையும் வெற்றி கண்டான். அவ்வகையில் கி.பி. 1371இல் மதுரையில் சுல்தான்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது. தோற்றுப் போன அலாவுதீன் சிக்கந்தர் ஷா திருப்பரங்குன்றம் மலைக்குகை ஒன்றில் ஒளிந்து கொண்டதாகவும் மக்கள் தொடர்ந்து சென்று அவனைப் பிடித்துக் கொன்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது. திருப்பரங்குன்றம் மலையிலேயே சிக்கந்தர் ஷாவின் உடல் அடக்கம் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சுமார் 50 ஆண்டுகாலம் நீடித்த சுல்தானியர் ஆட்சி மதுரை வரலாற்றின் கறை படிந்த காலம் எனலாம். கட்டாய மதமாற்றமும், பெண்கள் சிசுக்கள் படுகொலையும், அன்றாட நிகழ்ச்சியாக நடந்துள்ளன. பல இந்துக் கோயில்கள் சூறையாடப்பட்டன. திருவரங்கம் கோயிலிலிருந்து ரங்கநாதர் பாதுகாப்புக்காகத் திருப்பதிக்குக் கொண்டு செல்லப்பட்டார். மதுரை தலவரலாறு, ஸ்தல புத்தகம், ஸ்தானிகர் வரலாறு ஆகியவை மூலம் மதுரைமீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலின் நிலையையும் அறிய முடிகிறது.

டெல்லியிலிருந்து இஸ்லாமியர்கள் படை 60,000 குதிரைகளுடன் வந்து திருச்சி பகுதிகளில் பல சிவ, விஷ்ணு கோயில்களை அழித்துக் கொள்ளையிட்டதை மதுரை

யிலிருந்த பாண்டிய அரசன் அறிந்தான். வாளால் வழிதிறந்த பராக்கிரம பாண்டின் என்பவன் அச்சமயத்தில் மதுரையின் மன்னாக இருந்தான். அவன் மதுரையைவிட்டு வெளியேறி காளையார் கோயில் கோட்டையில் தங்கினான். அரசன் இல்லாத ஊரில் தாங்கள் எப்படி பாதுகாப்புடன் இருப்பது என்று கவலை கொண்ட கோயில் ஸ்தானிகர்கள் கோயிலைக் காக்க சில முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சுவாமி கோயில் கருவறைக்கு முன்பாகக் கிளிக் கூண்டு ஒன்று அமைத்து மண்மேடு உண்டாக்கி, கருவறைக்கு முன்பாக ஒரு கற்சுவர் எழுப்பி அர்த்த மண்டபத்தில் புதிதாக ஒரு லிங்கத்தைத் தாபித்தனர். விமானத்தின் மேல் தளத்தில் மீனாட்சி அம்மன் திருஉருவைப் புதிதாக அமைத்தனர். செப்புத் திருமேனி களையெல்லாம் முசுகுந்தேஸ்வரர் கோயில் என்னும் சிற்றாலயத்துக்கு அருகில் மண்ணில் புதைத்து (பூப்பதனம்) வைத்தனர். மற்ற தங்கத் திருஉருவங்களை ஸ்தானிகர்கள் எடுத்துக் கொண்டு நாஞ்சில் நாட்டில் (இன்றைய கன்னியாகுமரிப் பகுதி) கிலுகிலுப்பைக் காட்டில் தஞ்சம் புகுந்தனர். சில காலம் பூசைகள் தடைபட்டன. கோயில் பேரழிவுக்குள்ளாகியது. ஆனாலும் குமாரகம்பணரின் வெற்றிக்குப் பிறகு மதுரை புதுப்பொலிவு பெற்றது. அடைக்கப்பட்ட கருவறை திறக்கப்பட்டது. அப்போது முன்பு ஏற்றி வைத்த விளக்கு தொடர்ந்து எரிந்ததையும் சூட்டப்பட்ட மலர் மாலை அன்றலர்ந்த மலர் போலக் காணப்பட்டதையும் கம்பணன் கண்டு அதிசயித்ததாகக் கூறப்படுகிறது.

மதுரை தல வரலாறு, மதுரை ஸ்தானிகர் வரலாறு, கங்க தேவியின் மதுரா விஜயம் ஆகிய நூல்களில் இந்நிகழ்ச்சிகள் எல்லாம் விரிவாகக் கூறப்படுகின்றன. விஜயநகர அரசர்களின் எழுச்சியும் வெற்றியுமே மதுரையை பேரழிவிலிருந்து மீட்டது என்பது மிகை ஆகாது.

# 9. விஜயநகரர் ஆட்சி

விஜயநகர அரசு கி.பி. 1336இல் தோன்றி தென்னகத்தில் நிலவி வந்த கொடுமையான இஸ்லாமிய ஆட்சிக்கு முடிவு கட்டியது. முதலாம் புக்கருடைய மகன் குமாரகம்பணனின் பங்களிப்பு இப்பணியில் அளப்பரியது. கி.பி. 1362இல் படையெடுத்து தமிழகத்தின் வடபகுதியில் இருந்த ராஜ கம்பீர ராஜ்யத்தின் தலைவர்களான சம்புவராயர்களை வென்றுத் தன்னை வலிமைப்படுத்திக் கொண்டு மதுரை வரை வந்து சுல்தானியர்களை வென்று தமிழகத்தையே மீட்டான் குமார கம்பணன். இது நிகழ்ந்த காலம் கி.பி. 1371 என்பர். இவ்வாண்டு முதல் 16ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை மதுரையில் விஜயநகர அரசர்களின் ஆட்சி நீடித்தது.

தொடக்கத்தில் விசய நகர அரச குடும்பத்தவர்களே மதுரைப் பகுதியில் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர். எடுத்துக்காட்டாக முதலாம் புக்கரின் மகன் கம்பணன், இரண்டாம் ஹரிஹரரின் மகன் விருபாட்சன் ஆகியோர் தொடக்கக்கால ஆளுநர்கள் ஆயினர். இவர்கள் உடையார் என்ற பட்டத்தைச்சூட்டிக் கொண்டனர். சாளுவ, துளுவ குலத்து விசயநகர வேந்தர்கள் தங்கள் குடும்ப வாரிசுகளை ஆளுநர்களாக நியமிக்காமல் நல்ல அரசியல் அனுபவம் வாய்ந்த அதிகாரிகளையே தண்டநாயகர் என்ற பட்டத்துடன் ஆளுநர்களாக நியமித்தனர். அவ்வகையில் லக்கண்ண தண்டநாயகன் என்பவன் மிகவும் குறிப்பிடத்தக்கவன் ஆவான்.

குமார கம்பணன் இஸ்லாமியர்களின் கொடுங்கோன்மையை ஒழித்து நல்லாட்சி நடத்தி கோயில் வழிபாடுகளைச் சீர்திருத்தி நாட்டில் அமைதி தவழச் செய்தான். கி.பி. 1374இல்

அவன் மரணமடைந்த பின்னர் அவனது மகன் ஐம்மண்ண (எம்மண்ண) உடையாரும் மருமகன் பொற்காசு உடையாரும் இப்பகுதியின் ஆட்சியை ஏற்று கி.பி. 1402 வரை சிறப்புற நடத்தினர்.

இரண்டாம் தேவராயர் ஆட்சியின் போது (கி.பி. 1422 - 46) அவரது அமைச்சராக இருந்த லக்கண்ணன் மதுரை பகுதியின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். லக்கண்ணரும் அவரது சகோதரர் மாதண்ணரும் சேர்ந்து சுமார் 48 ஆண்டுகள் (14-05-1453) மதுரையைச் சிறப்பாக நிருவகித்தனர். இக்காலத்தில் லக்கண்ணர் இலங்கையின் மீது படையெடுத்து வெற்றி கண்டார். தட்சிண சமுத்திராதிபதி என்ற சிறப்புப் பட்டத்துடன் அவர் ஆட்சி செய்தார்.

லக்கண்ணர் காலத்தில் மதுரைப் பகுதியின் நிருவாகம் ஒழுங்குபடுத்தப்பட்டது. மதுரையின் நிருவாகத்தை வாணாதிராயர் என்னும் பாண்டியர்கீழ் பணிபுரிந்த அதிகாரிகள் வசம் ஒப்படைத்தார். வாணாதிராயர் பாண்டியனின் ஆசைநாயகியான காளையார்கோயில் ஆடல் மகள் அபிராமிக்குப் பிறந்தவன் என்று மதுரைத் தலவரலாறு கூறுகிறது. லக்கண்ணர் இவர்களைத் தேர்வு செய்து மதுரை, இராமநாதபுரம் பகுதிகளின் நிருவாகப் பொறுப்பை ஒப்படைத்துள்ளார். திருநெல்வேலிப் பகுதியை வலியிழந்த பாண்டியர்களைக் கொண்டு நிருவகித்துள்ளார்.

கி.பி. 15ஆம் நூற்றாண்டின் இறுதியில் நரசநாயக்கனின் தலைமையில் மீண்டும் விசயநகரர் படை வந்து மதுரைப் பகுதியில் தம் ஆதிக்கத்தை நிலை நாட்டியது. அப்போது மதுரையின் அரசனாக இருந்த மானபூசன் என்பவனை வென்றதாகக் கூறப்படுகிறது. இவன் ஒரு வாணர் தலைவனாகவே இருக்கலாம். மானபூசன் என்பது பாண்டியர்களைப் பொதுவாகக் குறிக்கும் பட்டப் பெயர். எனவே, பாண்டிய நாட்டின் ஆளுநராக் இருந்த வாணாதிராயனும் இப்பெயரைச் சூடிக் கொண்டிருக்கலாம். லக்கண்ண தண்ட நாயகர் காலத்தில் காளையார் கோயில்

பகுதியிலிருந்து வரவழைக்கப்பட்ட வாணாதிராயர் குடும்பத்தைச் சேர்ந்த சிலர் தொடர்ந்து மதுரையில் ஆளுநர்களாக நீடித்துள்ளனர்.

கி.பி. 16/ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரையில் நாயக்கர் தலைவர்களும் இப்பகுதிகளில் ஆளுநர்களாகச் செயல்பட்டுள்ளனர். மதுரைத் தலவரலாறு பத்துக்கும் மேற்பட்ட நாயக்கர்களைப் பட்டியலிடுகிறது. விசயநகர வேந்தர் கிரு ண தேவராயரின் மறைவுக்குப் பின் அவரது சகோதரர் அச்சுதராயர் காலத்தில் மதுரைப் பகுதியில் பெருங்குழப்பம் நிலவியது. சாளுவ வீரநரசிம்மன் என்னும் செல்லப்பன் ஒரு வலிமைமிக்க வீரனாய் தென்பகுதியில் திகழ்ந்தான். இவனும் பரமக்குடி தும்பிச்சி நாய்க்கனும், திருவடி ராஜ்யத்தின் (கேரள) மார்த்தாண்டவர்மனும் கூட்டுச் சேர்ந்து கலவரத்தில் ஈடுபட்டுத் தென்காசி, நெல்லைப் பகுதிகளில் அமைதியைக் குலைத்தனர். அச்சுதராயர் தனது மைத்துனன் சளக்கராஜு திருமலை என்பவன் தலைமையில் படை அனுப்பி கலகத்தை அடக்கி அதற்குக் காரணமானவர்களைக் கைது செய்தார்.

சதாசிவராயரின் ஆட்சியில் அவரது ஆளுநர்களால் மதுரை கூடலழகர் பெருமாள் கோயில் முற்றிலும் திருத்திக் கட்டப்பட்டது. இக்கோயில் முற்பாண்டியர் காலத்தது என்பதற்கு இங்குள்ள இராமர், லட்சுமணர், சீதை ஆகியோரின் கி.பி. 10|ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செப்புத் திருமேனிகளே சான்றுகளாகும். ஆனால் பழமையான கல்வெட்டுகள் எதுவும் இக்கோயிலின் தொன்மையை உறுதிப்படுத்துவனவாக இல்லை. தற்போதுள்ள விமான அதிட்டானத்தில் உள்ள கல்வெட்டுகள் கி.பி. 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

சதாசிவராயரின் படைத் தலைவன் விட்டலதேவ ராயன், இவன் கீழ் ஒரு அதிகாரியாகப் பணிபுரிந்தவன் திம்மப்ப நாயக்கன். இவன் கி.பி. 1551இல் செய்த திருப்பணியே கூடலழகர் கோயில் கல்வெட்டில்

கூறப்படுகிறது. சந்தோப செளந்தரரான கூடலழகப் பெருமாளுக்கு நித்தியபடி நைவேத்தியத்துக்கும் தசமித் திருநாள் கட்டளைக்குமாக மதுரை மண்டலத்திலுள்ள பல ஊர்கள் கொடையாக வழங்கப்பட்டன. பெருங்குடி, இரட்டைக்குளம், வண்ணானேந்தல், குமுழங்குளம், அவனி நாராயணபுரத்து உட்கிடையான சிந்தாமணி, மட்டப்பாறை சீர்மையிலுள்ள முள்ளிப்பள்ளம் கிராமம், திருப்புவனம் சீர்மையிலுள்ள புல்வாய்க்கரை, அல்லிக்குளம், செங்குளம், குண்டுகுளம், பசுமண்குளம் முதலிய கிராமங்களும் தானமாகத் திம்மப்ப நாயக்கரால் அளிக்கப்பட்டன. இவ்வூர்களில் பல இன்றும் அதே பெயர்களில் வழங்கி வருகின்றன.

விசய நகர அரசர்களின் காலத்திலேயே அவர்களது படைப் பிரிவில் பணியாற்றிய நாகமநாயக்கராலும் அவரது மகன் விசுவநாத நாயக்கராலும் மதுரை நாயக்கர் அரச மரபு ஒன்று உருவாக்கப்பட்டது. முதலில் விசயநகர அரசர்க்கு கட்டுப்பட்டு ஆட்சி செய்த இவர்கள் நாளடைவில் சுயாட்சி பெற்றவர்களாக அறிவித்துக் கொண்டனர். இந்நாயக்கர் ஆட்சி விரிவாக அறியப்பட வேண்டியதாகும்.

# 10. வாணாதிராயர்கள்

தமிழக வரலாற்றில் சங்க காலந்தொட்டே வாணர்கள் பேசப்படுகிறார்கள். மகாபலிச் சக்கரவர்த்தியின் வழிவந்தவர்கள் எனத் தங்களைக் கூறிக் கொள்ளும் இவர்கள் தீவிரமான வைணவ பக்தர்கள் ஆவர். தங்களை மாவலி வாணாதிராயர் என்று அழைத்துக் கொள்கின்றனர். அகநானூறு 325ஆம் பாடலில் பாணர் நாட்டுக்குச் செல்லும் வழியை மாமூலனார் குறிப்பிடுகிறார். அகம் 113 ஆம் பாடலில் பாணர் நாட்டில் நடைபெற்ற விழா விவரிக்கப்படுகிறது. அகம் 117, 204, நற்றிணை 340 ஆகிய பாடல்களில் பாணன் சிறுகுடியின் வளம் கூறப்படுகிறது.

வரலாற்றுத் தொடக்க காலம் முதல் வாணர்கள் குறுநிலத் தலைவர்களாக அடையாளங் காணப் பட்டுள்ளனர். கி.பி. 4ஆம் நூற்றாண்டு முதல் இவர்கள் சாதவாகனர்கள் கீழ் அடங்கிய குறுநிலத் தலைவர்களாக அரசியலில் அறிமுகம் ஆகியுள்ளனர். பின்னர் தென்னகத்தின் கதம்பர், சாளுக்கியர், ராட்டிரகூடர், பல்லவர், சோழர், பாண்டியர், விசயநகரர் என அனைத்து அரசமரபினருடனும் நம்பிக்கையான அதிகாரிகளாகவும் படைத் தலைவர் களாகவும் ஆளுநர்களாகவும் செயல்பட்டு வந்துள்ளனர். எந்த ஒரு பேரரசுக்கும் கூட இல்லாத வகையில் நீண்ட நெடிய தொடர்ச்சியான வரலாற்றுக்குரியவர்களாகத் திகழ்கின்றனர் வாணாதிராயர்கள்.

வாணர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த பகுதி பெரும்பாணப்பாடி (அ) வாணகோப்பாடி என அழைக்கப்

பட்டது. இது இன்றைய வட ஆர்க்காடு பகுதியில் அமைந்திருந்தது. பல்லவர்கள், சோழர்கள் ஆட்சிக் காலங்களில் வாணர்கள் தமிழகத்தின் தென் பகுதிக்குப் பரவலாயினர். சேலத்திற்கு அருகிலுள்ள ஆறகளூரைத் தலைநகராகக் கொண்டு வாணர்களின் ஒரு பிரிவினர் செயல்பட்டனர். அப்பகுதி மகதை மண்டலம் எனப்பட்டது. இது தென்னார்க்காடு, சேலம், திருச்சி மாவட்டங்களின் சில பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

சோழர்கள் வலிகுன்றியவுடன் அவர்களின் கீழிருந்த வாணாதிராயர்கள் பாண்டியர்கள்பால் விசுவாசம் காட்டினர். மதுரை, திருச்சி பகுதிகளில் பல பொறுப்புகளில் பாண்டியர்க்கு அடங்கிச் செயல்பட்டனர். ஆனால் பாண்டிய நாட்டுப் பகுதிகளில் கிடைக்கும் கல்வெட்டுகள் சில கி.பி. 11ஆம் நூற்றாண்டு முதலே வாணாதிராயர்கள் இப்பகுதிகளில் பரவியிருந்தமையை வெளிப்படுத்துகின்றன. அழகர்கோயிலில் காணப்படும் கி.பி. 11ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்றில் பாணாதிராஜன் என்ற பெயர் குறிப்பு மட்டும் கிடைத்துள்ளது. கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தென்கரைக் கல்வெட்டு ஒன்றில் வாணாதிராசன் என்னும் அரசியல் அதிகாரி ஒருவன் கையொப்பமிட்டுள்ளான். இக்காலத்தில் சோழர்களிடத்திலும் பாண்டியர்களிடத்திலும் மாறி மாறி பணியாற்றிய பல வாணாதிராயர்களைக் காணலாம்.

குடுமியான்மலையிலுள்ள பாடல் கல்வெட்டு ஒன்று வாணாதிராயன் ஒருவன் பாண்டியர்களை வெற்றிகண்டு நாட்டுக்குத் தெற்கே துரத்தினான் எனக் கூறுகிறது. ஆனால் அடுத்த சில ஆண்டுகளில் பாண்டியன் சோழ நாட்டை வென்று அப்பகுதியைப் பாணர்க்குக் கொடுத்தான் என்று மற்றொரு பாடல் கல்வெட்டு கூறுகிறது.

செம்பியனைச் சினமிரியப் பொருது சுரம்புக ஓட்டி
பைம் பொன் முடிபறித்து பாணனுக்குக் கொடுத்தருளி

என்று வரும் மாறவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி இதனை உறுதிப்படுத்தும். முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் சுந்தர பாண்டிய வாணாதிராயன் எனும் ஒருவன் ஒரு அதிகாரியாகச் செயல்பட்டுள்ளான். மாறவர்மன் இரண்டாம் சுந்தரபாண்டியனின் கல்வெட்டு ஒன்று 'சீவல்லவன் மதுரைப் பெருமாள் ஆன வாணகோவரையன்' என்று ஒருவனைக் குறிப்பிடுகிறது. விக்கிரமபாண்டியன் கல்வெட்டு ஒன்றில் மகாபலி வாணாதிராயன் ஒருவன் அரசனின் முதலி எனச் சுட்டப்படுகிறான். முதலாம் மாறவர்மன் குலசேகரன் காலத்தில் பிள்ளை மகாபலி வாணாதிராயர் கோநாட்டின் ஆளுநராகக் குறிப்பிடப்படுகிறான்.

சில பாண்டிய அரசர்கள் தங்களது வாணர் தலைவர்களைப் பிள்ளை, நம் மக்கள் என்று குறிப்பிடுகின்றனர். இது வெறும் பாசவார்த்தை அல்ல. ஏதோ ஒருவகை உறவு இருக்கலாம் என்றே தோன்றுகிறது. பல வாணர் தலைவர்கள் பாண்டிய அரசர்களின் பெயரையே கொண்டுள்ளனர். எடுத்துக்காட்டாக சுந்தர பாண்டிய வாணாதிராயன், பராக்கிரம பாண்டிய மகாபலி வாணாதிராயன் ஆகிய பெயர்களைச் சுட்டலாம். இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் இரண்டு கல்வெட்டுகள் தச்சனூர் அருளாளன் சேவகத்தேவன் என்ற வாணாதிராயனைப் பாண்டியனின் அம்மான் என்று குறிப்பிடுகின்றன. இவன் மதுரைக் கோயிலில் பல திருப்பணிகளைச் செய்துள்ளான். இவன் மதுரை சுந்தரேஸ்வரர் கோயிலில் சந்தி ஒன்று ஏற்படுத்தி அதற்காக ஒரு கிராமத்தைக் கொடை அளித்துள்ளான். தன் பெயரால் ஏற்படுத்தின வாணாதிராயன் வாசலில் இறைவன் வரும்போது பரதேசி, கோவணவரைக் கொண்டு சடாரிப் பண்ணில் திருவெம்பாவை பாட ஏற்பாடு செய்துள்ளான்.

விஜய நகர ஆட்சிக் காலத்திலும் வாணாதிராயர்கள் மதுரைப் பகுதியில் செல்வாக்கு மிக்க அதிகாரிகளாகத்

திகழ்ந்தனர். லக்கண்ண தண்ட நாயகர் காளையார் கோயில் பகுதியிலிருந்து சில வாணாதிராயர்களை மதுரையில் பணி அமர்த்தியதை முன்னரே கண்டோம். திருமாலிருஞ் சோலை நின்றான் ஆன மாவலி வாணாதிராயன் ஒருவன் விசயநகரர் காலத்தில் (சகம் 1350) தன்னை மதுராபுரி மகாநாயகன் என்று கூறிக் கொள்ளுகிறான். உறங்காவில்லி தாசன் மாவலி வாணாதிராயன் என்பவர் கி.பி. 1453இல் மதுரையின் ஆட்சியை நடத்தியுள்ளான். திருமாலிருஞ் சோலை நின்றான். உறங்காவில்லிதாசன் ஆன மாவலி வாணாதிராயன் என்றும் அவன் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகிறான். விசயநகர வேந்தர்கள் வலிமை குன்றிய போது வாணாதிராயர்கள் தங்கள் தனி ஆணையையும் வழங்கி உள்ளார்கள். புவனேகவீரன், சமர கோலாகலன் என்ற பட்டப் பெயர்களையும் இவர்கள் கொண்டுள்ளனர். இவர்கள் தீவிர வைணவ பக்தர்கள். கருடக் கொடியைக் கொண்டவர்கள். தாங்கள் வெளியிட்ட காசுகளில் ஒருபுறம் புவனேகவீரன் (அ) சமரகோலாகலன் என்ற பெயரும் மறுபுறம் மண்டியிட்ட கருடன் உருவமும் பொறித்துள்ளனர். கருட கேதனன், வேதியர் காவலன், வீரகஞ்சுகன், பூபாலகோபாலன் என்று மேலும் சில சிறப்புப் பெயர்களும் இவர்கள் பெற்றுள்ளனர்.

அழகர்கோயில் பகுதியே இவர்களின் அரசியல் தலைநகரமாக விளங்கியது. இக்கோயிலைச் சுற்றி வலிமையான கோட்டையைக் கட்டியவர்கள் இவர்களே. அழகர்கோயிலிலும், திருவல்லிபுத்தூர் கோவிலிலும் பல திருப்பணிகளைச் செய்துள்ளனர். தங்கள் கல்வெட்டுகளின் தொடக்கத்தில் அழகர் திருஉள்ளம் என்று குறிப்பிடுவது இவர்கள் வழக்கம். மதுரை நாயக்கர் காலத் தொடக்கம் வரை இவர்கள் செல்வாக்குடன் திகழ்ந்தனர். திருமாலிருஞ் சோலை நின்றான். சுந்தரத் தோளுடையான் மாவலி வாணாதிராயன், இறந்த காலமெடுத்த மாவலி வாணாதிராயர் என அடுத்தடுத்து பல தலைவர்கள் இப்பகுதியை நிருவகித்தனர்.

*மாவலி வாணாதிராயர்கள் தீவிரமான வைணவ பக்தர்களாக இருப்பினும் சிவன் கோயில்களுக்கும் நல்ல ஆதரவு காட்டியுள்ளனர். இவர்களால் திருவில்லிபுத்தூர், காளையார் கோயில், அழகர்கோயில், மீனாட்சி அம்மன் ஆலயம் ஆகிய பல கோயில்கள் திருப்பணி கண்டுள்ளன. அழகர்கோயிலின் இறைவனுக்குப் பச்சை கற்பூரம், குங்குமப்பூ, சந்தனம் முதலியவற்றை அரைத்து சாத்துவதற்கு அழகிய அம்மி ஒன்றை உறங்காவில்லி தாசன் வாணாதிராயன் கொடுத்துள்ளான். அதில்*

திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதிராயன்
உறங்கா வில்லிதாசன் ஆன சமரகோலாகலன்

*என்ற கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளது. இன்று சோமசந்த விமானம் என்று பெயர் பெற்றுள்ள அழகர் கோயில் விமானம் உறங்காவில்லி தாசனால் கி.பி. 1464இல் கட்டுவிக்கப்பட்டது. இத்திருப்பணியைச் செய்ய திருவளவன் சோமயாஜி என்பவனுக்கு குலமங்கலம் என்ற ஊர், வரி நீங்கிய தானமாக அளிக்கப்பட்டது.*

*மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் வாணாதிராயர்களால் பல திருப்பணிகள் செய்யப்பட்டன என்பதை மதுரை திருவாலவாயுடையார் கோவில் திருப்பணி மாலை தெரிவிக்கிறது. குலசேகர பாண்டியனால் கட்டப்பட்டுச் சிதைந்து போன மண்டபம் ஒன்றைச் சீரமைத்துள்ளனர் வாணாதிராயர்கள். சொக்கநாதர் சன்னதி மகா மண்டபத்தின் முன்புறமுள்ள ஆறுகால் பீடம் வாணாதிராயர்களால் கட்டப்பட்டுள்ளது. அங்கயற்கண்ணி சன்னதியில் உள்ள முதலாம் திருச்சுற்று மண்டபத்தையும் சன்னதிக்கு முன்புறமுள்ள மகாமண்டபத்தையும் அதிலுள்ள பள்ளியறையையும், கட்டியவன் திருமாலிருஞ்சோலை மாவலி வாணாதிராயனே என்று திருப்பணி மாலை கூறுகிறது. தல்லாகுளம் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயிலில் சில திருப்பணிகள் மாவலிவாணாதிராயர்களால் செய்யப்பட்டுள்ளன. இன்று இக்கோயிலில் உள்ள*

திருமால், ஸ்ரீதேவி பூதேவி ஆகிய உற்சவத் திருமேனிகள் வாணாதிராயர்களின் கொடையாகும் மதுரை கூடலழகர் பெருமாள் கோயில் திருமோகூர் காளமேகப் பெருமாள் கோயில் மதுரையிலிருந்த ஏழுகடல் தெப்பகுளம் ஆகியவை வாணாதிராயர்களின் கலைப்படைப்பாகும். அழகர்கோயில் வில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில், திருமோகூர் காளமேகப் பெருமாள் கோயில், கூடலழகர் கோயில் ஆகியவற்றில் வாணாதிராயர் காலச் செப்புத் திருமேனிகள் பல உள்ளன இவ்வகையில் ஒரு சிற்றரசு மரபினராக இருந்த போதிலும் மதுரைப் பகுதி வரலாற்றில் வாணாதிராயர்கள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளனர் எனலாம்

# 11. மதுரை நாயக்கர்கள் ஆட்சி

விஜயநகரர் ஆட்சியில் கி.பி. 16ஆம் நூறறாண்டின மத்தியில் நாயக்கத்தன முறை செயல்படுத்தப்பட்டது. அதன்படி அரசன் பூமிக்கு முழு உரிமை உடையவன். அவன் தன் கீழ் சிலருக்கு சில பகுதிகளைப் பிரித்துக் கொடுதது ஆளவைத்தான். நாயக்கர் எனப்பட்ட இவர்கள் ஓரளவு சுதந்திரமாக ஆள்வதுடன் ஆண்டிற்கு குறிப்பிட்ட ஒரு தொகையை அரசனுககுக் கப்பமாகச் செலுத்த வேண்டும். தங்களுக்கென ஒரு படையை வைத்துக்கொண்டு தேவை ஏற்பட்ட காலங்களில் அரசுக்கு உதவ வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி மதுரை தஞ்சை செஞ்சி ஆகிய பகுதிகளில் மூன்று நாயக்க அரசுகள் செயல்பட்டன மத்திய அரசு வலிமை குன்றியபோது இவர்கள் தங்களைத் தனி அரசாக அறிவித்துக்கொண்டு சுதந்திரமாகச் செயல்படலாயினர்.

மதுரையில் கிரு ணதேவராயரின இறுதிக்காலத்தில் (1529-1530) விசுவநாத நாயக்கரால் நாயக்க அரசு உருவாக்கப்பட்டது தமிழகத்தின் தென்பகுதியில் வீரசேகர சோழனுக்கும் சந்திர சேகரபாண்டியனுக்கும் இடையே போர் ஏற்பட்டு நாடு அமைதியிழந்திருந்தது பாண்டியன் விசயநகர் உதவியை நாடினான் கிரு ண தேவராயர் தனது படைத்தலைவரான கொட்டியம் நாகம நாயக்கரைப் பாண்டியனுக்கு உதவுமாறு அனுப்பினார். நாகமநாயக் கரும் பாண்டியனைச் சார்ந்து போரிட்டுச் சோழனை அடக்கியபின் பாண்டியனை அரியணையில் அமர்த்தாமல் தானே மதுரைக்கு மன்னன் என அறிவித்துக்கொண்டார். சினமுற்ற கிரு ணதேவராயர் நாகமரைக் கைது செய்ய

அவரது மகன் விசுவநாதனையே படையுடன் அனுப்பினார். விசுவநாதரும் அரசக் கட்டளையை ஏற்று ராஜவிசுவாசத்துடன் தனது தந்தை நாகமரைக் கைது செய்து அரசவையில் நிறுத்தினார். கிரு ணதேவராயர் விசுவநாதரைப் பாராட்டி அவருக்கே மதுரை நாயக்க அரசை ஆளும் உரிமையை அளித்தார். அன்று தொடங்கி (கி.பி. 1530) மதுரை நாயக்க அரசு உருவாகித் தொடர்ந்து 13 அரசர்கள் கி.பி. 1530 முதல் 1736 வரை மதுரையை ஆண்டனர். இன்றைய மதுரையின் பல கலைச் சின்னங்களுக்கும் காரணமானவர்களாக இந்நாயக்கர் மரபு அரசர்கள் திகழ்கின்றனர்.

**1. விசுவநாத நாயக்கர் (கி.பி. 1529-1564)**

கிரு ணதேவராயரின் இறுதிக்காலத்தில் விசுவநாதர் மதுரை நாயக்க அரசின் முதல் ஆட்சியாளராகப் பதவி ஏற்றார். அவருக்கு எல்லா வகையிலும் உதவியாகத் தளவாய் அரியநாதர் என்பவர் பணியாற்றினார். அமைச்சுப் பதவியும், படைத்தலைமைப்பதவியும் இணைந்ததுதான் தளவாய் பதவி. ஆற்றல்மிக்க அரியநாதர் இப்பதவியில் அமர்ந்து முதல் மூன்று நாயக்க மன்னர்களிடத்தில் பணியாற்றியது நாயக்க அரசு வலிவும் பொலிவும் பெறப் பெருங்காரணமாய் அமைந்தது.

விசுவாதர் தஞ்சை நாயக்க அரசன் செவ்வப்பனுடன் சுமுக உறவுகொண்டு வல்லம் கோட்டையை அவருக்குக் கொடுத்துத் திருச்சியைத் தனக்குப் பெற்றுக் கொண்டார். திருச்சிக் கோட்டையை வலுப்படுத்தி, காவிரிக்கரையில் காடுகளை அழித்து கள்ளர் தொல்லையை முறியடித்து, தாயுமானவர் கோயிலைப் புதுப்பித்துத் திருச்சிராப் பள்ளியைச் சீர்திருத்தினார்.

தென்பாண்டி நாட்டில் கயத்தாறு பகுதியில் நிலவிய பஞ்சபாண்டியர் கலகத்தை அடக்கி, நெல்லையப்பர் கோயிலில் திருப்பணிகள் செய்து, தாமிரபரணிக்

கரைகளில் காடுகளை அழித்துக் கள்ளர் தொல்லையை ஒடுக்கிக் கட்டுக்குள் கொண்டுவந்தார். கம்பத்தில் குழப்பம் விளைவித்தவர்களை வெல்ல இராமபத்திர நாயக்கரை அனுப்பி வெற்றி கண்டார். இவர் காலத்தில் மதுரை, திருச்சி, இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களும் திருவாங்கூரின் ஒரு பகுதியும் நாயக்கர் ஆட்சியின் கீழ் இருந்தது. இப்பரந்துபட்ட நாட்டை எளிதில் நிர்வாகம் செய்வதற்காக 72 பாளை யங்களாகப் பிரித்து அதன் தலைவர்களாக 72 பாளையக் காரர்களை நியமித்தார். இவர்கள் மதுரைக் கோட்டை மதிலில் இருந்த ஒவ்வொரு கொத்தளத்திற்கும் காவல் பொறுப்பினர் ஆவர்.

ஏற்கனவே விசயநகரர்களால் நடைமுறைப்படுத்தப் பட்ட அமரநாயக முறையையும் காகதீய அரசன் இரண்டாம் பிரதாப் ருத்ரன் நடைமுறைப்படுத்திய நாட்டுப்பிரிவு முறைகளையும் முன்னுதாரணமாகக் கொண்டு விசுவநாதர். அரியநாதரின் உதவியுடன் பாளையப்பட்டு களை உருவாக்கினார். இதன் மூலம் படை உதவியும் திரைப் பணமும் நாட்டு நிருவாகமும் முறைப்படுத்தப்பட்டன.

விசுவநாதன் ஆட்சியில் மதுரைப் பகுதியில் அமைதி நிலவியது. தமிழர், கன்னடர், தெலுங்கர் என முப்பிரிவினரும் ஒற்றுமையோடு வாழ்ந்தனர். பாழ்பட்டுக் கிடந்த மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் விசுவநாதரால் பொலிவு பெற்றது. இன்றும் புதுப் பொலிவோடு விளங்கும் மதுரைக் கோயில் ஆயிரங்கால் மண்டபத்தைத் தளவாய் அரியநாதர், விசுவநாதன் காலத்திலேயே கட்டினார் என்பர். தளவாய் அரியநாதர் குதிரையில் அமர்ந்தபடி உள்ள சிலையும் விசுவநாதரின் திருஉருவும் ஆயிரங்கால் மண்டபத்தில் வடிக்கப்பட்டுள்ளன.

## 2. முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.பி. 1564 - 1572)

விசுவநாத நாயக்கரின் மகன் முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் தந்தைக்குப் பின் ஒன்பது ஆண்டுகள் மதுரையில் நல்லாட்சி நடத்தினார். தந்தையிடம் கற்ற அனுபவத்துடன் இயல்பான வீரமும் துணைவர ஆட்சியின் தொடக்கத்தில் எழுந்த தும்பிச்சி நாய்க்கனின் கலகத்தை அடக்கி பரமக்குடிப் பகுதியில் அமைதியை நிலை நாட்டினார். பெரும்படையுடன் இலங்கைக்குப் போர் மேற்சென்று கண்டி மன்னனின் செருக்கை அடக்கினார். தலைக் கோட்டைப் போரில் ராஜவிசுவாசத்துடன் நடந்து கொண்டு தளவாய் அரியநாதரை திருமலைராயரின் கரத்தை வலுப்படுத்த அனுப்பி வைத்தார்.

இவர் காலத்திலும் அரியநாதர் தளவாயாகப் பணிபுரிந்தார். இவர் காஞ்சிபுரத்திற்கு அருகில் மெய்ப்பேடு என்னும் கிராமத்தில் வாழ்ந்து வந்த தம் உறவினர்களைக் கொண்டு வந்து மதுரைக்கு அருகில் சோழவந்தானில் குடி அமர்த்தினார். தொண்டை மண்டல வேளாளர்களின் குடிபெயர்வுக்கு இதுவே தொடக்கமாக அமைந்தது. பாளையங்கோட்டைக்கு அருகில் கிரு ணாபுரம் என்னும் நகரத்தை அமைத்து அதில் அற்புதமான சிற்பங்களுடன் கூடிய கோயிலை உருவாக்கினார்.

மதுரை மீனாட்சி கோயிலில் வெள்ளியம்பலமும் வடக்குக் கோபுரமும், மடைப்பள்ளியும், மூர்த்தி அம்மன் மண்டபமும் இரண்டாம் திருச்சுற்று மண்டபமும் கட்டினார். மீனாட்சி அம்மனுக்குப் பொற்கவசம் பூட்டினார். தூண்களில் பொன் தகடு போர்த்தினார் என்று இவர் செய்த அரும்பணிகளை மதுரை திருப்பணி மாலை பட்டியலிடுகிறது.

## 3. வீரப்ப நாயக்கர் (கி.பி. 1572-1595)

கிரு ணப்ப நாயக்கரின் மூத்த மகன் வீரப்ப நாயக்கர் 23 ஆண்டு காலம் ஆட்சி செய்தவர். தன் தம்பி விசுவநாதன்

துணையுடனும் தளவாய் அரியநாதரின் ஆலோசனையுடனும் நல்லாட்சி தந்தார். இவர் காலத்தில் அழகர் கோயில் பகுதியில் இருந்த வாணாதிராயர்கள் கலகத்தில் ஈடுபட்டனர். அவர்களை ஒடுக்கி அமைதி ஏற்படுத்தினார். தென்பாண்டி அரசர்களான அதிவீரராம பாண்டியன், வரதுங்கபாண்டியன் ஆகியோரை அடக்கித் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டார். திருச்சிக் கோட்டையை வலிமைப்படுத்தினார். அருப்புக்கோட்டையில் புதிய கோட்டை கட்டினர். தில்லைக் கோயிலில் திருமதிலை வலிமையுடையதாக்கினார். மதுரைக் கோயிலிலும் பல அரும்பணிகள் செய்தார். சொக்கநாதர் சன்னதி முன்பாக உள்ள கம்பத்தடி மண்டபம் கி.பி. 1583இல் இவர் காலத்தில் உருவானது என்பதை இங்குள்ள தூண் ஒன்றில் வெட்டப்பட்டுள்ள தெலுங்கு, தமிழ் கல்வெட்டால் அறியலாம். கோரிப்பாளையம் தர்காவுக்கு முன்பு கூன் பாண்டியனால் விடப்பட்ட நிலத்தை ஆவணத்தைப் பார்த்து உறுதி செய்து மீண்டும் வழங்கியதாகக் கோரிப்பாளையம் தர்கா கல்வெட்டு கூறுகிறது. இவர் காலத்தில் கிறித்தவ மதத்தைப் பரப்ப 1592இல் ஏசு கழகத் தொண்டர்கள் பெர்ணாண்டஸ் என்ற போர்ச்சுகீசியர் தலைமையில் முயற்சிகள் மேற்கொண்டனர். கிறித்தவ மதத்தினர்க்கு மன்னர் சமயப் பொறையோடு ஆதரவளித்த போதிலும் மக்கள் ஆதரவு இன்மையால் அம்முயற்சி வெற்றி பெறவில்லை.

## 4. இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.பி. 1595 - 1601)

சுமார் ஆறு ஆண்டுகளே அமைதியான ஆட்சியைத் தந்த இவர் வீரப்ப நாயக்கரின் புதல்வர் ஆவார். இவர் காலம் வரை தளவாயாக அரும்பணியாற்றிய தளவாய் அரியநாதர் முதுமை காரணமாக கி.பி. 1600இல் இறந்தார். இவரது பரந்த நாட்டுப் பரப்பில் எவ்வித இடையூறும் செய்யாது பாண்டிய சிற்றரசர்களும், திருவாங்கூர் மன்னர்களும் கட்டுப்பட்டிருந்தனர். அமைதியான

ஆட்சிகண்ட கிருஷ்ணப்பர் மிக விரைவில் இயற்கை எய்தினார்.

## 5. முத்து கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.பி. 1601-1609)

இரண்டாம் கிருஷ்ணப்பரின் இளவல் விசுவப்ப நாயக்கரின் மகனே இந்த முத்து கிருஷ்ணப்பர். இவர் தந்தை இளமையிலேயே காலமானார். முத்து கிருஷ்ணப்பருக்கு முன் அவரது சிற்றப்பன் கஸ்தூரி ரங்கப்பர் ஆட்சியைக் கவர்ந்தார். ஆனால் மக்கள் ஆதரவின்மையால் ஒருவார காலம் கூட அவரால் ஆட்சி செய்ய முடியவில்லை. எனவே முறைப்படி அரசுரிமை பெற்ற முத்து கிருஷ்ணப்பர் அமைதியான ஆட்சியைக் கொடுத்தார். இவர்காலத்தில் இராமநாதபுரம் சீமையில் எழுந்த கலகத்தை அடக்க போகலூரில் இருந்த சடையத்தேவன் உடையான் என்பவனுக்குச் சேதுபதி எனும் பட்டம் கொடுத்து அரசனாக்கினார். இராமேஸ்வரம் செல்லும் அணைக்கும், சாலைக்கும் காவலனாக (சேதுபதி - அணை காவலன்) நியமித்து பக்தர்களின் நலன் காக்கச் செய்தார். இவர் காலத்தில் ராபர்ட்-டி-நொபிலி என்னும் ரோமானியக் கிறித்தவர் தமது சமயப் பணியில் வெற்றி கண்டார். இந்துத் துறவி போல துவராடை அணிந்து கொண்டு, ஊன் உணவு துறந்து, இந்துமதச் சடங்குகளை தன் மதத்திலும் ஏற்று மக்களைக் கவர்ந்து கிறித்தவ மதத்தைப் பரப்பினார். முத்து கிருஷ்ணப்பர் அதற்கும் ஆதரவாக இருந்தார்.

## 6. முதலாம் முத்து வீரப்ப நாயக்கர் (கி.பி. 1609 - 1623)

இவர் முத்து கிருஷ்ணப்பரின் மூத்த புதல்வர். தந்தையின் மறைவுக்குப் பின் மதுரையின் அரசுப் பொறுப்பை ஏற்றார். இவரது இளவலே புகழ்மிகு திருமலை நாயக்கராவார். முத்து வீரப்பர் என்ற பெயரில் மூவர் மதுரையை ஆண்டதால் இவர் முதலாம் முத்து வீரப்பர் எனப்படுகிறார். இவர் தலைமை ஏற்றதும் விசய நகர அரசர்க்குக் கப்பம் கட்ட மறுத்து முழு உரிமை பெற்ற

*மன்னராக முயன்றார். ஆனால் இவரது முயற்சி வெற்றி அளிக்கவில்லை. இவர் செய்த மற்றொரு குறிப்பிடத்தக்க செயல் தலைநகரைத் திருச்சியாக மாற்றியது ஆகும். அடிக்கடி மோதலுக்குரியவராக இருக்கும் தஞ்சை நாயக்கரை முறியடிக்கவே அவர் திருச்சிக்குத் தலைநகரை மாற்றியதாகக் கூறுவர். இவர் காலத்தில் பாண்டிய சிற்றரசர்களும் கட்டுக்குள் இருந்தனர். மைசூர் படைகள் திண்டுக்கல்லை முற்றுகையிட்ட காலத்தில் கன்னிவாடி, விருபாட்சி பாளையக்காரர்கள் உதவியுடன் அதனை முறியடித்தார். பெர்ணாண்டஸ் பாதிரியாருக்கும், ராபர்ட்-டி-நொபிலி பாதிரியார்க்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால் கிறித்தவ மதம் பரவுவதில் பின்னடைவு ஏற்பட்டது. சமயப் பொறைமையும், அரசியல் சாதுர்யமும் கொண்ட முத்து வீரப்பர் தனியாட்சி பெறும் எண்ணத்திற்கு வித்திட்டார். அவருக்குப் பின் அரியணை ஏறிய அவர் இளவல் திருமலை நாயக்கர் அண்ணனது கனவை நனவாக்கினார்.*

## 7. திருமலை நாயக்கர் (கி.பி. 1623 - 1659)

*மதுரை நாயக்க மரபின் மங்காப் புகழுக்கு உரியவர் திருமலை சவுரி நாயினு அய்யலுகாரு என்னும் பெயர் கொண்ட திருமலை நாயக்கர் ஆவார். மதுரை மாநகரை ஒரு கலைநகராய் மாற்றிய பெருமை இவருக்கே உரியது. கி.பி. 1584இல் பிறந்த இவர் தன் தமயன் முத்து வீரப்பருக்குப் பின் கி.பி. 1623இல் தனது 39ஆம் வயதில் அரசு கட்டில் ஏறினார். இவரது தமயனார் 1616இல் திருச்சிக்கு மாற்றிய தலைநகரை மதுரைக்கு மாற்றினார். இது நிகழ்ந்தது கி.பி. 1634இல் ஆகும். இதற்குப் பல காரணங்கள் இருப்பினும் மதுரை மீனாட்சி அம்மையின் பால் திருமலை கொண்ட அளப்பரிய பக்தியும் ஒரு காரணம் எனலாம்.*

*விசய நகரப் பேரரசு நலிவடைந்ததைத் தொடர்ந்து திருமலை மன்னர் தன்னைத் தனி உரிமை பெற்ற மன்னராக அறிவித்துக் கொண்டார். தனது கோட்டைகளைப்*

பலப்படுத்தி படைகளின் எண்ணிக்கையை அதிகரித்தார். தனது ஆட்சியில் ஐந்து பெரும்போர்களைச் சந்திக்க வேண்டியவரானார். மைசூர் உடையார்களுடனும், திருவாங்கூர் மன்னருடனும், இராமநாதபுரம் சேதுபதியுடனும் போரிட்டு தனது வலிமையை உறுதிப்படுத்தினார். மைசூராருடன் நடத்திய இரண்டாவது கட்டப் போர் மூக்கறுப்புப் போர் என வரலாற்று ஏடுகளில் பதிவாகியுள்ளது. இத்தனைப் போர்களுக்கும் இவர்க்குத் துணை நின்றவன் இவனது படைத் தலைவன் இராமப்ப அய்யனும், திண்டுக்கல் பாளையக்காரர் அரங்கண்ண நாய்க்கருமே. தளபதி இராமப்ப அய்யன் இன்றைய திருமங்லத்திற்குச் செல்லும் வழியில் உள்ள சதுர்வேதிமங்கலம் (கூத்தியார் குண்டு) என்னும் ஊரில் பிறந்தவர். இவரது வீரத்தைப் போற்றும் விதமாக இராம்ப்ப அய்யன் அம்மானை என்ற நாட்டுப்புறப் பாடலே எழுந்தது.

திருமலை மன்னர் இறைபக்தி மிக்கவர் என்பதால் திருக்கோயில்கள் பலவற்றிலும் அரிய திருப்பணிகள் பலவற்றைச் செய்துள்ளார். மீனாட்சி அம்மன் கோயிலில் கிளிக் கூண்டு மண்டபத்தைக் கட்டினார். சொக்கநாதர் மற்றும் மீனாட்சி சந்நிதிகளில் ஆறுகால்பீடத்தின் முன் செம்பாலான துவாரபால்கர், துவாரபாலகியர் சிலைகளை அமைத்தார். இவ்விரண்டு சந்நிதிகளிலும் பலிபீடமும், கொடிக்கம்பமும் அமைத்தார்.

மதுரைக் கோயிலை நன்கு புதுப்பித்ததோடு திருப்பரங்குன்றம், அழகர்கோயில், திருவல்லிபுத்தூர் ஆண்டாள் கோயில், திருவரங்கம் ஆகிய கோயில்களிலும் பல திருப்பணிகள் மேற்கொண்டார். கள்ளழகர் கோயில் தெற்குச் சுற்றில் இவரது உருவம் ஒரு தூணில் அமைந்துள்ளது. அழகர்கோயிலிலேயே தனியாக நாட்டிய மண்டபம் ஒன்றைக் கட்டியுள்ளார். அதில் அமைந்துள்ள அவரது முழு உருவச் சிலை அழகு வாய்ந்தது. திருவில்லிபுத்தூர் கோயிலின் சன்னதி முன்பாக குறடு ஒன்று கட்டி அதில் ஒரு தூணில் தனது உருவத்தையும்

வைத்து பொன் தகடு வேய்ந்தார். மீனாட்சி ஆலயத்தின் எதிரில் அமைந்துள்ள வனப்புமிகு வசந்த மண்டபம் புதுமண்டபம் என இன்றும் வழங்குகிறது. இந்த எழில் கூடத்தை உருவாக்கியவர் இவரே. இதில் இவர் தனக்கு முன்னிருந்த நாயக்க அரசர்களின் உருவங்களையும் தனது உருவத்தையும் அமைத்துள்ளது வரலாற்றுச் சிறப்புடைய ஒன்றாகும்.

மீனாட்சி அம்மன் கோயிலின் இன்றைய கிழக்கு (அம்மன் சன்னதி) நுழைவாயில் இவரது மனைவியர் தோணியம்மை, ருத்ரா ஆகியோரால் கட்டப்பட்டது. அட்டசக்தி மண்டபம் என்று இது பெயர் பெற்றுள்ளது. மதுரை நகரின் மகுடமாய் ஒளிரும் திருமலை மன்னர் அரண்மனையைத் திட்டமிட்டுக் கட்டியவர் இவரே. இத்தாலியக் கட்டடக் கலை வல்லுநரின் ஆலோசனைப்படி இந்திய இஸ்லாமிய, கிரேக்க கலைகளின் கலவையாக இதனை அமைத்தார். இம்மாளிகை உருவாக மண் எடுத்த இடமே இன்றைய வண்டியூர் தெப்பக்குளம் என்பர். அதிலும் எழில் வாய்ந்த மைய மண்டபம் கட்டித் தன் பிறந்த நட்சத்திரமான தைப்பூசத்தன்று சுந்தரேசுவரரின் தெப்பத் திருவிழாவை நடத்த ஏற்பாடு செய்தார்.

முக்குறுணி விநாயகர் என்னும் பெயரில் மிகப் பெரிய விநாயகர் சிற்பத்தை மதுரைக் கோயிலில் அமைத்து அதைத் தாம் தினமும் வழிபடும் வகையில் தன் உருவம் பொறித்த செப்புத் திருவாச்சியையும் அமைத்தார். இவரது உருவச் சிலைகளில் இவரும் இவரது இரு மனைவியரும் எதிரில் இவரது தம்பியும் குடும்பத்தினரும் நிற்பதாகவே வடித்துள்ளார்.

திருமலை மன்னர் அனைத்து மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றவர். இன்று மிக அதிக எண்ணிக்கையில் வாழும் சௌராட்டிர இன மக்களைக் குடியமர்த்தி நெச்வுத் தொழிலை வளர்த்தவர். தான் மீனாட்சியின் பிரதிநிதியாகவே மதுரை மண்ணை ஆளுவதாக எண்ணி

வருடம் தோறும் அம்மன் கையால் செங்கோல் பெற்றார். தேனூர் வைகைக் கரையில் தீர்த்தமாடச் செல்லும் கள்ளழகர் திருவிழாவை மதுரை வைகைக் கரையில் தீர்த்தமாடும் திருவிழாவாக மாற்றினார். மீனாட்சி அம்மன் கோயிலுக்குத் தேர்கள் செய்து கொடுத்து தேர்த்திரு விழாவும் அதேசமயம் நிகழச் செய்தார். இப்படி மதுரை நாயக்க மன்னர்களிலேயே மிகப் புகழ் பெற்று விளங்கிய திருமலை மன்னர் 1659இல் மறைந்தார்.

## 8. இரண்டாம் முத்து வீரப்பர்: (கி.பி. 1659)

திருமலை நாயக்கரின் மகனே இவர். சுமார் 4 மாதங்களே ஆட்சி செய்தவர். அரசுரிமைப் போரில் போட்டியாய் இருந்த தனது சிற்றப்பன் குமார முத்துவுக்கு சிவகாசி, நெல்லைப் பகுதிகளின் ஆட்சியைப் பிரித்துக் கொடுத்து அமைதி கண்டார். திருச்சிக் கோட்டையை மேலும் வலிமையுடையதாக்கி பீஜப்பூர் சுல்தானின் படை எடுப்பை வீரமாகச் சந்தித்து வெற்றி கண்டார். நான்குமாத ஆட்சியே எனினும் குறை ஒன்றும் இல்லாமல் கடந்தது.

## 9. சொக்கநாத நாயக்கர் (கி.பி. 1659-1682)

இவர் இரண்டாம் முத்து வீரப்பரின் புதல்வர். இவரது பட்டத்து அரசியே மாதரசி மங்கம்மாள். மதுரை வரலாற்றில் மிகவும் குழப்பமான சூழலில் ஆட்சியைப் பெற்றுத் திறம்பட ஆண்டவர். இவர் மீண்டும் மதுரை யிலிருந்து தலைநகரைத் திருச்சிக்கு மாற்றினார். அதுமுதல் நாயக்கர் கால இறுதி வரைத் திருச்சியே தலைநகரமாகத் திகழ்ந்தது. இவர் செய்த மாபெறும் தவறு திருமலை நாயக்கர் மகாலின் எழிலார்ந்த பல பகுதிகளை இடித்துத் திருச்சிக்குக் கொண்டு சென்று புதிய அரண்மனை கட்ட முயன்றதாகும். ஆனால் இம்முயற்சியும் நிறைவு பெறவில்லை. அரண்மனையின் பெரும்பகுதி அழிந்ததே உண்மை. இவரிடம் தளவாயாகச் செயல்பட்ட லிங்கம நாயக்கன் இவருக்கு எதிராகச் சதி செய்தான். அதையும் முறியடித்தார்.

கடும் பஞ்சம் நாட்டைத் தாக்கியது. இப்பஞ்ச காலத்தில் டச்சு வணிகர்கள் பலர் இங்கிருந்து ஆண்களை அடிமைகளாக அழைத்துச் சென்று வெளிநாடுகளில் விற்றார்கள். சொக்கநாதர் அனைத்தையும் சமாளித்து மக்களுக்கு ஆதரவாக நின்றார்.

## 10. மூன்றாம் முத்துவீரப்பர் (கி.பி. 1682-1689)

சொக்கநாதருக்கும் மங்கம்மாளுக்கும் மகனாய்ப் பிறந்தவர் இவர். இவர் காலத்தில் நாட்டைச் சுற்றியும் பகைவர் சூழ்ந்திருந்தனர். சொக்கநாதர் காலத்திலேயே இந்நிலைதான். தஞ்சை நாயக்கரும், சேதுபதி மன்னரும், செஞ்சி நாட்டவரும், மைசூர்க்காரரும் பலவகையில் இவருக்குத் தொல்லை கொடுத்து நாட்டின் பெரும் பகுதியை அவர்கள் வசம் பிடித்துக் கொண்டனர். இவரது ஆட்சியில் அவுரங்கசீப் தனது ஒற்றைச் செருப்பை ஊர்வலமாகவிட்டு கப்பம் வசூலித்தாராம். மான உணர்ச்சி மிக்க முத்து வீரப்பர் அச்செறுப்பைத் தன்காலில் அணிந்து கொண்டு உங்கள் மன்னர் ஒற்றைச் செருப்பு மட்டும் அனுப்பியுள்ளாரே இன்னொரு செருப்பு எங்கே என முஸ்லிம் படைத் தலைவனிடம் கேட்டாராம். இதனை அறிந்து அவுரங்கசீப் செருக்கு அடங்கியதாகக் கூறுவர். இவர்காலத்தில் இராமநாதபுரம் கிழவன் சேதுபதி தனியரசு காண முயன்றார்.

கிறித்தவ சமயம் ஓரளவிற்குச் செல்வாக்குப் பெற்று வளர்ந்தது. இவர் மரணம் அடையும் போது இவர் மனைவி முத்தம்மாள் கருவுற்றிருந்தார். எனவே மாமியார் மங்கம்மாளின் ஆலோசனைப்படி உடன்கட்டை ஏறாது குழந்தை பிறக்கும் வரை வாழ்ந்து குழந்தை பிறந்த ஒருவாரத்தில் பன்னீர் குடித்து ஜன்னி கண்டு இறந்தார். இக்குழந்தையே விஜயரங்க சொக்கநாதர் ஆவார். இவர் குழந்தையாக இருந்தமையால் இவர் சார்பில் மங்கம்மாள் நாட்டை ஆண்டார்.

## 11. இராணி மங்கம்மாள் (கி.பி. 1689-1705)

மூன்று மாதக் குழந்தையான விஜயரங்க சொக்க நாதருக்கு அரசு பட்டம் கட்டி அவர் சார்பாக மங்கம்மாள் ஆட்சியைத் திறம்பட நடத்தினார். இத்தருணத்தில் மாவீரன் சிவாஜி மரணமடைந்துவிட்டதால் அவுரங்கசீப் அச்சம் நீங்கி தென்னகத்தின் பால் தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்த முயன்றான். மைசூர் மன்னர் சிக்கதேவ ராயரும், தஞ்சை மராத்தியரும் அவுரங்கசீபுக்கு அடிபணிந்தனர். வேறு வழியின்றி மங்கம்மாளும் திறைப்பணம் செலுத்த இசைந்தார். ஆனால் இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தன் நாட்டில் முன்பு இழந்த பகுதிகளை எல்லாம் முஸ்லிம் படையுதவியுடன் மீட்டாள். மைசூர், திருவிதாங்கூர் மன்னர்களோடும் அவ்வப்போது மோத வேண்டிய சூழல் இருந்தது.

மைசூர் மன்னன் சிக்கதேவராயன் திருச்சிக்கும், தஞ்சைக்கும் ஜீவனாக இருந்த காவிரி நீரை மைசூருக்குத் திருப்பிவிடுவதற்காக அணை ஒன்று கட்டினான். இதனை அறிந்த மங்கம்மாள் தஞ்சை அரசருடன் சேர்ந்து மைசூர் மன்னர் மேல் போர் தொடுக்க முயன்றார். நல்வாய்ப்பாகப் பெருமழை பெய்து அணையை உடைத்தது. கலகமில்லாமல் காவிரி நீர் தமிழகத்திற்குக் கிடைத்தது. மங்கம்மாள் கோயில்கள் பலவற்றுக்கும் அறக்கொடைகள் பல செய்துள்ளாள். பல இடங்களில் சாலைகளும், சத்திரங்களும் அமைத்துள்ளாள். இன்றும் பல சிற்றூர்களில் மங்கம்மாள் சாலை என்ற பெயரிலேயே அவை வழங்கப்படுகின்றன. கிறித்தவ சமயத்திற்கும், பள்ளிவாசல்களுக்கும் நிலக்கொடை கொடுக்கப்பட்டது.

மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு எதிரில் அம்மன் சன்னதிக்கு முன் நகரா மண்டபம் மங்கம்மாள் காலத்தில் கட்டப்பட்டது. இம்மண்பத்தின் ஒரு தூணில் மங்கம்மாள் அவரது பெயரன் விஜயரங்க சொக்க நாதருடன் நிற்கும் சிற்பம் உள்ளது. இவர் திருப்பரங்குன்றத்தில் முன்

மண்டபம் கட்டினார். அதில் ஒரு தூணில் முருகன், தேவசேனைத் திருமணக் காட்சி சிற்பமாக இருக்க, அதன் எதிர் தூணில் மங்கம்மாள் சிற்பம் அதை வணங்கிய நிலையில் உள்ளது. மீனாட்சி கோயிலில் . கிளி மண்டபத்தின் எதிரில் ஒரு சிறிய விதானப் பகுதியில் மங்கம்மாள் காலத்தில் தீட்டப்பட்ட ஓவியம் ஒன்று உள்ளது. இவ்வோவியத்தில் மீனாட்சி அன்னையின் திருக்கல்யாண நிகழ்ச்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. இக்காட்சியை மங்கம்மாளும் விசயரங்க சொக்கநாதரும் கண்டுகளிப்ப தாக உள்ளது. இவ்வுருவங்களின் கீழ் தெலுங்கிலும் தமிழிலும் பெயர்க் குறிப்புகளும் எழுதப்பட்டு உள்ளன. ஒருபுறம் தளவாய் நரசப்பய்யர் நிற்கிறார்.

மதுரையில் இன்று காந்தி அருங்காட்சியகம் செயல்பட்டு வரும் தமுக்கம் கட்டடம் மங்கம்மாளின் கலைப் பணியாகும். கோடைக்காலத் தங்குமிடமாகவும் வீர விளையாட்டுகளைக் கண்டுகளிக்கும் இடமாகவும் அது பயன்பட்டது. மீனாட்சி கோயிலின் அருகிலேயே இன்றைய சந்தைக்கு அருகில் ஒரு மாளிகை மங்கம்மாளால் கட்டப்பட்டிருந்தது. இன்றும் அது உள்ளது. காவல்துறை ஆணையர் அலுவலம் செயல்படும் கட்டடங்கள் சிலவும் மங்கம்மாள் காலத்ததே. புகைவண்டி நிலையத்திற்கு எதிரில் இன்று செயல்பட்டு வரும் மங்கம்மாள் சத்திரம் பிற்காலத்தில்அவர் நினைவாக எடுக்கப்பட்ட கட்டடமாகும்.

## 12. விஜயரங்க சொக்கநாத நாயக்கர் (கி.பி. 1706 - 1732)

மங்கம்மாளுக்குப் பின் அவரது பெயரர் விஜயரங்கச் சொக்கநாதர் தனது 17வது வயதில் அரசுப் பொறுப்பை ஏற்றார். அவர் எதிலும் அக்கறை காட்டாத துறவு மனப்பான்மையில் இருந்தார். இதனால் இவரைச் சுற்றியிருந்த தளவாய் கஸ்தூரி ரங்கய்யாவும், பிரதானி வெங்கட கிரு ணய்யாவும் வரிச் சுமையை அதிகரித்து மக்களை வாட்டி வதைத்தனர். கொடை நிலத்துக்குக் கூட வரி வசூலித்த காரணத்தால் ஒரு ஊழியன் கோயில்

கோபுரம் ஏறி விழுந்து அறப்போர் முறையில் உயிர்விட்டான். அதன் பிறகு அவர்கள் கொட்டம் அடங்கியது.

கிழவன் சேதுபதியின் காமக்கிழத்திக்குப் பிறந்த பவானி சங்கரனால் இராமநாதபுரம் பகுதியில் அமைதி குலைந்தது. ஒருவாறாக பவானி சங்கரன் கொல்லப்பட்ட பின்பு இராமநாதபுரம் சீமை இரண்டாகப் பிரிக்கப்பட்டு இராமநாதபுரம், சிவகங்கை என இரு மன்னர்களுக்கு உரியதாயிற்று. விஜயரங்க சொக்கநாதரின் அளவிடற்கரிய இறைபக்தி அவரை அரசாட்சியைப் புறக்கணிக்கத் தூண்டிவிட்டது. கோயில்களுக்குப் பல திருப்பணிகள் செய்தார். வில்லாபுரங்கோயில் இவரால் திருப்பணி கண்டது. 1732இல் இவர் மறைந்தார். இவரது தந்தத்தால் ஆன உருவச்சிலை அரசி மீனாட்சியுடன் திருவரங்கம் அரங்க நாதர் கோயில் இடப்பக்கத் திருச்சுற்றில் இடம் பெற்றுள்ளது.

## 13. மீனாட்சி அரசி (கி.பி. 1732-1736)

மதுரை நாயக்க மரபின் கடைசி ஆட்சியாளர் மீனாட்சி அரசியாவார். இவர் விசயரங்க சொக்க நாதரின் பட்டத்தரசி. இவர்களுக்கு வாரிசுகள் இல்லை. பங்காரு திருமலையின் மகன் விஜயகுமாரனை வாரிசு ஆக ஏற்று ஆட்சி நடத்த முயன்றாள். போதிய அரசியல் அனுபவமும் அறிவாற்றலும் இன்மையால் மீனாட்சியால் மங்கம்மாள் போல் ஆட்சி செய்ய இயலவில்லை. உட்பகையும் ஆர்க்காட்டு நவாப்பின் படையெடுப்பும் பல நெருக்கடிகளைக் கொடுத்தன. 1736இல் சந்தா சாகிப் (ஆர்காட்டு நவாபின் மருமகன்) மீனாட்சியுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு திருச்சி கோட்டையைக் காப்பதாகக் கூறினான். இதற்கென ஒரு கோடி ரூபாய் பெற்ற போதும் அவன் வஞ்சித்தான். இதனைத் தாங்க முடியாத மீனாட்சி அரசி தற்கொலை செய்து கொண்டாள். உடனே சந்தாசாகிப் திருச்சி, திண்டுக்கல், மதுரைப் பகுதிகளைத் தன்வசம் ஆக்கிக் கொண்டான். மீனாட்சி அரசியின் மரணத்துடன் மதுரை நாயக்கர் அரச மரபு முடிவுக்கு வந்தது.

# 12. நாயக்கராட்சிக்குப் பின்

சந்தா சாகிப்பின் நம்பிக்கைத் துரோகத்தால் ஏமாற்றமடைந்த மீனாட்சி அரசி தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டபின் இரக்கமே இல்லாத சந்தா சாகிப் திண்டுக்கல், திருச்சி, மதுரை ஆகிய பகுதிகளைத் தன் வசப்படுத்திக் கொண்டான். தனது இரண்டு சகோதரர் களான புதாசாகிப், சதக் சாகிப் ஆகியோரை முறையே மதுரை, திண்டுக்கல் பகுதிகளின் ஆளுநர்களாக அமர்த்தினான். இத்தருணத்தில் மதுரைக் கோயிலைப் பாதுகாப்பதற்காக மீனாட்சி சுந்தரேசுவரரையும் கூடல் அழகர் திருமேனிகளையும் எடுத்துக் கொண்டு பட்டர்களும், பரிசனங்களும் சேதுபதிகளிடம் அடைக்கலமாகி மானா மதுரையில் தங்கினர். இரண்டாண்டு காலம் சேதுபதி இவர்களை ஆதரித்தார்.

இந்நிலையில் பங்காரு திருமலை மற்றும் தஞ்சை மராத்திய அரசரின் கோரிக்கையை ஏற்று சதாராவிலிருந்து மராத்தியரின் பெரும்படை ராகோஜி போன்ஸ்லே தலைமையில் (1740ல்) தமிழகம் வந்து ஆர்க்காடு நவாப்பை வட ஆர்க்காடு மாவட்டம் தாமல்செரு என்ற இடத்தில் கொன்றது. சிறிது நாளில் மராத்தியப் படையினர் திருச்சி கோட்டையைக் கைப்பற்றி சந்தாசாகிப்பின் இரண்டு சகோதரர்களையும் கொன்றதுடன், சந்தா சாகிப்பையும் சிறைப்பிடித்துச் சதாராவுக்குக் கொண்டு சென்றனர். மராத்தியர்கள் பங்காரு திருமலையின் அரசுரிமைக் கோரிக்கையை ஏற்காது முராரிராவ் என்பவரைத் தமது சார்பில் மதுரையின் ஆளுநராக நியமித்துச் சென்றனர்.

அவ்வகையில் சிலகாலம் மதுரை மராத்தியர் ஆட்சிக்கும் (கி.பி. 1740-43க்கு இடையில்) உட்பட்டது.

முராரிராவ் தன் காலத்தில் அப்பாச்சி நாயக்கர் என்பவரை 2000 குதிரை வீரர்களுடன் அனுப்பி வைத்து மானாமதுரையில் சேதுபதியின் பாதுகாப்பில் இருந்த இறை உருவங்களை மதுரைக்குக் கொண்டு வந்து கோயில் வழிபாடுகள் தொடர வழிவகுத்தார் என்று மதுரைத் தல வரலாறு கூறுகிறது. மராத்தியர்களின் பின்னடைவு காரணமாகவும் ஐதராபாத் நிஜாமின் எழுச்சி காரணமாகவும் தென்னகம் நிஜாமின் ஆட்சிக்குட்பட்டது. கர்நாடக நவாப் அன்வருதீன் தமிழகத்தின் ஆளுநரானார். அவரது இரண்டு மகன்கள் மாபுஸ்கான், முகமதுஅலி இருவரும் சுமார் 10 ஆண்டுகள் மதுரையை நிருவகித்தனர். கி.பி.1748இல் அன்வருதீன் கொல்லப்பட்டவுடன் கர்நாடகத்தின் உரிமைக்காக முகமது அலிக்கும் சந்தாசாகிப்புக்கும் இடையில் கடும் போட்டி ஏற்பட்டது. இது கர்நாடகப் போர் எனப்பட்டது. இச்சூழலில் மதுரை அவ்வளவாகப் பாதிக்கப்படவில்லை. எனினும், முகமது அலிக்கு ஆதரவு கொடுக்கும் வகையில் உதவ வந்த ஆங்கிலேயரின் செல்வாக்கு மதுரையில் பரவத் தொடங்கியது.

ஆயினும் முகமதுஅலி மதுரைப் பகுதியைச் சந்தா சாகிப் வசம் பறிகொடுத்தான். சந்தாசாகிப்பின் பிரதிநிதியாக ஆலம்கான் கி.பி. 1751 மதுரையை நிருவகித்தான். மதுரையை மீண்டும் கைப்பற்ற கி.பி. 1751இல் கேப்டன் கோப் என்பவனைப் படையுடன் அனுப்பி வைத்தான். அவர்கள் மூன்று மாதம் மதுரைக் கோட்டையை முற்றுகையிட்டும் வெல்ல முடியாமல் திரும்பினர். ஓராண்டு ஆட்சிக்குப் பின் ஆலம்கான் மதுரையின் நிருவாகத்தை மயனா என்னும் உறவினனுக்கும், நெல்லைப் பகுதியை நபிகான் என்பவனுக்கும் ஒப்படைத்துவிட்டு தான் திருச்சிக் கோட்டைக்குச் சென்றான். ஆனால் மயனா மதுரைக்

கோட்டையை மைசூராரிடம் விற்று விட்டு திருமோகூர்க்குச் சென்றுவிட்டான். இதனைப் பெற்ற மைசூர் கூகுசாகிப் என்பவன் மதுரைக் கோட்டைக்குள் நுழைந்தான். இதைக் கேள்வியுற்று இராமநாதபுரம் சேதுபதியிடம் வாசல் தளகர்த்தராகப் பணியாற்றிய வெள்ளையன் சேர்வைக்காரரும், சிவகங்கை ஜமீனின் வாசல் காரியமான தாண்டவராய பிள்ளையும் பெரும் படையுடன் வந்து மதுரையை முற்றுகையிட்டனர். சில மாதங்களில் கூகுசாகிப் மதுரையை சேதுபதிகளிடம் ஒப்படைத்துவிட்டு திண்டுக்கல்லுக்குச் சென்றுவிட்டார். வெள்ளையன் சேர்வைக்காரரும், தாண்டவராயப் பிள்ளையும் மதுரைக் கோட்டைக்குள் நுழைந்து கோயிலைத் திறந்து வழிபாட்டைத் தொடரச் செய்தனர். நாடு அரசன் இன்றி இருத்தலாகாது எனக்கருதி பங்காரு திருமலையின் மகன் விசயகுமாரனை வெள்ளிக்குறிச்சியிலிருந்து கொண்டு வந்து மீனாட்சி கோயிலில் முடி சூட்டுவித்து செங்கோலும் கொடுத்து அரசனாக்கினார். விசயகுமாரன் ஒன்றரை ஆண்டுகள் அரசாண்டார். ஆனால் மீண்டும் மயனாவும், நபிகான், மகதிமியா ஆகிய மூவரும் விசயகுமாரனை வெள்ளிக்குறிச்சிக்கே விரட்டிவிட்டு மதுரைக் கோட்டையைப் பிடித்துக் கொண்டனர். அதை மீட்க வெள்ளையன் சேர்வைக்காரரும், கூகுசாகிப்பும் அனுப்பானடி, பனையூர் பகுதியில் தங்கிப் போரிட்டனர். ஆனால் முயற்சி வெற்றி பெறவில்லை. இருவரும் கொல்லப்பட்டனர். தொடர்ந்து 1754 வரை மயனாவின் ஆட்சியே நீடித்தது.

கி.பி. 1755ன் தொடக்கத்தில் ஆர்க்காட்டு நவாப் முகமது அலி, கர்னல், ஹீரான் என்பவரை மதுரையைப் பிடிப்பதற்காக அனுப்பினர். கிழக்கிந்தியக் கம்பெனியில் அதிகாரியாயிருந்த முகமது யூசுப்கானிடம் 2000 வீரர்கள் ஒப்படைக்கப்பட்டனர். மதுரையிலிருந்து மயனா தப்பி திருமோகூர் (கோவில்குடி) ஓடிவிட்டான். யூசுப்கானின் வீரர்கள் எளிதாக மதுரையைப் பிடித்தனர். கர்னல்

ஹீரான் தொடர்ந்து விடாது மயானாவைத் துரத்தியும் அவன் தப்பி ஓடிவிட்டான். ஹீரான் தவறான முடிவில் கோவிலைக் கொள்ளையிட நத்தம் பகுதிக் கள்ளர்களால் இன்னலுக்கு ஆளானான். தொடர்ந்து மதுரை நிர்வாகத்தில் குழப்பமே நீடித்தது. திருநெல்வேலியிலிருந்து கேப்டன் கெலாட் மதுரைக்கு வந்து நிலைமையைச் சமாளித்தார். இந்நிலையில் 1757இல் ஹைதர்அலி மதுரையைக் கைப்பற்ற எண்ணி சோழவந்தானில் வந்து முற்றுகையிட்டார். மதுரைக் கோட்டையின் வலிமை கண்டு அவர் தோல்வியுடன் திரும்ப வேண்டியதாயிற்று. பல இடங்களில் கொள்ளையிட்ட அவருக்கு யூசுப்கானால் பெருத்த சேதம் ஏற்பட்டது.

யூசுப்கான் மதுரையின் நிர்வாகத்தைச் சீர்படுத்தினார். கோயில் புனிதப்படுத்தப்பட்டு வழிபாடுகள் தொடரப் பட்டன. ஆண்டுக்கு 12,000 பொன் கோயில் செலவுக்காகக் கொடுக்கப்பட்டது. கோபுரத்தின் மீது ஏறி குழப்பம் விளைவித்த பக்கிரி நிசான் என்பவன் நாடு கடத்தப் பட்டான்.

யூசுப்கானே மதுரைப் பகுதியின் ஆளுநராக ஆண்டுக்கு ஐந்து லட்சம் கப்பம் கட்டும் வகையில் அமர்த்தப்பட்டான். பின்னர் ஒன்பது லட்சம் செலுத்த வேண்டும் எனக் கோரப்பட்டது. ஆனால் யூசுப்கான் ஆர்காட்டு நவாப்பின் கீழ் பணியாற்ற மறுத்து ஆங்கிலேயரின் கீழ் பணியாற்ற இசைந்தான். அது இயலாமல் போகவே 1763இல் அவன் பிரஞ்சுக்காரர்களுடன் கூட்டணி சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்த்தான். இதனால் ஆங்கிலேயர் அவனைப் பிடிக்க எண்ணினர். கர்னல் மோன்சன் தலைமையில் வந்தபடை மதுரைக் கோட்டையை நீண்ட நாள் முற்றுகையிட்டும் யூசுப்கானை ஒன்றும் செய்ய இயலாது பின்வாங்கியது. மேஜர் காம்பெல் தலைமையில் இரண்டாவது முறையாக மதுரைக் கோட்டை ஆங்கிலேயரால் முற்றுகையிடப்பட்டது. இம்முறை பிரெஞ்சு படைத் தலைவன் மர்ச்சண்டின் துரோகத்தால் யூசுப்கான் காட்டிக்

கொடுக்கப்பட்டான். கோட்டை வீழ்ந்தது. துரோகம் வென்றது. மதுரை ஆங்கிலேயர் வசமாயிற்று. 1764 அக்டோபரில் யூசுப்கான் தூக்கிலிடப்பட்டான்.

யூசுப்கான் தூக்கிலடப்பட்ட பின் ஆறு ஆண்டுகள் அபிரல்கான் சாகிப் என்பவன் வருவாய் ஆளுநராகச் செயல்பட்டான். அதன் பின் பலர் இதன் நிர்வாகத்தை மேற்கொண்டனர். கி.பி. 1781இல் ஆங்கிலேய அதிகாரியாக ஜார்ஜ் புரோக்டர் என்பவர் நியமிக்கப்பட்டார். இவரே மதுரையின் முதல் கலெக்டர் என்றும் கூறலாம். கி.பி. 1783இல் இப்பதவிக்கு திரு.ஐலெஸ் இர்வின் அமர்த்தப்பட்டார். 1783இல் கர்னல் புலர்டன் தலைமையில் படை வந்து மேலூர், சிவகங்கை, நெல்லை பகுதிகளில் தலை தூக்கிய கலகத்தை அடக்கி அமைதியை நிலைநாட்டியது. கி.பி. 1801இல் ஆர்க்காட்டு நவாபிடம் ஏற்பட்ட உடன்படிக்கை யின்படி தமிழகம் முழுவதும் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது.

## ஜோகன் பிளாக்பர்னின் பங்களிப்பு

இவர் கி.பி. 1834 - 1842 வரை மதுரை மாவட்ட ஆட்சியாளராகப் பணியாற்றினார். இன்றைய மதுரையின் நகரமைப்புக்குப் பெருந்தொண்டாற்றியவர் இவரே. மதுரை நகரில் பாண்டியர் கால அகழியும், நாயக்கர் காலக் கோட்டையும் அழிக்கப்பட்டு நிரவப்பட்டது இவரால் தான். கோட்டையும் அகழியும் இடித்து நிரவப்பட்டு இன்றைய வெளிவீதிகளாகப் பரிமாணம் பெற்றன. மாரட் வீதிகளும், பெருமாள் மேஸ்திரி வீதிகளும் அமைந்தன. மாரட் என்பவர் அளவை அலுவலர். பெருமாள் அவருக்கு உதவிய மேஸ்திரி. இவ்விருவர் பெயர்களிலும் தெருக்கள் அமைந்தன. இதனால் நாலாபுறமும் நகரம் விரிவடைந்தது. இடிக்கப்பட்ட கோட்டைக் கற்களால் வைகைக் கீழ்ப்பாலம் கட்டப்பட்டது. அரண்மனைப் பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட கல் யானை ஒன்று வைகைக் கீழ்ப் பாலத்தின் அருகில் நிறுவப்பட்டது. இதுவே இன்றைய யானைக்கல்

என்பர். பிளாக்பர்னின் அரும்பணிகளைப் பாராட்டி அவர் நினைவாக ஒரு விளக்குத் தூண் நிறுவப்பட்டது. இன்றைய தெற்குமாசி வீதியும், கீழமாசி வீதியும் சந்திக்கும் இடத்தில் அமைக்கப்பட்ட இவ்விளக்குத் தூணின் கீழ் எழுதப்பட்ட கல்வெட்டு இன்று மண்ணுக்குள் புதைந்துள்ளது.

# வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள்

# 13. மதுரை

## மீனாட்சி அம்மன் கோவில்

உலகம் ஒரு நிறையாத் தானோர் நிறையாப்
புலவர் புலக்கோலால் தூக்க – உலகனைத்தும்
தான்வாட வாடாததன்மைத்தே தென்னவன்
நான் மாடக் கூடல் நகர்

என்பது புறத்திரட்டில் காணும் ஒரு பாடல். இத்தகு மிகு புகழுக்கும் மேன்மைக்கும் பல காரணங்கள் இருப்பினும் இந்நகரில் அமைந்துள்ள எழில்மிகு மீனாட்சி ஆலயமும் ஒரு காரணமாக இருக்கலாம். உலகத்து சுற்றுலாப் பயணிகளையும் உள்நாட்டு உள்ளூர் பக்தர்களையும் பரவசப் படுத்தும் ஒரு மாபெரும் வரலாற்றுக் கலைக் கருவூலமாக இக்கோயில் திகழ்கிறது. இதற்கென்று நீண்ட வரலாறும் உண்டு.

கடம்ப மரங்கள் நிறைந்த வனப் பகுதியில் சுயம்பு லிங்கம் ஒன்றைக் கண்ட இந்திரன் தெய்வத் தச்சனாகிய மயனின் உதவி கொண்டு இந்திர விமானத்தை உண்டாக்கியதாகப் பழங்கதை கூறுகிறது. இது வெறும் கற்பனை என்றே வரலாற்றாய்வாளர்கள் கொள்வர். மதுரைக் காஞ்சி என்னும் சங்க இலக்கியம் மழுவேந்திய இறைவனின் தலைமையில் பல தெய்வங்களின் வீதி உலா தினமும் நடைபெறும் எனக் கூறுவது கொண்டு சங்க காலத்திலேயே மதுரையில் நிறுவனப்படுத்தப்பட்ட ஒரு கோயில் இருந்தது என்பதை அறியலாம். ஆனால் அன்றைய கோயில் இன்று காணும்படியாக இல்லை.

கி.பி. 7ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் மதுரைக்கு வந்த திருஞானசம்பந்தர் தனது மதுரைப் பதிகத்தில் இங்குள்ள கோயில் இறைவனை ஆலவாய் இறைவன், ஆலவாய்ச் சொக்கன், ஆலவாய் தம்பிரானார் என்று விளித்துப் பாடுகிறார். இதன் மூலம் மதுரையின் ஒரு பகுதி ஆலவாய் எனப் பெயர் பெற்றது என்றும் அறியலாம். ஹாலஸ்ய சேத்திரம் என்பது ஆலவாய் என்பதன் வடமொழி வடிவமே. இக்கோயில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் மிகச் சிறியதாகவும் கருவறை, அர்த்த மண்டபம் ஆகிய அடிப்படை அங்கங்களைக் கொண்டும் கட்டப்பட்டிருக் கலாம். இங்குள்ள பிற்காலப்பாண்டியர் கல்வெட்டுகளில் கூட கோயில் இறைவனின் பெயர் திரு ஆலவாயுடைய நாயனார் என்றே குறிப்பிடப்படுகிறது. முற்பாண்டியர் காலக் கல்வெட்டுகளோ, கற்சிற்பங்களோ தெய்வ உருவங்களோ இக்கோயிலில் இல்லாதது இது பலமுறை மாற்றிக் கட்டப்பட்ட கோயில் என்பதை உறுதிப் படுத்துகிறது.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு இலக்கியமான கல்லாடம் மதுரைக் கோயிலையும் அங்கு நடந்த 30 லீலைகளையும் (திருவிளையாடல்கள்) பற்றிக் கூறுகிறது. இது எட்டு யானைகள் தாங்கும் இந்திர விமானத்தைக் கூறுவதுடன், உமையுடன் உறையும் இறைவனை மூலகாரணன் என்றும் குறிப்பிடுகிறது.

தேவாரப் பாடல்களில் இறைவியின் பெயர் அங்கயற் கண்ணி என்றே கூறப்படுகிறது. இதன் சமஸ்கிருதப் பெயரே மீனாட்சி என்பது. இடைக்கால பாண்டியர் கல்வெட்டுகள் இத்தேவியைத் திருக்காமக் கோட்டத்து ஆளுடைய நாச்சியார் என்று குறிப்பிடுகின்றன. இதுவே அன்று மீனாட்சி அன்னையின் பெயராக வழங்கப்பட்டுள்ளது. கிறித்தவக் கழகப் பாதிரியார்களின் குறிப்புகளிலும் கூட சொக்கநாதர் கோயில் என்றே சுட்டப்பட்டிருக்கிறது. சுந்தரேசுவரர் எனும் சமஸ்கிருதப் பெயர் மிகவும் பிற்காலத்தியதே. கோயில் ஸ்தல புத்தகத்திலும் திரு

ஆலவாயுடைய தம்பிரானார் கோயில் என்ற குறிப்பையே காண்கிறோம்.

கல்லாடத்தில் இடம்பெறும் 30 திருவிளையாடல்கள் பற்றிய செய்திகள் சார சமுச்சயம் என்னும் வடமொழி நூலைத் தழுவி எழுதப்பட்டவை ஆகும். கி.பி. 13 ஆம் நூற்றாண்டளவில் பெரும்பற்றப் புலியூர் நம்பியால் ஒரு திருவிளையாடற்புராணம் எழுதப்பட்டது. அடுத்து கி.பி 17ஆம் நூற்றாண்டில் பரஞ்சோதி முனிவரால் ஒருதிருவிளையாடல் புராணம் எழுதப்பட்டுள்ளது.

மதுரைத் தலவரலாறு, ஸ்தல புத்தகம், மதுரை ஸ்தானிகர் வரலாறு, மதுரை திருப்பணி மாலை ஆகியவற்றின் மூலம் கோயிலின் திருப்பணிகள், இஸ்லாமியர் படையெடுப்பால் ஏற்பட்ட சேதங்கள், தடைப்பட்ட பூசைகள் ஆகியவற்றை அறிய முடிகிறது. அதன்படி முதன் முதலாகக் குலசேகர பாண்டியன் காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. பழங்கதைகளின்படி இந்திரனால் கட்டப்பட்டது என்ற போதிலும் கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்கம் முதல் அதாவது சங்க காலம் முதல் இக்கோயில் இருந்தது எனலாம். ஆனால் சங்க காலப் பாண்டிய மன்னர்களில் குலசேகர பாண்டியன் என ஒருவரும் குறிப்பிடப் படவில்லை. எனவே குலசேகர பாண்டியனால் சங்க காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டது எனல் பொருந்தாது.

இங்குள்ள கல்வெட்டுகளிலேயே தொன்மையானது என்னும்படி முதலாம் ஜடாவர்மன் குலசேகரன் (1190-1216) கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. இதில் மீனாட்சி அம்மன் கோயில், திருக்காமக் கோட்டமுடைய ஆளுடைய நாச்சியார் எனப் பெயர் குறிப்பிடப்படுகிறது. எனவே இந்தக் குலசேகர மன்னன் காலத்தில் தான் மீனாட்சி அம்மனுக்கென்று தனிக் கோயில் சிவனுக்கு இணையாகக் கட்டப்பட்டது எனலாம். அதற்கு முன்பாக அம்மனும்

பரிவார தெய்வங்களில் ஒன்றாக வைத்தே வழிபடப் பட்டிருக்கவேண்டும். இதுவே தமிழகம் எங்கும் காணப்படும் நிலை. எடுத்துக்காட்டாக முதல் கட்டுமானக் கோயில் என எண்ணத்தகும் காஞ்சி கைலாச நாதர் கோயிலிலோ, மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலிலோ அம்மனுக்கெனத் தனிக் கோயில் இல்லை. தென்னக மேரு என உயர்ந்து நிற்கும் தஞ்சைப் பெருங் கோயிலிலும் அம்மனுக்கெனத் தனிக் கோயில் இராசராசனால் கட்டப்பெறவில்லை. அவனுக்கு 200 ஆண்டுகட்குப் பிறகே பெரிய நாயகி அம்மனுக்குத் தனிக் கோயில் கட்டப்பட்டது. எனவே மேற்சொன்ன கல்வெட்டிலும் குலசேகரன் கட்டியதாக ஸ்தல வரலாறு கூறுவதும் மீனாட்சிக்கான தனிக் கோயிலையே எனலாம்.

பொதுவாக தமிழகக் கோயிற் கட்டடக் கலையைப் பல்லவர், பாண்டியர், சோழர், விசயநகரர், நாயக்கர், பாணிகளாக வகைப்படுத்துவர். மதுரை பாண்டிய நாடாகையால் இங்குள்ள கட்டடக் கலையைத் தொடக்கத்தில் பாண்டியன் கலையாகவும், பின்னர் விசயநகரர் நாயக்கர் பாணியாகவும் அமைந்ததாகக் கருதலாம். ஆனால் என்ன காரணத்தாலோ முற்பாண்டியன் கலைப்பாணியின் எச்சங்கள் எதுவும் தற்போதைய மீனாட்சி கோயிலில் இல்லை. சுந்தரேசுவரர் சன்னதியின் நுழைவாயிலுக்கு அருகில் உட்புறம் கிழக்குத் திருச்சுற்றில் உள்ள ஒரு சூரியனார் சிற்பம் மட்டுமே கி.பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பாண்டியர் கலை அம்சத்துடன் உள்ளது. மற்றவை அந்நியர் படை எடுப்பாலோ, திருப்பணியின் போது மக்களின் அறியாமையினாலோ சேதமுற்று மாற்றப்பட்டு இருக்கலாம்.

தற்போதைய கட்டட அமைப்பு பெரும் பகுதியும் கி.பி. 15-16ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் ஏற்பட்டவையாகும். கி.பி. 1311இல் மாலிக்காபூர் படையெடுப்பின் போது மீனாட்சி அம்மன் சன்னதியும் சொக்கநாதர் சன்னதியும் (கருவறை) மண்ணால் மூடப்பட்டு அர்த்த மண்டபத்தின்

*முன்பாகச் சுவர் எழுப்பப்பட்டமையும் பின்னர் வழிபாட்டிற்கு வந்தமையும் வரலாற்றுப் பின்னணியில் ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளது.*

*விஜயநகர ஆட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து அழிவுக் குள்ளான கோயிலின் பல பகுதிகளும் புதுப்பிக்கப்பட்டன. அதன் காரணமாகவே இன்றைய பல மண்டபங்களும் தூண்களும் விசயநகரக் கலைப் பாணியுடன் திகழ்கின்றன. இன்றைய நிலையில் கிழக்குக் கோபுரமே காலத்தால் பழமையானதாகும். இதில் கல்காரம் வரை முதலாம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியனால் கட்டப்பட்டதாகும் இங்குள்ள கல்வெட்டுகள் இதனை 'சுந்தரபாண்டியன் திருக்கோபுரம்', 'அவனிவேந்த ராமன் திருக்கோபுரம்' எனத் தெரிவிக்கின்றன. அவனிவேந்தராமன் என்பது முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் சிறப்புப் பெயராகும். இக்கோபுரத்தின் இரண்டாம் நிலையில் உள்ள தூண்களில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1216) முதலாம் சடாவர்மன் குலசேகரன் (கி.பி. 1190) ஆகியோரின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. எனவே குலசேகரனால் கோபுரப் பணி தொடங்கப்பட்டு ஜடா. சுந்தரபாண்டியனால் முடிக்கப்பட்டது எனக் கருதலாம்.*

*அடுத்த பழமை வாய்ந்த கோபுரம் மேற்குக் கோபுரம் ஆகும். இது கி.பி. 1323 ஆம் ஆண்டில் பராக்கிரம பாண்டியனால் கட்டப்பட்டதாகும். கோபுரத்தின் உட்சுவரில் உள்ள ஒரு பாடல் கல்வெட்டு இதனை உறுதிப்படுத்துகிறது. தெற்குக் கோபுரம் சிராமலை செவ்வந்தி செட்டியால் 1478இல் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இக்குடும்பத்தினர் மதுரைக் கோயிலுக்குப் பல அறச் செயல்களைச் செய்துள்ளனர். வடக்குக் கோபுரம் வீரப்ப நாயக்கரால் 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இவரே கம்பத்தடி மண்டபத்தையும் கட்டியவர். பெரிய அளவில் உள்ள வீரபத்திரர் ஊர்த்துவ தாண்டவச் சிற்பங்கள் இவர் பணியே. மொட்டைக்*

கோபுரம் என்றழைக்கப்படும் வடக்குக் கோபுரம் வயிநாகரம் நகரத்தாரால் கி.பி. 19ஆம் நூற்றாண்டில் புதுப்பித்துக் கட்டப்பட்டது. கம்பத்தடி மண்டபத்தின் நடுவில் உள்ள சிவமூர்த்த சிற்பங்களும் இவர்களால் அமைக்கப்பட்டவை.

இன்று மக்கள் அதிகமாக கிழக்கு நுழைவாயிலாகப் பயன்படுத்தும் அ டசக்தி மண்டபம் திருமலை நாயக்கரின் தேவியர் தோணி, ருத்ரா ஆகியோரால் கட்டப்பட்ட தாகும். அதற்கு எதிரில் உள்ள நகரா மண்டபம் மங்கம்மாளின் பணியாகும். இதில் ஒரு தூணில் மங்கம்மாளும் அவர் பேரன் விஜயரங்கசொக்க நாதரும் சிற்பமாக வடிக்கப் பட்டுள்ளனர்.

மொத்தம் 12 கோபுரங்களும் இரண்டு விமானங்களும் கொண்டு பொலிவுடன் திகழும் இக்கோயில் விசயநகர வேந்தர் மற்றும் மதுரை நாயக்கர் காலக் கட்டடக் கலைக்கும் சிற்பக் கலைக்கும் சிறந்த எடுத்துக் காட்டாய்த் திகழ்கின்றது.

கோபுர நிலைக் கால்களில் அமைக்கப்பட்டுள்ள கங்கை, யமுனை என்னும் நதி தேவதைகள் கொடிப் பெண்களாக வடிக்கப்பட்டுள்ளனர். நன்கு வளர்ச்சி பெற்ற நாகபந்தம். நன்கு வளைந்த பூமுனை போதிகை, யாளி சிற்பங்களுடன் கூடிய கூட்டுத் தூண்கள் ஆகியவையும், விமான அதிட்டானங்களில் காணப்படும் கடகவிருத்த குமுதமும் சிலம்பு குமுதமும், வர்க்க பேதங்காட்டும் பாங்கும் நாயக்கர் கலைக்குரிய சிறப்புத் தன்மைகளாகும். இவை இங்குள்ள பல கட்டுமானங்களிலும் காணப் படுகின்றன.

ஆயிரங்கால் மண்டபம் தளவாய் அரியநாத முதலியாரால் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட தாகும். கம்பத்தடி மண்டபம் 1583இல் கட்டப்பட்டுள்ளது.

இங்குள்ள வீரபத்திரர், காளி சிற்பங்களும் ஆயிரக்கால் மண்டபத்திலுள்ள சிற்பங்களும் நாயக்கர் சிற்பங்களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகள் ஆகும். திரட்சியான சதைப் பற்றும் விரிந்த அகன்ற மார்பும் கூர்மையான நாசியும் அசாதாரணமான (சுமார் 9-10 அடி) உருவ அமைதியும் அதிபங்கம் என்னும் வகையில் அதிகமான வளைவு நெளிவுகளும் நாயக்கர் சிற்பங்களுக்கே உரியவை. மேலும் நாட்டுப்புற கதைமாந்தர்கள், நாட்டுப் புற மக்களையும் கலை வடிவங்களாகக் காட்டும் முயற்சியும் நாயக்கர் காலத்தில் ஏற்பட்டது. அதன்படி அரிச்சந்திரன், சந்திரமதி, பாம்புப் பிடாரன், குறவன், குறத்தி ஆகியோரின் சிற்பங்களும், ஆயிரங்கால் மண்டபத்தில் இடம் பெற்றுள்ளன. இசைத் தூண்கள் என்னும் கூட்டுத் தூண் அமைப்பும் நாயக்கர் கலை மரபின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஒரே கல்லில் விட்டம் மாறுபாடு கொண்ட பல சிறு தூண்களை வடிக்கும் போது அவற்றைத் தட்டினால் மாறுபட்ட ஒலிகள் வெளிப்படுவது அறிவியல் உண்மை. இதனையே இசைத் தூண்கள் என்பர். மதுரைக் கோவிலில் ஆயிரங்கால் மண்டபத்திலும், வடக்கு கோபுரத்தின் அருகிலும் இத்தகைய தூண்களைக் காணலாம்.

இங்குள்ள பொற்றாமரைக் குளம் வரலாற்றுச் சிறப்புக்குரியதாகும். இங்கு தான் சங்கப் பலகை இருந்தது. புலவர்கள் தங்கள் புதிய இலக்கியங்களை இங்கு அறங்கேற்றுவர் என்று கூறுவதுண்டு. ஆனால் ஒவ்வொரு சிவன் கோயிலிலும் சிவகங்கை எனும் தீர்த்தம் அமைக்கப்படுவதுண்டு. அவ்வகையில் அமைந்த இக்குளத்திற்கு வைகையிலிருந்து நிலத்தடியில் சுருங்கை வழியாக கி.பி. 1688 வரையிலும் நீர் வந்ததாகத் தெரிகிறது.

புதுமண்டபம், திருமலை நாயக்கரால் கட்டப்பட்டது. அதனையும் உள்ளடக்கி மிகப் பெரியதாகக் கட்டத் துவங்கிய ராயகோபுரம் முற்றுப் பெறாமல் நின்றுவிட்டது.

இப்படிப் புராண, இலக்கியப் பெருமைகளாலும், கட்டடச் சிற்பக் கலைச் சிறப்புகளாலும் உலகளாவிய புகழ் பெற்ற மீனாட்சி அம்மன் ஆலயம் தூங்கா நகரமானதும், தமிழகத்தின் கலாச்சாரத் தலைநகர் எனும் பெருமை கொண்ட மதுரைக்குக் கிடைத்த அரிய கலைக் கருவூலமாகும்.

## கூடலழகர் திருக்கோயில்

மதுரை நகரில் சங்க காலத்திலேயே திருமால் கோயில் ஒன்று இருந்தது என்பதனை மதுரைக் காஞ்சி மூலம் அறியலாம். 'மாயோன் மேய ஓண நன்னாள்' என வரும் அடியால் திருமாலுக்கு திருவோண நாளில் விழா எடுக்கப்பட்டதை அறிகிறோம். திருமாலே 'துவரைக் கோமான்' எனும் பெயரில் சங்கப் புலவராக வீற்றிருந்ததாகவும் மதுரைக் காஞ்சியின் ஆசிரியர் மாங்குடி மருதனார் குறிப்பிடுகிறார். மதுரைக்குக் கூடல் என்று ஒரு பெயரும் உண்டு. எனவே இங்குள்ள திருமால் கூடல்அழகர் எனப்பட்டார். பரிபாடல் குறிப்பு ஒன்று கூடல் அழகரை 'இருந்தையூர் அமர்ந்த செல்வ' என்று விளிக்கிறது. இங்கு அழகர் இருந்த கோலத்தில் உள்ளதால் இருந்தாவூர் என்பது பின்னாளில் இந்தையூர் ஆனது போலும்.

சிலப்பதிகாரம் மாதரி என்னும் இடைக்குல மடந்தை ஆய்ச்சியர் குரவை முடிந்ததும் வையைக் கரையில் உள்ள திருமாலை வழிபடச் சென்றாள் என்பதை,

> நீடு நீர் வையை நெடுமால் அடியேத்தித்
> தூவித்துறை படியப் போயினாள்

என்ற அடிகளில் காண்கிறோம். இங்குக் குறிப்பிடப்படும் வையை என்பது வையையின் கிளையாயன கிருதமாலை நதியாகலாம். கிருதாமாலை நதி அண்மைக்காலம் வரை நீர்ப்பெருக்கொடு கூடலழகர் கோயிலுக்குத் தெற்கில் ஓடியது. தற்போது வற்றி கழிவுநீர் ஓடையாகிவிட்டது. இப்பகுதியே இருந்தையூராகும். இருந்தையூர் கருங்கோழி

மோசி எனும் சங்கப்புலவர் ஒருவரை இறையனார்களவியல் உரையில் நக்கீரர் குறிப்பிட்டிருக்கிறார். முற்காலப் பாண்டியன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் காலத்தில் பெரியாழ்வார் இக்கோவிலுக்கு வந்து சமயவாதில் வென்று பொற்கிழி யறுத்தார் என்று கூறப்படுவதுண்டு.

திருமங்கையாழ்வார் இக்கோயிலைக் குறித்துக் 'கோழியும் கூடலும் கோயில் கொண்ட கோவலரே' எனப் பாடியுள்ளார். இராமனுஜரும் இக்கோயிலைக் கண்டு சென்றுள்ளார். மதுரைக்கு அருகில் உள்ள குந்தி நகரத்தில் (கொந்தகை) 1307இல் பிறந்தவர் திருவாய்மொழிப்பிள்ளை என்பவர். இஸ்லாமியர் படை எடுப்பின் போது இக்கோயிலைக் காத்தவர். அமைச்சர் பதவியைத் துறந்தும் இறைத்தொண்டு புரிந்தவர். இவரது சீடரே மணவாள மாமுனிகள். இவரும் இக்கோயிலைக் கண்டு வழிபட்டுப் பாடியுள்ளார். மணவாள மாமுனிகளின் திருவடித் தொண்டனான மாவலிவாணாதிராயன் ஒருவன் இக்கோயி லுக்கும், திருமாலிருஞ்சோலை, திருமோகூர் ஆகிய கோயில்களுக்கும் திருப்பணிகள் பல செய்துள்ளான். இக்கோயிலுள்ள இராமர், சீதை, இலக்குவன் ஆகிய செப்புத்திருமேனிகள் முற்காலப்பாண்டியர் காலத்தைச் சேர்ந்தவையாக (கி.பி. 10 ஆம் நூற்றாண்டு) இருப்பதைக் கொண்டும் இக்கோயில் தொன்மையானது என்பதை உறுதிப்படுத்தலாம்.

ஆனால் இக்கோயிலின் தற்போதைய கட்டுமானம் முற்றிலும் கி.பி. 15-16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகவே உள்ளது. இக்கோயில் விமானம் எட்டு உறுப்புகளைக் கொண்டது என்பதால் வடமொழியில் இதனை அ டாங்க விமானம் எனக் கூறுவர். அதி டானம், பித்தி, பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி என்னும் இயல்பான ஆறு அங்கங்களுடன் இரண்டு மேல்தளங்களையும் சேர்த்து அட்டாங்க விமானம் என்பர். இவை அனைத்தும் திருமால் கோயில்களிலேயே காணப்படும். திருமாலின் இருந்த, நின்ற, கிடந்த கோலங்களைக் காட்டுவதற்காகவே இவை

அமைக்கப்படும். பாண்டிய நாட்டில் கூடல்அழகர், திருக்கோட்டியூர், மன்னார்கோயில் ஆகிய ஊர்களிலும், பல்லவநாட்டில் காஞ்சிபுரம் வைகுந்தப் பெருமாள் உத்திரமேரூர் ஆகிய ஊர்களிலும் அட்டாங்க விமானக் கோயில்கள் அமைந்துள்ளன.

இக்கோயிலும் இஸ்லாமியர் படை எடுப்பின்போது அழிவுக்குட்பட்டிருக்கலாம். ஏனெனில் இன்று பழமையான கட்டுமானப் பகுதிகள் எவையும் காண முடியவில்லை. இன்றைய கட்டுமானங்கள் 16ஆம் நூற்றாண்டில் தோன்றியவையே. இங்குள்ள கல்வெட்டுகளும் இதையே உறுதிப்படுத்துகின்றன. இக்கோயிலின் திருச்சுற்றுச் சுவரில் உள்ளும் புறமும் சுமார் 50க்கும் மேற்பட்ட துண்டுக் கல்வெட்டுகள் உள்ளன. இவை யாவும் கி.பி. 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. சோழவந்தான், தேனூர் பகுதிகளில் சிதைந்து கிடந்த சிவன் கோயில் கற்களைக் கொண்டுவந்து இங்குக் கட்டியுள்ளனர். இதில் பிற்காலப் பாண்டியர் மெய்க்கீர்த்திப் பகுதிகளும் சில அரசியல் அதிகாரிகளின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

கோயில் விமானத்தின் அதிட்டானப் பகுதியில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுகள் விசயநகர மன்னர் சதாசிவராயர் (கி.பி. 1542-70) காலத்தவை. இவர் காலத்தில் தென்மண்டல அதிபதியாக இராமராசவிட்டல மகாதேவ ராயர் விளங்கினார். அவரின் கீழ் அதிகாரியாயிருந்த வசவணரின் மகன் திம்மப்பநாயக்கர் தனது தலைவர் இராமராசவிட்டலர்க்குப் புண்ணியமாக கூடலழகர் கோயில் வழிபாட்டுச் செலவுகளுக்கு மதுரைப் பகுதியில் சில கிராமங்களை விடுத்துள்ளார். இதன்படி பெருங்குடி, இரட்டைக்குளம், வண்ணானேந்தல், குமுழங்குளம், முதலிய ஊர்களும் அவனிநாராயணபுரத்து உட்கிடையான சிந்தாமணி, மட்டப்பாறைக்கு அருகில் முள்ளிப்பள்ளம், திருப்புவனம் அருகில் பில்வாய்க்கரை, அல்லிகுளம், [illegible] ண்டுகுளம், பசுமண்குளம் ஆகியவை தானமாக அளிக்கப்பட[illegible]

கூடலழகர் கோயில் அர்த்தமண்டபத்ினை திம்மப்ப நாயக்கர் காலத்தில் வாழ்ந்த கந்தாடைகோனமன் என்பவர் கட்டினார். கந்தாடை அண்ணனுக்குப் புண்ணியமாக கோனமன் இப்பணியை முடித்தான். கருவறை நிலைவாயிலின் திருப்பணியை இதே காலத்தில் நவமாணிக்கம் அலங்காரபட்டம் நிறைவேற்றினார். மகாமண்டபத்து நிலைவாயில் பணியை அண்டநாட்டுப் பெருமண நல்லூரில் இருந்த அழகர் தெய்வச் சிலைப் பெருமாள் என்பவர் செய்து முடித்தார். இவ்வூர் இன்று மதுரை திருப்புவனம் இடையில் அமைந்த மணலூரே ஆகும்.

கி.பி. 1740ல் ஆர்க்காட்டு நவாப் மற்றும் சந்தாசாகிப் ஆகியோரால் மதுரை கைப்பற்றப்பட்ட போது மீனாட்சி சுந்தரேஸ்வரரையும், கூடலழகரையும் வானரவீர மதுரை என்னும் மானாமதுரைக்கு பக்தர்கள் பாதுகாப்பாகக் கொண்டு சென்றனர். சேதுபதியின் பாதுகாப்புடன் இரண்டாண்டுகள் அங்கு வழிபாடு செய்யப்பட்டது. பின்னர் மராத்திய ஆளுநர் முராரிராவ், அப்பாச்சி நாயக்கர் தலைமையில் படை அனுப்பி சேதுபதியின் இசைவுடன் இறைவரை மதுரைக்குக் கொண்டு வந்து அமைத்து குடமுழுக்குச் செய்வித்தனர்.

இவ்வகையில் மீனாட்சி கோயிலுக்கு இணையான வரலாற்றுப் பெருமையும் இலக்கியச் சிறப்பும் கொண்ட கூடலழகர், பல ஏற்றத் தாழ்வுகளைச் சந்தித்த போதும் இன்றும் நிலைத்து நின்று அருள்பாலிக்கிறார்.

## திருமலை நாயக்கர் மகால்

மதுரை மாநகரின் சிறப்புகளுள் ஒன்று திருமலை நாயக்கர் மகால். மதுரை நாயக்கர் மரபின் ஏழாவது மன்னன் திருமலை நாயக்கர். கி.பி. 1623 முதல் 1659 வரை மதுரையை ஆண்டார். அவர் காலத்தில் திருச்சியிலிருந்த தலைநகரம் மதுரைக்கு மாற்றப்பட்டதால் மாபெரும் அரண்மனை ஒன்றை அவர் இங்குக் கட்ட விரும்பினார். இத்தாலியக் கட்டடக்கலை வல்லான் ஒருவனின் உதவியுடன்

ஏழு ஆண்டுகள் உழைத்து 1636இல் இவ்வரண்மனை கட்டி முடிக்கப்பட்டது எனக் கூறப்படுகிறது. முதலில் தற்போதுள்ளது போல நான்கு மடங்கு பெரியதாக இருந்தது என்பர். திருமலையின் தம்பி சொக்கநாத நாயக்கர் மீண்டும் தலைநகரைத் திருச்சிக்கு மாற்றினார். எனவே இவ்வரண்மனைப் பொலிவிழந்தது. சில பகுதிகளை இடித்துத் திருச்சிக்கு எடுத்துச் சென்றார் என்றும் கூறுவதுண்டு.

இவ்வரண்மனை சொர்க்கவிலாசம், ரங்க விலாசம் எனும் இருபெரும் பகுதிகளாக அமைந்திருந்தது. சொர்க்க விலாசம் என்பது தர்பார் மண்டபம், அமைச்சகம், அலுவலர் அறைகள் ஆகியவைகளைக் கொண்டதாகவும், ரங்க விலாசம் மற்ற குடியிருப்புப் பகுதிகளைக் கொண்டதாகவும் இருந்தது.

ஆண்டுதோறும் சித்திரைத் திருவிழாவின் எட்டாம் நாளில் திருமலை மன்னர் மீனாட்சி அம்மைக்குக் கோயிலில் முடி சூட்டு விழா நடத்தி அம்மனிடமிருந்து செங்கோல் பெற்று யானை மீது வைத்து வீதி உலாவாகக் கொண்டு வருவார். அரண்மனையில் சொர்க்க விலாசத்தில் அலங்காரித்த சிம்மாசனத்தில் செங்கோலைச் சார்த்தித் தான் கீழே அமர்வார். மறுநாள் பூசையுடன் செங்கோல் மீண்டும் கோயிலுக்குக் கொண்டு செல்லப்படும். அம்மையின் நேரடிப் பிரதிநிதியாகத்தான் மதுரையை ஆள்வதாக மன்னர் கருதினார். நவராத்திரி விழா ஒன்பது நாட்கள் இவ்வரண்மனையில் சிறப்பாக நடைபெற்றது.

தற்போது மக்கள் பார்வைக்கு எஞ்சியுள்ள பகுதியில் தர்பார் மண்டபமும் நாடகசாலையும் முக்கியமானவை. அரசகுடும்பத்தினர் தினமும் மாலை வேளைகளில் பலவித கலை நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கும் இடம் நாடகசாலை. அந்தப்புரம், ஆயுதசர்லை, வசந்தவாவி, மலர்வனம், சந்திரிகை மேடை, ஆகிய பகுதிகள் அழிந்துவிட்டன.

அரண்மனையின் வாயில் வடகிழக்கில் நவபத்கானா தெருவில் அமைந்திருந்தது. அரசு மரியாதையுடன் வரும்

*விருந்தினர்கள் இவ்வாசல் வழியே 18வகை இசைக்கருவிகள் முழங்க பல்லக்குகளில் அழைத்து வரப்படுவர். அதற்கான பல்லக்கு மண்டபங்களும் வாயில் அருகிலேயே இருந்தன.*

*இவ்வரண்மனையைச் சுற்றிலும் 900 அடி நீளமும், 660 அடி அகலமும் 40 அடி உயரமும் உடைய பாரிமதிள் என்னும் சுற்றுச்சுவர் இருந்தது. கி.பி. 1837இல் பெருமழையின் காரணமாக இச்சுவர் இடிந்தது. 1868இல் சென்னை மாநிலத்தின் ஆளுநராக இருந்த நேப்பியர் பிரபுவின் முயற்சியால் இவ்வரண்மனை 5,13,000 ரூபாய் செலவில் பழுதுபார்க்கப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் படைகள் தங்குமிடமாகவும், காகித ஆலையாகவும் நெசவுப் பட்டறையாகவும் செயல்பட்டது. கி.பி. 1970 வரையில் இங்கு இராமநாதபுரம், மதுரை மாவட்ட நீதிமன்றங்கள் செயல்பட்டன. அதன்பிறகு தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை இதனை வரலாற்றுச் சின்னமாக அறிவித்துப் பராமரித்து வருகிறது.*

*அண்மையில் 1997இல் 53 லட்சம் ரூபாய் செலவிலும் 2004இல் ஒரு கோடி ரூபாய் செலவிலும் பராமரிக்கப் பட்டுள்ளது. பார்வையாளர்கள் தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அனுமதிக்கப்படுகின்றனர். அனுமதிக் கட்டணமாக இந்தியர் பெரியவர்க்கு ரூ. 10ம், சிறியவர்க்கு ரூ. 5ம், வெளிநாட்டினர்க்கு முறையே ரூ. 50, ரூ 25ம், வசூலிக்கப்படுகின்றன. நாடகசாலையில் அகழ்வைப் பகம் ஒன்று செயல்பட்டு வருகிறது.*

*தினமும் மாலை நேரத்தில் தமிழகச் சுற்றுலாத் துறை யினரால் ஆங்கிலத்திலும் தமிழிலும் மதுரை வரலாற்றைப் பிரதிபலிக்கும் ஒலிஒளிக் காட்சி நடத்தப்படுகிறது. இதற்குக் கட்டணமாக முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு என ரூ. 10ம் ரூ 5ம் வசூலிக்கப்படுகின்றன.*

# 14. மதுரை தெற்கு வட்டம்

## திருப்பரங்குன்றம்

மதுரை நகரின் தென்பகுதியில் விருதுநகர் செல்லும் சாலையில் எட்டு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது திருப்பரங்குன்றம். முருகனின் அறுபடை வீடுகளுள் ஒன்றாக இது கருதப்படுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே இவ்வூர் வராற்றுச் சிறப்பு பெற்று விளங்குகிறது.

சமணத்துறவியர் வாழ்ந்த இயற்கையான குகைத் தளங்கள் திருப்பரங்குன்றம் மலையில் உள்ளன. அவர்கள் தங்கியிருந்தமைக்கு அடையாளமாகக் கற்படுக்கைகள் இங்குள்ளன. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழ் - பிராமி எழுத்துக்களில் வெட்டப்பட்ட கல்வெட்டுகளும் இச்சமணர் குகைத்தளத்தில் காணப்படுகின்றன.

1. அந்துவன் கொடுபிதவன்
2. எருக்காடூர் ஈழக்குடும்பிகன் போலாலயன்
   செய்த ஆய்சயன நெடுசாதன
3. மாரயது கயம்

என்பவை தமிழ்க் கல்வெட்டுகளாகும். இக்கல்வெட்டு களில் ஒன்று கி.மு. 2-1ஆம் நூற்றாண்டையும் மற்றொன்று கி.பி. 1-2ம் நூற்றாண்டையும் சேர்ந்தவையாக இருக்கலாம் எனத் தொல்லியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். 'அந்துவன்' எனும் பெயர் சங்கப்புலவர்கள் சிலருக்கு இருந்துள்ளது. 'எருக்காடூர்' என்பதும் சங்க காலத்தில் இருந்த ஓர் ஊரின் பெயர். எனவே இக்கல்வெட்டுகள் சங்க காலக் கல்வெட்டுகளே என்பதில் ஐயமில்லை.

*சங்க இலக்கியங்களான, அகநானூறு, கலித்தொகை, மதுரைக்காஞ்சி, பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகிய இலக்கியங்களில் திருப்பரங்குன்றம் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. சம்பந்தர், சுந்தரர் இருவராலும் பாடப்பெற்றுள்ள பாடல்கள் தேவாரப்பதியங்களில் இவ்வூர் பற்றி இடம் பெறுகின்றது. திருக்கோவையார் பாடிய மாணிக்கவாசகர் திருப்பரங்குன்றம் பற்றியும் பாடியுள்ளார். இது தவிர கல்லாடம், பெரியபுராணம், திருப்புகழ், கந்தபுராணம் போன்ற பிற்கால நூல்களிலும் திருப்பரங்குன்றம் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளது. திருப்பரங்கிரிப்புராணம் என்பது இத்தலத்தின் சிறப்பைக் கூறும் தலபுராணமாகும். இவ்வளவு இலக்கியச் சான்றுகள் திருப்பரங்குன்றத்தின் பெருமையைப் பறைசாற்றுகின்றன.*

## சில இலக்கிய குறிப்புகள்

ஒலிந்த பகன்றை விளைந்த கழனி
வன்கை வினைஞர் அரிபறையின் குரல்
தனிமழை பொழியுந்தன்பரங்குன்றிற்
கலிகொல் சும்மை யொலி கொளாயம் (மது. கா. 262 – 265)

ஒன்னாதார்க் கடந்தரூஉ முரவுநீர் மாகொன்ற
வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும் விரும்பார் கொல்
(பாலைக்கலி – 27)

ஆராக்கனை காமங்குன்றத்து நின்னொடு
மாரியிறுத்த கடவுளைக் கண்டாயோ (மருதக்கலி)

வளர்பூங்கோங்க மாதவியோடு மல்லிகைக்
குளிர்பூஞ்சாரல் வண்டறை சோலைப் பரங்குன்றம்
(சம்பந்தர்)

திங்களும் பாம்பும் நிகழ்கடை வைத்தோன் தேன்மொழி
பங்கினன் மேய நன்னகர் போலும் பரங்குன்றமே (சம்பந்தர்)

பரமர் திருப்பரங்குன்றில் சென்று பார்த்திபரோடு
புரமெரித்தார் கோயில் வலம் கொண்டு புகுந்து உள்ளிறைஞ்சி
(பெரியபுராணம்)

கறங்குகால் அருவிப் பரங்குன்றுடுத்த
பொன்னகர்க்கடல் சென்னியம் பிறையோன் (கல்லாடம்)

மணிமேற்குமரன் திருவளர் குமரன்
பேரணி உடுத்த நெடுநகர்க்கடல் (கல்லாடம் செய – 81)

செந்திலங் கண்டிக் கதிர்வேலா
வெண்பரங்குன்றிற் பெருமாளே (திருப்புகழ்)

*இன்று மக்களால் பெரிதும் போற்றி வழிபடப்படும் முருகன் கோயில் மலையின் வடக்குப் பகுதியில் உள்ளது. இது ஒரு குடைவரைக்கோயிலினுள் உள்ளதாகும். இது கி.பி. எட்டாம் நூற்றாண்டில் முற்காலப் பாண்டியர்களால் எடுக்கப்பட்டது இக்குடைவரை. இதே காலத்தில் மலையின் தென்பகுதியிலும் ஒரு குடைவரைக் கோயில் எடுக்கப்பட்டுள்ளது. அது சமணர் கோயிலாக இருந்திருக்கலாம். உமையாண்டார் கோயில் என்று இன்று வழங்கப்படும் இக்கோயில் கி.பி. 13ம் நூற்றாண்டில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனால் திருத்தி சிவன் கோயிலாகக் கட்டப்பட்டுவிட்டது என்பர்.*

*முதலில் சொன்ன மலையின் வடபகுதியில் உள்ள கோயில் சிவபெருமானுக்காக குடைவிக்கப்பட்ட குடைவரைக் கோயிலாகும். இக்குடைவரைக் கோயிலில் கிழக்கு நோக்கிய வகையில் சிவனுக்கும் மேற்கு நோக்கி திருமாலுக்குமாகக் கருவறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டுக்கும் இடைப்பட்ட மண்டபத்தில் விநாயகர், துர்க்கை, முருகன், ஆகிய தெய்வங்களின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. சிவன் கோயிலாக இருந்த இக்கோயிலில் சிறுதெய்வமாக இருந்த முருகனுக்கு அதிக முக்கியத்துவம் ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக முருகன் கோயில் என்றே இன்று பெயர் பெற்றுவிட்டது. கி.பி. 12 ஆம் நூற்றாண்டளவில் திருக்காமக் கோட்டம் என்னும் உமையம்மை கோயில் எடுக்கப்பட்டுள்ளது. கி.பி. 12-13ஆம் நூற்றாண்டு வரையிலும் சிவன் கோயிலாகவே பெருமை*

பெற்றிருந்த இது எக்காரணத்தாலோ மதுரை நாயக்கர் காலத்தில் முருகன் கோயில் என்றே நிலை பெற்றுவிட்டது.

இக்கோயில் கி.பி. 773 ஆம் ஆண்டில் பராந்தக நெடுஞ்சடைய வரகுணன் என்னும் பாண்டிய மன்னனின் படைத்தலைவன் (சாமந்தமன்) சாத்தன் கணபதி என்பவனால் திருத்துவிக்கப்பட்டது என்று இங்குள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு கூறுகிறது. அவனுடைய மனைவி நக்கன் கொற்றி என்பவள் துர்க்கைக்கும் ஜேஸ்டைக்கும் கோவில் எடுத்துள்ள செய்தியும் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. எனவே கி.பி. எட்டாம் நூற்றாண்டளவில் பாண்டியர் கலை மரபில் இக்குடைவரைக்கோயில் செய்விக்கப்பட்டது என்பது உறுதிப்படுகிறது.

எட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு 13 ஆம் நூற்றாண்டுவரை இக்கோயில் எவ்வித வரலாற்றுக் கல்வெட்டுகளும் காணப்பெறவில்லை. ஒருவேளை கோயில் திருப்பணிகளின்போது கல்வெட்டுகள் பல இடமாற்றம் பெற்றிருக்கலாம். கி.பி. 13ம் நூற்றாண்டில் பிற்காலப் பாண்டியர்கள் காலத்தில் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் இக்கோயில் பலவித வளர்ச்சியினைப் பெற்றுள்ளது.

நாயக்கர்கள் காலத்தில் இங்குப் பலமண்டபங்கள் கட்டப்பட்டுள்ளன. மண்டபத் தூண்களில் பல தெய்வீகச் சிற்பங்களும், அரசன், அரசியர் சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. நாயக்கர் காலத்தில் கோபுரமும் கட்டப்பட்டுள்ளது.

மலையின் தென்புரத்தில் உள்ள குடைவரைக் கோயிலும் கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இன்று உமையாண்டார் கோயில் என அழைக்கப்படுகிறது. சமணர் கோயிலாக இது முதலில் இருந்திருக்கலாம். கி.பி. 13ஆம் நூற்றாண்டில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் அவனது அரண்மனையில் தங்கியிருந்தபோது பிரசன்ன தேவர் என்பவரின் வேண்டுகோளின்படி இக்

கோயிலுக்கு கொடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவன் காலக் கல்வெட்டில் இக்கோயிலின் பெயர் 'சுந்தரபாண்டிய ஈஸ்வரமுடையார் கோயில்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அங்குள்ள பைரவர் முதலிய சில சிற்ப உருவங்கள் இக்கோயில் முன்பு சமணக் கோயிலாக இருந்தமையை உணர்த்தும் வகையில் உள்ளன.

வெள்ளையர் காலத்தில் அவர்கள் திருப்பரங்குன்றம் முருகன் கோயிலை மருத்துவமனையாகப் பயன்படுத்தி யுள்ளனர். அவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்தவும் கோயிலுக்கு அவர்களால் ஏற்பட்ட சீர்கேடுகளைக் களையவும் கோயில் பணியாளர்களும் ஊர்ப்பிரமுகர் களும் திரண்டு போராடினர். இதில் 'வயிராவிக்குட்டி' என்பவன் கோயில் கோபுரத்தின் மீது ஏறிக் கீழே விழுந்து உயிர் துறந்து எதிர்ப்புத் தெரிவித்தான். அவனுக்காக ஊரார் இரத்தக்காணியாக நிலம் கொடுத்தனர்.

இவ்வகையில் சங்க காலம் முதலே சிறப்புப்பெற்ற திருப்பரங்குன்றம் கோயில் பாண்டியர்கள் மற்றும் நாயக்கர் களின் பெரும் கவனத்திற்குள்ளாகி பெருங்கோயிலாக உருப்பெற்றது. சமணரும், சைவரும் ஒரே சமயத்தில் கோயில்கள் எடுப்பித்து வழிபட்டுள்ளனர். சிவன் கோயிலாகப் பரிணமித்த இக்குடைவரை பின்னர் முருகன் கோயிலாகப் பெருமை பெற்று இன்றும் மக்களால் பெரிதும் விரும்பி வழிபடத்தக்கத் தலமாக விளங்குகிறது. விழவுமலி மூதூர் என்பது இன்றைய திருப்பரங் குன்றத்திற்கு முற்றிலும் பொருந்தும்.

## மாடக்குளம்

இன்றைய மதுரை மாநகரின் மேற்கில் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது மாடக்குளம் கிராமம். இங்குள்ள பெரிய கண்மாயின் பெயரே மாடக்குளம் என்பது. ஊருக்கும் அப்பெயரே வழங்கலாயிற்று. பல

*பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகளில் மாடக்குளம் குறிக்கப்பட்டுள்ளது.*

*மதுரை நகரைக் குறிக்கும் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகளில் மதுரோதய வளநாட்டில் மாடக்குளக்கீழ் மதுரை என வழங்கப்படுகிறது. மாடக்குளக்கீழ் மதுரை, மாடக்குளக்கீழ் திருப்பரங்குன்றம், மாடக்குளக்கீழ் அரியூர், மாடக்குளக்கீழ் குலசேகரபுரம், மாடக்குளக்கீழ் கொடிமங்கலம் என்று பல கிராமங்கள் குறிப்பிடப்படுகின்றன. இதன் மூலம் 'குளக்கீழ்' என்பது ஒரு நாட்டுப்பிரிவு வகையைச் சேர்ந்தது எனக் கருதலாம்.*

*இம்மாடக்குளம் மதுரை நகரின் நீர்ப்பாசன ஆதாரங்களில் முக்கியமான ஆதாரமாகத் திகழ்கிறது. மாடக்குளம் உடைந்தால் மதுரை நகரழியும் என்று ஒரு பழமொழியும் நிலவுகிறது. மாடக்குளக்கீழ் அமைந்துள்ள மதுரை நகரின் பிற்காலப் பாண்டியர் கால அரண்மனை அமைந்திருந்தது.*

*மாடக்குளத்தை அடுத்து கிழக்கில் பழங்காநத்தம் என்னும் ஒரு பகுதி உள்ளது. இதன் பெயரே இது பழங்காலத்திலேயே மக்களின் குடியிருப்புப்பகுதியாகத் திகழ்ந்தது என்பதைக் குறிக்கும். பழங்கால நத்தம் என்பதே பழங்காநத்தம் என மருவியுள்ளது எனலாம்.*

## கோவலன் பொட்டல்

*பழங்கா நத்தத்தில் மிக அருகில் கோவலன் பொட்டல் என்னும் ஒருபகுதி அமைந்துள்ளது. சிலப்பதிகார நாயகன் கோவலன் இந்த இடத்தில் வெட்டப்பட்டதால் இப்பெயர் இவ்விடத்திற்கு வழங்குவதாகச் செவி வழிச் செய்தி நிலவுகிறது.*

*இந்த இடத்தில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை 1981இல் அகழாய்வு நடத்தியது. அவ்வாய்வின் பயனாகப் பெருங்கற்கால முதுமக்கள் தாழிகள் சில வெளிக்*

கொணரப்பட்டன. கருப்பு சிவப்பு வண்ண மட்பாண்டங்களும், புதிய கற்காலக் கைக்கோடாரி ஒன்றும், சில செப்புக்காசுகளும் இவ்வாய்வில் கிடைத்தன. எனவே சுமார் 2000 ஆண்டுகட்கு முன்பாகவே மக்கள் இப்பகுதியில் வாழ்ந்தனர். அன்றைய மதுரையின் ஒரு பகுதியே இது என்பது உறுதிப்படுகிறது.

## கீழக்குயில்குடி

மதுரையை அடுத்த நாகமலைப் புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள சிற்றூர் கீழக்குயில்குடி. இவ்வூரில் அமைந்துள்ள மலைக்குச் 'சமண மலை' என்றே பெயர் வழங்குகிறது. சமணர்கள் வாழ்ந்த சமணர்க்குரிய மலையாக விளங்கியமையால் இது சமண மலை என்று இப்பகுதி மக்களால் அழைக்கப்படுகின்றது. அதற்கு முன்பு எண்பெருங்குன்றங்களில் ஒன்றான 'திருவுருவகம்' என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளது. இங்கிருந்த சமணப்பள்ளி 'மாதேவிப் பெரும்பள்ளி' என்ற பெயரில் விளங்கியுள்ளது. இம்மலையைச் சார்ந்த பழமையான ஊராகக் குயில்குடி இருந்தது. இதுவே தற்போது கீழக்குயில்குடி, மேலக்குயில் குடி என்று இரண்டு ஊர்களாக இருந்து வருகிறது. கி.பி. 9 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சமணமலைக் கல்வெட்டில் இதன் பெயர் "குயிற்குடியான அமிர்தபராக்கிரம நல்லூர்" என்று குறிப்பிடப்படுகிறது. அமிர்த பராக்கிரமன் என்ற பெயர் முற்காலப் பாண்டிய மன்னர்க்குரிய பெயராகும்.

குயிற்குடியும் அதனைச் சார்ந்த பகுதிகளும் 'நாட்டாற்றுபுறம்' என்ற நாட்டுப் பிரிவில் இருந்துள்ளன. மாடக்குளத்தின் பாசனக்கால் போக்கில் இவ்வூர் இருந்தமையால் மாடக்குளக்கீழ் நாட்டாற்றுப்புறத்துக் குயில்குடி எனப்பட்டது. சமணமலை முதல் குன்றின் உச்சியிலுள்ள கட்டடக் கோயிலில் கண்டறியப்பட்ட கல்வெட்டில் இம்மலைக்குரிய பெயர் 'திருவுருவகம்' என்றும் இம்மலையில் இருந்த பள்ளியின் பெயர் மாதேவிப்பெரும்பள்ளி என்றும் அறிய முடிகிறது. சமணத்

திருவுருவங்களின் இருப்பிடமாய் (திரு + உரு + அகம்) இம்மலை திகழ்ந்தமையால் திருவுருவகம் என்று பெயர் பெற்றிருக்க வேண்டும். இம்மலையில் பராந்தக வீரநாராயணன் (கி.பி. 860-905) காலத்தில் தோற்று விக்கப்பட்ட இப்பள்ளி அவனது மனைவியான வானவன் மாதேவியின் பெயரைக் கொண்டு விளங்கி உள்ளது.

சங்க காலத்திற்குப் பிறகு திகம்பரப் பிரிவைச் சார்ந்த சமணர்கள் இக்குகைத் தளங்களில் வாழ்ந்தனர். கி.பி. 7 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் இப்பள்ளி பெருவளர்ச்சி அடைந்தது. கி.பி. 8ஆம் நூற்றாண்டிற்கும் 13 ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் இப்பள்ளி வெறும் துறவிகளின் உறைவிடமாக மட்டுமல்லாமல் திருவுருவங் களைச் செய்வித்து வழிபட்ட சமணர்களின் வழிபாட்டுத் தலமாகவும் மாறியது. இதனால் இல்லறத்தினைப் பின்பற்றிய சாவகர்கள் இம்மலைக்கு அதிக அளவில் வந்து சென்றனர். இக்குன்றங்களில் இருந்த துறவியரும் அவர்களது மாணவர்களும், இம்மலைக்கு வந்து சென்ற இல்லறத் தாரும் பல தீர்த்தங்கரர் திருமேனிகளையும் இயக்கியர் உருவங்களையும் புடைப்புச் சிற்பங்களாக இங்குள்ள பாறைகளில் செய்வித்து உருவ வழிபாட்டை வளர்த்தனர். இதனால் இம்மலையில் அழகிய பல சமணத் திருவுருங்களைக் காணமுடிகின்றது.

பராந்தக வீரநாராயணன் முதலிய பாண்டிய அரசரின் ஆதரவில் கீழக்குயில்குடியைச் சார்ந்த சமண மலைக் குன்றின் உச்சியில் கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் கல்லாலான பெரிய தீர்த்தங்கரர் கோயில் ஒன்று எடுக்கப்பட்டு இருக்கிறது. அதன் பின்னர் இக்கோயிலும், அதனைச் சார்ந்த சமணமலைப்பள்ளியும், 'மாதேவிப் பெரும்பள்ளி' என்று அழைக்கப்பட்டன. இப்பள்ளியின் வரலாற்றில் ஏற்பட்ட முக்கிய நிகழ்வு இதுவாகும்.

மாதேவிப்பெரும்பள்ளி கி.பி. 9 ஆம் நூற்றாண்டி லிருந்து தொடர்ந்து மூன்று நூற்றாண்டுகள் சமணத்

துறவிகளும் அவர்களது மாணவர்களும் நிறைந்த சமணக் கல்லூரியாகவும் இருந்துள்ளது. முற்காலப் பாண்டியர் காலத்தில் இப்பள்ளியின் புகழ் தென்னிந்தியா முழுவதும் பரவியிருந்தது. இதனால் திகம்பர சமணத்தின் மூல சங்கமாக விளங்கிய கர்நாடகத்தின் சிரவணப் பெள்கோளா விலிருந்து துறவிகள் பலர் இப்பள்ளிக்கு வந்துள்ளனர். மடம் ஒன்றையும் தோற்றுவித்து இருக்கின்றனர்.

சமண முனிவர்களின் வாழ்விடமாகவும் சமணர்களின் வழிபாட்டுத் தலமாகவும் சமணக் கல்லூரியாகவும் விளங்கிய சமணமலைப் பள்ளிக்கு அரசர்கள் மட்டுமின்றி இப்பகுதியில் இருந்த நாட்டாற்றுப்புறத்து நாட்டவையினரும் குயில்குடி ஊரவையினரும் ஆதரவளித்துப் போற்றியுள்ளனர். முற்காலப் பாண்டியர் காலத்தில் பெருஞ்செல்வாக்குடன் திகழ்ந்த வேளாண் சமூக நிலவுடைமையாளர்களான நாட்டாரும் ஊராரும் இப்பள்ளிக்கு ஆதரவளித்துக் காத்துள்ளது இப்பள்ளியின் நிலையான வளர்ச்சிக்கு வழிகோலியது. பிற சமயத்தவரிடமிருந்து சமணத்தினைக் காத்தது.

## செட்டிப்பொடவு

சமண மலையின் தென்மேற்குப் பக்கத்தில் கீழக்குயில்குடியின் அருகில் செட்டிப்பொடவு என்னும் குகை இருக்கிறது. இந்தக் குகையின் இடதுபுறத்தில் ஒரு தீர்த்தங்கரரின் உருவம் பாறையில் அமைக்கப்பட்டி ருக்கிறது. இவ்வுருவம் பார்ப்பதற்கு ஒரு செட்டியார் போலத் தெரிவதால் இவ்விடத்திற்குச் செட்டிப்புடவு எனப் பெயர் வழங்கப்படுகிறது. இந்த உருவத்தின் கீழ் வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. இந்த எழுத்து வடிவம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. குகையின் உள்ளே அரை வட்டமாகக் குழிந்த கூரை அமைந்துள்ள பாறையில் தனித்தனியாக ஐந்து உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. முதல் உருவம் நான்கு கைகளையுடைய இயக்கி உருவம். சிங்கத்தின் மேல்

*அமர்ந்து ஒரு கையில் வில்லையும் மற்றொரு கையில் அம்பையும் ஏனைய கைகளில் வேறு ஆயுதங்களையும் பிடித்திருக்கிறது. இந்த இயக்கிக்கு எதிரில் யானையின் மேல் அமர்ந்துள்ள ஆண் உருவம் கையில் வாளையும் கேடயத்தையும் பிடித்திருக்கிறது. இது சாஸ்தா உருவம் போலும். இதையடுத்துத் தனித்தனியே மூன்று தீர்த்தங்கரர்களின் உருவங்கள் முக்குடைகளுடன் செதுக்கப்பட்டுள்ளன. இந்தத் திருமேனிகளின் வரிசையில் பத்மாவதி என்னும் இயக்கியின் உருவம் வலது காலைத் தொங்கவிட்டு இடதுகாலை மடக்கிச் சுகாசனத்தில் அமர்ந்திருப்பது போல் செதுக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்து சிற்பங்களில் நடுவில் உள்ள மூன்று தீர்த்தங்கரரின் உருவங்களுக்குக் கீழே பின்வரும் நான்கு வட்டெழுத்துச் சாசனங்கள் எழுதப்பட்டுள்ளன.*

1. .... வெண்புணாட்டுக்குறண்டி திருக்காட்டாம் பள்ளி கனகனந்திப்படாரர் அபினந்தனபடாரர் அவர் மாணாக்கர் அரிமண்டலப்படாரர் அபினந்தனப் படாரர் செய்வித்த திருமேனி.

2. ஸ்வஸ்திஸ்ரீ இப்பள்ளியுடைய குணசேனதேவர் சட்டன் தெய்வ பலதேவர் செய்விச்ச திருமேனி

3. ஸ்வஸ்திஸ்ரீ வெண்புணாட்டுக் குறண்டித் திருக்காட்டாம் பள்ளிக் குணசேனதேவர் மாணாக்கர் வர்தமானப் பண்டிதர் மாணாக்கர் குணசேனப் பெரியடிகள் செய்வித்த திருமேனி.

4. ஸ்வஸ்திஸ்ரீ இப்பள்ளி ஆள்கின்ற குணசேனதேவர் சட்டன் அந்தலையான் களக்குடி தன்னைச் சார்த்தி செய்வித்த திருமேனி.

*மேற்கண்ட கல்வெட்டுகளின் மூலம் நந்திகணம், சேனகணம் ஆகிய இருவகை சமணத் துறவியர் இங்கு வாழ்ந்தனர் என்பது தெரிய வருகிறது. குறண்டி திருக்காட்டாம்பள்ளி என்ற ஒரு சமணப்பள்ளி இன்றைய அருப்புக்கோட்டை சாலையில் ஆவியூருக்கு அருகில்*

அமைந்திருந்தது. அப்பள்ளியோடு சமணமலைப் பள்ளிக்கு நெருக்கமானத் தொடர்பு இருந்தது என்பது பெறப்படுகிறது. ஆசிரியர்களும், மாணாக்கர்களும் இங்குத் தங்கி மாணவர்கள் சமயக் கல்வி பெற்றிருக்கின்றனர்.

## முத்துப்பட்டி

முத்துப்பட்டி என்பது கீழக்குயில்குடிக்கு ஊருக்கு மேற்காக அமைந்துள்ள ஒரு சிற்றூர். இவ்வூருக்கு 'கரடிப்பட்டி' என்ற மற்றொரு பெயரும் இங்குள்ள மலைக்கு பெருமாள் மலை என்ற பெயரும் உண்டு. முற்காலப் பாண்டியர் காலத்தில் சமண சமயத்தில் உருவ வழிபாடு வளர்ந்த நிலையில் இக்குகைத் தளத்தில் திருமேனிகள் செய்து வழிபடப்பட்டுள்ளன. குகைத் தளத்துக் கற்படுக்கைப் பகுதியில் பீடத்தின் மீது தீர்த்தங்கரர் சிற்பம் ஒன்று தனித்த நிலையில் செய்து வைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். மூன்று சிம்மங்கள் சுமந்த இணையரி மேடையில் அர்த்தபரியங்கா சனத்தில் அமர்ந்த நிலையில் தீர்த்தங்கரர் காட்சியளிக்கின்றார். அவரது பின்புறம் பெரிய திண்டும் மகரவாய்களும் காணப்படுகின்றன. நீள்செவியுடைய பொலிவான உடலமைப்புடன் விளங்கும் இவரது இருபுறமிருந்து பக்கத்திற்கு ஒருவராக இரு இயக்கர்கள் கவரி வீசுகின்றனர். தலையினைச் சுற்றி சுவாலையுடன் கூடிய ஒளிவட்டம் திகழ்கிறது. தலைக்கு மேலே அசோகமரத்தின் சுருள் சுருளான கிளைகள் விரிந்துள்ளன. சிறிய முக்குடை தலைக்கு மேலிருந்து தீர்த்தங்கரர்க்கு நிழல் தருகின்றது. தனித்த நிலையில் அமைதி தவழும் எளிய தோற்றத்துடன் செய்விக்கப்பட்ட இத்தீர்த்தங்கரர் திருமேனி பாண்டிய நாட்டில் உள்ள கலைச் சிறப்பு வாய்ந்த தீர்த்தங்கரர் சிற்பங்களில் ஒன்றெனக் கூறலாம்.

குகைத் தளத்தின் வெளிப்புறத்தில் தென்திசை நோக்கிப் பாறையில் புடைப்புச் சிற்பமாக அமர்ந்த நிலையில் இரண்டு தீர்த்தங்கரர் உருவங்கள் காட்சியளிக்

கின்றன. அசோக மரத்தின் கிளைகளுக்குக் கீழே முக்குடை நிழலில் இயக்கர்கள் இருவர் கவரிவீச அர்த்த பரியங்காசனத்தில் அமர்ந்த நிலையில் தீர்த்தங்கரர்கள் திகழ்கின்றனர். மகரவாய், இணையரிகளுடன் மூன்று சிம்மங்கள் சுமந்த அரியாசனத்தில் இத்தீர்த்தங்கரர்கள் அமர்ந்துள்ளனர். இத்தீர்த்தங்கரர் சிற்பங்கள் கி.பி. 9ஆம் நூற்றாண்டின் இறுதியில் செய்விக்கப்பட்டதை இதனடியி லுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டுகளைக் கொண்டு அறியலாம்.

அடுத்தடுத்துள்ள இரண்டு மாடங்களில் தனித்தனியாக செய்விக்கப்பட்ட இத்தீர்த்தங்கரர் உருவங்களைச் செய்வித்தோர் பற்றி அவற்றின் அடியிலுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இவற்றின் மேல்புறமுள்ள தீர்த்தங்கரர் உருவத்தினைப் 'பராந்தக பருவதமாயின ஸ்ரீவல்லவப் பெரும்பள்ளிக் குறண்டி அ டோபவாசி படாரரின் மாணாக்கர் மகாணந்திப் பெரியார்' என்பவர் நாட்டாற்றுப்புறத்து நாட்டாரின் பெயரால் செய்வித்துள்ளார்.

இவ்வுருவத்தின் கீழ்ப்புறமுள்ள மாடத்திலுள்ள தீர்த்தங்கரர் சிற்பத்தினை நாட்டாற்றுப்புறத்து அமிர்த பராக்கிரம நல்லூராயின குயிற்குடி ஊராரின் பெயரால் கனகவீரப் பெரியடிகள் செய்வித்துள்ளார். இவர் குணசேனதேவரின் மாணாக்கர் ஆவார். குணசேனதேவர் முதல் மாடத்தில் இருந்த சிற்பத்தினைச் செய்வித்த மகாணந்திப் பெரியாரின் ஆசிரியர் குறண்டி அ டோப வாசிப் படாரரின் மாணாக்கர் ஆவார். இதற்குக் காவலாக 'பள்ளிச்சிவிகையார்' இருந்துள்ளனர்.

## துவரிமான்

மதுரைக்குச் சற்று மேற்கில் வைகைத் தென்கரையில் இவ்வூர் உள்ளது துவரிமானுக்கு அருகில் வைகையாற்றுக்

கரையோரங்களிலும், படுகைகளிலும் நுண்கற்கருவிகள் பெருமளவில் கிடைக்கின்றன. குவார்ட்ஸ், அகேட், ஜாஸ்பர், செர்ட் வகைக் கற்களைக் கொண்டு இக்கருவிகள் செய்யப்பட்டுள்ளன. ஒரு முனை, இரு முனை கத்திகள், வெட்டுக் கருவிகள், சுரண்டிகள், பிறைவடிவக் கருவிகள், துளையிடும் கருவிகள் ஆகியவை மேற்பரப்பு ஆய்விலேயே கிடைக்கின்றன. இக்கருவிகள் நேர்த்தியாகத் தயாரிக்கப் பட்டுள்ளன. இக்கருவிகளைச் செய்வதற்கு வேண்டிய மூலக் கற்களும் இங்குக் கிடைப்பதால் இங்கு ஒரு தொழிற்கூடமே செயல்பட்டு இருக்கலாம். இவற்றின் காலம் ஆறாயிரம் ஆண்டுகட்கும் மேலானது எனலாம். இதே பகுதியில் புதிய கற்காலக் கற்கோடாரிகளும் தமிழக அரசு தொல்லியல் துறையினரால் சேகரிக்கப்பட்டுள்ளது. கி.பி. 1887இல் பார்டல்ஸ் என்பவரும் அலெக்ஸாண்டர்ரே என்பவரும் துவரிமானில் அகழாய்வு மேற்கொண்டனர். அதில் முதுமக்கள் தாழிகளும் அதனுள் எலும்புகளும், வளவளப்பான கருப்பு சிவப்புப் பானை ஓடுகளும் கிடைத்துள்ளன.

துவரிமானின் வைகையாற்றுப் படுகையில் முத்திரை குத்தப்பட்ட வெள்ளிக் காசு ஒன்று சேகரிக்கப்பட்டுள்ளது. சதுர வடிவமான சிறிய காசில் முன்புறம் இரு ஆடவரும் ஒரு பெண்ணும் காணப்படுகின்றனர். காசின் பின்புறம் எவ்வித உருவமும் இல்லை. இக்காசு சங்க காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. இவ்வகையில் துவரிமான், மதுரை மாவட்ட வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெறும் ஊராக விளங்குகிறது.

## கீழடி

மதுரை தெற்கு வட்டத்தில் சிலைமானுக்கு அருகில் அமைந்துள்ள சிற்றூர் கீழடி என்பது. இவ்வூரின் பழைய பெயர் குந்திதேவிச் சதுர்வேதி மங்கலம் என்பதாகும்.

கொந்தகை என்றும் இப்போது பெயர் பெற்றுள்ளது. இங்குள்ள சிவன் கோயில் அர்ஜுன ஈஸ்வரம் எனப்படுகிறது. ஆனால் பிற்பாண்டியர் கல்வெட்டுகளில் கோவிலின் பெயர் முடிவழங்கு பாண்டிய ஈஸ்வரம் எனக் குறிப்பிடப்படுகிறது. சோணாடு வழங்கியருளிய சுந்தர பாண்டியனின் விருதுப் பெயரான இப்பெயரில் இக்கோயில் வழங்கி வந்துள்ளது. மதுரோதயவள நாடு என்பது மதுரையின் ஒரு பெயர். அதனில் வேலூர்க்குளக்கீழ் என்னும் நாட்டுப் பிரிவுக்குள் அடங்கிய ஒரு பிரதமதேய ஊராக இன்றைய கீழடி (குந்திதேவிச் சதுர்வேதி மங்கலம்) திகழ்ந்துள்ளது. மகாபாரதக் கதையோடு ஒருவகைத் தொடர்பு இவ்வூருக்குக் கற்பிக்கப்பட்டது காரணமாக குந்திதேவி, அர்ஜுன ஈஸ்வரம் என்ற பெயர்கள் ஏற்பட்டிருக்கலாம்.

மலையாள நாட்டின் கண்ணனூர் பகுதியிலிருந்து இங்கு வந்த கூத்தன் தென்னாடன் திரிபுவனசிங்க தேவனுக்கு இவ்வூர்ச் சபையார் நில விற்பனை செய்துள்ளனர் என்பதைக் குலசேகர பாண்டியன் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. தியாகஞ்சிரியப் பேராறு என்னும் ஓர் ஆற்றை அண்ட நாட்டுத் துருமூர் என்னும் ஊரைச் சேர்ந்த அரயன் சூரியதேவன் ஆன தேவேந்திர வல்லவன் விராடராயன் வெட்டிய செய்தியும் அறியப்படுகிறது.

## அனுப்பானடி

மதுரைக்குத் தென் கிழக்கில் மதுரைக்கு மிக அருகில் அமைந்துள்ள சிற்றூர். இன்று மதுரையுடன் இணைந்த ஒரு பகுதியாகவே மாறிவிட்டது. இவ்வூரில் 1887 இல் அலெக்சாந்தர்ரே என்பவர் அகழாய்வு மேற்கொண்டார். ஈமத் தாழிகளையும், ஈமப் பேழைகளையும் இவர் கண்டறிந்தார். அடுத்து கே.எஸ். ஸ்ரீகண்டன் என்பவர் தனது ஆய்வின் மூலம் மூன்று அடி உயரமுள்ள பல ஜாடிகளைக் கண்டறிந்தார். பெருங் கற்காலத்தைச் சேர்ந்த

முதுமக்கள் தாழிகளும் கருப்பு சிவப்பு மட்கலங்களும் மிகுந்த அளவில் கிடைப்பதால் இப்பகுதி இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பாகவே மக்கள் வாழிடமாக இருந்தது என்பது உறுதிப்படுகிறது.

# 15. மதுரை வடக்குவட்டம்

## ஆனைமலை

மதுரையிலிருந்து மேலூர் செல்லும் சாலையில் 5 கி.மீ. தொலைவில் ஒத்தைக்கடை என்னும் ஊருக்கு அருகில் யானை ஒன்று படுத்திருப்பது போன்ற மலை ஒன்று உள்ளது. இதன் உருவ அமைதியைக் கொண்டே இதனை யானை மலை என்று அழைப்பர். மண்தோன்றிய காலந்தொட்டு இம்மலை நிலை பெற்றிருந்தாலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான தொடர்ந்த நெடிய வரலாற்றுக்குரியது இம்மலை.

மலையின் மேல் முகட்டில் ஓர் இயற்கையான குகைத் தளம் உள்ளது. அதனைச் சமண சமயத் துறவியர் தங்குவதற்கு ஏற்ப வடிவமைத்து கற்படுக்கைகள் வெட்டியுள்ளனர். குகையின் நெற்றியில் மழைத் தண்ணீரை வெளியேற்றுவதற்குப் புருவம் வெட்டப்பட்டுள்ளது. அதன் கீழாக கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் பிராமி கல்வெட்டு ஒன்றும் வெட்டப்பட்டுள்ளது.

> இவகுன்றதூருறையுள் பா தந்தான் ஏரி அரிதன்
> அத்துவாயி அரட்ட காயிபன்

என்பது இக்கல்வெட்டுப்பாடம் ஆகும். இவம் என்பது பிராகிருதத்திலும் சமஸ்கிருதத்திலும் யானையைக் குறிக்க வழங்கும் சொல். எனவே கி.பி. முதல் நூற்றாண்டிலேயே இம்மலை இவகுன்றம் (யானைமலை) என்றே வழங்கப்பட்டு உள்ளது. பின்னர் ஞானசம்பந்தர் தன் தேவாரப் பாடலில் இவம் (யானைமலை) என்று குறிப்பிடுகிறார். இங்குள்ள

*கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டுக் கல்வெட்டு இவ்வூரை நரசிங்கமங்கலம் எனச் சுட்டுகிறது. இன்றும் இம்மலையுள்ள ஊர் நரசிங்கம் என்ற பெயரால் வழங்கப்படுகிறது.*

*இம்மலையில் நரசிங்கப் பெருமாள் கோயில், லாடன் கோயில் (முருகன் கோயில்) என்று இரண்டு குடைவரைக் கோயில்கள் வெட்டப்பட்டுள்ளன. பாண்டிய நாட்டுக் குடவரைக் கோயில் வரலாற்றில் சிறப்பிடம் பெறத்தக்க கோயில்கள் இவை. நரசிங்கப் பெருமாள் குடைவரைக் கோயில் ஒரு சிறிய கருவறையும் முன் மண்டபமும் மட்டும் கொண்டுள்ளது. பிற்பாண்டியர், விசயநகர அரசர் காலத்தில் சில மண்டபங்கள் கட்டப்பட்டு கோயில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இக்கோயிலின் கருவறை வெளிச் சுவற்றில் கோயில் யாரால் எடுக்கப்பட்டது என்பதை விளக்கும் கல்வெட்டுகள் வடமொழியிலும் தமிழிலும் உள்ளன. வடமொழிக் கல்வெட்டு கிரந்த எழுத்திலும் தமிழ்க் கல்வெட்டு வட்டெழுத்திலும் அமைந்துள்ளன. வடமொழிக் கல்வெட்டில் கலியுக ஆண்டு 3871 குறிக்கப்பட்டுள்ளது. இதற்குச் சரியான கிறித்தவ ஆண்டு கி.பி. 770 ஆகும். தமிழகத்தில் ஆண்டுக் குறிப்புடன் எழுதப்பட்டுள்ள முதல் கல்வெட்டு இதுவே எனலாம். வட்டெழுத்துக் கல்வெட்டு பின்வருமாறு:*

1. கோமாறஞ் சடையற்கு உ
2. த்தரமந்திரி களக்குடி வை
3. த்யன் மூவேந்த மங்கலப்
4. பேரரையன் ஆகிய மாறங்
5. காரி இக்கற்றளி செய்து
6. நீர்த்தெளியாதேய் சுவர்க்காரோ
7. ஹணம் செய்தபின்னை அவ
8. னுக்கு அனுஜன் உத்திர
9. மந்த்ர பதமெய்தின பாண்டி

10. மங்கல விசை அரையன்
11. ஆகிய மாறன்னெ இ
12. னன் முகமண்டபஞ் செ
13. ய்து நீர்த்தளித்தான்

*இதன் மூலம் மாறஞ்சடையன் பராந்தக நெடுஞ்சடைய வரகுணன் (கி.பி. 765 - 815) காலத்தில் அவனது அமைச்சன் மாறங்காரியால் இக்கோயில் பணி தொடங்கப்பட்டது. என்பதும் பணி முடியும் முன்னமே அவன் இறந்துபட்டதால் அவனது இளைய சகோதரன் அமைச்சனாகி இக்கோயிற் பணியை முடித்து குடமுழுக்குச் செய்வித்தான் என்றும் அறிகிறோம். பாண்டியர்களுக்குப் பின் மதுரையை வெற்றி கண்ட முதலாம் பராந்தக சோழன் இப்பகுதியில் நிலைப்படை ஒன்றை நீண்ட காலம் நிறுத்தி வைத்திருந்தான். அவனது 33ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த (கி.பி. 940) தமிழ்-வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று நரசிங்கப் பெருமாள் கோயிலின் முகப்புப் பாறையில் வெட்டப்பட்டுள்ளது. இதில் சோழன் பராந்தகனின் அதிகாரி அருள்நிதிகலியன் என்பவன் அவன் பெயரால் கலியனேரி என்று ஓர் ஏரி வெட்டிக் கோயில் திருவமுதுக்கும் பிராமணர் உண்ணவும் காசுகள் தானம் அளித்தான் என்ற செய்தி கூறப்படுகிறது. இவ்வூர் நரசிங்கமங்கலம் என்றும் இது கீழ் இரணிய முட்டத்துள் அடங்கிய ஒரு பிரமதேயம் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வூர்ச் சபையாரும் அருள்நிதிகலியன் என்னும் அதிகாரியும் இணைந்து இத்தானத்தை நடத்தியுள்ளனர் என்பதும் தெரிகிறது.*

*முற் சோழர் காலத்திற்குப் பின் வந்த பிற்பாண்டியர் களும் நாயக்க மன்னர்களும் இக்கோயிலை விரிவுபடுத்திக் கட்டியுள்ளனர். இங்குள்ள பல துண்டுக் கல்வெட்டுகள் அவர்கள் காலக் கோயில் பணிகளைத் தெரிவிப்பனவாக அமைந்துள்ளன.*

## லாடன் கோயில்

நரசிங்கப் பெருமாள் கோயிலுக்கு அருகிலேயே மற்றொரு குடைவரைக்கோயில் முற்பாண்டியர் கலைப் பாணியில் வெட்டப்பட்டுள்ளது. முருகனுக்கென அமைக்கப்பட்டுள்ள இக்கோயில் இன்று இப்பகுதி மக்களால் லாடன் கோயில் என வழங்கப்படுகிறது. ஒரு சிறிய கருவறையும், முன்மண்டபமும் உடைய எழில்வாய்ந்த குடைவரைக் கோயில் இது. கருவறையில் முருகனும் தேவசேனையும் ஒரு பீடத்தின் மீது புடைப்புச்சிற்பமாக அமர்ந்திருப்பது போல வடிக்கப்பட்டுள்ளனர். கண்ணி மாலையும் சன்னவீரமும் இவ்வுருவை முருகன் என அடையாளம் காட்டுகின்றன. இளமை பொங்கும் இணையாக இத்தெய்வ உருவங்கள் வடிக்கப்பட்டுள்ளன.

முன்மண்டபத்தில் சேவலும், மயிலும் தனித்தனியே அரைத்தூண்களின் மேல் அமர்ந்திருப்பது போலவும், அரசன், முனிவர் உருவங்களும் இடம் பெற்றுள்ளன. கூரையைக் குள்ள பூதகணங்கள் தாங்குவதாக வடிவமைக்கப் பட்டுள்ளது. கருவறைச் சுவர் அறைத்தூணில் சேவல் காட்டப்பட்டுள்ளது. இரண்டு தூண்களும், இரண்டு அரைத்தூண்களும் முன்மண்டபத்தைத் தாங்கி நிற்கின்றன. தூண்களில் சதுரம், எண்பட்டை ஆகிய அமைப்புகளும் சதுரப்பகுதியில் நன்கு விரிந்த தாமரை மலர் இதழ்களாலும் சீராகச் செதுக்கப்பட்டுள்ளன. தரங்கபோதிகை வடிவில் போதிகைகள் அமைந்துள்ளன. களிற்றுமுகப்படி இரண்டு புறமுமாக ஏறிச்செல்லும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது. முன்சுவற்றில் ஒரு தெளிவில்லாத வட்டெழுத்துக் கல்வெட்டு காணப்படுகிறது. அதில் 'புல்லாரி வட்டக்குறிச்சி நம்பிரான் பட்ட சோமாஜி பரிவிராஜகர் புதுக்கு' என எழுதப்பட்டுள்ளது. இதன் எழுத்தமைதி கொண்டு இக்கல்வெட்டு கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தைச் சேர்ந்தது என்பர். ஏற்கனவே தொடங்கப்பட்ட ஒரு பணியை வட்டக்குறிச்சி நம்பிரான் நிறைவு செய்துள்ளார் எனக் கொள்ளலாம்.

இக்கோயில் தற்போது தமிழக அரசு தொல்லியல் துறையால் வரலாற்றுச் சின்னமாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

## சமணச் சிற்பங்கள்

குடைவரைக் கோயில்களுக்கு மேற்கில் சற்று தொலைவில் தொங்கும் பாறை ஒன்றில் சில சமணத்திரு உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சிற்பத்தின் கீழும் அதனைச் செய்யக் காரணமாயிருந்தவர் அல்லது பாதுகாப்பவர் பெயர்கள் கல்வெட்டாக வெட்டப்பட்டுள்ளன. இவற்றின் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டாகும். மகாவீரர், பார்சுவநாதர், இயக்கி, அம்பிகா பத்மாவதி இயக்கி ஆகியோரின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

இவற்றின் கீழ் உள்ள எட்டு கல்வெட்டுகள் இவற்றைச் செய்தவர்கள் பற்றிய தகவல்களைத் தருகின்றன. களவழிநாட்டு ஏனாதி நாடி என்பவர் ஒருதிருமேனியைச் செய்துள்ளார். திணைக்களத் தாரும், பொற்கோட்டுக் கரணத்தாரும் இதைக் காத்துள்ளனர். அச்சணந்தி எனும் துறவி செய்வித்த திருமேனியை நரசிங்கமங்கலம் எனும் இக்கிராமத்துச் சபையார் காத்துள்ளனர். தென்களவழி நாட்டைச் சேர்ந்த பெரு வேம்பத்தூர் செழியபாண்டி என்பவர் இயக்கர் படிமத்தைச் செய்து உள்ளார். வெண்புரையைச் சேர்ந்த சாத்தன் அரையன் ஒரு திருமேனியைச் செய்துள்ளான். வெண்பைக்குடியைச் சேர்ந்த வேட்டஞ்சேரி புதுமை எலியம்பூதி ஒரு திருமேனியைச் செய்துள்ளார்.

இத்திருமேனிகள் மீது அரைத்த வெண்சுதை பூசப்பட்டு அதன் மீது பல வண்ணங்களைக் கொண்டு அழகிய ஓவியங்களும் தீட்டப்பட்டுள்ளன. குத்துவிளக்குகள், சாமரங்கள், திருவாச்சிகள் ஆகியவை இன்னும் வண்ணம் மங்காது காணப்படுகின்றன. தமிழகத்தின் தொடக்க கால ஓவியக் கலை ஆய்வாளர்க்கு இவை நல்ல சான்றுகளாகும்.

ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சமணம் இங்குச் சம்பந்தர் வருகையால் பின்னடைவுக்கு உள்ளானது. ஆனால் இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இதே இடத்தில் மீண்டும் சமணம் தழைத்தது. அதற்குக் காரணமாக அமைந்த அச்சணந்திப் பெரியாரும் ஆனை மலையில் தங்கி உழைத்துள்ளார். தொடக்கத்தில் உருவ வழிபாட்டையும், பெண் தெய்வங்களையும் ஏற்காத சமணம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டளவில் தமது சிந்தனைப் போக்கை மாற்றிக் கொண்டது என்பதற்கு யானைமலை சமணச் சிற்பங்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

இவ்வாறாக, வரலாற்றுத் தொடக்க காலம் முதல் இன்று வரை யானைமலை பாண்டிய நாட்டின் அரசியல் வரலாற்றிலும் சமய வரலாற்றிலும் கலை வரலாற்றிலும் சிறப்பிடம் பெற்றுள்ளது தெளிவாகிறது.

## பொய்கைக்கரைப்பட்டி

மதுரை அழகர்கோயில் சாலையில் அமைந்துள்ள இவ்வூரில் அழகர் கோயிலுக்குரிய நந்தவனங்களும் பொய்கையும் அமையப்பெற்றுள்ளன. இத்திரு நந்தவனங்களுள் ஒன்று கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் மிழலைக் கூற்றத்துக் கீழ்க் கூற்றிலமைந்திருந்த மஞ்சக்குடியைச் சேர்ந்த உய்ய வந்தான் திருநோக்க கலியானான தொண்டைமானார் என்பவரால் செய்விக்கப்பட்டுள்ளது. மற்றொரு நந்தவனம் அதே 13 ஆம் நூற்றாண்டில் இராயூரைச் சேர்ந்த தெற்காழ்வார் என்பவரால் செய்விக்கப்பட்டுள்ளது. இந்த நந்தவனத்திற்குக் குமார சூரியன் என்ற பெயர் வழங்கி வந்துள்ளது. கி.பி. 14-15 ஆம் நூற்றாண்டளவில் நல்லம வீதி ராஜ தேவர் என்பவர் 'ஆத்திரையன் திரு நந்தவனம்' என்ற பெயரில் மற்றொரு நந்தவனத்தை உருவாக்கியிருக்கிறார்.

அறுவகைத் தொழில் புரியும் நால்வகை இரதகாரர்கள் ஒன்று கூடி சாதிக்குப் பல நன்மைகள் செய்து வந்தவரான அழகர்கோயில் நம்பிமாரில் ஒருவரான திருவரங்குள முடையான் திருமலை ஆழ்வார் என்பவருக்கு அவர்

*வாசலிலே பரிசட்டம், பூமி, தோரணம் போன்றவை கொடுத்துச் சிறப்புச் செய்ததைத் தெரிவிக்கும் கி.பி. 1307 ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று இவ்வூரில் உள்ளது. கி.பி. 13 ஆம் நூற்றாண்டளவில் வேம்பற்றூரைச் சேர்ந்த சுந்தரத் தோளந் என்பவர் ஆசிரியம் (அடைக்கலப் பாதுகாப்பு) அமைத்ததைத் தெரிவிக்கும் கல்வெட்டொன்றும் இவ்வூரிலுள்ளது.*

**குன்னத்தூர்**

*மதுரை வடக்கு வட்டத்தில் அமைந்துள்ள சிற்றூர் குன்னத்தூர். இது முற்பாண்டியர் காலத்தில் (கி.பி. 9-10ஆம் நூற்றாண்டில்) ஒரு பிரதமதேயக் கிராமமாகத் திகழ்ந்துள்ளது. குன்றத்தூர்க்குளக்கீழ் என்னும் நாட்டுப் பிரிவுக்குள் இவ்வூர் அமைந்துள்ளது. இங்குள்ள சிவன் கோயில் மூலபல ஈசுவரம் எனப் பெயர் பெற்றுள்ளது. இக்கோயில் செலவுகளுக்காக குன்றத்தூர்க்கு அருகில் காவனூர் என்னும் ஊரில் இருந்த அரையன் நக்கன் என்பவன் கோயில் அகநாழிகையார் எனும் பூசாரிகளிடம் கொடை அளித்துள்ளான்.*

*குன்னத்தூர்க்கு அருகிலேயே வரிச்சியூர் என்ற ஊரும் உள்ளது. இங்குக் கி.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமி கல்வெட்டு ஒன்றும் உள்ளது. சமணர் வாழ்ந்த குகையும் கற்படுக்கைகளும் காணப்படுகின்றன. இம்மலையிலேயே உதயகிரீஸ்வரம், அஸ்தகிரீஸ்வரம் என்ற இரண்டு குடைவரைச் சிவன் கோயில்கள் உள்ளன. இவை கருவறை மட்டும் கொண்டு எளிமையாகக் குடையப்பட்டு உள்ளன. இங்குள்ள வாயிற்காவலர் சிற்பங்களைக் கொண்டு இவை 8 ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்படுகின்றன.*

*இதே ஊரில் தனியாணை ஈஸ்வரம் என்ற பெயரில் மற்றொரு சிவன் கோயில் உள்ளது. அங்குள்ள பிற்பாண்டியர் கல்வெட்டுகள் மிகவும் சிதைந்த நிலையில் உள்ளன. வாணாதிராயர், நாயக்கர் காலங்களிலும் இவை நன்கு நிருவகிக்கப்பட்டு உள்ளன.*

# 16. மேலூர் வட்டம்

## அழகர்கோயில்

மதுரை நகருக்கு வடக்கே 24 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது அழகர்கோயில். இயற்கை எழில் சூழ்ந்த மலையும், அதன் சரிவில் அமைந்துள்ள அழகர்கோயிலும் நெடிய வரலாற்றுச் சிறப்பிற்குரியவை. அழகர்மலையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய சமணர் உறைவிடங்களும், தமிழ் பிராமிக் கல்வெட்டுகளும் உள்ளன. எனவே திட்டவட்டமான இரண்டாயிரம் ஆண்டுக்கால வரலாறு இம்மலைக்கு உண்டு.

*அழகர்மலை தமிழ் பிராமிக் கல்வெட்டுகள்:*

1. மதிரய் பொன் கொல்வன் அதன் அதன்.
2. ... அ னாகன் த ...
3. கணி நாகன் கணி நாதன் இருவர் அமகல்
4. மத்திரைகே...
5. உபு வாணிகன் வியக்கன் கணதிகன்
6. கணக அதன் மகன் அதன் அதன்
7. ஸபமிதாஇன் பமித்தி.
8. பணிதன வாணிகன் நெடுமலன்
9. கொழுவணிகன் எளசந்தன்
10. ஞ்சி கழுமாற நதன் தார அணிஇ கொடு பிதஅவன்
11. காசபன் அவ்விரு (அ)ர்உம் குடுபிதோர்
12. வெண்பளிஈ அறுவை வணிகன் எளஅ அடன்
13. தியன் சந்தன்

மேற்கண்ட கல்வெட்டுகள் மூலம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே சமணர்கள் அழகர்மலையில்

*தங்கியிருந்தமையும், அவர்களுக்கு வணிகர்கள் பலர் இருப்பிடம் செய்து கொடுத்தனர் என்பதையும் அறிகிறோம். வணிகர்களில் பொன்வணிகன், அறுவை வணிகன், பணித வணிகன், கொழுவணிகன் என்று பலபிரிவினரும் அன்றே இருந்தமையும் பெறப்படுகிறது. கி.பி. 8-9ம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டு அச்சணந்தி எனும் சமணத்துறவி இம்மலையில் வாழ்ந்ததாகக் கூறுகின்றது.*

*திருமாலிருங்குன்றம், இருங்குன்றம், திருமாலிருஞ் சோலை, சோலைமலை திருவரை என்று பலபெயர்கள் இம்மலைக்குண்டு. இதனைச் சிலப்பதிகாரம் "திருமால் குன்றம்" என்று கூறுகிறது.*

*பூதத்தாழ்வார், தம்பாடலுள், இருஞ்சோலை மலை, இருஞ்சோலை என்று குறிப்பிடுகிறார். நம்மாழ்வார், மாலிருஞ்சோலை, திருமாலிருஞ்சோலை மலை என்று பாடுகிறார். திருமங்கை ஆழ்வாரும் இவ்வாறே குறிப்பிடுகின்றார். பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமங்கை யாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகியோர் இம்மலையில் வாழும் திருமாலைப் பாடி யுள்ளனர். முருகனின் அறுபடை வீடுகளுள் ஒன்றான பழமுதிர்ச்சோலை இம்மலையே என்பர். இம்மலையின் பெயர் சோலைமலை எனவும் பழம் உதிர்கின்ற சோலை மலை எனவும் இதனைக் கூறுவர். நக்கீரர் தன்னுடைய திருமுருகாற்றுப்படையில்,*

> இழுமென இழிதரு மருவி
> பழமுதிர் சோலைமலை கிழவோனே

*என்று குறிப்பிட்டுள்ளார். சிலம்பாறு இங்குச் சிறப்பித்துப் பேசப்படும் ஆறாகும். மலை மீது முருகனும் மலை அடிவாரத்தில் திருமாலும் கோயில் கொண்டு சிறப்பித்த மலை அழகர்மலையாகும். பரிபாடல் சிலப்பதிகாரம், நாலாயிர திவ்யப்பிரபந்தம் ஆகிய இலக்கியங்களில்*

குறிப்பிடப்படும் இக்கோயில் சங்க காலந்தொட்டு இருந்து வந்ததில் ஐயமில்லை. ஆனால் கல்வெட்டுச் சான்றுகள் தொடக்க காலத்தில் (முற்காலப் பாண்டியர் காலத்தில்) ஏனோ கிடைக்கப் பெறவில்லை. அழகர்கோயிலில் உள்ள கல்வெட்டுகளிலேயே காலத்தால் முந்தியது சோழ மன்னன் முதலாம் இராசராசனின் காலத்ததாகும். இராசராசனின் 22 ஆம் ஆட்சி ஆண்டில் தரப்பட்ட நிலக்கொடையைப் பற்றி இக்கல்வெட்டு கூறுகிறது. பிற்காலப் பாண்டியர் காலத்தில் இக்கோயில் அவர்களின் சிறப்பான கவனத்தைப் பெற்றுள்ளது. முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன், முதலாம் சடாவர்மன் சுந்தரபாண்டியன் ஆகியோர் இக்கோயிலில் பல நற்பணிகள் செய்துள்ளனர். போசள மன்னன் வீரசோமேஸ்வரன் தன் பெயரால் வீரசோமேஸ்வரன் சந்தி வழிபாடு ஒன்றை ஏற்படுத்தினான்.

பாண்டிய நாட்டுப் பகுதியில் இருந்த வாணாதிராயர் கள் என்னும் குறுநிலத் தலைவர்கள் மிகுந்த வைணவப் பற்றாளர்கள். அவர்கள் இக்கோயிலில் பல திருப்பணிகள் செய்துள்ளனர். 'திருமாலிருஞ்சோலை நின்றான், மாவலி வாணாதிராயன்' என்ற சிறப்புப் பெயர்கள் இவர்களுக்கு உண்டு. கி.பி. 1464இல் இவர்களால் இக்கோயில் உபானம் முதல் ஸ்தூபி வரை புதுப்பிக்கப்பட்டது. விஜயநகர வேந்தர் கிரு ணதேவராயர் மூன்று நாட்கள் இக்கோயிலில் தங்கியிருந்தார். மதுரை நாயக்க அரசர்களும் அழகர்கோயிலின் வளர்ச்சியில் அக்கறை காட்டினர். மூன்றாம் திருச்சுற்று திருமலை நாயக்கரால் கட்டப்பட்டது. இங்கு வசந்த மண்டபத்தில் இராமயணக் காட்சிகள் அழகிய ஓவியங்களாக உள்ளன. அழகர்மலை முக்கியமான அரணாகவும் விளங்கியது. இங்குப் பிற்காலத்தில் கோட்டை கட்டப்பட்டு படைகள் தங்க வைக்கப்பட்டன. கோயில் வாயிற் கோபுத்தின் படிகள் 18 ஆம் படி கருப்பராக வழிபடப்படுகின்றன.

மீனாட்சி அம்மன் திருக்கல்யாணத்துடன் அழகர் உலாவையும் தொடர்புபடுத்தி ஆண்டுதோறும் கொண்டாடப்படும் சித்திரைத் திருவிழா தமிழகத்தில் முக்கியத் திருவிழாக்களுள் ஒன்றாகும்.

## திருமோகூர்

மதுரையிலிருந்து மேலூர் செல்லும் சாலையில் உள்ள ஒத்தக்கடை என்னும் ஊரிலிருந்து திருவாதவூர் செல்லும் சாலையில் சென்றால் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருமோகூரை அடையலாம். 108 வைணவத் தலங்களுள் திருமோகூரும் ஒன்று. நம்மாழ்வாரும், திருமங்கை ஆழ்வாரும், மணவாள மாமுனிகளும் இவ்வூரைப் பாடியுள்ளனர்.

சங்க காலத்திலேயே இவ்வூர் வலிமையான கோட்டையைக் கொண்டு இருந்தது. பழையன் என்னும் சிற்றரசன் இவ்வூரை ஆண்டு வந்தான். சங்கப் புலவர்கள் சிலர் இவ்வூரைப் பாடியுள்ளனர். தாலமி தன்னுடைய நூலில் (140 கி.பி) இவ்வூரைக் குறிப்பிட்டுள்ளார். மோகூர் என்ற பழைய பெயரே 'திரு' என்னும் அடைமொழியுடன் வழங்கப்பட்டுள்ளது. பிற்காலத்தில்,

> வளவயல்சூழ் திருமோகூர்
> எண்திசையும் ஈன்கரும்பொடு பெருஞ்செந்நெல்
> விளையக் கொண்ட கோயில்

என்றும் நம்மாழ்வார் திருமோகூரைக் குறித்துப் பாடியுள்ளார். இவ்வாழ்வார்கள் காலமான 8-9ஆம் நூற்றாண்டிலிருந்து இங்குக் கோயில் இருந்துள்ள போதிலும் தற்போது இருப்பது பிற்காலப் பாண்டியர் மற்றும் நாயக்கர் கலைப் பாணியாகவே உள்ளது. இங்குள்ள இறைவன் திருப்பாற்கடலில் பாம்பணைமேல் பள்ளி கொண்ட கோலத்தில் உள்ளார். காளமேகப் பெருமாள் மோகனவல்லி என்பது இறைவன் இறைவியர் பெயராகும். இங்குள்ள சுதர்சனர் சிற்பம் மிகவும்

குறிப்பிடத் தக்கதாகும். திருமலை நாயக்கர், பெரியமருது, சின்னமருது சகோதரர்கள் சிற்பங்களும் இங்குக் கலை நுணுக்கத்துடன் செதுக்கப்பட்டுள்ளன.

திருமோகூரில் உள்ள கல்வெட்டுக்களில் காலத்தால் முந்திய கல்வெட்டு முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டாகும். காளமேகப் பெருமாள் கோயில் தெப்பக்குளத்தின் மேல்புறம் உள்ள தனிக் கல்லில் இக்கல்வெட்டின் ஒரு பகுதி மட்டுமே எஞ்சியுள்ளது. 'விண்ணகராழ்வார் திருமுற்றம்' எனக் கோயில் திருமுற்றம் குறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டு முழுமையாகக் கிடைக்காததால் சோழர் காலத்தில் இக்கோயில் இறைவனுக்கு வழங்கிய பெயரில் 'விண்ணகராழ்வார்' என்ற பிற்பகுதியைப் பற்றி மட்டுமே தெரிந்து கொள்ள முடிகிறது. எனினும் முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் (கி.பி. 1070-1120) இப்பெருமாள் கோயில் சிறப்பான நிலையில் இருந்துள்ளமையை இக்கல்வெட்டிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

துங்கவனம் என்ற பகுதியில் பிரம்ம தீர்த்தக் கரையில் முதலாம் குலசேகர பாண்டியனின் 40வது ஆட்சி யாண்டியல், (கி.பி. 1308) சுந்தர பாண்டிய சோழ கோனார் என்பவர், முன்னாளில் இறங்கிக் கிடந்த வேதநாதரை எழுந்தருளுவித்து அமுதுபடி, சாத்துப்படி உள்ளிட்ட நித்த நிவந்தங்களுக்கும் வழிவகை செய்துள்ளார். இக்கோயில் இன்று யானைமலையின் தென்கோடியிலுள்ளது.

காளமேகப் பெருமாள் கோயிலில் ஸ்ரீ சுதர்சனர் (சக்கரத்தாழ்வார்) வழிபாடு இன்றைய தினம்தனிச் சிறப்புமிக்க வழிபாடாகத் திகழ்ந்து வருகிறது. சுமார் 4 அடி உயரத்தில் 16 திருக்கரங்களுடன் சக்கரத்தாழ்வார் காட்சி அளிக்கிறார். சக்கரத்தாழ்வாரின் பின்புறம் யோக நரசிம்மரின் திரு உருவம் காணப்படுகிறது. இத்திருக் கோயிலில் சக்கரத்தாழ்வார் திருமேனியைக் காளமேகமான காங்கேயன் என்பவர் சடையவர்மன் சுந்தர பாண்டியனின்

8வது ஆட்சியாண்டில் (கி.பி. 1259) வைகாசித் திங்கள் இருபத்தொன்றாம் நாளில் எழுந்தருளுவித்துள்ளார். இவரே, இத்திருக்கோயிலில் சேனாபதி ஆழ்வாரான விஸ்வச்சேனருக்குச் சிற்றாலாயமும் எடுப்பித்துள்ளார். பிற்காலப் பாண்டியராட்சிக் காலத்தில் காளமேகப் பெருமாள் கோயிலில் மார்கழி மாதத்தில் கல்யாணத் திருநாள் கொண்டாடப்பட்டுள்ளது. இதற்கான நிவந்தம் குந்தவைச் சதுர்வேதி மங்கலத்து அந்தணர்களின் பொறுப்பில் இருந்துள்ளது. காளமேகப் பெருமாளின் பெயரால் கி.பி. 13ஆம் நூற்றாண்டளவில் இப்பகுதியில் திருக்காளமேக நல்லூர் என்ற ஊர் இருந்துள்ளது.

காளமேகப் பெருமாள் கோயிலில் இன்றுள்ள கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம் போன்ற பகுதிகள் கி.பி. 16 ஆம் நூற்றாண்டளவில் புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ளவையாகக் காணப்படுகின்றன. கி.பி. 1551 ஆண்டைச் சேர்ந்த இரண்டு கல்வெட்டுக்கள் மகாமண்டபத் தென் சுவரிலுள்ளன. வசவண்ணர் நாயகத்தில் திம்மப்ப நாயக்கர் என்பவர் ஆண்டொன்றுக்கு 450 கலம் நெல் மற்றும் 36 பொன் செலவில் பெருமாளுக்கு நித்திய நைவேத்தியங்கள் படைத்திட வழிவகை செய்துள்ளார். இவர்களே கூடலழகர் கோயிலிலும் விமானத்தைப் புதுப்பித்துக் கட்டியுள்ளனர். இந்திருக்கோயிலின் திருச்சுற்றுச் சுவர், கி.பி. 1699-1700 ஆம் ஆண்டுகளில், மதுரை நாயக்கரின் தளவாயாக விளங்கிய நரசப்பய்யனின் அனுமதியின் பேரில் வெங்கப்பய்யன் என்பவரால் கட்டப்பட்டுள்ளது.

காளமேகப் பெருமாள் கோயிலில் கலை நயம் மிக்க மண்டபங்கள் பல உள்ளன. கிழக்கு நோக்கியுள்ள திருவாயிலைக் கடந்ததும் முதலில் உள்ள கம்பத்தடி மண்டபமான மருது மண்டபத்தில் பெரிய மருது, சின்ன மருது ஆகியோரின் சிலைகளுள்ளன. மருது மண்டபத்தை அடுத்துள்ள கருட மண்டபத்தில் இராமர், சீதை,

*இலக்குமணர், இரதி, மன்மதன் சிற்பங்களுள்ளன. பெரிய திருவடி (கருடன்) இங்குக் காட்சியளிக்கிறார்.*

*திருமோகூர், கோயில்குடி, திரும்பூர் போன்ற பிற பெயர்களாலும் அழைக்கப்பட்டுள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கர்னல் ஹெரோன் என்பவர், கோயில்குடியைத் தாக்கி அங்குக் கோயிலிலிருந்த செப்புத் திருமேனிகளை (சிலைகளை) எடுத்துச் சென்றதாகத் தெரிகிறது.*

*திருமோகூர்ப் பெருமாள் மீது காளமேகப் புலவர் பாடியதாகத் தனிப் பாடலொன்றுள்ளது. அப்பாடல் கீழ்வருமாறு:*

பொன்னனைவா ளரக்கனை நூற்றுவரைக் காலைப்
பொருசிலையைக் கனைகடலைப் பொன்ன னீன்ற
நன்மகற்காய்ச் சுரர்க்காயை வருக்காய்க் காத
னப்பின்னைக் காய்ச் சானரிக்காய் நடவைக் காக
மன்னுகிரால் வடிக்கணையால் வளையாற் புள்ளால்
வயங்குதோள் வலியால் வானரங்களாலும்
முன்னுடற்கீ றிச்சிரங்கொண் டமரில் வீழ்த்தி
முதலொடுங்கொண் டிறுத்தடைத்த மோகூ ரானே

## திருவாதவூர்

*மதுரைக்கு வடகிழக்கில் மதுரையிலிருந்து 25 கி.மீ. தொலைவிலும், மேலூரிலிருந்து 10 கி.மீ. தொலைவிலும் இவ்வூர் அமைந்துள்ளது. சங்க காலத்துப் புலவர்களுள் ஒருவரான கபிலர் திருவாதவூரில் அந்தண மரபில் பிறந்தவராகக் கருதப்படுகிறார். திருவாதவூரிலுள்ள ஓவாமலையில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றில்,*

1. பாங்காட அர்இதன் கொட்டுபிதோன்
2. உபசன் பர்அசு உறை கொட்டுபிதோன்

*ஆகிய வாசகங்கள் உள்ளன. எனவே சங்க காலத்திலிருந்தே இவ்வூர் சிறப்புடன் விளங்கி வருவது தெளிவு. சங்க காலத்தில் இவ்வூரில் சமண முனிவர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதும் இதனால் அறியப்படுகிறது.*

*மாணிக்கவாசகர் திருவாதவூரில் வாழ்ந்த ஆமாத்திய பிராமணர் குலத்தைச் சேர்ந்த சம்பு பாதாசாரியர் என்பாருக்கும் சிவஞானவதிக்கும் மகனாகப் பிறந்து வளர்ந்ததால் 'திருவாதவூரர்' என்றும், பெயர் பெற்றார் என்பர்.*

திருவாதவூரர்ச் சிவபாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவை

*என்ற நம்பியாண்டார் நம்பியின் கோயில் திருப்பண்ணியர் விருத்தம் இக்கருத்தை உறுதி செய்வதாக உள்ளது.*

பாடிய சம்பந்தர் வைகாசி மூலம் பயிலுமப்பர்
நீடிய சித்திரை மாதச் சதயம் நிறைவன் தொண்டர்
ஆடியிற் சோதி திருவாதவூரர் நல்லாணிமகம்
தேடிய சேக்கிழார் வைகாசிப் பூசஞ் சிறந்தனரே

*என்ற தனிப் பாடலும் இக்கருத்துக்கு வலு சேர்க்கிறது.*

அப்பருக்கென் பத்தொன் றருள்வாத வூரர்க்குச்
செப்பிய நாலெட்டில் தெய்வீகம்

*என்ற தனிப் பாடலிலிருந்த மாணிக்க வாசகர் 32 வயது மட்டுமே இம்மண்ணுலகில் வாழ்ந்திருந்தைத் தெரிந்து கொள்ள முடிகிறது.*

*சிவாலயங்களைப் பற்றி ஞானசம்பந்தர் குறிப்பிடும் போது ஸமயிண்டீச்சுரம் வாதவூர் வாரணாசி எனத் திருவாதவூரையும் குறிப்பிட்டிருப்பதால் கி.பி. ஏழாம் நூற்றாண்டளவிலேயே இவ்வூரில் சிவாலயம் இருந்துள்ள தென்பது உறுதியாகிறது. வாயு பூசித்த தலம் என்பதால் வாதபுரி ஈஸ்வரர் என்று இக்கோயிலிறைவனுக்குப் பெயர்*

ஏற்பட்டதாகக் காரணம் கூறுவர். 'வாதம்' என்பதற்குத் 'தர்க்கம்' என்றொரு பொருளிருப்பதால், இவ்வூரில் பல சமய தத்துவவாதிகளிலிருந்து வாதம் புரிந்தமையால் இவ்வூருக்கு 'வாதவூர்' என்று பெயரேற்பட்டதாகவும், இவ்வாதபுரியில் எழுந்தருளியுள்ள இறைவன் என்ற பொருளில் இறைவனுக்கு வாதபுரி ஈஸ்வரன் என்ற பெயர் ஏற்பட்டுள்ளதாகவும் மாற்றுக் கருத்துமுண்டு.

இத்திருக்கோயிலின் கருவறை சதுர வடிவமானது. கூடம், பஞ்சரம், சாலை போன்ற அமைப்புகளைக் கொண்டுள்ளது. கருவறைக்கு முன்னர் அர்த்த மண்டபமும், மகா மண்டபமும் உள்ளன. மண்டபத்தின் தென் பகுதியில் ஆறுகால் பீடம் உள்ளது. நடராசருக்குத் தனி சன்னிதி உள்ளது. இங்கு நூற்றுக்கால் மண்டபமும் காணப்படுகிறது. சுவாமி சன்னதிக்குத் தெற்கில் அம்மன் சன்னதி உள்ளது. பெரும்பாலும் சிவாலயங்களில் இறைவனுக்கு இடது புறத்திலேயே இறைவிக்குரிய சன்னதியை எடுப்பது மரபு. மதுரை மீனாட்சி கோயிலிலிருப்பது போலவே திருவாத வூரிலும் இறைவிக்குரிய சன்னதி சுவாமி சன்னதிக்கு வலப்புறமுள்ளது. மாணிக்கவாசகரின் தந்தையார் இச்சிவாலயத்தில் அர்ச்சகராகப் பணிபுரிந்தவர் என்றும், மாணிக்கவாசகர் இக்கோயிலுக்குத் திருப்பணி செய்த வரென்றும் கருதுவர். எனவே இக்கோயிலில் மாணிக்க வாசகரின் திருமேனி எழுந்தருளுவிக்கப்பட்டுள்ளது.

இத்திருக்கோயிலில் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு முதல் அண்மைக் காலம் வரையிலான கல்வெட்டுக்கள் பல உள்ளன. இக்கல்வெட்டுக்களிலிருந்து திருவாதவூர் தென்பறப்பு நாடு என்ற நாட்டுப் பிரிவிற்குள் இருந்தமையையும், இச்சிவாலயம், 'திருவாதவூர் உடையார் திருமறை நாயனார் கோயில்' என்று சுட்டப்பட்டு வந்தமையையும் தெரிந்து கொள்ள முடிகிறது. திருவாதவூர் கோயிலின் தேவதான இறையிலி நிலங்கள் வேத நாயக நல்லூர், வலங்கை மீகாமநல்லூர், பள்ளிக்குறிச்சியான சோணாடு கொண்ட பெருமாள் நல்லூர், திருமறை நாயக

நல்லூர், வேலங்குடியான தேவர்கள் தேவ நல்லூர், செங்குளமான நாற்பத்தெண்ணாயிர நல்லூர், காமர் மங்கலமான ஸ்ரீமாகேசுவர நல்லூர், மண்டலிகர் கம்பீர நல்லூர் எனப் பல ஊர்களில் இருந்துள்ளமையிலிருந்து பிற்காலப் பாண்டியர் காலத்தில் இத்திருக்கோயில் மிகச் சிறப்பான நிலையில் இருந்திருப்பது தெளிவாகிறது.

முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் சேரநாட்டை வெற்றி கொண்டதன் நினைவாக 'சேரனை வென்றான்' என்ற பட்டம் பூண்டான். இச்சிறப்புப் பெயரால் திருவாதவூர் சிவாலயத்தில் 'சேரனை வென்றான் சந்தி' ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதேபோன்று 'வலங்கை மீகாமன் சந்தி' என்ற பெயரிலும் ஒரு சந்தி ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் 28வது ஆட்சியாண்டளவிலேயே (கி.பி. 1296) இத்திருக்கோயிலில் அம்மன் சன்னதி இருந்துள்ளது. விக்கிரமபாண்டியன் என்பவரால் இந்நாச்சியார் எழுந்தருளுவிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. நாச்சி யாருக்கு சந்தியா தீபம் எரித்துவர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திருக்கோயிலில் சந்திரசேகரர், கௌரி ஆகிய திருமேனிகளைத் தாசியான குழைமஞ்சாள் அரசனான ஆலால சுந்தரநங்கை செய்தளித்து வீதி உலா எழுந்தருளவும் வழிவகை செய்ததாகக் கருதலாம். இந்நிகழ்வு முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 21வது ஆட்சியாண் டாகிய கி.பி. 1237ல் நிகழ்ந்துள்ளது. இத்திருக்கோயிலில், சுப்பிரமணியப் பிள்ளையார் திருமேனி, கி.பி. 14 ஆம் நூற்றாண்டளவில், ஆரணந்தொழ நின்றானான இராசகண்ட கோபாலர் செய்ய பெருமாள் பேரால் எழுந்தருளுவிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் மேற்குத் திருச்சுற்று மாளிகையில் கிழக்கு நோக்கிய நிலையில் 63 நாயன்மார்களின் உருவங்கள் கி.பி. 13ஆம் நூற்றாண்டளவில் வழிபாட்டிலிருந்துள்ளன. இன்று

இதனைப் புலப்படுத்துவனாக சைவ அடியார்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் மட்டும் எஞ்சியுள்ளன. பராக்கிரம பாண்டியனின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1315 - 1334) இத்திருக்கோயில் வழிபாட்டிற்கு நாள் ஒன்றுக்கு முக்குறுணிப்பூவும், ஆண்டொன்றுக்கு 20,000 செங்கழுநீர்ப் பூக்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இக்கோயிலில் வழிபாடு 14 ஆம் நூற்றாண்டில் மிகச் சிறப்பான நிலையில் இது இருந்தமையைப் புலப்படுத்துகிறது.

இவ்வூரிலுள்ள ஏரிக்கு உலகளந்த சோழப் பேரேரி என்ற பெயர் கி.பி. 14 ஆம் நூற்றாண்டளவில் வழங்கி வந்திருக்கிறது. இவ்வேரியில் பெரிய மடை, சிறிய மடை என்ற இரு மடைகள் பயன்பாட்டிலிருந்து வந்துள்ளன. தற்போது கோயிலுக்கு வடக்கிலுள்ள குளத்தினை மேற்சுட்டிய ஏரியாகக் கருதலாம். மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1195) மங்கலக்கோன் பாஞ்சலன் என்பவர் இக்குளத்திலமைத்துள்ள மடையை அமைத்துள்ளார். 'பாஞ்சாலராஜந்" என்ற பெயர் இதற்கு வழங்கி வந்தமையை அம்மடையிலுள்ள பாடல் கல்வெட்டொன்றிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. இம்மடை பின்னர் சிதைவுற்றிருக்கக் கூடும். முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் (கி.பி. 1225) மதுரையிலிருந்த கைக்கோளன் செயமுடையான் விரதமுடிச்சானான பராக்கிரமசிங்க தேவன் என்பவன் இம்மடையை அமைத்து அதற்கு "விக்கிரமசிங்க தேவன் மடை" என்று பெயரிட்டுள்ளான்.

இவ்வூரில் பிற்காலப் பாண்டியராட்சிக் காலத்தில், முதலியார் பராக்கிரம தேவர் என்பவரைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வந்த சைவ மடம் ஒன்றிருந்துள்ளது. இம்மடத்தினை நிர்வகிப்பதற்காக அம்பலத்தாடி நல்லூரில் இறையிலியாக நிலம் வழங்கப்பட்டிருந்திருக்கிறது.

இவ்வூரில் பிடாரி கோயிலுக்குப் பின்புறமுள்ள சதிக் கோயில், கொலை செய்யப்பட்ட தன் கணவரோடு உடன் கட்டை ஏறிய வெங்கம்மாளின் நினைவால் ஏற்படுத்தப் பட்டுள்ளதென்றும் இவ்வெங்கம்மாளின் வீரதீரச் செயலே இவ்வூருக்கு வலிமை கூட்டி வருவதாகவும் கருதப்படுகிறது. சிவன் கோயிலுக்குத் தென்புறமுள்ள தெருவில் விளக்குத் தூண் ஒன்று உள்ளது. 12.12.1911 இல், ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் இந்தியச் சக்கரவர்த்தியாக டில்லியில் முடி சூட்டிக் கொண்ட நினைவைப் போற்றும் வகையில் இவ்விளக்குத் தூண் நடப்பட்டுள்ளது.

**பனங்காடி**

மேலூர் வட்டத்தில் திருவாதவூருக்குக் கிழக்கில் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஊர் பனங்காடி. திருவாதவூர் பிராமிக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் பங்காட ஊர் என்பதே பனங்காடி ஆகியிருக்கலாம் எனக் கருதலாம். இவ்வூரில் பிற்பாண்டியர் காலத்தில் சிவன் கோயில் ஒன்றும், வீற்றிருந்த பெருமாள் என்னும் திருமால் கோயில் ஒன்றும் சிறப்பாக வழிபடப்பட்டுள்ளன. இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் உத்தம சோழ விண்ணகராழ்வார் என்று இறைவன் பெயர் குறிப்பிடப் படுகிறது. பனங்காடி என்பது தென்பறப்பு நாட்டுப் பனைங்குளம் என்று கல்வெட்டுகளில் கூறப்படுகிறது. இராசேந்திரச் சோழச் சதுர்வேதி மங்கலம் என்று சோழர் காலத்தில் இவ்வூர் அந்தணர் வாழ்விடமாக விளங்கி யுள்ளது. இவ்வூரில் இருந்த பலசேரிகளும், தெருக்களும் கல்வெட்டுகளில் இடம்பெறுகின்றன.

களவழி நாடாழ்வான் ஓலை ஆணைமூலம் இவ்வூர் கோயில் செலவுகளுக்காக நிலங்கள் கொடை அளிக்கப் பட்டன. இராசேந்திர சோழச் சதுர்வேதி மங்கலத்தின் பிடாகையாக தாமோதர மங்கலம் என்ற ஊரும் குறிப்பிடப்படுகிறது. இங்குள்ள கல்வெட்டு ஒன்றின் மூலம் அழகர்கோயிலில் உள்ள சக்கரத்தாழ்வார் கோயிலை

அமைத்தவன் துஞ்சலூருடையான் என்பதை அறிகிறோம். இச்சக்கரத்தாழ்வாருக்கு அமுதுபடி சாத்துப்படிக்காக இச்சதுர்வேதி மங்கலத்தின் கீழ் உள்ள பிடாகைகளின் நிலவரிகள் வழங்கப்பட்டன.

## கொட்டக்குடி

மேலூர் வட்டத்தில் பனங்காடிக்கருகிலுள்ள இவ்வூரில் கம்மாளக் கண்மாய் என்ற கண்மாய் உள்ளது. இக்கண்மாயின் மடைக்கருகிலுள்ள கல்வெட்டில் இருந்து, இம்மடை எம்மண்டலமுங் கொண்டருளிய குலசேகர பாண்டியனது 29வது ஆட்சியாண்டு முதல் (கி.பி. 1297) இன்று வரை இருந்து வருவதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. இக்கண்மாய் இப்பகுதியில் ஏறத்தாழ 700 ஆண்டுகளாகப் பயன்பாட்டிலிருந்து வருகிறது எனலாம்.

## ஆமூர்

மதுரையில் மேலூர் வட்டத்தில் அமைந்துள்ளது இவ்வூர். திருமோகூரிலிருந்து திருவாதவூருக்குச் செல்லும் சாலையில் அமைந்துள்ள இவ்வூர் வரலாற்று ஆவணங்களில் நல்லணி ஆமூர் எனப் பெயர் பெறுகிறது. முற்காலத்தில் சிறந்த வணிக மையமாக இருந்த இவ்வூர் இன்று மிகச் சிறிய ஊராக மாறிவிட்டது. ஐயப்பொழில் ஈசுவரம் என்ற பெயரில் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் திசை ஆயிரத்து ஐநூற்றுவர் என்னும் வணிகக் குழுவினர் இங்குக் கோயில் கட்டியுள்ளனர். பிற்பாண்டியக் கட்டடக் கலைக்குச் சிறந்த சான்றாகத் திகழும் இக்கோயில் இன்று பெரிய அளவில் சேதமுற்றுள்ளது.

முதலாம் சடையவர்மன் குலசேகரன், அவன் இளவல் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆகியோரின் காலக் கல்வெட்டுகள் இக்கோயிலின் வரலாற்றுத் தொன்மையைத் தெரிவிக்கின்றன. இவ்வூர் தென்பறப்பு நாடு என்னும் உட்பிரிவுக்குள் அடங்கியுள்ளது.

திருப்பூவனம் என்னும் தேவாரப் பாடல் பெற்ற சைவத் தலத்திற்கு இவ்வூர் தேவதானமாக ஒரு காலத்தில் விடப்பட்டுள்ளது. இங்கிருந்த சிவபிராமணர்களும், அரசியல் அதிகாரிகளும் இக்கோயிலின் வழிபாட்டிற்குச் செய்த ஏற்பாடுகள் இங்குள்ள கல்வெட்டுகளில் கூறப்படுகின்றன. அடிகள் அறியாந் காடு வெட்டி என்பவர் இக்கோயில் கருவறையின் நிலை வாசலைச் செய்தார் என்பதையும் நிலைக் கல்லிலுள்ள கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது.

## கீழவளவு

மதுரை திருப்பத்தூர் சாலையில் மதுரையிலிருந்து சுமார் 45 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூருக்குச் சற்று முன்பாக உள்ள குன்றில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்தே சமண முனிவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். இங்குள்ள குகைத் தளத்தில் கீழே படுக்கைகளும், பாறையின் மேல் முகப்பில் கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. குகைத் தளத்துக் கற்படுக்கைகள் நன்கு வளவளப்பாகத் தேய்த்தமைக்கப்பட்டுள்ளன. குகைத் தளத்தின் முகப்புப் பகுதியில் புருவம் வெட்டப்பட்டு, மழைநீர் குகைத் தளத்திற்குள் நுழைந்து விடாதுவடியும்படி செய்யப்பட்டுள்ளது.

"உப[ச] அன் தொண்டி[ல] வோன் கொடு பளி இ"

என்ற வாசகம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டுத் தமிழ் பிராமி எழுத்துக்களில் வெட்டப்பட்டுள்ளது. தொண்டியைச் சேர்ந்த இ[ல] வோன் இப்பள்ளியை உருவாக்கி அளித்துள்ளமையை இதிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. சங்க காலத்தில் தொண்டிக்கும் இவ்வூருக்கு மிடையே தொடர்பிருந்திருப்பதையும் இக்கல்வெட்டுப் புலப் படுத்துகிறது.

குகைத் தளத்தின் மேற்புறத்தில் மூன்று தீர்த்தங்கரர் உருவங்கள் அமர்ந்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளன.

குகையில் கீழ்ப்புறத்தில் ஆறு தீர்த்தங்கரர் சிற்பங்கள் உள்ளன. இவ்வாறுள் இரண்டு சிலைகள் நின்ற நிலையிலுள்ள பார்சுவநாதர் உருவங்களாகக் காணப்படு கின்றன. இங்குள்ள சிற்பங்கள் மீது வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. தற்பொழுது அவை ஒளி இழந்து காணப்படுகின்றன. பச்சை, சிவப்பு, மஞ்சள், கறுப்பு வண்ணங்களில் இவ்வோவியங்கள் காணப்படுகின்றன. இவற்றிலிருந்து இப்பகுதியில் கி.பி. 9-10ஆம் நூற்றாண்டுகளில் சமண சமய வழிபாடு மிகவும் சிறப்பான நிலையிலிருந் திருப்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

இத் திருமேனிகளில் ஒன்றைச் சங்கரன் ஸ்ரீ வல்லபன் என்பவன் செய்வித்து நாள்தோறும், அத்திருமேனிக்கு முன்னாழி அரிசியால் திருவமுது படைத்துவர வழிவகை செய்திருப்பதோடு, திருநந்தா விளக்கெரிப்பதற்காக ஐம்பது ஆடுகளையும், தானமாகத் தந்துள்ளார். பஞ்ச பாண்டவர் மலை அடிவாரத்திலுள்ள குகைத் தளத்திற்கு அருகிலுள்ள பாறையில் ஸ்ரீகட்டி என்பவர் கல்லுரல் அமைத்தளித் துள்ளார். தமிழ் பிராமி கல்வெட்டுள்ள குகைத் தளத்திற்கு அருகில் ஸ்ரீகாளன் அரட்டி என்பவர் கல்லுரல் அமைத்தளித்துள்ளார்.

## மேல வளவு (பறம்புக் கண்மாய்)

மேலவளவிற்கு வடமேற்கேயுள்ள சோமகிரிமலை, முறிமலை என்ற இரண்டு மலைகளுக்கிடையில் எடுக்கப் பட்டுள்ள கரையுடன், புறம்புக் கண்மாய் என்ற கண்மாயுள்ளது. இக்கண்மாயின் கலிங்குக்கு அருகில் உள்ள பாறையில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட் டொன்றிலிருந்து, பிற்காலப் பாண்டியர் மரபைச் சேர்ந்த முதலாம் மாறவர்மனின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1238-39 அளவில்) கோவூருடையான் ஆள்வான் சக்கரக்கையன் என்ற அலுவலரால், இக்கண்மாயின் கரை உயர்த்தப் பட்டுள்ளமையையும், கண்மாயின் உள்வாய்ப் பகுதிகளில்

கல்லிட்டுப் பரப்பி கண்மாய் பலப்படுத்தப்பட்டுள்ளமையையும், தெரிந்து கொள்ள முடிகிறது. மேலும், இக்கண்மாய் அமைந்துள்ள ஊர்ப் பகுதிக்குக் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் 'பறம்பான நாராயண மங்கலம்' என்ற பெயர் வழங்கி வந்திருப்பதையும் இக்கல்வெட்டிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. இங்குள்ள மற்றொரு கல்வெட்டிலிருந்து விசயநகர வேந்தர் விருப்பாச்சராயர் காலத்திலும் (கி.பி. 15 ஆம் நூ.ஆ) இவ்வூர்ப்பகுதிக்குப் புறம்பான திருநாராயணமங்கலம் என்ற பெயர் வழங்கியிருப்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. எனவே, இன்று இக்கண்மாய்க்கு வழங்கி வரும் 'பறம்புக் கண்மாய்' என்ற பெயருக்குப் பறம்பு என்ற ஊரில் அமைந்துள்ள கண்மாய் எனப் பொருள் கொள்ளலாம். விசயநகர வேந்தர் காலத்தில் இக்கண்மாயின் பராமரிப்புப் பணிக்கென பணியாளர் இருந்ததையும் இக்கல்வெட்டி லிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. இவ்வூரின் பெயரான 'பறம்பு' என்பதிலிருந்தே வடபறப்பு நாடு, தென் பறப்பு நாடு ஆகிய பண்டைய நாட்டுப் பிரிவுகளின் பெயர்கள் உருப் பெற்றுள்ளன எனலாம்.

## மேலூர்

கி.பி. 18ஆம் நூற்றாண்டில் முகமது யூசுப்கானால் மேலூரில் கோட்டை ஒன்று கட்டப்பட்டுள்ளது. கேப்டன் ரும்லி மேலூர்ப் பகுதியில் இரண்டு முறை தாக்குதல் நடத்தி ஏறத்தாழ 5000 பேரைக் கொன்றுள்ளார். கலோனல் வில்லியம் புல்லர்ட்டன் 1783 அளவில் மேலூர்ப் பகுதியைத் தாக்கியுள்ளார். அமெரிக்கன் மதுரை மிஷன் என்ற கிறித்தவ சமயப் பிரிவின் மையம் மேலூரில் 1857 அளவில் அமைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மேலூரில் அமெரிக்கன் மிஷன் பள்ளியும் உருப்பெற்றது. மேலூரில் 1879 லிருந்து மருத்துவமனை செயல்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

**மாங்குளம்**

*மதுரை மேலூர் சாலையில் மதுரைக்குக் கிழக்கே 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது மாங்குளம் என்னும் சிற்றூர். இவ்வூரில் உள்ள மலை 'கழுகுமலை' என்றும் 'ஓவாமலை' என்றும் பெயர் பெறுகிறது. இங்கு நான்கு இயற்கையான குகைகளில் சமணத் துறவியர் வாழ்ந்துள்ளனர். இங்குப் பிராமிக் கல்வெட்டுகள் வெட்டப் பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இவையே தமிழகத்தில் கிடைக்கும் கல்வெட்டுகளுடன் மிகத் தொன்மையான வையாகும். சங்க காலப் பாண்டிய மன்னர்களில் நெடுஞ்செழியன் எனப் பெயர் கொண்டவர்கள் இருவர். அவர்களில் ஒரு மன்னன் இங்குக் கற்படுக்கைகள் செய்து கொடுத்ததாக இங்குள்ள கல்வெட்டு கூறுவது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.*

1. கணிய் நந்த அஸிரிய் இ குவ் அன்கே தம்மம் இத்தாஅ நெடுஞ்சழியன் பணஅன் கடல்அன் வழுத்திய் கொட்டுபித்தஅ பளிஇய்
2. கணிய் நந்தஸிரிய் குஅன் தமம் ஈதா நெடுஞ்சழியன் ஸாலகன் இளஞ்சடிகன் தந்தைய் சடிகன் சேஇய பளிய்
3. கணிஇ நதஸிரிய் குவன்... வெள்அறைய் நிகமது காவிதிஇய் காழிதிக அந்தை அஸுதன் பிணஉ கொடுபிதோன்
4. கணிய் நத்திய் கொடிய்அவன்
5. சந்தரிதன் கொடுபிதோன்
6. வெள்அறை நிகமதோர் கொடிஓர்

*மன்னன் நெடுஞ்செழியனும் அவனுடைய சகலன் இளஞ்சடிகனும் அவனுடைய தந்தை சடிகனும் கற்படுக்கைகள் அமைத்துக் கொடுத்தனர். இவர்கள் தவிர வெள்ளறை என்னும் கிராமத்தைச் சேர்ந்த வணிகக் குழுவினர் (நிகமம்) கற்படுக்கைகள் அமைத்தனர். வெள்ளறை என்பது இப்போது வெள்ளரிப்பட்டி என்னும்*

*பெயரில் வழங்கப்படுகிறது. சந்தரிதன் என்னும் செல்வந்தனும் இத்தகைய தானத்தைச் செய்துள்ளான். இங்குச் செங்காவியில் எழுதிய தொன்மையான ஓவியக் குறியீடுகளும் கிடைத்துள்ளன.*

## அரிட்டாபட்டி

*மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் அமைந் துள்ளது இச்சிற்றூர். மதுரையிலிருந்து திருச்சி செல்லும் சாலையில் 25 கிலோ மீட்டர் தொலைவில் சற்று உள்ளடங்கி அமைந்துள்ள இவ்வூர் வரலாற்றுச் சிறப்புமிக்க ஊராகும். இவ்வூரில் இரண்டு தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. இவை இரண்டும் கி.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக் கணிக்கப்பட்டுள்ளன.*

*இங்குள்ள கழிஞ்சமலை என்னும் மலைத் தொடரில் இயற்கையாக அமைந்த குகையில் சமணர் உறைவிடம் உருவாக்கப்பட்டு அதன் நெற்றியில் இவ்விரண்டு கல்வெட்டுகளும் பொறிக்கப்பட்டுள்ளன. பொது மக்கள் இக்கற்படுக்கைகள் கொண்ட குகையைப் பஞ்சபாண்டவர் படுக்கை என அழைக்கின்றனர்.*

1. நெல் வெளிஇய் கிழிவன் அதினன் வெளியன் முழாகை கொடுபிதோன்
2. இலஞ்சிய்எளம் பேராதன் மகன் எமயவன் இவ் முழஉகைய் கொடுபிதவன்

*என்பன இங்குள்ள தமிழ் பிராமிக் கல்வெட்டுகளின் பாடம் ஆகும். சங்ககாலப் பாண்டியர்களின் பேராதரவில் இக்கற்படுக்கைகள் கொடையளிக்கப்பட்டுள்ளன என்பதைக் கல்வெட்டுகளால் அறிகிறோம்.*

*இக்குகைக்கு வலதுபுறமாக சுமார் 20 அடி தொலைவிலேயே பாறையில் மகாவீரர் சிற்பம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்றும் செதுக்கப்பட்டுள்ளது.*

1. ஸ்ரீ திருப்பிணையன் மலைப் பொற்
2. கோட்டுக் கரணத்தார் பேரால்
3. அச்சணந்தி செயவித்த தி
4. ருமேனி பாதிரிக் குடியார் ரக்ஷை

*என்ற இக்கல்வெட்டின் மூலம் இவ்வூரின் பெயர் பாதிரிக்குடி என்பதும் இம்மலை திருப்பிணையன் மலை எனப் பெயர் பெற்றிருந்தது என்பதும் பெறப்படுகிறது. மதுரைப் பகுதியில் கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டின் சமணம் மறுமலர்ச்சி பெற்று எழக் காரணமாக இருந்த அச்சணந்தி என்னும் துறவியே இச்சிற்பத்தையும் உருவாக்கியுள்ளார். பொற்கோட்டுக் கரணத்தார் என்னும் ஒரு குழுவினர் பேரால் இச்சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் மீது நுண் சுதை பூசப்பட்டு ஓவியமும் தீட்டப்பட்டுள்ளது. பண்டைய ஓவியக் கலைக்கும் இவ்வூர் சிறிய பங்களிப்பைத் தந்துள்ளது.*

*இவ்வூரில் கழிஞ்சமலையின் இன்னொரு பகுதியில் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த குடைவரைக் கோயில் ஒன்று அமைந்துள்ளது. இன்று இப்பகுதி மக்களால் இடைச்சி மண்டபம் என்று அழைக்கப்படும் இக்கோயில் தமிழக அரசின் தொல்லியல்துறையால் வரலாற்றுச் சின்னமாக அறிவிக்கப்பட்டுச் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இக்குடைவரை ஒரு சிறிய சதுரமான கருவறையுடனும் சிறிய முன்மண்டபத்துடனும் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு வாயிற்காவலர்கள் சிற்பங்களும் பக்கத்திற்கு ஒன்றாக அமைந்துள்ள மாடங்களில் வலப்புறம் இலகுலீச சிவன் சிற்பமும் இடப்புறம் விநாயகர் சிற்பமும் செதுக்கப்பட்டுள்ளன.*

*இக்கோயிலின் கட்டடக் கலை அமைப்பாலும் சிற்ப உருவ அமைதிகளாலும் இது கி.பி 7-8 ஆம் நூற்றாண்டில் முற்பாண்டியர்களால் அமைக்கப்பட்டது எனக் கருதப்படு கிறது. இங்குள்ள லகுலீசர் சிற்பம் தமிழகத்திலேயே எங்கும்*

காணப்படாத ஒன்றாகும். சுகாசனத்தில் அமர்ந்து ஒரு கரத்தை தொடை மீது வைத்தும் ஒரு கரத்தில் தண்டம் ஒன்றைத் தாங்கியும் உள்ளார். லகுலீச பாசுபதம் என்னும் சைவ சமயப் பிரிவு கி.பி. 7-8ஆம் நூற்றாண்டளவிலேயே பாண்டிய நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்தமைக்கு இது சான்றாகும்.

மேலும் இவ்வூரில் முற்றிலும் சிதைந்து அடித்தளம் மட்டுமே எஞ்சிய நிலையில் சிவன் கோயில் ஒன்று உள்ளது. இதன் அடித்தளத்தில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விக்கிரம பாண்டியன் காலக் கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்கல்வெட்டின் மூலம் இவ்வூர் பாதிரிக்குடி என்பதும் இதன் மாற்றுப் பெயர் ஐநூற்றுவப் பெருந்தெரு என்பதும் அறியப்படுகிறது. இவ்வூர் தென்பறப்பு நாடு என்னும் நாட்டுப் பிரிவினுள் அமைந்திருந்தது.

இச்சின்னங்களின் மூலம் இவ்வூரின் வரலாறு கி.மு. 3 ஆம் நூற்றாண்டு முதலே தொடங்குகிறது என்பதையும், சைவமும், சமணமும் தழைத்திருந்தன என்பதும் உணரப் படுகிறது. கி.பி. 13ஆம் நூற்றாண்டில் வணிகமும் செழித்து வளர்ந்துள்ளது என்பதும் அறியப்படுகிறது. சமய வரலாற்றிலும் கோயில் கலை வரலாற்றிலும் இவ்வூருக்கு முக்கியப் பங்கு உள்ளது.

### அருவிமலை

மதுரை - திருச்சி நெடுஞ்சாலையில் கருங்காலக் குடிக்கருகில் அருவிமலை என்றழைக்கப்படும் செங்குத்தான மலை உள்ளது. இம்மலையின் உச்சியில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பிற்காலப் பாண்டியன் கோயிலொன்றுள்ளது. இக்கோயிலுக்குச் செல்ல சில இடங்களில் படிகள் வெட்டப்பட்டுள்ளன. இங்குள்ள கல்வெட்டுக்களிலிருந்து இக்கோயிலிலெழுந்தருளியுள்ள இறைவனுக்குத் 'திருமேலழகிய பாண்டிய நாயனார்', 'திருமேலாழி நாயனார்', 'திருமேலாழி ஆண்டார்',

'திருமேலாழியாண்ட நாயனார்' என்று பெயர்கள் வழங்கி வந்திருப்பதையும், ஊர்ப்பகுதிக்குப் பாக்குடி என்ற பெயர் வழங்கி வந்திருப்பதையும் தெரிந்து கொள்ள முடிகிறது. இந்தப் பாக்குடி வட பறப்பு நாட்டுப் பகுதியிலமைந் திருக்கிறது. 'அருவிக்குடி' என்ற ஊர்ப் பெயரும் கல்வெட்டில் காணப்படுகிறது. இப்பெயரை ஒட்டியே இன்று இம்மலைக்கு அருவிமலை என்ற பெயர் வழங்கி வருவதாகக் கருதலாம்.

சிவன் கோயிலுக்குச் செல்லும் வழியில், மலையின் செங்குத்தான பகுதியில் எளிதில் ஏறிச் செல்வதற்காக வெட்டப்பட்டுள்ள படிகளுள் பதினைந்து படிகளைக் கண்டக நாடாழ்வானான ஆலால சுந்தரப் பெருமாள் என்பவரும், பதினேழு படிகளைக் கோதை சாத்தன் என்பவரும் வெட்டுவித்துள்ளனர். அருவிமலைப் பகுதியிலுள்ள பழிப் பிணிக் கண்மாய்ப் பகுதியில் 'அணிஞ்சான் பெரும்மாளான கண்டக நாடாழ்வான் பேர்' என்ற வாசகம் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டு உள்ளதிலிருந்து பதினைந்து படிகளை அமைத்த அதே கண்டக நாடாழ்வானே அவன் பெயரால் இப்பழிப்பிணிக் கண்மாயையும் அமைத்துள்ளார் எனக் கருதலாம்.

பிற்காலப் பாண்டியரின் ஆட்சிக் காலத்தில் அருவிமலை மீதுள்ள சிவன்கோயில் சிறப்பான நிலையில் இருந்துள்ளது. முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் ஆட்சிக் காலத்தில் தட்டார்கள் இருவர் அம்மாண்டி ஏரிப் பகுதியில் இக்கோயிலுக்கு நிலமளித்துள்ளனர். இதே குலசேகரனின் ஆட்சிக் காலத்தில் தச்சர்கள் சிலரும் இக்கோயிலுக்கு நிலமளித்துள்ளனர். இக்கோயிலிலுள்ள பிற்காலப் பாண்டியன் கல்வெட்டுக்கள் பலவும் இக்கோயிலுக்கு நிலம் வழங்கப்பட்ட செய்திகளைத் தெரிவிப்பதால், 13ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் இக்கோயில் சிறப்பான நிலையிலிருந்துள்ளமை உறுதியாகிறது.

## கருங்காலக்குடி

மதுரையிலிருந்து மேலூர், கொட்டாம்பட்டி வழியாகத் திருச்சி செல்லும் சாலையில் கொட்டாம் பட்டிக்கு முன்னர் இவ்வூர் அமைந்துள்ளது. மதுரை மாவட்டத்தில் சங்க காலத்திலிருந்தே சிறப்புடன் விளங்கி வரும் ஊர்களுள் கருங்காலக்குடியும் ஒன்று. இவ்வூரில் வரலாற்றுக்கு முந்திய காலத்து மனிதனின் ஈமச் சின்னங்கள் கண்டறியப் பட்டுள்ளதும் பாறை ஓவியங்கள் கண்டறியப் பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வூரில் கிழக்குப் பகுதியிலுள்ள குன்றில் பஞ்ச பாண்டவர் படுக்கை என்றழைக்கப்படும் இடத்தில் கற்படுக்கைகள் அமைக்கப் பட்டுள்ளன. சமண முனிவர்களுக்காக இக்கற்படுக்கை களை ஏழையூரைச் சேர்ந்த அரிதன் என்பவர் கி.மு. 2 ஆம் நூற்றாண்டில் அமைத்துக் கொடுத்த செய்தி குகைத் தளத்தின் முகப்பில் கல்வெட்டாகப் பொறிக்கப் பட்டுள்ளது. இக்குகைத் தளத்தின் மேற்புறமுள்ள பாறையில் கிழக்கு நோக்கிய நிலையில் சமண தீர்த்தங்கரரின் திருமேனி ஒன்று புடைச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. கி.பி. ஒன்பது - பத்தாம் நூற்றாண்டுக் கலைப்பாணியிலான இத்திருமேனி அச்சணந்தியால் செய்விக்கப்பட்டுள்ள செய்தி அத்திருமேனிக்கருகிலேயே வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

இப்பஞ்சபாண்டவர் குகைத் தளத்தின் மேற்புறமுள்ள குகைத்தளத்தில் பாண்டிய மன்னனின் அதிகாரியாக விளங்கிய பள்ளித்தரையன் என்பவரின் செயல்களையும் சிறப்புகளையும் விளக்கிக் கூறும் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டொன்றுள்ளது. 'பள்ளித் தரையன்' என்ற பெயர் சமணப் பள்ளியோடு தொடர் புடையவர் என்ற தொனியிலமைந்திருப்பது கவனத் திற்குரியது.

இவ்வூரிலுள்ள முத்தாலம்மன் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களிலிருந்து முதலாம் சடையவர்மன்

*சுந்தரபாண்டியனின் ஆட்சிக் காலத்தில், அழகப்பெருமாள் விண்ணகர் என்ற பெருமாள் கோயிலொன்றிருந்ததைத் தெரிந்து கொள்ள முடிகிறது. இக்கோயிலுக்கு வழங்கப் பட்ட நிலங்களில் ஒன்று பெருவழிக்கு மேற்கிலிருந்ததாக ஒரு கல்வெட்டு சுட்டுவதிலிருந்து, இப்பகுதி பிற்காலப் பாண்டியராட்சிக் காலத்தில் இருந்தே பெருவழியி லமைந்திருந்தமை தெளிவாகிறது. இப்பெருமாள் கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் ஆளப்பிறந்த சோழச் சதுர்வேதி மங்கலத்திலும், சுரபி நாட்டு சூழும் அரசர் கண்டன் பகுதியிலும் இருந்துள்ளன. சுரபி நாட்டு சூழும் அரசர் கண்டனின் தென்பகுதியிலிருந்த பகையனேரி இப்பெருமாளின் பெயரால் அழகப்பெருமாள் நல்லூரென் றழைக்கப்பட்டுள்ளது. இந்த அழகப் பெருமாள் நல்லூரில் இப்பெருமாளுக்கான திருநாமத்துக் காணியாக இறையிலி நிலங்கள் இருந்துள்ளன.*

*இவ்வூரருகிலுள்ள வயலிப்பாறையின் வடசரிவிலுள்ள கல்வெட்டொன்றிலிருந்து மாடக்குடியைச் சேர்ந்த சீராளன் திருவெண்காடுடையான் என்பவர் கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டளவில் இவ்வூர் குளத்தில் கலிங்கமைத்த செய்தியையும் அவர் கணக்கராகப் பணியாற்றி வந்த செய்தியையும் தெரிந்து கொள்ள முடிகிறது. இக்கல் வெட்டிலிருந்து கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டளவிலிருந்து இன்று வயலிப்பாறை அருகிலுள்ள குளம் நீர்ப்பாசனத் திற்குப் பயன்படுத்தப்பட்டு வருவதும் தெளிவாகிறது. வயலிப்பாறையின் தென்சரிவிலுள்ள கல்வெட்டிலிருந்து, இப்பகுதியில் கி.பி. 1713-22 ஆம் ஆண்டளவில் மாமரம் வளர்க்கப்பட்டமையையும், கிணறு தோண்டப் பட்டமை யையும் அறியப்படுகிறது. கி.பி. 18 ஆம் நூற்றாண்டளவில் வத்தலைராவுத்தர் என்பவர் இக்குளத்திற்கு மடையமைத் துள்ளார்.*

இவ்வூருக்கருகிலுள்ள உப்புச்சுனைப் பாறையின் கீழ்ப்புறமுள்ள கல்வெட்டு ஒன்றிலிருந்து பிரான்மலையைச் சேர்ந்த சுந்தர பாண்டியப் பிச்சாசாரி என்ற கண்மாளரும், சேந்தன் கணக்கப்பிள்ளை அழகப்பன் என்பவரும் இந்த உப்புச் சுனைக்குக் கி.பி. 18 ஆம் நூற்றாண்டளவில் கல்கட்டி வைத்ததைத் (பாதுகாப்புச் சுவர்?) தெரிந்து கொள்ள முடிகிறது.

உப்புச்சுனைப் பாறையின் மேல்பக்கச் சரிவிலுள்ள கல்வெட்டிலிருந்து கி.பி. 1604 அளவில் நத்தம் பகுதியில் இருந்து ஆட்சி புரிந்த பாளையக்காரரான இலிங்கம நாயக்கரின் அதிகாரியாக இருந்த சிங்காரராவுத்தர் என்பவர் கள்ளரைப் பிடித்த செய்தி காணப்படுகிறது. இதிலிருந்து கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் துவக்கத்தில் கள்ளர் பயத்தைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது புலனாகிறது.

**திருச்சுனை**

மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் மேலூரிலிருந்து திருச்சி செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது இவ்வூர். இவ்வூரில் திரு அகத்தீசுவரம் உடையார் என்னும் புகழ் பெற்ற சிவன் கோயில் உள்ளது. பிற்காலப் பாண்டியர்களால் ஆதரிக்கப்பட்ட இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளின் மூலம் இவ்வூரின் பழைய பெயர் சுழிவரகண்டன் என்று அறிகிறோம். இது சுரநாடு என்னும் உள்நாட்டுப் பிரிவுக்குள் அடங்கியிருந்தது. இவ்வூரவர் ஒன்றாகக் கூடி செயல்பட்டு இங்குள்ள கோயில் நிருவாகத்தினைச் செவ்வனே செய்துவந்துள்ளனர். முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு ஒன்றின் மூலம் இவ்வூர் பிரான்மலையிலுள்ள திருக்கொடுங்குன்றமுடைய நாயனார் கோயிலுக்கு விடப்பட்ட ஊராகவும் அதற்கென இவ்வூரில் சூலக்கல் நாட்டப்பட்டிருந்தது என்பதும் தெரிய வருகிறது. அமராபதி வேளார் என்னும் குறுநிலத் தலைவர் இப்பகுதியின் முக்கிய அதிகாரியாக 13ஆம் நூற்றாண்டில்

திகழ்ந்துள்ளார். இவர் இவ்வூரில் இருந்த வாளிலார் என்னும் ஒருவகை வீரர்களைத் தம் கட்டுப்பாட்டில் கொண்டு இக்கோயில் வழிபாடு, நில நிர்வாகம் ஆகியவற்றை மேற்கொண்டுள்ளார். இவ்வூரில் சடையவர்மன் குலசேகரன், மாறவர்மன் சுந்தரன் ஆகியோர் காலக் கல்வெட்டுகள் உள்ளன. துவராபதி நாட்டு எறிபடை நல்லூர் (இன்றைய நத்தம்) பகுதியிலிருந்தும், அதன் அண்மைக் கிராமங் களிலிருந்தும் பல முக்கிய அதிகாரிகளும், பிரமுகர்களும் வந்து கோயிலின் வளர்ச்சியிலும் நிர்வாகத்திலும் பெரும் பங்காற்றி உள்ளனர் என்பதைக் கல்வெட்டுகள் கொண்டு அறிகிறோம்.

**தருக்காக்குடி**

மதுரையிலிருந்து திருச்சி செல்லும் சாலையில் கருங்காலக்குடிக்கும் கொட்டாம்பட்டிக்குமிடையில் சிங்கம்புணரி பிரிவுச் சாலை அருகில் மேற்குப் புறமாக செல்லும் சாலையில் சென்றால் தருக்காக்குடியை அடையலாம். இவ்வூரில் பிற்காலப் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்ட சிவாலயமொன்றுள்ளது. பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்களில், இவ்வூரின் பெயர் திருக்காய்க்குடி என்று சுட்டப்பட்டுள்ளது. இவ்வூர் பிற்காலப் பாண்டியராட்சிக் காலத்தில் சுரநாடு என்ற நாட்டுப் பிரிவிற்குட்பட்டிருந்திருக்கிறது. இங்கெழுந்து அருளியுள்ள சிவபெருமான், சுரநாட்டுத் திருக்காய்க்குடியில் உடையார் திருக்கோடீசுவரமுடைய நாயனார் என்ற அழைக்கப்பட்டுள்ளார். பிற்காலத்தில் இவ்வூருக்கு வேழகுலநார்ரை அன நல்லூர் ஆன தறுக்காக்குடி என்று பெயரும் தருக்காய்க்குடி என்ற பெயரும் வழங்கியுள்ளன. திருக்காய்க்குடி என்ற பெயரே நாளடைவில் தருக்காய்க் குடி என்றும் தறுக்காக்குடி என்றும் மருவியுள்ள தெனலாம். விசயநகர வேந்தர் காலத்தில் இவ்வூர் துவாராபதி நாடு என்ற நாட்டுப் பிரிவிற்குட்பட்டு இருந்துள்ளது.

*பிற்காலப் பாண்டியராட்சிக் காலத்தில் இப்பகுதியில் சூழும் அரைசர்கண்டன் (திருச்சுனை) மேன்மலையூர் அறுநூற்றுவனேரி, வீரகண்டன் ஆகிய ஊர்களில் ஊரவைகள் செயல்பட்டுள்ளன.*

*திருக்கோடீசுவரமுடையார் திருக்கோயில் தர்க்காகுடி ஊருக்கு வெளியே, ஊரணிக் கரையில் காணப்படுகிறது. கி.பி. 13ஆம் நூற்றாண்டளவில் இத்திருக் கோயிலில் முருகன், விநாயகர், பைரவர் போன்ற சிறு தெய்வங்களுக்குச் சிற்றாலயங்கள் இருந்துள்ளன. இன்றைய தினம் இத்திருக் கோயில் கிழக்கு நோக்கிய கருவறை, அர்த்த மண்டபத் துடன் சிறிய கோயிலாகத் திகழ்ந்து வருகிறது.*

*அருவியூர் நாலுநகரத்து பூண்டி உடையான்... பாண்டியப் பெருமாள் என்பவர் திருக்கோடீசுவர முடையார் கோயிலில் அம்மனை (நாச்சியார் திருக்காமக் கோட்டமடந்தையை) எழுந்தருளப் பண்ணியுள்ளார். விசயநகர வேந்தர் சதாசிவராயர் காலத்தில் இவ்வம்மனுக்கு மகாபூசை நடத்தி வரப்பட்டுள்ளது. இந்த மகாபூசை நாயக்கர் ஒருவரின் தன்மத்தில் நடைபெற்று வந்துள்ளது.*

*திருக்கோடீசுவரமுடையார் திருக்கோயிலில் பிற்காலப் பாண்டியர் ஆட்சிக் காலத்தில், ஐப்பசித் திங்களில் (விஷு நாளில்?) ஒரு கல நெல்லில் அமுது செய்விக்கப்பட்டுள்ளமை, பிற்காலப் பாண்டியராட்சிக் காலத்தில் இக்கோயில் வழிபாடு மிகச் சிறப்பான நிலையில் இருந்தமையைப் புலப்படுத்துகிறது.*

*சிவன் கோயிலில் பைரவர் சன்னதிக்கருகில் தனிக் கல்லிலுள்ள 14ஆம் நூற்றாண்டு கல்வெட்டிலிருந்து இவ்வூரைச் சேர்ந்த கடகமறுக்கிகள் தங்கள் பெயரால் பால்கலசம் வைத்தமையைத் தெரிந்து கொள்ள முடிகிறது.*

## சொக்கலிங்கபுரம்

மேலூர் வட்டத்தில் கொட்டாம்பட்டிக்கருகில் அமைந்துள்ள இவ்வூரில் முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் காலத்துச் சிவாலயமுள்ளது. பிற்காலப் பாண்டியர் ஆட்சிக் காலத்தில் இவ்வூருக்கு மேன்மலையூர் என்ற பெயர் வழங்கியுள்ளது. இவ்வூர் சுரநாடு என்ற நாட்டுப் பிரிவிற்குட்பட்டிருந்துள்ளது. சிவாலயத்திற்கு அழகிய சே(ா)ழீசுவரமுடையார் கோயில் என்ற பெயர் வழங்கி வந்துள்ளது. வஞ்சியூர்குளம், அமுதனேரி, துறையூர்க்குளம், புரவேரிக்குளம், முதலிய குளங்கள் இவ்வூர்க் கல்வெட்டில் சுட்டப்பட்டுள்ளன. இவையனைத்தும் ஏறத்தாழ 700 ஆண்டுகாலப் பழைமையுடையவை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இப்பகுதியிலுள்ள ஒரு ஊரின் பெயர் அறுநூற்றுவனேரி என ஏரியின் பெயரால் அமைந்துள்ளமையும் கவனத்திற்குரியது. எனவே இப்பகுதி குளங்கள் நிறைந்த பகுதி என்பது தெளிவு. இவ்வூர் சிவாலயத்திற்குத் திருப்படி மாற்றுள்ளிட்டு வேண்டும் நிவந்தங்களுக்கென்றும், திருக்காமக் கோட்டமுடைய நாச்சியாருக்கென்றும், பிற்காலப் பாண்டியப் பெருவேந்தர் காலத்தில் இறையிலியாக நிலங்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும் கோயில் நந்தவனத்திற்காக நந்தவனப்புற நிலங்கள் வழங்கப்பட்டிருந்தன. இக்கோயில் நந்தவனங்களுள் ஒன்றிற்கு 'அரசு கண்டராமன்' என்ற பெயர் வழங்கியிருக்கிறது.

மேல்மலை ஊரவையினர், தங்கள் ஊர்ப்பகுதி யிலிருந்த புரவேரிக் குளத்தினை அனுபவித்து வந்த ஒருவர் அதற்குரிய கடமை, குடிமை முதலிய வரிகளைச் செலுத்தாமல் இராஜ துரோகம், நாட்டுத் துரோகம், ஊர்த் துரோகம் செய்ததை அறிந்து அப்புரவேரிக் குளத்தினை அழகிய சோழீசுவரமுடையாருக்கு நிலவிலைப் பிராமணம் பண்ணிக் கொடுத்துள்ளனர். இந்நிகழ்வு கி.பி. 1279 இல் நடந்துள்ளது.

**மருதூர்**

மேலூர் வட்டத்திலுள்ள மருதூரில் பிற்காலப் பாண்டியராட்சிக் காலத்தில், கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பெருமாள் கோயில் ஒன்றுள்ளது. இவ்வூர் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் பனங்கர்டியான இராசேந்திர சோழச் சதுர்வேதி மங்கலத்தின் மேல்பிடாகையாக இருந்துள்ளது. பெருமாள் கோயில் கண்ணாழ்வார் கோயில் என்றழைக்கப்பட்டுள்ளது. பெருங்காரைக்குடி என்றழைக்கப்பட்ட குடிதாங்கி நல்லூர் என்ற ஊரும் கேசவனேரிகுளம் என்ற குளமும் இவ்வூர்க் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன. பிற்காலப் பாண்டியர் காலத்தில் கண்ணாழ்வார் கோயிலுக்கு இறையிலியாக நிலங்கள் விடப்பட்டிருந்தன.

# 17. வாடிப்பட்டி வட்டம்

## திருவேடகம்

மதுரையிலிருந்து சோழவந்தான் செல்லும் சாலையில் வைகை ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது இவ்வூர். ஏடகநாதர் கோயில் என்னும் தேவாரப் பாடல் பெற்ற கோயில் ஒன்று இங்குள்ளது. ஆனால் இன்று அக்கோயில் முற்றிலும் புதுப்பிக்கப்பட்டுவிட்டது. தற்போதைய கோயில் கடந்த நூற்றாண்டில் செட்டிநாட்டு வணிகர்களால் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. திருச்சுற்று மதிலில் மட்டும் கி.பி. 13 ஆம் நூற்றாண்டுத் துண்டுக் கல்வெட்டுகள் சில உள்ளன. அவை வரலாற்றுச் செய்திகள் எதையும் தருவனவாக இல்லை. சமணர் - சைவர் வாதில் வைகை ஆற்றில் மதுரையில் விடப்பட்ட ஏடு எதிர் நீந்திச் சென்று இங்கு எடுக்கப்பட்டதால் திருவேடகம் எனப் பெயர் பெற்றது என்பர். இங்கு ஆற்றங்கரை கல் படித்துறையில் சில புடைப்புச் சிற்பங்கள் இக்கதையை உணர்த்துவதாக 19ஆம் நூற்றாண்டில் அமைக்கப் பட்டுள்ளன.

## சோழவந்தான்

இன்று சோழவந்தான் என்று பெயர் பெறும் இவ்வூர் முற்பாண்டியர் காலத்தில் சோழாந்தகச் சதுர்வேதி மங்கலம் என்று வழங்கப்பட்டது. சோழாந்தகன் என்னும் பெயர் முற்பாண்டியர் காலத்திய சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் (946-966 கி.பி) சிறப்புப் பெயராகும். பாகனூர்க் கூற்றத்தில் உள்ள தென்கரை, சோழவந்தான்

*ஆகிய சில ஊர்களை இணைத்துச் சோழாந்தகச் சதுர்வேதி மங்கலம் உருவாக்கப்பட்டது. சோழாந்தகன் நாழி, சோழாந்தக நந்தவனம் என இம்மன்னன் பெயர் பலவற்றுக்கும் இடப்பட்டது. சோழாந்தப் பல்லவரையர், சோழாந்தக பிரம்மராயர் என அதிகாரிகள் சிலரும் பெயர் வைத்துக் கொண்டனர். சோழவந்தானுக்கு இராசராசன் காலத்தில் சனநாதச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயர் ஏற்பட்டது. இங்கிருந்த பெருமாள் கோவில் இராசராசனின் சிறப்புப் பெயரால் 'சன நாதவிண்ணகர ஆழ்வார் கோயில்' எனப் பெயர் பெற்றது. இன்று இக்கோயில் ஜனக நாராயணப் பெருமாள் கோயில் என்று அழைக்கப்படுகிறது. இராசராசன் காலத்துக் கல்வெட்டுகள் இன்றும் இக்கோவில் சுவர்களில் இடம்பெற்றுள்ளன. கி.பி. 1757இல் ஐதர்அலி திண்டுக்கல்லைக் கைப்பற்றி சோழவந்தானில் தங்கி மதுரைக் கோட்டையை முற்றுகையிட்டான். ஆனால் யூசுப்கானின் கடுமையான எதிர்ப்பால் கோட்டைக்குள் நுழைய முடியவில்லை. மாறாக சோழவந்தான் பகுதிகளில் கொள்ளையிட்டுப் பெரும் பொருளுடன் நாடு திரும்பினான். இன்று சோழவந்தான் நகரம் வெற்றிலைக்குப் பெயர் பெற்று விளங்குகிறது.*

## தென்கரை

*சோழவந்தான் அருகில் வைகையின் எதிர்க் கரையில் அமைந்துள்ளது. வரலாற்றுப் பெருமை வாய்ந்த தென்கரை கிராமம். இவ்வூர்ப் பகுதியில் கடைக்கற்காலத்திலேயே மனிதன் வாழ்ந்ததைக் குறிக்கும் வகையில் கற்கருவிகள் கிடைத்துள்ளன. பெருங்கற்காலத்தைச் சேர்ந்த முதுமக்கள் தாழிகள் தென்கரையின் பகுதிகளிலும் காணப்படுகின்றன. இன்று தென்கரை எனப் பெயர் பெறும் இவ்வூர் சங்க காலத்தில் கள்ளூர் என அழைக்கப்பட்டுள்ளது. (அகம் 256) கட்டி என்ற சிற்றரசர் மரபு இப்பகுதியில் ஆண்டதால் கட்டிகள்ளூர் என்றும் பின்னர் வழங்கலாயிற்று.*

*முற்பாண்டிய அரசன் செழியன் சேந்தன் இவ்வூரில் தன் பெயரில் சேந்தன் ஏரி என்று ஒரு நீர்நிலையை அமைத்தான். அதுமுதல் சேந்தனேரி கட்டிகள்ளூர் எனப்பட்டது. கி.பி. 1087 முதல் 1104 வரை இப்பகுதியை ஆண்ட இடைக்காலப் பாண்டியன் பராக்கிரமன் பெயரால் இவ்வூர் பராக்கிரம பாண்டியபுரம் என்ற பெயரையும் பெற்றது. கி.பி. 1190இல் இப்பகுதியில் ஆட்சியை ஏற்ற சடாவர்மன் முதலாம் குலசேகரன் காலத்தின் தென்கரை புதிய உயிர்ப்போடு இயங்கியது. இவன் பெயரால் குலசேகரபுரம் என்ற பெயரையும் பெற்றது. ஆனால் மீண்டும் மீண்டும் கட்டிகள்ளூர் என்னும் பழம் பெயரும் அவ்வப்போது வழக்கத்தில் இருந்தது. திருமலை நாயக்கர் காலத்திலேயே இவ்வூர் தென்கரை என்ற பெயரைப் பெற்றதாக அவர் காலக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.*

*இங்கு அமைந்துள்ள மூலநாத சுவாமி கோயில் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகத் திகழ்கிறது. இது முதலில் சோழன் தலை கொண்ட வீரபாண்டியன் காலத்தில் (கி.பி. 946-66) கட்டப்பட்ட சிவன் கோயிலாகும். கால வெள்ளத்தில் அது சிதைந்துவிடவே அதே அடித்தளத்தில் பராக்கிரம பாண்டியனால் (1087 - 1104) கட்டப்பட்டுள்ளது. வீரபாண்டியனால் கட்டப்பட்ட வீரசேகர விண்ணகரம் என்னும் பெருமாள் கோயிலும் சிதைந்து போனது. அக்கோயிலின் கல்தூண்களும் மூலநாத சுவாமி கோயிலில் வைத்துக் கட்டப்பட்டுள்ளன. பிற்பாண்டியன் காலத்திலும் நாயக்கர் காலத்திலும் தொடர்ந்து இக்கோயில் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டது. இப்பகுதி மக்களின் வளமான வாழ்வுக்காகப் பராக்கிரம பாண்டியப் பேராறு என்ற கால்வாயும் வெட்டப்பட்டு வளம் காணப்பட்டது.*

*பாண்டிய நாட்டுக் கோவில்களில் தொடக்கக் காலத்தில் தேவ கோட்டங்களில் தெய்வ உருவங்கள் வைக்கும் மரபு பின்பற்றப்படவில்லை. வெற்றுக் கோட்டங் களாகவே அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் கி.பி. 10-11 ஆம்*

நூற்றாண்டுகளில் இம்மரபு சற்றே மாறுதலுக்குட்பட்டது. மூலநாத சுவாமி கோயிலில் தேவகோட்டங்களில் தெய்வ உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. முற்சோழர்களின் ஆட்சியின் காரணமாக இம்மரபு ஒரு சில இடங்களில் பின்பற்றப்பட்டுள்ளது. இதற்கு மூலநாத சுவாமி கோயில் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**வடுகப்பட்டி**

மதுரை திண்டுக்கல் சாலையில் வாடிப்பட்டிக்கு அருகில் அமைந்துள்ள சிற்றூர் வடுகப்பட்டி. இவ்வூரின் முந்தைய பெயர் மானசித்த நல்லூர் என்பது இங்குள்ள கல்வெட்டின் மூலம் தெரிய வருகிறது. இவ்வூர் குறிப்பிடத்தக்க வணிகத் தளமாக கி.பி. 10ஆம் நூற்றாண் டளவில் திகழ்ந்தது. இவ்வணிகர்கள் சமண சமயத்திற்கு ஆதரவு நல்கி அறங்களைக் காத்துள்ளனர். இவ்வூரில் கிடைத்துள்ள சமணத் துறவி ஒருவரின் சிற்பம் தற்போது திருமலை நாயக்கர் அரண்மனை அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. அச்சிற்பத்தில் மாலைக் குளம் இறங்கல் நீங்கிய வர்த்தமான தேவர் என்ற கல்வெட்டும் வட்டெழுத்தில் உள்ளது..

இங்குக் கிடைத்த மற்றொரு கல்வெட்டு இவ்வூரை மானசித்த நல்லூரான மாலைக்குளம் என்று குறிப்பிடுவதுடன் இது பாகனூர்க் கூற்றத்தினுள் அடங்கி இருந்தது என்றும் தெரிவிக்கிறது. திசையாயிரத்து ஐநூற்றுவர் என்னும் வணிகக் குழுவினர் இங்கு அறச்சாலையும் குளமும் ஏற்படுத்தி அதனை அத்தாணிகள் என்னும் ஒரு வகை வீரர்களைக் கொண்டு குறைவு வராமல் காத்தனர். கொங்கு நாட்டிலிருந்து மதுரைவரும் பெருவழியில் இவ்வூர் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## பெரிய ஊர்சேரி

வாடிப்பட்டி வட்டம் அலங்காநல்லூருக்கு அருகில் உள்ளது பெரிய ஊர்சேரி என்னும் சிற்றூர். இங்கு ஊரின் மையத்தில் காமாட்சி அம்மன் கோயில் அருகில் கருடத்தூண் ஒன்று நடப்பட்டு அதில் ஒரு கல்வெட்டு ஒன்றும் வெட்டப்பட்டுள்ளது. அதனை நாட்டியவர் எரசக்க நாயக்கனூர் (சின்னமனூர் அருகில்) லட்சுமிபுரம் பழனியாண்டியா பிள்ளை மகன் மவுனகுரு சீடன் சுப்பிரமணிய தேசிகர். இதற்குப் பொருளுதவி செய்தவர் ஊர்சேரி முத்துக்காமாட்சி பிள்ளை. இக்கருடத் தூணை விஷம் தீண்டியவர்கள் மூன்று சுற்றுச் சுற்றி வந்து முட்டினால் விசமிறங்கும். விசந்தீண்டியவர் நேரில் வர இயலாவிடில் அதைப் பார்த்தவர் வந்து கம்பத்தில் முட்டிவிட்டு அருகில் உள்ள கிணற்றில் வேட்டியை நனைத்துப் பிழிந்து போட்டுக்கிட்டுப் போக வேட்டி காயக் காய விசமிறங்கும் என்று கல்வெட்டில் கூறப்படுகிறது. இக்கல்வெட்டின் இன்னொரு படிவம் தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டம் இராசபாளையம் கிராமத்தில் அண்மையில் தொல்லியல் துறையினால் கண்டறியப் பட்டுள்ளது.

# 18. உசிலம்பட்டி வட்டம்

### விக்கிர மங்கலம்

இவ்வூரில் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டுள்ளன. கி.மு. 2 ஆம் நூற்றாண்டளவில் இப்பகுதியிலுள்ள மலைக் குகைகளில் சமணத் துறவியர் வாழ்ந்ததை உறுதிப்படுத்தும் வகையில் கற்படுக்கைகளும் பிராமி கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இங்குள்ள மலையில் உண்டாங்கல்லு என்னும் ஓரிடத்தில் ஆறு தமிழ் - பிராமி கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. அவற்றில்

1. **எஇய்ல் அரிஇய்தன் சேவித் ஒன்**
2. **எம் ஊர் சிழிவன் அதன்**
3. **அந்தைய் பிகன் மகன் வெந் அதன்**
4. **பேதலை குவிரன்**
5. **செங்குவிரன்**
6. **குவிராதன்**

என்ற வாசகங்கள் இடம் பெறுகின்றன. சமணர்களுக்கான கற்படுக்கைகளைச் செய்து கொடுத்தவர்களின் பெயர்களாக இதனைக் கருதுவர். இவற்றின் காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.

இன்றைய விக்கிரமங்கலம், கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த விக்கிரம சோழபாண்டியன் பெயரால் 'விக்கிரம சோழபுரம்' எனப் பெயர் பெற்றது. இங்குச் சிறபச்

செழுமை மிக்கச் சிவன் கோயில் ஒன்று அமைந்துள்ளது. இங்குள்ள பிற்பாண்டியர் காலக் கல்வெட்டுகளில் கோயிலின் பெயர் மதுரோதய ஈசுவர முடையார் கோயில் எனக் குறிப்பிடப்படுகிறது. இக்கல்வெட்டுகள் கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலத் தானங்களைக் கூறுகின்றன.

இடைக்காலத்தில் இவ்வூர் முக்கியமான வணிகத் தளமாகச் செயல்பட்டு இருக்கிறது. ஐயப்பொழில் நானாதேசி எனும் வணிகக் குழுவினர் இங்கு வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களால் இவ்வூரின் பெயரும் 'தேசிபட்டணமான ஐயப்பொழில் விக்கிரம சோழபுரம்' என மாற்றப்பட்டுள்ளது. இவர்கள் 'நகரம்' என்ற நிர்வாக அமைப்பையும் கொண்டு செயல்பட்டுள்ளனர்.

## முதலமைக்குளம்

விக்கிரமங்கலம் உண்டாங்கல்லு குன்றின் அருகில் உள்ளது. இங்கு இராக்கிபுடவு என்ற குகை அமைப்பின் முகப்பில் தமிழ் - பிராமி கல்வெட்டுள்ளது.

**வேம்பிற் ஊர் பேர் அயஅம் சேதவர்**

என்பது கல்வெட்டு வாசகம். வேம்பிற்றூர் அவையினர் பெரிய குளத்தை (அயம்) செய்தனர் என்பது இதன் பொருள். 2000 ஆண்டுகளுக்கு முன் ஊரவை இருந்தது சிறப்பாகும்.

## குருவித்துறை

சோழவந்தானுக்கு எதிர்க் கரையில் தென்கரை கிராமத்திற்கு மேற்கே பத்து கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. அயன் குருவித்துறை என்றும் கோவில் குருவித்துறை என்றும் இரண்டு பகுதிகளாக உள்ளது. இதன் பழம் பெயர் குருவிக் கல்லுடைப்பு என்பதாகும். அணைக் கட்டுவதற்காக இப்பகுதி குன்றுகளில் கல் உடைக்கப்பட்டதால் இப்பெயர் ஏற்பட்டுள்ளது. கி.பி.

11ஆம் நூற்றாண்டில் இப்பகுதி குலசேகர மங்கலம் என்றும் சக்கரதீர்த்தம் என்றும் இரண்டு பகுதிகளாகப் பிரிந்திருந்தது. இவ்விரு பகுதிக்கும் சேர்த்து ஸ்ரீ வல்லபன் (கி.பி. 1101-1124) பெயரால் ஸ்ரீ வல்லவபுரம் என்னும் பெயர் வழங்கியுள்ளது. இங்கு அமைந்துள்ள புகழ் பெற்ற பெருமாள் கோயில் சித்திர ரதவல்லபப் பெருமாள் கோயில் என்றழைக்கப்படுகிறது. ஆனால் கல்வெட்டுகளில் இக்கோயிலின் பெயர் திருச்சக்கர தீர்த்தத்து நின்றருளிய பரமசுவாமிகள், எம்பெருமாள் என்றும் பெயர் குறிப்பிடப்படுகின்றன. பாகனூர்க் கூற்றத்துப் பிரமதேயம் சோழாந்தகச் சதுர்வேதிமங்கலத்து திருச்சக்கரத்தாழ்வார் என்றும் கூறப்படுகிறது. இக்கோயில் கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த ஸ்ரீ வல்லபன் காலத்தில் கட்டப்பட்டது என்பதை இங்குள்ள கல்வெட்டுகள் கொண்டு அறியலாம். இங்கு இடைக்கால (கி.பி. 12 ஆம் நூ.ஆ.) பாண்டியர் கல்வெட்டுகள் மொத்தம் 14 உள்ளன. இவை இக்கோயி லுக்குக் கொடுக்கப்பட்ட நிலம், பொன் ஆகிய கொடைகள் பற்றிக் கூறுகின்றன. 'உய்யக் கொண்டாள்வார்' என்ற பெயரில் ஒரு செப்புத் திருமேனியை நெற்குப்பை நாட்டு கேரளாந்தகபுரத்து வியாபாரி அப்பன் ஈசுரவனின் மனைவி திருவரங்கன் பெற்றதிரு என்பவள் செய்தளித்துள்ளாள். ஆனால் இச்செப்புத் திருமேனி தற்போது இக்கோயிலில் இல்லை.

**திடியன்**

இன்றைய உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள இச்சிற்றூர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே வரலாற்று ஆவணங்களில் இடம் பெற்றுள்ளது. மேட்டுப் பட்டியில் கிடைக்கும் கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமிக் கல்வெட்டுகளில் திடியில் ஆதன் என்று ஒருவன் குறிக்கப்படும் கல்வெட்டு உள்ளது. இதன் மூலம் திடியில் என்பதே பழம் பெயர் என்றும், நாளடைவில் திடியன் என அது மருவி உள்ளது என்றும் அறியலாம்.

இவ்வூரில் நுண்கற்கருவிகள் சேகரிக்கப்பட்டுள்ளமையால் இவ்வூரின் தொன்மை பெறப்படும். திருவில்லிபுத்தூர் கோயிலுக்காக வாணாதிராயர் காலத்தில் திடியனில் நிலக் கொடைகள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை வில்லி புத்தூர்க் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது.

# 19. திருமங்கலம் வட்டம்

## திருமங்கலம்

திருமங்கலம் மதுரை விருதுநகர் சாலையில் அமைந்துள்ள சிறு நகரம். இவ்வூரைச் சுற்றியும் சீவரக்கோட்டை, கல்லுப்பட்டி ஆகிய ஊர்களில் புதிய கற்காலக் கருவிகள் கிடைத்துள்ளன. இவ்வூரில் ஏற்கனவே ரோமானிய நாணயம் ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. அண்மையில் இவ்வூரில் ஒரே இடத்தில் சுமர் 5 அடி உயரமுள்ள 4 முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டன. மங்கலம் என்ற பின்னொட்டுச் சொல் இது பிராமணர்க்கு வழங்கப்பட்ட ஊர் என்பதைச் சுட்டுகிறது. பண்டைக் காலத்திலேயே இது ஒரு வணிகப் பெருவழியில் அமைந்திருந்த முக்கிய ஊராக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## மேல உறப்பனூர்

திருமங்கலம் வட்டத்தில் அமைந்துள்ளது இவ்வூர். இவ்வூரில் பெரிய நீர்ப்பாசனக் கண்மாய் அமைக்கப்பட்டு கி.பி. 10 ஆம் நூற்றாண்டு அளவில் மடைகள் கட்டியுள்ளனர். முற்பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட இம்மடையில் இரண்டு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. ஒன்றில் ஸ்ரீ வீர நாராயணன் என்றும் மற்றொன்றில் ஸ்ரீ கரிவரமல்லந் என்றும் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை இம்மடையை அமைத்த பராந்தக வீர நாராயணனைக் குறிக்கும் பெயர்களாக இருக்கலாம்.

# 20 பேரையூர் வட்டம்

## டி. கல்லுப்பட்டி

திருமங்கலம் வட்டத்தில் அமைந்துள்ள ஊர் இது. பெருங்கற்காலப் பண்பாட்டு எச்சங்கள் மிகுந்துள்ள ஊர். இதன் வரலாற்றை அறிய 1976-77 ஆம் ஆண்டில் தொல்லியல் பரப்பாய்வுத் துறை (ASI) யின் சார்பில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வூருக்கு அருகில் உள்ள தேவன் குறிச்சி என்னும் மலைச் சரிவில் மிகுதியான முதுமக்கள் தாழிகளும், கருப்பு சிவப்பு பானை வகைகளும் வெளிப்பட்டன. இங்குச் செம்புக் காலத்தைச் சேர்ந்த மக்களும் வாழ்ந்துள்ளனர். இங்கு நடைபெற்ற அகழாய்வில் வண்ணம் தீட்டப்பட்ட கருப்பு - சிவப்பு, சாம்பல் வண்ணப் பானை ஓடுகளும், பலவிதமான மணி வகைகளும், செப்புக் காசுகளும் சேகரிக்கப்பட்டுள்ளன. மதுரைப் பகுதியின் தொன்மை வரலாற்றை அறிவதற்கு இங்கு மேற்கொள்ளப் பட்ட அகழாய்வுகள் நல்ல சான்றுகளைத் தந்துள்ளன.

## ஏழுமலை

மதுரைக்கு மேற்கே 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது ஏழுமலை கிராமம். இதற்கு அருகில் டி. இராமநாதபுரம் செல்லும் வழியில் மாதாநத்தம் என்னும்

இடத்தில் சுப்பிரமணிய கோயில் ஒன்று உள்ளது. இது இப்பகுதியில் இருந்த ஜமீன்தார்களான கம்பளத்து நாயக்கர்களால் நிருவகிக்கப்பட்டு வந்தது. கோயில் வழிபாட்டிற்கும் நிருவாகத்திற்குமாக இந்த ஜமீன்தார்கள் வீரேசன்குளம் என்னும் குளத்தை மாநியமாக விட்டுச் செப்புப் பட்டயம் ஒன்று கொடுத்துள்ளனர். இதன் காலம் கி.பி. 1715 ஆகும். இச்செப்பேட்டில் எழுமலைக்கு அழகிய நல்லூர் என்ற பெயரும் இருப்பது குறிப்பிடப்படுகிறது.

## பேரையூர்

மதுரை மாவட்டத்தில் ஒரு வட்டத்தின் தலைநகரமாகப் பேரையூர் உள்ளது. இது நாயக்கர் மற்றும் ஜமீன்தார்களால் ஆளப்பட்ட ஊர். இவ்வூரைச் சுற்றிலும் பெருங் கற்காலத் தாழிகள் கிடைப்பது இவ்வூரின் தொன்மையை உறுதிப்படுத்தும். இவ்வூரின் அருகில் மொட்டை மலை என்று அழைக்கப்படும் மலை ஒன்று உள்ளது. இதன் உச்சியில் சிவன் கோயில் ஒன்றும் அதற்கு அருகில் திறந்த வெளிப் பாறையில் ஒருபெரிய கல்வெட்டு ஒன்றும் உள்ளன. இக்கோயில் மல்லிகார்ச்சுனர் என அழைக்கப்படுகிறது. இங்குள்ள கல்வெட்டு முதலாம் சடையவர்மன் வீரபாண்டியனின் (கி.பி. 1280) 27ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்ததாகும். இக்கல்வெட்டின் மூலம் இவ்வூரின் பழம் பெயர் கடுங்கோ மங்கலம் என அறியலாம். முற்பாண்டிய அரசை நிறுவிய முதல் மன்னன் கடுங்கோன். அவன் பெயரால் இவ்வூர் வழங்கியுள்ளமை சிறப்புக் குறியதாகும். இவ்வூர் நிலங்களையும் குளத்தையும்

விலைக்குப் பெற்று முத்துடையார் விக்கிரமசிங்கத் தேவன் என்பவர் கோயிலுக்குத் தேவதானமாகக் கொடுத்ததை இக்கல்வெட்டு கூறுகிறது. கடுங்கோமங்கலம் என்பது செங்குடி நாட்டுப் பிரிவுக்குள் அடங்கியிருந்தது.

# செய்தித் தொகுப்புகள்

# 21. மதுரை மாவட்டத்தில் சமயங்கள்

## 1. சமண சமயம்

மதுரை நகரைச் சுற்றியுள்ள பல மலைகளிலும் இரண்டாயிரம் ஆண்டுகட்கும் முன்பிருந்தே சமண முனிவர்கள் வாழ்ந்துள்ளனர். அவர்கள் அங்கு வசித்தமைக்கான கற்படுக்கைகளும் தமிழ்பிராமிக் கல்வெட்டுகளும் அங்குள்ளன. மதுரையைச் சுற்றியுள்ள எண்பெருங்குன்றங்களில் சமணர்கள் தங்கியிருந்தனர் என்பதை ஒரு பழம்பாடல் கூறுகிறது.

> பரங்குன்று உருவகம் பப்பாரம் பள்ளி
> யருங்குன்றம் பேராந்தையானை – இருங்குன்றம்
> என்றெட்டு வெற்பும் எடுத்தியம்ப வல்லார்க்குச்
> சென்றெட்டு மோபிறவித் தீங்கு

இவை தவிர மதுரையைச் சுற்றிலும் உள்ள மாங்குளம், கீழவளவு, அரிட்டாபட்டி, திருவாதவூர், கொங்கற்புளியங் குளம், குன்னத்தூர், கருங்காலக்குடி, முத்துப்பட்டி ஆகிய இடங்களிலும் திருப்பரங்குன்றம், யானைமலை, அழகர்மலை ஆகிய முன் சொன்ன ஊர்களிலும் சமணர் வாழ்ந்த இடங்களும் தமிழ்பிராமிக் கல்வெட்டுகளும் உள்ளன. இக்கல்வெட்டுக்கள் யாவும் கி.மு. 3ம் நூற்றாண்டு முதல் கி.பி. 2ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சேர்ந்தவை.

சங்க நூலான மதுரைக் காஞ்சியில் சமணர் பள்ளி ஒன்று மதுரையில் இருந்தமைக்கான குறிப்பு உள்ளது. குன்றைக் குடைந்து சமணப்பள்ளி சமைத்திருந்தவர் என

அதன் மூலம் அறிகிறோம். கி.பி. 470இன் ஸ்ரீபூஸ்யபாதரின் மாணாக்கர் வஜ்ரதந்தி என்னும் சமணத்துறவியால் முதல் சமண சங்கம் மதுரையில் தோற்றுவிக்கப்பட்டது. இக்காலம் முதல் சமணம் மதுரைப்பகுதியில் பெரும் செல்வாக்குப் பெற்றது எனலாம்.

பாண்டிய மன்னன் நின்ற சீர் நெடுமாறன் சமணத்தைத் தழுவியிருந்ததாகவும் சம்பந்தரின் முயற்சியால் அவன் சைவ சமயத்திற்கு மீண்டுவந்தான் என்றும் பெரியபுராணம், திருவிளையாடல் புராணம் மூலம் அறிகிறோம். சம்பந்தர் தன் தேவாரப் பதிகத்தில்.

**ஆனைமாமலை ஆதியாயவிடங்களில் பல**
**அல்லல் சேர் ஈனர்களுக்கு எளியேன் அல்லேன்**

என்று பாடுகிறார். சம்பந்தர் காலத்தில் சைவ சமயத்திற்கும் சமண சமயத்திற்கும் பெரும் மோதல் ஏற்பட்டது என்றும் மதுரையில் அனல்வாதம், புனல்வாதம் நிகழ்த்தி சம்பந்தர் சமணரை வென்றார் என்றும் தோல்வியுற்ற சமணர்கள் நூற்றுக்கணக்கில் கழுவிலேற்றப்பட்டனர் என்றும் பெரிய புராணம், திருவிளையாடற்புராணம், தக்கயாகப்பரணி ஆகிய நூல்கள் மூலம் அறிகிறோம்.

ஆனால் சமணப்பூசல்கள் ஓரளவு இருந்திருந்த போதிலும் சம்பந்தர் காலத்திற்குப் பிறகு மதுரைப்பகுதியில் சமணம் முற்றாக அழிந்துவிடவில்லை. தொடர்ந்து மக்கள் ஆதரவைப் பெற்று வந்துள்ளது. இதற்குச் சான்றாகப் பல சமண சமயச் சின்னங்கள் மதுரையைச் சுற்றிலும் நிறைந் துள்ளன. எடுத்துக்காட்டாக ஆனைமலை, சமணர்மலை (கீழக்குயில்குடி), கீழவள்வு, கருங்காலக்குடி, அழகர்மலை, கழிஞ்சமலை அரிட்டாபட்டி, திருப்பரங்குன்றம்,கொங்கற் புளியங்குளம் உத்தமபாளையம், குப்பல் நத்தம் ஆகிய ஊர்களைக் கூறலாம். இவ்வூர்களில் பல சமண தீர்த்தங் கரர்களின் திருஉருவங்களும் இயக்கர், இயக்கியர் உருவங்களும் செதுக்கப்பட்டுக் கல்வெட்டுகளும் பொறிக்கப்பட்டுள்ளன.

மதுரைப் பகுதி மற்றும் பாண்டி நாடு முழுவதும் சமண சமயம் கி.பி. 10-11 ஆம் நூற்றாண்டு. வரை செல்வாக்குடன் இருந்து பின்னர் செல்வாக்கிழந்தது.

## 2. கிறித்தவச் சமயம்

மதுரை நாயக்கர் மரபில் வந்த வீரப்ப நாயக்கர் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1572 - 1595) முதல் முதலாகக் கிறித்தவச் சமயப் பிரச்சாரம் தொடங்கியது. கி.பி. 1592இல் ஏசு கழகத் தொண்டர்கள் (Jesuit Society) முதல் முதலாகத் தங்கள் பணிக் கழகத்தை (Madurai Mission) மதுரையில் தொடங்கினர். பெர்னாண்டஸ் என்ற போர்த்துக்கீசிய துறவியின் தலைமையில் இயங்கிய இக்குழுவினர் நாயக்க மன்னரின் அனுமதியுடன் மதுரையில் மாதா கோயில் ஒன்று கட்டினர். பெர்னாண்டஸ் பாதிரியார் 14 ஆண்டுகள் கடுமையான சமயப்பணி செய்தும் உயர்குடி இந்துக்களை மதம்மாற்ற அவர் எடுத்துக் கொண்ட முயற்சி வெற்றி பெறவில்லை. அவரை மாட்டிறைச்சி உண்ணும் பரங்கியர் எனக் கருதி மக்கள் சமய மாற்றத்திற்கு ஆதரவு காட்டவில்லை.

ஆனால் முத்து கிரு ணப்ப நாயக்கர் காலத்தில் (கி.பி. 1601 - 1609) ராபர்டி- டி- நோபாலி என்ற இத்தாலியப் பாதிரியார் மதுரைக்கு வந்து கிறித்தவ சமயத் தொண்டில் ஈடுபட்டார். இவர் ரோமன் கத்தோலிக்கப் பிரிவைச் சேர்ந்தவர். இவர் மதுரை மக்களின் நாடித்துடிப்பை நன்கு உணர்ந்து மக்களோடு மக்களாகக் கலந்தார். தன்னை ரோமாபுரிப் பார்ப்பனர் எனக் கூறிக்கொண்டு காவி உடை அணிந்து பூணூல் தரித்து சைவ உணவை உட்கொண்டு இந்து சமயச் சடங்குகளை ஏற்றுக்கொண்டு வாழ்ந்தார். நெற்றியில் பொட்டு வைத்துக் கொள்ளுதல், சந்தியா வந்தனம் செய்தல், எனக் கிறித்தவ சமயத்தை இந்திய மயமாக்கி, தமிழிலும் தெலுங்கிலும் வடமொழியிலும் சரளமாகப் பேசி மக்களை ஈர்த்தார். இவரது முயற்சி ஓரளவுக்குப் பலனளித்தது. உயர்குடி இந்துக்கள் சிலர் கிறித்தவ மதத்தைத் தழுவினர். இது முதல் கிறித்தவம் வளரத் தொடங்கியது.

*ஆனால் இதன் காரணமாக ராபர்ட்-டி-நோபிலிக்கும் பெர்னாண்டஸ் பாதிரியார்க்கும் இடையில் பகை மூண்டது. இந்து மதச் சடங்குகளை ஆதரிக்கிறார் என நோபிலி மீது மேல்மட்டத்தில் புகார் தெரிவிக்கப்பட்டது. பத்து ஆண்டுகள் விசாரணைக்குப் பின் நோபிலி குற்றம் அற்றவர் என விடுவிக்கப்பட்டார். எனினும் கிறித்தவ சமயத்தின் வளர்ச்சி உட்பூசல் காரணமாகச் சற்றுத் தளர்வுற்றது. நோபிலி பாதிரியார் சேலம், திருச்சிப் பகுதிகளில் பணி செய்ய அனுப்பப்பட்டார். அவருக்குப்பின் மதுரையில் வைக்கோ பாதிரியார் என்பவரால் கிறித்தவப்பணி தொடரப்பட்டது. திருமலை நாயக்கர் மிகுந்த சமயப் பொறையோடு இவர்களுக்கு உதவி அவர் தம் பணிகளைச் செய்ய ஆதரவளித்தார்.*

*இரண்டாம் முத்து வீரப்பன் காலத்தில் (கி.பி. 1682-1689) ஜான்-டி-பிரிட்டோ எனும் பாதிரியார் தலைமையில் கிறித்தவப் பணிகள் தீவிரமாக நடைபெற்றன. அரசரும் ஆதரவு காட்டினார். இக்காலத்தில் வாடிப்பட்டிப் பகுதியில் கிறித்தவத்தின்பால் மிகுந்த ஆர்வம் காட்டினர். மக்கள் மறவர் நாட்டில் எழுந்த கிளர்ச்சியால் பிரிட்டோ துன்புற்றார்.*

*மதுரைப்பகுதியின் கிறித்துவ சமயப் பணிகளுக்கு அனைத்து நாயக்க மன்னர்களும் ஆதரவளித்தனர். தஞ்சை நாயக்கர் கிறித்தவர்களை மதுரைப் பகுதியிலிருந்து வெளியேற்றும்படிக் கேட்டுக் கொண்ட போதும் ராணி மங்கம்மாள் அதற்கு உடன்படவில்லை. பாதிரிமார்களின் கடிதங்கள் மதுரை நாயக்க மன்னர்களின் பெருந்தன்மையை வெளிப்படுத்துகின்றன.*

*மதுரையில் இருந்த ஆங்கிலேய மாவட்ட ஆட்சித் தலைவர் ரோஸ் பீட்டர் (பீட்டர் பாண்டியன்) 6.8.1828இல் காலமான போது அவர் மதுரை நகரில் இருந்த புராட்டஸ்டண்டு தேவாலயத்துக்கு வெளியே புதைக்கப் பட்டார். மதுரையில் இருந்த கட்டடக்கலை வல்லுநர்*

ராபர்ட் பிஷர் அவர்களின் தந்தையார் ஜார்ஜ் பிரடரிக் பிஷர் 1867இல் இறந்த போது அவரது உடல் பீட்டர் பாண்டியனின் கல்லறைக்கு அருகிலேயே புதைக்கப்பட்டது. இவ்விரண்டு கல்லறைகளையும் உள்ளடக்கி 1881இல் புனித ஜார்ஜ் கிறித்தவ தேவலாயம் கட்டப்பட்டது.

மதுரை கீழவாசல் பகுதியில் உள்ள தேவலாயம் 1843இல் கட்டத் தொடங்கி 1845இல் முடிக்கப்பட்டது. திருமலை மன்னர் அரண்மனைக்கு அருகில் உள்ள தூய மரியன்னை தேவலாயம் கிபி. 1842இல் அருட் தந்தை கார்னியர் அவர்களால் கட்டப்பட்டது.

அமெரிக்கன் மதுரை கிறித்தவ பணிக்கழகம் (The American Madurai Mission) கி.பி. 1834 இல் துவங்கப்பட்டுள்ளது. இக்கழகம் இலங்கையிலுள்ள ஜாஃப்னா பணிக்கழகத்தின் கிளையாகத் துவங்கப்பட்டது. இப்பணிக்கழகத்தின் சமயப் பணியாளர்களாக திரு. ஹோசிங்டன், திரு & திருமதி டோட், ஆகியோர் பணிபுரிந்துள்ளனர். இப்பணிக் கழகத்தின் கிளைகள் 1838 இல் திருமங்கலத்திலும் 1845இல் பசுமலையிலும் 1848இல் பெரிய குளத்திலும் 1857இல் மேலூரிலும் துவங்கப்பட்டன. இப்பிரிவினரால் 1898இல் மகளிருக்காகவும் குழந்தைகளுக்காகவும் மிஷன் மருத்துவமனை துவங்கப்பட்டுள்ளது.

## 3. இஸ்லாமியர்

கி.பி. 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாலிக்காபூர் படையெடுப்பினைத் தொடர்ந்து மதுரை சுமார் 50 ஆண்டுகாலம் சுல்தானியர் ஆட்சியில் இருந்தது. இதே காலத்தில் பாண்டிய மன்னன் ஒருவன் தனது கோடைகால அரண்மனையை இஸ்லாமியத் துறவிக்கு வழங்கியதாகவும் அதிலேயே இன்றைய காஜிமார் பள்ளிவாசல் கட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது.இதுவே மதுரையில் அமைந்த முதல் பள்ளிவாசல் ஆகும். வைகையின் வடகரையில் கோரிப்பாளையத்தில் அமைந்துள்ள பள்ளி

வாசலில் நடப்பட்டுள்ள ஒரு தூணில் வீரப்ப நாயக்கனின் கொடை பற்றிக் கூறப்படுகிறது. கி.பி. 1811இல் தாசில்தார் பள்ளிவாசல் கட்டப்பட்டதாகக் கூறுவர். கான்சாகிப் என்ற முகமது யூசுப்கான் ஆங்கிலேயர்களால் (கி.பி. 1764இல்) கொல்லப்பட்டான். அவனைப் புதைத்த இடம் இன்று சம்மட்டிபுரம் எனப்படுகிறது. இங்கும் ஒரு பள்ளிவாசல் அமைந்துள்ளது.

## 4. பௌத்தம்

மதுரைப்பகுதியில் சமணசமயம் பெற்றிருந்த செல்வாக்கை பௌத்தம் பெறவில்லை. எனினும் அழகர் கோயில் பகுதியில் பௌத்த சின்னங்கள் இருந்ததாகக் கூறுவதுண்டு. 'அருகரோடு புத்தரும் அமர்ந்தருளும் சோலை' என அழகர் மலையைப் பற்றிய ஒரு பழம் பாடல் கூறுகிறது.

மதுரைக்கு அருகில் உள்ள இன்றைய பாண்டி முனீஸ்வரர் கோயில் ஒரு காலத்தில் புத்தர் கோயிலாக வழிபட்டிருக்க வேண்டும் என்பர்.

# 22. மதுரைப்பகுதியில் கிடைத்த நாணயங்கள்

மதுரைப் பகுதியில் போடி நாயக்கனூரில் (தற்போது தேனிமாவட்ட ஊர்) முத்திரை குத்தப்பட்ட காசுகள் (Punchmarked coins) கிடைத்துள்ளன. இவை சங்ககாலத் திற்கும் முந்தியவையாகும். மதுரை நகரிலேயே ரோமானியக் காசுகளும் கிடைத்துள்ளன. இதன்மூலம் சங்ககாலப் பாண்டியர்களின் அயல்நாட்டு வணிகத் தொடர்புகள் புலப்படும்.

அண்மைக் காலத்தில் கம்பம் பள்ளத் தாக்கில் உத்தமபுரம் (தேனி மாவட்டம்) என்னும் கிராமத்தில் கிடைத்த புதையலில் வெள்ளியாலான ஒன்பது ரோமானிய நாணயங்கள் கிடைத்துள்ளன. இவை அனைத்தும் அகஸ்டஸ் சீசரின் காலத்தவையாகும். (கி.மு -27 - கி.பி. 14)

மதுரை கோவலன் பொட்டல் என்னும் இடத்தில் மேற்கொள்ளப்பட்ட தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அகழாய்வின் மூலம் மீன் சின்னம் பொறிக்கப்பட்ட சங்கப்பாண்டியர் காலச் செப்புக்காசு ஒன்று கண்டறியப் பட்டுள்ளது. ஆனால் இதில் எவ்விதமான பெயர் அல்லது எழுத்துக்களும் இல்லை.

சங்ககாலப் பாண்டியர் காசாக பெருவழுதி என்ற எழுத்துப் பொறிப்புடன் கூடிய காசு ஒன்றைக் கண்டறிந்து வெளியிட்டுள்ளார் நாணயவியலாளர் திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி. அழகன் குளம் அகழாய்வின் மூலம் சங்ககாலப் பாண்டியர் காசுகளும் கி.பி. 4-5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ரோமானியக் காசுகளும் வெளிக் கொணரப்பட்டுள்ளன.

சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு திருவில்லி புத்தூருக்கு அருகில் நத்தம்பட்டி என்னும் கிராமத்தில் ஒன்பது ரோமானியத் தங்க நாணயங்கள் கிடைத்தன. இவை கி.பி. 4-5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டாம் தியோடோசியஸ், முதலாம் லியோ, ஜீனோ ஆகிய அரசர்களுடையதாகும். இதன் மூலமும் பாண்டியநாடு ரோமானிய நாட்டுடன் கொண்டிருந்த வணிக உறவு உறுதிப்படும்.

முற்பாண்டியர் காசுகள் என எவையும் இதுவரை கிடைக்கவில்லை. வரகுணன் பெயர் தாங்கிய ஒரு தங்கக்காசு தற்போது தேசிய அருங்காட்சியகத்தில் உள்ளது. ஆனால் அது ஒரு பழம்பொருள் விற்பனை யாளரிடம் பெறப்பட்டுள்ளதால் அக்காசினுடைய உண்மைத் தன்மையை ஆய்வாளர்கள் சந்தேகிக்கின்றனர்.

முதலாம் இராசராச சோழனின் வெள்ளிக்காசு ஒன்று வைகைக்கரையில் தேனூர் என்ற ஊரில் கிடைத்துள்ளது. பிற்பாண்டியர் காலத்தில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டிளவில் பல காசுகள் வழக்கத்தில் இருந்துள்ளன. அவை சுந்தரபாண்டியன், வீரபாண்டியன், சோணாடு கொண்டான், கச்சிவழங்கும் பெருமாள் கோதண்டராமன், எல்லாந் தலையானான், குலசேகரன் என்னும் பெயர்கள் பொறித்த காசுகள் ஆகும். கலியுகராமன் என்ற பெயரும் சில காசுகளில் இடம்பெற்றுள்ளது. பெரும்பாலான இக்காசுகளில் ஒருபுறம் அரசனது பெயரும் மறுபுறம் இணைகயல்களுக்கிடையில் செண்டு அமைப்பும் உள்ளன.

கி.பி. 13 முதல் 15 ஆம் நூற்றாண்டுவரை மதுரைப் பகுதியில் வாணாதிராயர்கள் குறுநிலத் தலைவர்களாக ஆட்சியில் பங்கு பெற்றிருந்தனர். அவர்களும் தங்களுக்கென காசுகள் வெளியிட்டனர். மதுரை நகரில் வைகை நதியின் கரைகளில் இவர்கள் வெளியிட்ட காசுகள் அவ்வப்போது வெளிப்பட்டு வருகின்றன. இவர்கள் தீவிர வைணவ பக்தர்கள் தங்களது கொடியில் திருமாலின் வாகனமான கருடனைக் கொண்டிருந்தவர்கள். இவர்களுக்குச் சமர

கோலாகலன், புவனேக வீரன், கருடகேதனன் என்று பல பட்டங்கள் உண்டு. இவர்கள் வெளியிட்ட காசுகளில் ஒருபுறம் கருடன் உருவம் மீன் மீது நிற்கும் வகையிலும் மேலே சங்கு சக்கரம் பொறித்தும் காணப்படும். மறுபுறம் சமரகோலகலன் என்ற பெயர் மூன்றுவரிகளில் எழுதப் பட்டிருக்கும். இதுபோல புவனேகவீரன் என்ற பெயரும் சில காசுகளில் காணப்படுகிறது.

மதுரை நாயக்கர் ஆட்சியில் நாயக்க மன்னர்களாலும் காசுகள் வெளியிடப்பட்டுள்ளன. அவர்களது காசுகளில் ஒரு புறம் அவர்களது அரசச் சின்னமான காளை உருவமும் அதன் முன்பாக கட்டாரி ஒன்றும் மேலே பிறைச்சந்திரனும் மறுபுறம் அரசர்களின் பெயரைக் குறிக்கும் முதல் எழுத்தும் இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக, வி,வீ, தி, சொ ஆகிய எழுத்துக்கள் முறையே விசுவநாத நாயக்கர், வீரப்ப நாயக்கர், திருமலை, சொக்கநாதர் ஆகியோர் பெயர்களை முறையே குறிப்பனவாகும். மங்கம்மாள் பெயர்பொறித்த காசுகளும் வெளியிடப்பட்டுள்ளன. சில காசுகளில் அரசர் பெயரைக் குறிக்கும் தெலுங்கு எழுத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இன்னும் சில காசுகளில் பின்புறம் 'பழனி' என்ற ஊர்ப் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. நாயக்கர் காலத்தில் பழனி நகரம் முக்கிய நாணயச் சாலையாகச் செயல்பட்டிருக்கலாம். அதனைக் குறிக்கும் வகையில் இச்சொல் இடம்பெற்றுள்ளது எனலாம்.

கி.பி. 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் மாபூப்கான், யூசுப்கான் (மருதநாயகம் (எ) கான் சாகிப்) ஆகியோர் சில காலம் மதுரைப் பகுதியின் தலைவர்களாக இருந்தனர். அவர்கள் பெயர் பொறித்த காசுகளும் ஒரு சில கிடைத் துள்ளன. இவை செப்புக்காசுகளாகும். காசின் ஒருபுறம் வட்டத்திற்குள் 6 புள்ளிகளும், பின்புறம் தமிழில் 'கானு' என்ற பெயர்களும் காணப்படுகின்றன.

மதுரையில் நாணயவரலாறு என்பதும் சங்ககாலந் தொடங்கி அண்மைக்காலம் வரை ஆராயத்தக்க வகையில் அமைந்துள்ளது.

# 23. செய்திச் சுருக்கங்கள்

## 1. மதுரை மாவட்டத்தில் கற்காலக் கருவிகள் கிடைத்த இடங்கள்

1. தி. புதுப்பட்டி- பழைய கற்காலம்
2. கொல்லம்பட்டறை - கடை கற்கால நுண்கற் கருவிகள்
3. தாததேனாடைமேடு - கடை கற்கால நுண்கற் கருவிகள்
4. திருமங்கலம் - கடை கற்கால நுண்கற்கருவிகள்
5. தி. கல்லுப்பட்டி - கடை கற்கால நுண்கற்கருவிகள்
6. சிவரக் கோட்டை - கடை கற்கால நுண்கற்கருவிகள்
7. கருவேலம்பட்டி - கடை கற்கால நுண்கற்கருவிகள்
8. சென்னம் பட்டி - கடை கற்கால நுண்கற்கருவிகள்
9. கோவலன் பொட்டல் (மதுரை) - புதிய கற்காலம்

## 2. முதுமக்கள் தாழிகள் காணப்படும் இடங்கள்

1. மதுரை
2. விளாங்குடி
3. பழங்காநத்தம்
4. சாமநத்தம்
5. பறவை
6. அனுப்பானடி
7. வண்டாரி
8. பாறைப்பட்டி
9. திருமாணிக்கம்
10. தி. கல்லுப்பட்டி
11. வேளாம்பூர்
12. சிவரக் கோட்டை
13. கோட்டை மேடு
14. அகத்தியப்பட்டி
15. பெரிய கோட்டை
16. செங்கப்படை
17. புதூர்கோட்டைப் பட்டி
18. குராயூர்
19. சென்னம்பட்டி
20. திருமங்கலம்
21. கள்ளிக்குடி

## 3. கல்வட்டங்கள் காணப்படும் இடங்கள்

1. அவனியாபுரம்
2. பொதும்பு
3. தேனூர்
4. சமய நல்லூர்
5. அரிட்டாபட்டி
6. சிக்கந்தர் சாவடி
7. மேலக்குயில்குடி
8. வேடர் புளியங்குளம்
9. செங்குளம்
10. தங்களாச்சேரி
11. கோபாலபுரம்
12. பேரையூர்
13. வீரசின்னம்மாள்புரம்
14. ஆலம்பட்டி
15. மண்ணான்டிபட்டி

## 4. பெருங்கற் சின்னங்கள் காணப்படும் இடங்கள் (பொது)

1. மீனாட்சிபுரம்
2. திடியன்
3. பெருமாள் கோயில்பட்டி
4. கணவாய்பட்டி
5. காராம்பட்டி
6. பாறைப்பட்டி
7. கோடாங்கி நாயக்கன்பட்டி
8. எ. கோபாலபுரம்
9. எ. பெருமாள்பட்டி
10. குன்னாரப்பட்டி
11. அதிகாரிப்பட்டி
12. சின்னக்கட்டளை
13. ஆண்டிபட்டி
14. ம. கல்லுப்பட்டி
15. ச. பாப்பிநாயக்கன்பட்டி
16. புலவனூரணி
17. தி. கிரு ணாபுரம்
18. கூட்டக்கள்ளி
19. விட்டில்பட்டி
20. இராமசாமிபுரம்
21. அணைக்கரைப்பட்டி
22. ஆத்திபட்டி
23. வண்டாரி
24. வீராப்பட்டி
25. மதிப்பானூர்
26. விசய நாகையாபுரம்
27. பூதிபுரம்
28. குண்டாற்றுப் பகுதிகள்

## 5. சங்ககால மதுரைப் புலவர்கள்

1. மதுரை அழக்கர் ஞாழர் மகனார் மள்ளனார்.
2. மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்
3. மதுரை ஆசிரியர் கோடன் கொற்றனார்
4. மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார்
5. மதுரை இளங்கௌசிகனார்
6. மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன்
7. மதுரை ஓலைக்கடை கண்ணம் புகுந்தார் ஆயத்தனார்
8. மதுரை ஓலைக்கடையத்தார் நைவெள்ளையார்
9. மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகனார்
10. மதுரைக் கணக்காயனார்
11. மதுரைக் கண்ணத்தனார்
12. மதுரைக் கவுணியன் பூதத்தனார்
13. மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார்
14. மதுரைக் காமக்காணி நப்பலாதனார்
15. மதுரைக் காருலவியன் கூத்தனார்
16. மதுரைக் கூத்தனார்
17. மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்
18. மதுரைக் கொல்லன் புள்ளன்
19. மதுரைக் கொல்லன் வெண்ணாகனார்
20. மதுரைச் சூலம் போதனார்
21. மதுரைத் தட்டான் கண்ணனார்
22. மதுரைத் தமிழ்க் கூத்தன் நாகன் தேவனார்
23. மதுரைத் தமிழ்க் கூத்தனார்
24. மதுரைப் படை மங்க மன்னியார்
25. மதுரைப் பாலாசிரியர் சேந்தன் கொற்றனார்

26. மதுரைப் பாலாசிரியர் நப்பாணனார்
27. மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார்
28. மதுரைப் பூதங்கண்ணனார்
29. மதுரைப் பூதன் இளநாகனார்
30. மதுரைப் பூவந்த நாகன் வேட்டனார்
31. மதுரைப் பெருங் கொல்லன்
32. மதுரைப் பெருமருதனார்
33. மதுரைப் பெருமருதில் நாகனார்
34. மதுரைப் போத்தனார்
35. மதுரை மருதங் கிழார் மகனார் சோகுத்தனார்
36. மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்
37. மதுரை மருதங் கிழார் மகன் இளம் போத்தன்
38. மதுரை வேலாசான்
39. மதுரைப் பேராலவாயார்
40. இளந்தேவனார்
41. இறையனார்
42. ஈழத்துப் பூதன் தேவனார்
43. சீத்தலைச் சாத்தனார்
44. சேங்கண்ணனார்
45. சேந்தம் பூதனார்
46. நக்கீரர்
47 காமக்காணி நப்பசலையார்
48. நல்லந்துவனார்
49. நல்வெள்ளியார்
50. மருதன் இளநாகனார்

## 6. மதுரை மாவட்டத்தில் தமிழ் - பிராமி கல்வெட்டுகள் உள்ள இடங்கள்

1. மாங்குளம்
2. அரிட்டாபட்டி
3. திருவாதவூர்
4. வரிச்சியூர்
5. கீழவளவு
6. கருங்காலக்குடி
7. அழகர் மலை (கிடாரிப்பட்டி)
8. ஆனைமலை
9. திருப்பரங்குன்றம்
10. கொங்கற்புளியங்குளம்
11. முத்துப்பட்டி
12. விக்கிரமங்கலம்
13. முதலைக்குளம்
14. மேட்டுப்பட்டி

## 7. மதுரை மாவட்டத்தில் பாண்டியர் குடவரைகள்

1. ஆனைமலை - நரசிங்கப்பெருமாள் கோயில் • லாடன் கோயில்
2. திருப்பரங்குன்றம் - முருகன் கோயில் உமையாண்டார் கோயில்
3. வரிச்சியூர் - உதயகிரீஸ்வரர் கோயில் அர்த்தகிரீஸ்வரர் கோயில்
4. குன்னத்தூர் - சிவன் கோயில்
5. அரிட்டாபட்டி - சிவன்கோயில்

## 8. மதுரை மாவட்டப் பாடல் பெற்ற சைவத் தலங்கள்

1. மதுரை மீனாட்சி சொக்கநாதர் ஆலயம்
2. திருப்பரங்குன்றம்
3. திரு ஆப்புடையார் கோயில்
4. திருவேடகம்

## 9. மங்களா சாசனம் பெற்ற வைணவத் தலங்கள்

1. கூடல் அழகர் கோயில்
2. திருமாலிருஞ்சோலை (அழகர் கோயில்)
3. திருமோகூர்

## 10. மதுரை மாவட்டத்தில் ஓவியங்கள்

| | | |
|---|---|---|
| 1. | அழகர்மலை | - பாறை ஓவியம் |
| 2. | கருங்காலங்குடி | - பாறை ஓவியம் |
| 3. | மாங்குளம் | - பாறைக் குறியீடுகள் |
| 4. | ஆனைமலை | - சமணச் சிற்பச் சுதை ஓவியம் |
| 5. | கீழவளவு | - சமணச் சிற்பச் சுதை ஓவியம் |
| 6. | அரிட்டாபட்டி | - சமணச் சிற்பச் சுதை ஓவியம் |
| 7. | திருவாதவூர் | - பாறை விதானச் சுதை ஓவியம் |
| 8. | மீனாட்சியம்மன் கோயில் | - 1. மங்கம்மாள் கால விதானச் சுதை ஓவியங்கள் (மீனாட்சி திருமணம், திக்பாலர்,செங்கோல் வாங்குதல்)<br>2. திருவிளையாடல் சுவர் ஓவியங்கள்<br>3. அண்ட கோளம் சுவர் ஓவியம் |
| 9. | அழகர் கோயில் | - விதான, சுவர் சுதை ஓவியம் (இராமாயணக் கதை) |
| 10. | திருமலைநாயக்கர் அரண்மனை | - தூண் ஓவியம் |

## 11. மதுரை மாவட்டத்தில் சமணச் சிற்பங்கள் உள்ள இடங்கள்

1. அரிட்டாபட்டி
2. அழகர் கோயில்
3. ஆனைமலை
4. கீழவளவு
5. கீழக்குயில்குடி
6. கருங்காலங்குடி
7. செட்டிபொடவு
8. முத்துப்பட்டி
9. திருப்பரங்குன்றம்
10. கொங்கற்புளியன்குளம்
11. குப்பல் நத்தம்
12. வடுகபட்டி (தற்போது தி.நா. அரண்மனையில் உள்ளது.)

## 12. முற்பாண்டியர் குடிவழி

1. கடுங்கோன் - கி.பி. 550-600
2. மாறவர்மன் அவனிசூளாமணி - கி.பி. 600 -625
3. செழியன் சேந்தன் - கி.பி. 625 - 650
4. மாறவர்மன் அரிகேசரி - கி.பி. 650 - 700 (கூன்பாண்டியன்)
5. கோச்சடையன் ரணதீரன் - கி.பி. 700 - 730
6. மாறவர்மன் முதலாம் ராஜசிம்மன் - கி.பி. 730-765
7. ஜடில பராந்தக நெடுஞ்சடைய வரகுணன் - கி.பி. 765 - 815
8. ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் - கி.பி. 815 - 862
9. இரண்டாம் வரகுணன் - கி.பி. 862 - 880
10. பராந்தக வீரநாராயணன் - கி.பி. 880 - 900
11. மாறவர்மன் இரண்டாம் ராஜசிம்மன் - கி.பி. 900 -920
12. மாறன் சடையன் - கி.பி. 920 - 946
13. சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் கி.பி. 946 - 966

# 13. பிற்காலப் பாண்டியர்களும் நிகழ்வுகளும்

1. சடையவர்மன் உடையார் ஸ்ரீவல்லப பாண்டியன் - 1014 - 1031
2. சோழ பாண்டியர்கள்
3. சடையவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியன் 1101-1124
4. சுந்தர பாண்டியன் மானாபரணன் - 1104-1131
5. சடையவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியன் - 1131 - 1143
6. மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் - 1143 - 1166
7. மாறவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியன் 1145 - 1162
8. சடையவர்மன் குலசேகர பாண்டியன் - 1162 - 1177
9. பராந்தக தேவன்
10. பாண்டியர் உள் நாட்டுப் போர் முதல் கட்டம்
11. சடையவர்மன் வீரபாண்டியன் 1170-1195
12. சடையவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியன் 1158-1185
13. மாறவர்மன் விக்கிரம பாண்டியன் 1181-1190
14. பாண்டியர் உள்நாட்டுப் போர் இரண்டாம் கட்டம்
15. முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் - 1190-1218
16. முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் - 1216 - 1244
17. முதலாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் - 1218 - 1232
18. இரண்டாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் - 1237 - 1266
19. இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் - 1238 - 1255
20. முதலாம் சடையவர்மன் விக்கிரம பாண்டியன் - 1241 - 1254
21. பாண்டி மண்டலத்தில் போசளர்கள்

22. இரண்டாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் - 1250 - 1276
23. முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் - 1250 - 1283
24. முதலாம் சடையவர்மன் வீரபாண்டியன் - 1254 - 1265
25. இரண்டாம் சடைய வர்மன் வீரபாண்டியன் - 1254 - 1265
26. இராஜகேசரி வீரபாண்டியன் - 1266 - 1286
27. முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் - 1268 - 1318
28. இரண்டாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் - 1277 - 1294
29. மூன்றாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் - 1278 - 1301
30. மூன்றாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் - 1281-1289
31. மூன்றாம் சடையவர்மன் வீரபாண்டியன் - 1297-1342
32. நான்காம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் - 1303-1325
33. மூன்றாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் - 1303-1322
34. ஐந்தாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் - 1304 - 1319
35. முதலாம் மாறவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியன் - 1308-1344
36. முதலாம் சடையவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியன் - 1308-1341
37. சடையவர்மன் இராஜராஜன் சுந்தர பாண்டியன் - 1310-1332
38. மாலிக்காபூரின் படையெடுப்பு
39. நான்காம் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் - 1298-1302
40. வீரகேரளன் இரவிவர்மன் குலசேகர பாண்டியன்

41. இரண்டாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் - 1314 - 1362

42. முதலாம் சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் - 1315 - 1334

43. ஆறாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் - 1318 - 1336

44. ஐந்தாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியன் - 1323 - 1330

45. ஏழாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் - 1329 - 1347

46. எட்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் - 1330 - 1347

47. ஆறாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் - 1337 - 1343

48. முதலாம் மாறவர்மன் வீரபாண்டியன் - 1334 - 1367

49. நான்காம் சடையவர்மன் வீரபாண்டியன் - 1337 - 1378

50. இரண்டாம் மாறவர்மன் வீரபாண்டியன் - 1341 - 1388

51. முதலாம் மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் - 1335 - 1362

52. ஒன்பதாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் - 1340 - 1364

53. இரண்டாம் சடையவர்மன் விக்கிரம பாண்டியன் - 1344 - 1352

54. மதுரை சுல்தானியர் - 1323 - 1371

பிற்காலப் பாண்டியர்களால் 1. சுந்தர பாண்டியன் 2. குலசேகர பாண்டியன் 3. வீரபாண்டியன், 4. விக்கிரம பாண்டியன், 5. பராக்கிரம பாண்டியன், 6. ஸ்ரீ வல்லப பாண்டியன் என்ற ஆறுபெயர்களே மாறிமாறி வைத்துக்

கொள்ளப்பட்டுள்ளன. இவர்களை அறிந்து கொள்ள மெய்க்கீர்த்திகள், பட்டப்பெயர்கள், பிறந்த நட்சத்திரம், வானிலைக் குறிப்புகள் ஆகியவை உதவுகின்றன. சுமார் 641 கல்வெட்டுகளில் காணப்படும் இக் குறிப்புகளைக் கொண்டு இம்மன்னர்கள் அறியப்பட்டுள்ளனர்.

நன்றி: பாண்டியர் வரலாறு (கி.பி. 570 - 1371) என். சேதுராமன், கும்பகோணம், 1989

## 14. மதுரை நாயக்கர் குடிவழி

1. விசுவநாத நாயக்கர் (கி.பி..1529 - 1564)
2. முதலாம் கிரு ணப்ப நாயக்கர் (கி.பி. 1564 - 1572)
3. வீரப்ப நாயக்கர் (கி.பி. 1572 - 1595)
4. இரண்டாம் கிரு ணப்ப நாயக்கர் (கி.பி. 1595 - 1601)
5. முத்து கிரு ணப்ப நாயக்கர் (கி.பி. 1601 - 1609)
6. முத்து வீரப்ப நாயக்கர் (கி.பி. 1609 - 1623)
7. திருமலை நாயக்கர் (கி.பி. 1623 - 1659)
8. முத்து வீரப்ப நாயக்கர் (கி.பி. 1659 - 4 மாதங்கள்)
9. சொக்க நாத நாயக்கர் (கி.பி. 1659 - 1682)
10. ரங்ககிரு ண முத்துவீரப்ப நாயக்கர் (கி.பி. 1682 - 1689)
11. ராணி மங்கம்மாள் (கி.பி. 1689 - 1706)
12. விஜயரங்க சொக்கநாதர் (கி.பி. 1706 - 1732)
13. ராணி மீனாட்சி (கி.பி. 1732 - 1739)

## 15. திருமலை நாயக்கர் காலச் செப்பேடுகள்

1. இலந்தைக்குளம் செப்பேடு
2. சிந்துமேட்டுப்பட்டிச் செப்பேடு
3. அம்மையநாயக்கனூர்ச் செப்பேடு
4. வெள்ளியங்குன்றம் செப்பேடு

5. சிறுவாலை ஜமீன் செப்பேடு
6. இராஜாக்காபட்டிச் செப்பேடு
7. அரசப்பட்டிச் செப்பேடு
8. தருமத்துப்பட்டிச் செப்பேடுகள் - 3
9. மங்கலரேவுச் செப்பேடு
10. இராமநாதபுரம் செப்பேடுகள் - 4
11. மதுரைத்தலத்து ஓதுவார் செப்பேடு
12. பொம்மையக்கவுண்டன் பட்டிச் செப்பேடுகள் - 4
13. சென்னை அருங்காட்சியகச் செப்பேடு
14. திருகாந்தீசுவரம் செப்பேடு
15. திருமுருகன் பூண்டிச் செப்பேடு
16. சித்தரேவுச் செப்பேடு
17. ஓ. கோயில்பட்டிச் செப்பேடு
18. வன்னிவலம்பட்டி செப்பேடு
19. சந்தையூர் செப்பேடு
20. பழனிச் செப்பேடு

*பார்க்க: திருமலை நாயக்கர் செப்பேடுகள் மற்றும் தமிழகச் செப்பேடுகள் தொகுதி - I தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை*

## 16. மதுரை மாவட்டத்தின் பண்டைய நாட்டுப்பிரிவுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | மதுரோதய வளநாடு | - | மதுரை - சிவகங்கை - ராமநாதபுரம் பகுதிகள் |
| 2. | செங்குடி நாடு | - | திருமங்கலம் வட்டம் |
| 3. | தென்கல்லக நாடு | - | திருமங்கலம் வட்டம் |
| 4. | தென்முட்ட நாடு | - | திருமங்கலம் வட்டம் |
| 5. | குடி நாடு | - | மதுரை தெற்கு வட்டம் |
| 6. | பாகனூர்க் கூற்றம் | - | மதுரை தெற்கு, வடக்கு வட்டங்கள் |

| | | | |
|---|---|---|---|
| 7. | குன்னத்தூர் நாடு | - | மதுரை வடக்கு வட்டம் |
| 8. | கீழிரணிய முட்டம் | - | மேலூர் வட்டம் |
| 9. | மேலிரணிய முட்டம் | - | மேலூர் வட்டம் |
| 10. | தென்பறப்பு நாடு | - | மதுரை வடக்கு, மேலூர் வட்டங்கள் |
| 11. | வடபறப்பு நாடு | - | மேலூர் வட்டம் |
| 12. | சுரபி நாடு | - | மேலூர் வட்டம் |
| 13. | துவாரபதி நாடு | - | தருக்காக்குடி பகுதி |
| 14. | நாட்டாற்றுப் புறம் | - | கீழக் குயிலிக்குடி பகுதி |
| 15. | செங்குடி நாடு | - | பேரையூர் பகுதி |
| 16. | மாடக் குளக்கீழ் | - | மதுரை, திருப்பரங்குன்றம் அரியூர், கொடி மங்கலம் கீழக்குயிலிக்குடி |
| 17 | வேலூர்க் குளக்கீழ் | - | கீழடி பகுதி |
| 18. | குன்றத்தூர் குளக்கீழ் | - | குன்றத்தூர் பகுதி |

## 17. மதுரை மாவட்டக் கல்வெட்டுகளில் சில

### 1. வைகை க்கரைக் கல்வெட்டு

1. பாண்டிய குலமணி பிரதீபனாய் ப்ராதுர் பாவஞ் செ
2. ய்து விக்ரமங்களா லரைசடக்கி மறங்
3. கெடுத்தறம் பெருக்கி அக்ரஹாரம் பல
4. செய்த பரிமிதமாகிய ஹிரண்யகர்ப கோ
5. ஸகஸ்ர துலாபாரத்து மஹாதாநங்களாற்
6. கலிகடிந்து மங்கலபுரந் நகரமாக்கி வீ
7. ற்றிருந்து செங்கோனடவா நின்ற கோச்சே
8. ந்தன் மாற னைம்பதாவது ராஜ்ய ஸம்வத்ஸர

9. ஞ் செல்லா நிற்க வைகை சொம்மதகுப
10. டுத் தரிகேஸரியானெனப் பியரிட்டு காலோடு
11. வித்து காஞாற்றை இடை அடைத்து

(கிரந்தம் - வட்டெழுத்து)

## 2. வடுகபட்டி சமணக்கல்வெட்டு

I. ஸ்வஸ்தி ஸ்ரீ மாலைக் குளமிறங்கல் நீக்
கிய ஸ்ரீ வர்த்தமான தேவர்.

II. 1. ஸ்வஸ்தி ஸ்ரீ பாகனூர் கூற்ற
2. த்து மானசித்த நல்லூரராயின மா
3. லைக் குளத்து தான சாலையும் குளமும் அத்தா
4. ணிகள் பேராயினமையிலிவ்வூருக்கு மிவ்
5. வறத்துக்கு தீயார் நமக்குப் பகைவராய்
6. யுங் கூலிச் சேவகர் ஒருவர் நிற்கிலு மிவ்
7. வறத்துக்கு வருங்குற்றங் காப்பதாகவும்
8. பெருநிரவி யிருநங்கை வாசனை கொள்ள
9. எல்கை வாசனை கொண்டு கல்லு நாட்டி
10. நப் பெருவாரியன் வேம்பன் வயிரி
11. யும் திகையாயிரத்து அறுகை வாணிகன்
12. மாணிக்கூத்தனுமே திகைவாரியன் யிர
13. சாலனும் திகைவாரியன் கட்டானை ராமனும்
14. ஆச்சவீர அத்தாணிகள் முனிவர் சி
15. ம்புளு களிக்கோட்டை விடங்கனும்
16. அவர்கள் எய்
17. துசாலெப்
18. பேடு

(வட்டெழுத்து)

## 3. ஆனைமலை பராந்தக சோழன் கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ மதிரைகொண்ட கோப்பர கேசரிபன்மற்கு யாண்டு முப்பத்து மூன்றாவது இவ்வாண்டு தே வதா னங் கீழிரணியமுட் (டத்) துப்படும் (பி).

2. ரம்மதேய(ம்) (ந) ரசிங்கமங்கலத்துச் சவையோம்ஞ் சோழப்பெருமானடிகளதிகாரிகள் சோழநாட்டுப் புறங்கரம்பைனாட்

3. டு மருதூர் மருதூருடையானருணிதிகலியனுக்கு ஒட்டிக்குட(த்)த பரிசாவது எங்களூர்த் திருவா(னை) மலை நரசிங்கப்பெருமானடிகள் (த)

4. முடைய நிலத்தால்ச் சவையோமுக்கு (ஆ)ண்டெடுத்து இடக்கடவ ஈழக்காசு பதினெட்டு (இ)க்காசு பதனெட்டிலும் முன்றத்தொன்(று) ஈ-

5. ழக்காசு ஆறு இவ்வாறு ஈழக்காசுக்கும் பலிசையாகச் சவையார் கைய்வழி குடுத்த ஈழக்காசு பதினைன்து (ப*)தினைஞ்சினாலும் வந்த பலி-

6. சையாவது ஈழக்காசின்வா(ய்) த் திங்கள் காற் புத்த(க்க) மாக ஓரோ திங்களா(ல்) வந்த புத்தக்கமுன்றேமுக் கால் முன்றேமுக்காலு ஓராண்டு பந்நிரண்டு தி -

7. ங்களால் வந்த புத்தக்கம் நாற்ப(த்) தைஞ்சு நாற்பத்தைஞ்சினாலொரு ஈழக்காசுக்குப் புத்தக்கம் ஏழரை ஆக (ஈ) ழக்காசு (ஆ)று இவ்வாறு (ஈ)ழ-

8. க்காசும் இறை நீக்கித் தேவர் சவையார்க்கு இடக்கடவ காசு பன்னிரண்டும் நீக்கி அதிகா(ரி)கள் மருதூரு டையான் அருணிதிகலியன் இறைகாவலா(க) காத்த

9. காசி(னா)ல் வந்த நிலன் ஊருடையான்(கு)ளமான கலியனே(ரி)யும் இக்குளந்தா (மெ) ண்டுமாறு கல்லிக் கரை நீளம் அட்டப்பெறுவதாகவும் (இ) -

10. க்குளங்கரை உசர அட்டப்பெறுவதாகவும் இக்குளத்தி னீர் (தா)ன் வேண்டு அளவு ங் கொக்கப்பெறுவ தாகவுமிக்குளம் இதின்கீழ் நீர்நிலனிருவே

11. வியு மருதூருடையானருணிதிகலியன் விலைக்குக் கொண்டு இக்குளத்தின் கீழ் நீர்நிலனிரு வேலியி(னா)ல் வந்த போகம் அஞ்ஞாழிக்காலால் நெல்(லு) 300 கலம்

12. இவையிற்றின் பாதி நெல்லுங்கொண்டு இவர்க்கு முன்று சந்தியுந்திருவ மிர்து செவதாகவும் நின்ற 150 நெல்லுங்கொண்டு திருவமித்து உ

13. த்தம அக்கிரமாகத் தேவர் அமிதுசெய்யும்பொழுது வேதப்பிராமணர் நிசதம் அய்வர் அமிது செய்வதாக வும் வச்ச(ப)டி பத்தெட்டுக்குத்தல் ஒருவனு-

14. க்கு அரிசி (இரு) நாழியுங் கறி மூ(ன்று)ம் தயிர் நா(ழி)யும் நெயிருசெவிடும் காய்யிலை இரண்டும் தாலமஞ்சும் வட்டிலைஞ்சும் ஒட்டுட்டி ஒன்று-

15. (ம்) சட்டுவம் ஒன்று அடுவா(ன்) னொருவ(னு) (க்)கு நிசதி நெ(ல்)லு அஞ்ஞாழி அறு திங்க (ளொ) ரு புடவை வைச்சு இப்பரிசு இக்கலமூட்டுவதாக இவ்-

16. வாட்டை கற்கடகநாயிற்று வெள்ளிக்கிழமை பெற்ற ஆயிலெ(ய)த்தினான்று சூ(ற்)றியக் கிரணவேலைக் (குரை) கிராணம் பற்றின அன்று முதலாக இக்கல(ம்)

17. இ(ப்)பரிசேய் ஊட்டுவதாக நி(ன்)று சிறிகாறிய் மாராய்கின்ற திருவாய்ப்பாடி நாராயணனும் இவ்வூர்ச் சவையாரும் இப்பரிசேய் அக்கிரமுட்டா மேய் ச(ந்) திரா-

18. தித்தவலும் ஊட்டுவிப்போமானோம் திருவானை மலை நரசிங்கப்பெருமானடிகளுக்கு சிரிகாரியம் ஆராய்வாரும் சவயோமும் இதிற்றிரம்பி (னோ)மைச் சவைய்-

19. யாலும் (சி)ரிகாறியமாராய்வானுந் திறமினான் நிசதி இறுகாசு அன்றாழ் கோவி னுக்குத் தண்டம்பட்டு அக்காசு கொண்டு தேவர்க்குத் திருவிளக்கு எரிவதாகவும் சவையார்

20. (த்) திறம்பில் (ஆ)றுகாசு தண்டப்படுவதாகவு(ம்) ஒட்டிக்குடுத்தோம் சவையோமும் சிரிகாச்சிய மாராய்வானும் மருதூருடையானருணிதிகலியனுக்கு இத்தண்ட மிறு-

21. த்துமித்தன்(மம்) முட்டாமே அய்வரை (யும்) சந்திராதிச்சர் உள்ளளவும் ஊட்டுவிப் போமானோஞ் சவைய்யும் சிரிகார்ச்சியம் ஆராயும் வயிஷ்னவரும் இதன்

22. (ம)(ம்) ரக்ஷித்தான்

(வட்டெழுத்து)

## 4. திருவாதவூர் கல்வெட்டு

திருவாதவூர் திருமறைநாத சுவாமி கோயில் திருச்சுற்று மாளிகையில் உள்ள பராக்கிரம பாண்டியனின் ஏழாவது ஆட்சியாண்டுக் (கி.பி. 1322) கல்வெட்டு. இது இறைவனது கல்வெட்டு என்று சொல்லி வெட்டப்பட்டுள்ளது.

1. அருளால பிரஸாதம் ஜகத்ர நிர்ம்மாண ஸம்ஹார காரணம் ஸ்ரீமத் வாதபுரீசஸ்ய சாஸநம் சாச்வதம் பரம். நம்பிள்ளை பராக்ரம பாண்டிய தேவற்கு யாண்டு ஏ

2. ழாவது காத்திகைமாஸம் தென்பறப்பு நாட்டு திருவாதவூரில் நடுவில் வீதியான சீவலபுரத்தில் வியாபாரிகளில் திருப்பூவணமுடைய அரசனான சக்ரவர்த்தி

3. உள்ளிட்டார் நாம் புண்யன் நாழிகை பாப்பாரோம் கோவணவரோமும் கூடிநின்று அனுதரித்து போது வதாக இவன் காராண்கிழமையாந நம்

4. அடுக்களைப் புறப் பற்றில் கீழ்க்களர்ச் செய் தடி ஒன்றில் நிலம் இருமாவும் வாணியன் செய் தடி ஒன்று நிலம் இருமாவும் வாணியன் செய் தடி ஒன்று நிலம் அரைமா அரைக்காணியும் ஆக நிலம் இருமா

5. வரையே யரைக்காணியில் கடமை அந்தராயம் பொன்வரி கோயில் வினியோகம் தரவுகூலி ஊர் வினியோகம் மற்றும் இன்னிலத்தால் வந்த எப்பேறபட்ட

6. இறுப்பும் கழித்து குடுத்து நம் வரியிலார் கணக்கிலும் இவனுக்கும் இவன் வர்க்கத்தாற்கும் இறையிலியாக குடுத்தோம் இவை குலசேகரபட்டன் எழுத்து இவை

7. பொன்னம்பல பட்டன் எழுத்து இவை பராக்ர பாண்டியபட்டன் எழுத்து இவை வேத நாயக பட்டன் எழுத்து இவை.... பட்டன் எழுத்து

## 5. மேலவளவு கல்வெட்டு

பறம்புக்கண்மாய் பாறையிலுள்ள கல்வெட்டு. கி.பி. 1238இல் ஏரிக்கரையை உயர்த்தி வயல்கள்ப் பாதுகாக்கப் பட்டமையைக் குறிப்பிடுகிறது.

1. ஸ்வஸ்திஶ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஶ்ரீ சோணா
2. டு கொண்டருளிய ஶ்ரீ சுந்தர பாண்டிய தேவற்கு யா
3. ண்டு இருபதின் எதிராமாண்டு அழகர் திருவிடை
4. யாட்டம் வடபறப்பு நாட்டு பறம்பான திருநாராய
5. மங்கலத்து குளம் கரையும் வளர்த்து வயல் நீர்க்
6. கு ஈடுபடாமற் கல்லும் படுப்பித்து கலிங்கும் நாட்டுவி
7. த்தான் கோவூருடையான் ஆள்வான் ச
8. க்கரக்கையன் ஸ்வஸ்திஶ்ரீ

## 6. பொய்கை கரைப்பட்டி

கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்ட நந்தவனம் பற்றிய கல்வெட்டுகள்

அ 1. ஸ்வஸ்திஶ்ரீ குமா
2. ரசூரியன் திரு
3. நந்தவனம் இ
4. து இராயூர்
5. தெற்காழ்வார் தெ
6. சய்கிறது

ஆ. 1. ஸ்வஸ்திஶ்ரீ மிழ
2. லைக் கூற்றத்து
3. க் கீழ் கூற்று ம
4. ஞ்சக் குடையான்
5. உய்ய வந்தான்
6. திருநோக்கழகியா
7. னான தொண்டை மா
8. னார் செய்விக்கிற தி
9. ருநந்தவனம்

## 7. குன்னத்தூர் கல்வெட்டு

குன்னத்தூர் கோயிலருகில் உள்ள கி.பி. 17ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு. குளம் பராமரிப்பு பற்றியது.

1. சறுவசி
2. த்தி வருடம்
3. காத்திகை
4. க மாதம் 20 உ
5. குன்ன
6 த்தூர சுசே
7. ச மாஹா
8. சனங்க
9. ளும் குடி
10. மதித்து
11. குடுத்த
12. சீவிதப்பண
13. மு மாசத்தில்
14. ஒரு கட்டும்
15. மாதம் 10 குறுணி
16. யும் வருடத்து
17. க்கு இகுள
18. த்திலே பே
19. ரட்டு வரு
20. வாராகவும்
21. இந்ததன்
22. மத்துக்கு
23. விகாதம்ப
24. ண்ணி

| | |
|---|---|
| 25. ள பேர் | 33. ரசத்தி |
| 26. கங்ஙெ | 34. லே பே |
| 27. க கரையில் | 35. ரவாரா |
| 28. காராம் பசு | 36. கவும் |
| 29. வையும் மா | 37. ஆகாச |
| 30. தாபிதாஸ | 38. வாணி |
| 31. வ கொண் | 39. பூமாடே |
| 32. ண தே | 40. தவிசா |

## 8. திருவாதவூர் ஆங்கிலக் கல்வெட்டு

ஐந்தாம் ஜார்ஜ் இந்திய சக்கரவர்த்தியாக டில்லியில் முடிசூடிக் கொண்டமையைக் கொண்டாடும் நினைவாகத் திருவாதவூர் வீதியில் விளக்குத்தூண் ஒன்று அமைத்ததைக் கூறும் கல்வெட்டு.

1. THE
2. INDIAN CORONATION LAMP
3. THIRUVATHUR
4. OF
5. THEIR MAJESTIES
6. GEORGE V
7. KING EMPEROR
8. AND
9. MARY
10. QUEEN EMPRESS
11. AT
12. DELHI
13. 12 DEC 1911

## 18. சில பாடல் கல்வெட்டுகள்

*மீனாட்சி அம்மன் கோயில் - மேற்குக் கோபுரம் நுழைவாயில் - வடசுவர் - பாடல் கல்வெட்டுகள்*

வடிவைத்த வேல்வல்ல வையந்தொழ நின்றமாற முந்நாள்
படிவைத்த அந்திப் பராக்கிரம பாண்டியன்பார்புரக்க
முடிவைத்த பின்பு பரராசர் தங்கள் முறைமை விட்டுக்
குடிவை ய்த்தார் வெய்ய காநிலும் வாநிலும் குன்றிலு மே

ஆலிலைக்குளடங்கிய மாயன் அவனியெல்லாம்
சேல்லடக்கிய செண்பகமாறந் தேவ்வேந்தர்தம்மை
வேலிலடக்கிய் வைய்யந் தொழு தென்னன் மீண்டுமுந்நைத்
தாலிலடக்குவன் காணந்தித் தொழிதர கடலே

*திருவாதவூர் கண்மாய் மடையில் உள்ளது கி.பி. 1195*

ஸ்ரீ கொலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு
17 ஆவது ஸ்வஸ்திஸ்ரீ
மங்கலக்கோன் பாஞ்சாலன் மாவேறி வண்டலரத்
தொங்கல் வழுதி தரமெறிந்து – கொங்கலர்
தென்கூடல் பாணாதிபேறுர் தெந்மந்னறை
பாட்டுரைப்பாரசாலப்பகோந்

## 19. திருப்பணிமாலைப் பாடல்கள்

1. ஐயர்சிங்க காரச் செழுநீர் புனல்வெள்ளி அம்பலமும்
செய்ய வடக்குத் திருகோ புரமும்செவ் வீச்சுரமும்
துய்ய திருமடைப் பள்ளியும் அன்புடன் தோன்றச் செய்தான்
தையலர் மோகன வேள்க்கு ண வீர சயதுங்கனே

2. வாரிப் புவிபுகழ் ஆயிரக் கால்மணி மண்டபமும்
ஏருற்ற மூர்த்தியம் மன்மண் டபமும் இரண்டாம்பிரா
காரத் திருச்சுற்று மண்டப மும்கொடிக் கம்பத்துமுன்
வீரப்ப மண்டப மும்செய் தனன்க்கு ண வீரப்பனே

3. அல்லொத்த பூங்குழல் அங்கயற் கண்ணம்மை ஆலயத்துள்
மல்லப்பன் நாட்டுபொற் கம்பம் பழகிய வாறுகண்டே
நல்லிட்ட மாகப்பொன் பூசுவித் தான்அண்ண லாருக்கொரு
வில்லிட்டுப் போரை விலக்கிட் டருள்க்ருஷண வீரப்பனே

4. முத்தமிழ்க் கூடற் பதிசொக்க நாதர்க்கு முத்தளக்குஞ்
சித்திரக் கோபுரம் செங்கற் படையைச் சிறக்கச்செய்தான்
மத்தகப் போர்விச்வ நாதன் குமார்ன் மனுமுறைமைக்
கொத்துறப் பார்புரக் குங்க்ரு ண பூப குணக்கொண்டலே

5. விதிக்கும் முகுந்தற்கும் எட்டாத சொக்கர்க்கு மேதினியோர்
துதிக்குங் கொடிக்கம்ப மண்டபம் ஒன்று துலங்கச் செய்தான்
கதிக்கும் பரமன்னர் பொன்னார் முடிகளைக் காலலெற்றி
மதிக்குங் கடாசலத் தான்கச்சி வாழக்ரு ண வீரப்பனே

6. கூடலம் பதிஇறைவர் முன்வெள்ளி விடையமுது
குலவியிட ஒருகல்லினால்
குறடுகோ புரவாயி லில்கதவு தென்வாயில்
கொள்சுருட் படிபரமனார்
ஆடுமா மண்டபத் தளவிசை திருப்பள்ளி
அறையில்உயர் படிகள் உமையாள்
ஆலயத் தளவிசை திருக்கதவு மல்லக்கொ(டு)
அன்பொற் பட்டம் அழகார்
ஓடைசூழ் வீரப்பன் நல்தோப்பும் அத்தோப்பில்
ஓங்கும் உயர் மணிமண்டபம்
ஓதும்இவை போல்இனிய பணிவிடைகள் சொக்கருக்(கு)
ஒருமையுட னே உதவினான்
மேடையும் ஆடரங்(கு) எங்கும்மட வார்கள்பயில்
வீதிசூழ் தானை அதிபன்
வேதியர்கள் காவலர்கள் நாவலர்கள் வாடிவருவீரையன் வீரப்பனே.

7. அருமா தவம்செய் அறுபத்து மூவ ரவர்மண்டபம்
மருவாருஞ் சோலை அறச்சாலை மண்டபம் வன்னியடி
முருகேசன் சொக்கற்கு வெள்ளிச்சிங் காதனம் முற்றும் செய்தான்
வருமால் அரிய நயினா முதலி மதிமந்த்ரியே

8. தென்னன் ஈன்றருள் அம்மைக்குப் பங்குனித் தேர்த்திருநாள்
சன்னிதி ஏழ்நிலைக் கோபுரம் கற்படை தானமைத்தான்
மன்னும் அரிய நயினா முதலி மகிழுமைந்தன்
இன்னருட் காளத்தி நாதன்தென் பாகைக்(கு) இறையவனே

## 20. திருமலை நாயக்கரின் கோயிற் பணிப் பாடல்கள்

1. பின்னிய செஞ்சடைச் சொக்கர்தம் ஆறுகாற் பீடத்தினும்
மின்னெழில் அம்மைதன் ஆறுகாற் பீட மிசையினுந்தான்
இன்னருள் பெற்றருளுந்துவார பாலரையே யமைத்தான்
பொன்னணி தாரார் புயத்தான் திருமலை பூபதியே

– திருப்பணிமாலை – 86

2. நன்னுதல் அங்கயற் கண்ணி தனக்கு நலம்பெறவே
உன்னத மாகுங் கொடிக்கம்பம் மாபலி பீடமுடன்
சொன்னம் அளித்துப் பொன் பூசுவித்தான் சுகபோகன் எங்கள்
மன்னன் திருமலை பூபன் மதுரை வரோதயனே

– திருப்பணிமாலை – 85

3. உரக்கவெகு ரொக்கம் கொடுத்துப் படங்கு தூண்
உத்திரம் முதல் பழங்கல்
ஒடிந்தன பிடுங்கி நவமாய் அமைத்துக் காரை
யோடு சீரணம் அகற்றி
அரைத்த சுண்ணாம்பை வெல்லச் சாறு விட்டுநன்
றாய்க் குழைத்துச் செங்கலும்
அடுக்காப்பரப்பிக் கடுக்காயொடு ஆமலகம்
அரிய தான்றிக் காய் உழுந்து

ஒருக்கால் இருக்கால் இடித்து நன்னீரினில்
ஊறிய கடுஞ்சாறு மிட்டு
ஊழிக்காலங்களினும் அசையாத வச்சிரக்
காரை விட்டோங்கும் அம்மை
சிரக்காலம் வாழவே மீனாட்சி கோயிலும்
செப்பமிடுவித்து நன்றாய்ச்
செய்வித்த புண்ணியம் சதகோடி புண்ணியம்
திருமலை மகீபனுக்கே

திருப்பணிமாலை – 82

## 21. திருமலை நாயக்கரின் செப்பேடுகள்

### 1. சிந்துமேட்டுப்பட்டிச் செப்பேடு

**(புலியிடமிருந்து மன்னனைக் காத்தவனுக்குப் பட்டயம்)**

*மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் சிந்து மேட்டுப்பட்டி என்ற ஊரில் திரு. சமுத்திரபாண்டியன் என்பவரிடம் இருந்து இப்பட்டயம் அன்பளிப்பாகப் பெறப்பட்டது.*

*திருமலை நாயக்கரின் அரண்மனைக்காவலராக அரங்கயசாமி நாயக்கன் என்பவன் இருந்தான். ஒரு சமயம் திருமலை நாயக்கர் வேட்டைக்குச் சென்றபோது இவனும் கூடச் சென்றான். ஒரு புலி வாலை முறுக்கிக்கொண்டு வருவதைக்கண்டு அரசரை யாதேனும் செய்து விடக்கூடும் என்றஞ்சி கல்வெடியால் இரண்டு குண்டுகள் போட்டு புலியைச் சுட்டு வீழ்த்தினான். அவனை மெச்சிய திருமலை நாயக்கர் ஒரு ஆபரணத்தை அவ்விடத்திலேயே பரிசளித்து முகாம் இருந்த இடத்தில் அவனுக்குச் சாப்பாடு போட்டுப் பாராட்டி அரண்மனை வந்து அவன் விருப்பத்திற்கிணங்க அவனது கிராமமான வாகைக்குளத்துக்கு நாட்டாண்மை முதன்மை வழங்கிச் செப்பேடும் அளித்துள்ளார்.*

ஸ்ரீ ராமசெயம்

1. செயா ஸ்ரீ ஆனி மாதம் மறுறாபு
2. ரி தலத்துக்கு கற்த்தறாகிய - றாசமானிய
3. ஸ்ரீத்திரி திருமலைனாயக்கறவற்கள் யி
4. டத்தில் - வாகக்குளம் ரெங்கயசாமி
5. னாக்கன் அரமனை காத்திருந்து மேலக்கா
6. ல் ஊடையத்தில் கூடயிருந்து முடுக்க
7. ணையில் வேட்டை மாற்க்கம் போயி றா
8. சாவுக்கு முன்பாக பெரும்புலி தண்டவா
9. ல் முருக்கி வா்றபோது றாசாவுக்குப் பளுது
10. வருமென்று ரெங்கயசாமி னாக்கன் கல்
11. வெடியால் ரெட்டைக் குண்டு போட்
12. டுச் சுட்டான் றாசா ஆனைமேல் அம்பா
13. ரி வச்சு பாத்திருந்தவற் சந்தோசமாகி கூ
14. ப்பிட்டு கொத்துச் சறப்பளி போட்டு ஊடை
15. (டை)யத்துக்கு கூட்டி வந்து சாப்பாடு போட்
16. டு அரமனைக்கி வந்து றாசா உனக்கு என்ன வே
17. ணுமென்று கேட்டாற் யென் கிராமத்துக்கு நா
18. ட்டாமை முதமை கணக்குக்கு தாம்பூரசாதின
19. ப்பட்டயம் குடுக்க வேணுமென்று சொன்னா
20. ன் அந்தப்படிக்கி உத்தறவு - வாகக்குளத்து -அ
21. ஞ்சு கிறாமத்து மாலுக்கு விபறம் - கருமாத்தூ
22. ற்-மாலுக்கு தெக்கு - கலுங்குக்கு மேற்கு -பா
23. ப்பான் அய்யன் அளிசிரை மாலுக்கு வட
24. க்கு-திடியன் தூங்கதேவன் மாலுக்கு கிள
25. க்கு -யிந்த னாங்கெல்கைக்குள்பட்ட அஞ்சு
26. கிராமத்துக்கும் நாட்டாமைக்கி மானிபம்

27. பொன் 60 பொன் கணக்கு மானிபம் பொன் 30
28. பொன் - சம்மதித்த கணக்கனை வச்சுக்கொ
29. ள்ளவும் குதிரைமட்டம் குடுத்தாற் (மேற்படி) வா
30. க்குளத்தைச் சேற்ந்த அஞ்சு கிறாமத்து
31. நாட்டாமை முதமை தீத்தந் திருமாலை சக
32. லமும் ரெங்கயசாமி நாகனுக்கு சாதினப்ப
33. ட்டயத்துக்கு உத்தறவு - யிந்தப்படிக்கி சாட்சி வி
34. க்கலமங்கலம் ஆண்டித்தேவன் திடியன்

பின் பக்கம்

35. தூங்கதேவன் கொங்கபுளியங்குளம்
36. யிருளப்ப கவண்டன் யிந்தப்பட்டயம் செ
37. ய்தவன் மேலவாசல் சுப்பயன் ஆசாரி
38. யிதை யாதாமொருதற் அடிஅளித்தால்க்
39. காறாம் பசுவைக் கொன்ற தோசத்திலும்
40. பிறாமனாளைக் கொன்ற தோசத்திலும் அடை
41. ந்து போவாறாகவும் யிந்தப்படிக்கி கற்த்
42. றாகிய திருமலைனாயக்க றவர்கள் கய்யி ஒப்
43. பம் உ மீனம்மாள் துணை உ

## 2. வெள்ளியங்குன்றம் செப்பேடு

### (கள்ளர்களைப் பிடித்தற்குப் பட்டயம்)

மதுரை மாவட்டம் அழகர்கோயிலையடுத்த வெள்ளியங்குன்றம் என்ற ஊரில் இந்தத் திருமலை நாயக்கர் செப்பேடும் விசுவநாதநாயக்கர் காலத்தில் வெளியிடப்பட்ட மற்றொரு செப்பேடும் உள்ளன.

அழகர்கோயில் இறைவன் சன்னதியில் வேடர்கள் நுழைந்து தங்க வெள்ளிப் பாத்திரங்கள் மற்றும் திருவா பரணங்களைக் கொள்ளையிட்டுச் சென்றுவிட்டனர். இதனைக் கோயில் தலத்தார் திருமலை நாயக்கரிடம்

முறையிட்டனர். திருமலை நாயக்கர் வெள்ளியங்குன்றம் பாளையக்காரர் இம்முடி கனகராமயக் கவுண்டரை அழைத்துக் கள்ளர்களைப் பிடிக்கவும் கொள்ளை போன பொருட்களை மீட்கவும் ஆணையிட்டார். பாளையக்காரரும் ஆணையை நிறைவேற்றிக் கொள்ளைபோன பொருட்களை மீட்டுக் கோயிலில் சேர்த்துக் கள்ளர்கள் தலையை வெட்டித் திருமலைநாயக்கர் முன் பொதியாகக் கொண்டு சென்றார். திருமலைநாயக்கர் மகிழ்ந்து, ஏற்கெனவே இந்தப் பாளையப்பட்டிற்கு (விசுவநாத நாயக்கர் காலத்தில்) அளிக்கப்பட்ட பாளையப்பட்டுக் கிராமங்களுக்காகக் கொடுக்க வேண்டிய காட்சி, கப்பம் முதலியவற்றை நீக்கியதோடு (மாப்பு செய்தல்) சித்திரை விழா, ஆடித் திருவிழா, திருமங்கையாழ்வார் திருவிழா ஆகியவற்றில் அவரும் அவரது சுற்றமும் சிறப்புப் பெறவும் வகை செய்து கொடுத்தார் என்று இச்செப்பேடு விவரிக்கிறது.

முன் பக்கம்

பீடத்தின் மீது நிறுத்தப்பட்ட திருப்பாதங்களுடன் கூடிய திருநாமத்தின் படம் பீடத்தின் மீது நிறுத்தப்பட்ட திருச்சங்கின் படம் திருவாழியின் படம் ஆகியவை தொடக்கத்தில் கோட்டுருவமாக உள்ளன.

1. சுபஸ்திறிமண் மகா மண்டலேஸ்பறன் அறியராய தளவிபாடன் பாளை
2. சக்கு தப்புவறாய கண்டன் மூவறாய கண்டன் கண்ட நாடு கொண்டு கொ
3. ண்டநாடு கொடாதான் பூர்வ தக்ஷிண பச்சிம உத்தர சதுத் சமுத்திராதிபதி
4. யெம்மண்டலமுந் திரை கொண்டருளிய றாசாதிராசன் றாசபறமேஸ்வறன்
5. றாசப்பிரதாவன் றாச மார்த்தாண்டன் றாசகெம்பீரன் றாசறணசூரன் றாசெ
6. லட்சுமி புயங்கறன் யிந்திறர் யசுர தாரணன் அசுபதி கெசபதி நறபதி நவகே

7. ரடி நாராயணன் யெம்மண்டலமுந் திரை கொண்ட ருளிய துங்காபி றாம
8. ன் சங்கிறாம கெம்பீரன் சுகளித காம்பீர புருஷ றணமுக வீறவிக்கிறம (நா)
9. க்கண் சமைய சமறாடி விசும்பமான் செஞ்சரப வன சம்பாத கெம்பமான்
10. கட்கடோரி புட்கபேரி பச்ச பாஞ்சால உத்தண்ட தொத்தண்ட கண்டி
11. மகா கண்டித விபதாளி மண்டலாதீ பறன் துலுக்கர் தளவிபாடன்
12. துலுக்கர் மோகந் தவிள்த்தான் ஒட்டிய தளவிபாடன் ஒட்டிய
13. றாட்டத் தவிள்த வங்கற் கலிக்கற் மறாடற் குச்சலற் கொங்கு
14. கொங்கண கோகறன கங்க த்றாவடம் சதிரகிறி கல்லாடம் யெ
15. ங்குந் திரை கொண்டருளிய ராசாதிறாசன் ஈளமும் கொங்கும்
16. யாள்பாணஞ் சீன மாளுவம் கொச்சி கொல்லம் மத்தம் மலைய
17. ாளம் சற்வதேசப் பிறகாச சற்வதேச விசையங் கொண்டருளி
18. ய றாயசிங்காசனத் தாபனா தீபறாய கெசவேட்டை கொண்டருளி
19. ய தேவதேவ மகாதேவ விசையேந்திர சிங்காதன தாபனாதியா
20. கியருள நின்ற சாலிய வாகன சகாற்தம் 1461 செல்
21. லாநின்ற சவுமிய தை மாதம் எ மங்களவாற சுபதினத்தில் ஸ்ரீ

22. மது திருமலை நாயக்கறவர்கள் வடக்குகோட்டை வாசலில் அனு
23. மார் கோவில் கொத்தழங் காவல் வெள்ளியக் குண்டம் பாளை
24. யம் விருதுறாயற் மெச்சிய இம்முடி கனகறாமய கவுண்டனுக்கு
25. தாம்பிரசாஷனம் யெழுதிக் கொடுத்தபடி தாம்பிர சாஷனமா
26. வது திருமாலிருஞ்சோலை தென்திருப்பதியில் ஆண்டவன் சன்ன
27. தியில் வேடற்களடற்ந்து புகுந்து அனேக திருவா - பறணங்களை
28. யும் சொர்ணபாத்திரம் வெள்ளிபாத்திரங்கள் முதலான சாமான்
29. களை கொள்ளையடித்துக்கொண்டு போய்விட்டதாய் தலத்தார்
30. வந்து கூக்குரல் போட்டதில் தம்மை வறவழைத்துக் கள்ளரை

## பின்பக்கம்

31. வெட்டிச் செயித்து களவு போன ஆவறணம் பாத்திர
32. முதலானதுகளை வாங்கிக் கொடுக்கும்படி அனுப்பி வை
33. க்க தாமுந் தளசேகறத்துடன் போய்த் துப்புத்துவருடனே
34. களவாளிகளைக் கண்டுபிடித்து அவற்கள் களவில்க் கொண்
35. டு போன சொத்துக்களை ஒன்று தவறாமல் வாங்கி ஆண்டவன்
36. கருவெலப் பொட்டியில் சேற்த்துப்' போட்டு அவற்கள்

37. தலைகளை வெட்டிப் பொதிபிடித்து சமூகத்தில் கொண்டு
38. வந்து வைத்து சியப் பிரதாபஞ் சொல்லிக் கும்பிட்ட முன்னுகு
39. சந்தோஷமாகி அந்த சந்தோஷத்தில் சாதனம் யெளுதிக்
40. கொடுத்தோம் சாதனமாவது இதற்குமுன் விசுவநா
41. த நாயக்கறவற்களால் ஒமக்கு விட்டுக் கொடுத் திருக்கிற பாளை
42. யப்பட்டு கிராமங்களில் நீற்கொடுக்கவேண்டிய காச்சி க
43. ப்பம் காணிக்கைகளை மாப்புச் செய்திருக்குரது மல்லா ம
44. ல் ஆண்டவன் காரியத்தில் நீர் பட்ட பிரயாசை காக ஆண்ட
45. வன் சன்னதியுள்ளவரைக்கும் ஒமக்கும் ஒம்முட வம்சத்தாரு
46. க்கும் அளிவில்லாது நடத்துகிற வெகுமானமென்ன வென்றால் வரு
47. சந்தோரும் நடக்கிற சித்திரை உச்சபத்தில் சுவாமியுடன் நீறு
48. ம் ஒம்முடைய சனத்துடன் போய் சிறப்புச் செய்து திருவிருப்பில் சே
49. த்தி செய்து அரிதிப்பட்டும் திருத்தளுகை தீற்ந்தப் பிறசாதம் வந்த ச
50. னங்களுக்கும் படியும் ஆடி உத்தபத்தில் ஒம்முட சன சன்னாகத்
51. துடன் திருத்தேர் ஒட்டி வைத்து தீர்த்தம் திருத்தளிகை பட்டுப் ப

52. ரிவட்டமும் பாளைய சனங்களுக்குப் படியும் மார்களி உச்சபத்தில்

53. திருமங்கையாள்வார் லீலையில் யாகம் நடப்பி வித்து அதில் தீர்த்தம்

54. திருமாலை பரிவட்டமுமாக அழகர் திருமலையும் ஆதித்த சந்திர(ா)ரு

55. ம் கல்லுங் காவேரி புல்லும் பூமியுள்ள வரைக்கும் புத்திர புத்திர பா

56. ரம்பரியமாய் அனுபவித்து வருவாராகவும் ஸ்ரீமதுதிருமலை நா

57. யக்கறவர்கள் மந்திரி தளவாய் ராமப்பையனவர்கள் இந்த

58. சாதனமெளுதித் தகட்டில்ப் பதியக் கொடுத்து சமூகம் றாய சம

59. ஸ்தாணி வெங்கிட்ட றாயர் இந்த தாம்பிர சாதன பதிவு செய்தது

60. முத்துவேலு ஆசாரி உ

## 23. மதுரை மாவட்டத்தில் கல்வெட்டுள்ள இடங்கள்

| | |
|---|---|
| அரிட்டாபட்டி | மேலூர் |
| அருவிமலை | மேலூர் |
| அய்யாபட்டி | மேலூர் |
| அழகர்கோயில் | மேலூர் |
| ஆமூர் | மேலூர் |
| அரியூர் | வாடிபட்டி |
| ஆனைமலை | மதுரைவடக்கு |
| ஈஸ்வரப்பேரி | பேரையூர் |
| உண்டாங்கல்லு | வாடிபட்டி |

| | |
|---|---|
| கச்சிராயன்பட்டி | மேலூர் |
| கருங்காலங்குடி | மேலூர் |
| கள்ளக்காடு | மேலூர் |
| கீழவளவு | மேலூர் |
| கு.புதூர் | மதுரை தெற்கு |
| குமாரக்கோயில் | மதுரைதெற்கு |
| குன்னத்தூர்மலை | மதுரை வடக்கு |
| கூத்தப்பன்பட்டி | மேலூர் |
| கொக்குலாஞ்சேரி | திருமங்கலம் |
| கொங்கற்புளியன்குளம் | திருமங்கலம் |
| கொட்டக்குடி | மதுரை தெற்கு |
| கொடிமங்கலம் | வாடிப்பட்டி |
| கோட்டை நத்தம்பட்டி | மேலூர் |
| சக்குடி | மதுரை வடக்கு |
| சமணமலை | மதுரை தெற்கு |
| சித்தர்கள் நத்தம் சித்தர்மலை | நிலக்கோட்டைவட்டம் |
| சித்தூர்பிரிவு | திருமங்கலம் |
| செங்கோட்டை | திருமங்கலம் |
| சோழவந்தான் | வாடிபட்டி வட்டம் |
| தனிச்சியம் | மேலூர் |
| தருக்காக்குடி | மேலூர் |
| திருப்பரங்குன்றம் | மதுரைதெற்கு |
| திருமோகூர் | மதுரை வடக்கு |
| திருவாதவூர் | மேலூர் |
| திருவாலவாய் நல்லூர் | வாடிபட்டி |
| திருவேடகம் | வாடிபட்டி |

| | |
|---|---|
| தென்கரை | வாடிபட்டி |
| தேனூர் | வாடிபட்டி |
| பரவை | வாடிபட்டி |
| பறம்புக்கண்மாய் | மேலூர் |
| பனங்காடி | மேலூர் |
| பனையூர் | மேலூர் |
| பாண்டங்குடி | மேலூர் |
| புளியங்குளம் | மதுரை வடக்கு |
| பெருமாள் மலை | மதுரை தெற்கு |
| பேரையூர் | பேரையூர் வட்டம் |
| பொய்கை கரைப்பட்டி | மேலூர் வட்டம் |
| மதுரை | மதுரைதெற்கு |
| மருதூர் | மதுரை வடக்கு |
| மீனாட்சிபுரம் | மேலூர் |
| மேலவளவு (மாங்குளம்) | மேலூர் |
| வடபழஞ்சி | மதுரை தெற்கு |
| விக்கிரம மங்கலம் | வாடிபட்டி |
| வீரசூடாமணி | மேலூர் |

# தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை பாதுகாக்கும் மதுரை மாவட்ட மரபுச் சின்னங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமலைநாயக்கர் அரண்மனை | – | மதுரை |
| 2. | பத்துத் தூண்கள் | – | மதுரை |
| 3. | லாடன் கோயில் | – | ஆனைமலை |
| 4. | சமணச் சிற்பங்கள் | – | ஆனைமலை |
| 5. | தமிழ் – பிராமி கல்வெட்டு | – | ஆனைமலை |
| 6. | தமிழ் – பிராமி கல்வெட்டு | – | கொங்கற் புளியன்குளம் |
| 7. | தமிழ் – பிராமி கல்வெட்டு | – | ஓவாமலை (மாங்குளம்) |
| 8. | தமிழ் – பிராமி கல்வெட்டு | – | திருவாதவூர் |
| 9. | தமிழ் – பிராமி கல்வெட்டு | – | கருங்காலங்குடி |
| 10. | தமிழ் – பிராமி கல்வெட்டு | – | வரிச்சியூர் (குன்னத்தூர்) |
| 11–12. | இருகுடவரைக் கோயில்கள் | – | வரிச்சியூர் (குன்னத்தூர்) |
| 13. | குடவரைக் கோயில் | – | அரிட்டாபட்டி |
| 14. | சிவன் கோயில் | – | தருக்காக்குடி |
| 15. | திருமலைநாயக்கர் | – | அழகர் கோயில் மண்டபம் |
| 16. | அகழாய்விடம் | – | கோவலன் பொட்டல் (மதுரை) |

# படங்கள்



பாறை ஓவியம் அழகர் மலை கி.மு. முதல் நூற்றாண்டு

## தொல்லியல் துறை பாதுகாக்கும் மரபுச் சின்னங்கள்



சமணர் குகைத்தளம் திருவாதவூர்



சமணர் குகைத்தளம் மாங்குளம்



தமிழ் – பிராமி கல்வெட்டு மாங்குளம் கி.மு. 2ஆம் நூற்றாண்டு



சமணர் குகைத்தளம், வரிச்சியூர்



சமணர் குகைத்தளம், கொங்கற்புளியங்குளம்



சமணர் குகைத்தளம், கருங்காலக்குடி கி.மு. முதல் நூற்றாண்டு

## துறையின் புதிய வெளியீடுகள்

| | |
|---|---|
| கல்வெட்டு காலாண்டு இதழ்கள் 63,64,65 (ஒவ்வொன்றும்) | ரூ. 5.00 |
| கல்வெட்டு காலாண்டு இதழ்கள் 66,67,68 (ஒவ்வொன்றும்) | ரூ. 10.00 |
| பாபநாசம் கல்வெட்டுகள் தொகுதி I & II | ரூ. 173.00 |
| தமிழ் நாட்டுக் கல்வெட்டுகள் 2004 | ரூ. 136.00 |
| தஞ்சாவூர் வட்டக் கல்வெட்டுகள் | ரூ. 54.00 |
| தமிழகச் செப்பேடுகள் தொகுதி I | ரூ. 52.00 |
| தரங்கம்பாடி ஓலை ஆவணங்கள் | ரூ. 28.00 |
| ஐம்பை ஓர் ஆய்வு | ரூ. 30.00 |
| அழகர் கோயில் | ரூ. 52.00 |
| திருச்செந்துறை திருத்தளிப் பெருமானடிகள் கோயில் | ரூ. 36.00 |
| கோவை மாவட்டத் தொல்லியல் கையேடு | ரூ. 41.00 |

| | |
|---|---|
| மதுரை மாவட்டத் தொல்லியல் கையேடு | ரூ. 57.00 |
| தருமபுரி மாவட்டத் தொல்லியல் கையேடு | ரூ. 62.00 |
| பூண்டிஅகழ்வைப்பகம் – கையேடு | ரூ. 30.00 |
| கங்கை கொண்ட சோழபுரம் அகழ்வைப்பகம் கையேடு | ரூ. 25.00 |
| ஆண்டிப்பட்டி அகழாய்வு அறிக்கை | ரூ. 41.00 |
| மோதூர் அகழாய்வு அறிக்கை | ரூ. 40.00 |
| தமிழகத் தொன்மைச் சின்னங்கள் | ரூ. 53.00 |
| Excavations of Archaeological Sites In Tamil Nadu | Rs. 65.00 |
| Alagankulam - An Ancient Roman Port City Of Tamil Nadu | Rs. 94.00 |
| Rock Art of Tamil Nadu | Rs.53.00 |
| Report on Conservation of Monuments | Rs. 93.00 |

**(அச்சில்)**

தமிழ் – பிராமி கல்வெட்டுகள்

தேர்வு செய்யப்பட்ட தமிழகக் கல்வெட்டுகள்

தேரிருவேலி அகழாய்வு அறிக்கை

கரூர் அகழாய்வு அறிக்கை

கிருஷ்ணகிரி மாவட்டக் கல்வெட்டுகள்

கோவை மாவட்டக் கல்வெட்டுகள்

காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டகள்



ஆனைமலையின் புறத்தோற்றம்



சமணர் குகைத்தளம், ஆனைமலை



சமணர் சிற்பங்கள், ஆனைமலை கி.பி. 9 ஆம் நூற்றாண்டு



முருகர் குடைவரை (லாடன் கோவில்)
ஆனைமலை. கிபி. 8 ஆம் நூற்றாண்டு



உதயகிரீஸ்வரர் குடைவரை, வரிச்சியூர்.
கி.பி. 8ஆம் நூற்றாண்டு



அஸ்தகிரீஸ்வரர் குடைவரை, வரிச்சியூர்.
கி.பி. 8ஆம் நூற்றாண்டு



குடைவரை கோவில், அரிட்டாபட்டி



சிவன் கோவில், தர்காக்குடி, கி.பி. 16ஆம் நூற்றாண்டு



பத்து தூண்கள், பத்து தூண் சந்து, மதுரை



திருமலை நாயக்கர் அரண்மனை, முன் தோற்றம்



நெடிய தூண்கள் – திருமலை நாயக்கர் அரண்மனை



நாடக சாலை, திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை



கோவலன் பொட்டலில் கிடைத்த
முதுமக்கள் தாழி



தாழியினுள் கிடைத்த
எலும்புகளும் படையல்
கலங்களும்



சங்ககால கறுப்பு – சிவப்பு மட்கலங்கள்

திருமலை நாயக்கர் மண்டபமும் உருவச் சிலையும், அழகர் கோயில்





## குடைவரை மற்றும் பாறைச் சிற்பங்கள்



உமையாண்டார் குடைவரை கோவில், தென் பரங்குன்றம், கி.பி. 8 ஆம் நூற்றாண்டு



வட்டெழுத்துக் கல்வெட்டுடன் கூடிய தீர்த்தங்கரார் சிற்பம், அரிட்டாபட்டி. கி.பி. 9 ஆம் நூற்றாண்டு



தீர்த்தங்கரார் உருவம், கீழவளவு. கி.பி. 9ஆம் நூற்றாண்டு



தீர்த்தங்கரர் உருவங்களும் வட்டெழுத்து கல்வெட்டும், முத்துப்பட்டி. கி.பி. 9 ஆம் நூற்றாண்டு



விநாயகர், குடைவரை கோவில், அரிட்டாபட்டி, கி.பி. 8 ஆம் நூற்றாண்டு



சண்டேசுவரர், குடைவரை கோவில் அரிட்டாபட்டி, கி.பி. 8ஆம் நூற்றாண்டு



பைரவர், உமையாண்டார் கோவில், திருப்பரங்குன்றம். கி.பி. 13ஆம் நூற்றாண்டு



சிவனின் ஆடல் காணும் உமை, தாளமிடும் நந்தி, திருப்பரங் குன்றம் கி.பி. 8ஆம் நூற்றாண்டு





பூதகணம் திருப்பரங்குன்றம் கி.பி. 8ஆம் நூற்றாண்டு



அன்ன பூரணி, சிற்பத் தொகுதி, திருப்பரங்குன்றம், கி.பி. 8 ஆம் நூற்றாண்டு

**கோவில்கள்**



பனங்காடி பெருமாள் கோவில், கி.பி. 13 நூற்றாண்டு ஆண்டு



திருவாதவூர் திருமறை நாதர் கோவில், கி.பி. 13 ஆம் நூற்றாண்டு



மூலநாத சுவாமி கோவில் தென்கரை
கி.பி. 11 ஆம் நூற்றாண்டு



கூடலழகர் கோவில் அ டாங்க
விமானம்



திருப்பரங்குன்றம், பொதுத் தோற்றம்

# கோபுரங்கள்



கிழக்கு கோபுரம், மீனாட்சி
அம்மன் கோவில், மதுரை



மேற்கு கோபுரம், மீனாட்சி
அம்மன் கோவில், மதுரை



தெற்குக் கோபுரம், மீனாட்சி
அம்மன் கோவில், மதுரை

பொற்றாமரைக் குளச் சுற்று
மண்டபமும் கோபுரங்களும்





பொற்றாமரைக் குளம், மீனாட்சி அம்மன் கோவில்



மொட்டைக்
கோபுரம், அழகர்
கோயில்



பதினெட்டாம்
படிக்கருப்பர் கோபுரம்,
அழகர் கோவில், மதுரை



கல்யாண மண்டபம்,
அழகர் கோவில்.
கி.பி. 17 ஆம்
நூற்றாண்டு



கூடல் அழகர் கோபுரமும் விமானமும். மதுரை

## தூண் சிற்பங்கள்



மீனாட்சி கல்யாணம், கம்பத்தடி மண்டபம், மீனாட்சி அம்மன் கோவில். கி.பி. 19ஆம் நூற்றாண்டு



உமா சகிதர் தூண்சிற்பம் தென்கரை கி.பி. 11 ஆம் நூற்றாண்டு



சிவனின் ஊர்த்துவ தாண்டவம்.



காமன், ஆயிரங்கால் மண்டபம்



ரதி, ஆயிரங்கால் மண்டபம்



அரியநாத முதலியார்,
ஆயிரங்கால் மண்டபம் கி.பி. 17
ஆம் நூற்றாண்டு





திருமலை நாயக்கரும் தேவியரும்,
புதுமண்டபம்

## பிறசிற்பங்கள்



முக்குறுணி பிள்ளையார் மற்றும்
திருமலை நாயக்கர் உருவமுள்ள
திருவாச்சி, மீனாட்சி அம்மன்



தும்புரு முனிவர் ஆயிரங்கால் மண்டபம்



இராசி மண்டலம், மீனாட்சியம்மன் கோவில்

## செப்புத்திருமேனிகள்



கள்ளழகர், சித்திரைத் திருவிழா, மதுரை



கருடாழ்வார் செப்புத் திருமேனி, அழகர் கோவில் கி.பி. 17 ஆம் நூற்றாண்டு



சக்கரத்தாழ்வார் செப்புத் திருமேனி, அழகர் கோவில் கி.பி. 17 ஆம் நூற்றாண்டு



திருவாழி செப்புத் திருமேனி, அழகர் கோவில் கி.பி. 17 ஆம் நூற்றாண்டு

## ஓவியங்கள்



மீனாட்சி கல்யாணம், இராணி மங்கம்மாள் ஓவியம், மீனாட்சி அம்மன் கோவில்



திருமணம் காணும் திக் பாலகர்கள் ராணி மங்கம்மாள், முத்துவிசயரங்க சொக்கநாத நாயக்கர்.



திருமண வேள்வியும், செண்டு வாங்குதலும் இராணி மங்கம்மாள் ஓவியம், மீனாட்சி அம்மன் கோவில்



கலைக்கோட்டு முனிவரின் மகப்பேறு வேள்வி, இராமாயண ஓவியம், அழகர் கோவில் கி.பி. 17 ஆம் நூற்றாண்டு



கோசலை, சுமத்திரை, கைகேயி கருவுயிர்த்தல், குழந்தைகள் நீராட்டப் பெறுதல்



இராமர் சகோதரர்களுடன், யானையேற்றம் குதிரையேற்றம் பயிலுதல்



இராமன் காட்டுக்குச் செல்லுதலும் குகன் உதவியுடன் கங்கையைக் கடத்தலும்,



தூண் ஓவியம், திருமலை நாயக்கர் அரண்மனை



தூண் ஓவியம் திருமலை நாயக்கர் அரண்மனை

# குளங்கள்



மாரியம்மன் தெப்பக்குளம், திருமலை நாயக்கர் காலம், மதுரை




வைகையாற்றிலிருந்து குளங்களுக்கு நீர்வருதல், மீனாட்சி அம்மன் கோவில்ப் பகுதித் தரைப்படம். கி.பி. 1688



தரைப்படம், மதுரை கி.பி. 1757




*Source: The Penguin Guide to the Monuments of India, Vol 1.*

மீனாட்சி அம்மன் கோவில் தரைப்படம்

# காசுகள்



சங்ககாலப் பாண்டிய காசு



எல்லாந் தலையான், பாண்டியர் காசு,
கி.பி. 13 ஆம் நூற்றாண்டு



விக்கிரம பாண்டியன் காசு



சுந்தரபாண்டியன் காசு, கி.பி. 13 ஆம் நூற்றாண்டு



வாணாதிராயர்கள் வெளியிட்ட சமர கோலாகலன்,
புவனேக வீரன் காசுகள்

## தொல்லெழுத்துக்கள்



'அ' எழுத்துப் பொறித்த பானை ஓடு கோவலன்பொட்டல்



'அகே$_3$க$_3$' என எழுத்துப் பொறித்த பானை ஓடு கோவலன்பொட்டல்



தமிழ் – பிராமி கல்வெட்டு, கொங்கற்புளியங்குளம், கி.மு. 2 ஆம் நூற்றாண்டு



உத்திர மந்திரி மாறங்காரி கல்வெட்டு ஆனைமலை. கி.பி. 8ஆம் நூற்றாண்டு



சாமந்தன் சாத்தன் கணபதி கல்வெட்டு திருப்பரங்குன்றம். கி.பி. 8ஆம் நூற்றாண்டு



வட்டெழுத்து கல்வெட்டுடன் வஞ்சி நகர்க் கல் செக்கு கி.பி. 9 ஆம் நூற்றாண்டு



கடக முறுக்கிகள் கல்வெட்டு தர்காக்குடி, கி.பி. 13 ஆம் நூற்றாண்டு



வர்த்தமானர் உருவமும் வட்டெழுத்துக் கல்வெட்டும் வடுகபட்டி கி.பி. 10 ஆம் நூற்றாண்டு



பாடகோல், தென்கரை, கி.பி. 12 ஆம் நூற்றாண்டு





மனை அளவு கோல், தென்கரை கி.பி. 12 ஆம் நூற்றாண்டு



அடிகள் அரியாநாத காடுவெட்டி செய்த கோவில் நிலை,
ஆமூர். கி.பி. 13 ஆம் நூற்றாண்டு





சிம்ம நந்தனத் தாளம், சப்த சூழாதி தாளம் 35. தூணில் உள்ள தாளக் குறிப்புகள் மீனாட்சி அம்மன் கோவில் கி.பி. 17 ஆம் நூற்றாண்டு



முன்பக்கம்



பின்பக்கம்

மதுரைத்தலத்து ஓதுவார், செப்பேடு, திருமலைநாயக்கர் காலம்



பாண்டியர் சின்னமும் பாடல் கல்வெட்டும், திருவானைக் காவல்



செப்பேட்டில் பாண்டியர் சின்னம்

# மர மற்றும் சுதைச் சிற்பங்கள்



பள்ளியறை மரப் பல்லக்கு, தென்கரை



கிட்டி வாசலுடன் (புதவம்) கூடிய மரக் கதவு, மீனாட்சி கோவில், நாயக்கர் காலம்



சுடு மண்ணால் ஆன ஊர் தெய்வம், கோச்சடை, கி.பி. 19 ஆம் நூற்றாண்டு



சுதைச் சிற்பங்கள், மீனாட்சி அம்மன் கோவில்



புனித மேரி தேவாலயம், கிழக்கு வெளிவீதி, மதுரை



கோட்டைமதில், அழகர் கோயில்


தொல்லியல் நிலைகள்
78°00'
78°15'
78°30'
10°00'
நத்தம்
தருக்காக்குடி
சொக்கலிங்கபுரம்
திருச்சுனை
கருங்காலக்குடி
அருவிமலை
மேலவளவு
கீழவளவு
அழகர்கோயில்
பொய்கைக்கரைப்பட்டி
மேலூர்
மாங்குளம்
சோழவந்தான்
விக்கிரமங்கலம்
திருவேடகம்
ஆனைமலை
மருதூர்
ஆமூர்
திருமோகூர்
கொட்டக்குடி
திருவாதவூர்
துவரிமான்
புளியங்குளம்
மாடக்குளம்
மதுரை
முத்துப்பட்டி
கீழக்குயில்குடி
அனுப்பானடி
குன்னத்தூர்
திருப்பரங்குன்றம்
மேலூறப்பனூர்